# தொடர்பாடல் மற்றும் ஊடகவியற் கற்கை




## தரம் 10










கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரிச்சுவடி

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடல் மற்றும் ஊடகவியற் கற்கை

# தரம்

# 10

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே
© கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
முதலாம் பதிப்பு - 2008
ISBN 978-955-25-0018-3

*2007ஆம் ஆண்டு முதல் பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற திருத்தியமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படுகின்ற இப்பாடநூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கேற்ப உரிய பாட எழுத்தாளர் குழு மற்றும் பதிப்பாசிரியர் குழுவின் பங்களிப்புடன் ஆக்கப்பட்டு, பாடநூல் மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

இந்த பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள சில புகைப்படங்களும் அலுவலக உத்தியோகபூர்வ இலச்சினைகளும் வலைப்பின்னல் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக வ/ப கருணாரத்ன தனியார் நிறுவனத்தின் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

2009/ඉද/10/262/30,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ, சிரோன்மணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

தற்கால உலகின் மிக வேகமான அறிவுப் பெருக்கத்தின் விளைவாக மாற்றமடையும் சமூகத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில், பாடசாலையின் கலைத்திட்டமும் தொடர்ச்சியாக மாற்றமடைய வேண்டும். இதற்கமைய 2007இல் தரம் 10 பாடத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் 2009 இல் நடைமுறைக்கு வந்துள்ளது. இப்புதிய பாடத்திட்டத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட இப்பாடநூல், எதிர்காலத்தின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்குத் தேவையான திறன்களை உங்களுக்குள் வளர்ப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

பெரும்பாலான நாடுகளில் பாடசாலை பாடநூல்களைப் பணங்கொடுத்து வாங்கவேண்டிய கட்டாயநிலையில் உள்ளபோது, இலங்கை அரசு, அண்ணளவாக 4.5 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாப் பாடநூல்களை வழங்குவதானது போற்றத்தக்கதொரு செயலாகும். நன்றியுணர்வுடைமை இலங்கையரின் உள்ளார்ந்த ஒரு பண்பாக இருப்பதனால் இப்பாடநூலுக்கு உரிய மதிப்பளித்து, கவனமாகப் பயன்படுத்துதல் அவசியம் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்நூலை வெளிக்கொணர்வதில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், பாடநூல் மதிப்பீட்டுச் சபையினர், திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டப்ளியு. எம். என். ஜே. புஸ்பகுமார
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய,
பத்தரமுல்ல
2008. 06. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யு. எம். என். ஜே. புஸ்பகுமார | - | கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

**ஆலோசனை**

| | | |
|---|---|---|
| திருமதி. ஈ. எப். டீ. நாணயக்கார | - | ஆலோசகர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

**வழிகாட்டல்**

| | | |
|---|---|---|
| திருமதி. டபிள்யு. டீ. பத்மினி நாளிகா | - | மேலதிக ஆணையாளர் (அபிவிருத்தி) |
| திரு. ஆர். ஏ. டக்ளஸ் ரணசிங்க | - | மேலதிக ஆணையாளர்<br>(உற்பத்தியும் விநியோகமும்) |

**இணைப்பாக்கம்**

| | | |
|---|---|---|
| திருமதி. இனோகா ஷ்யாமலீ கமகே | -<br>- | உதவி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

**எழுத்தாளர் குழு**

| | | |
|---|---|---|
| திரு. சுனந்த மகேந்திர (தலைவர்) | - | சிரேஷ்ட பேராசிரியர்<br>களனிப் பல்கலைக்கழகம் |
| திரு. சந்திரசிறி ராஜபக்ஷ | - | பேராசிரியரும் பகுதித் தலைவரும்<br>வெகுஜன ஊடக கற்கைப் பிரிவு<br>களனிப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி திரு. டியூடர் வீரசிங்க | - | மண்டப அதிபதி, ஸ்ரீ பாளி மண்டபம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி திரு. உதித கயாஷான் குணசேகர | - | இசைக்கலை கற்கைப் பிரிவு<br>களனிப் பல்கலைக்கழகம் |
| திரு. கமால் வலேபொட | - | சிரேஷ்ட விரிவுரையாளர், பகுதித் தலைவர்<br>ஊடகவியற் கற்கைப் பிரிவு,<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| திரு. பந்துல பீ. தயாரத்ன | - | ஊடகக் கற்கை திட்டத் தலைவர்,<br>தேசிய கல்வி நிறுவனம் |
| திரு. பீ. ஜி. எஸ். எஸ். நாயணக்கார | - | ஆசிரியர்,<br>மா/ஜனாதிபதி வித்தியாலயம், மாத்தறை |
| திரு. மடுலுகிரிய விஜயரத்ன | - | முகாமையாளர்,<br>இலங்கை வங்கி கொழும்பு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. எம். எச். எம். ஹசன் - பிரதான திட்ட அதிகாரி
திறந்த பாடசாலைத் திணைக்களம்
தேசிய கல்வி நிறுவனம்

**தொகுப்பாக்கமும் சரவை பார்ப்பும்**

திரு. ஜீ. போல் அன்ரனி - பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு)
நிபுணத்துவ ஆலோசகர்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**சித்திரம், வரைபடம்**

திரு. வசந்த சஞ்சீவ சோமசிறி - தர்மபால வித்தியாலயம்,
பண்டாரவளை.

**அட்டைப்படம்**

திருமதி. அமித்தா இந்திராணி - ஆசிரியர்
கே/ ரிவிசந்த மத்திய மகா வித்தியாலயம்,
உஸ்ஸாபிட்டிய

**கணினி வடிவமைப்பு**

திரு. ஆர். கதிர்காமச்செல்வன் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

திரு. கொல்வின் பர்னாந்து - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

திருமதி. அனோஜா ஸ்ரீகாந்தன்

செல்வி. எஸ். பிரியதர்ஷினி - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

செல்வி. சுலோசனா - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

செல்வி. செ. நகுலேஷ்வரி - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | தொடர்பாடல் வகைப்படுத்தல் | 01 |
| 02 | தொடர்பாடலின் வடிவங்கள் | 28 |
| 03 | செயல்சார் ஊடகத் தொழில் நுட்பத் திறன்கள் | 56 |
| 04 | ஊடக நிறுவனங்கள் பற்றிய கற்கை | 90 |
| 05 | ஊடகப் பிரதிநிதித்துவக் கல்வி | 115 |
| 06 | புகைப்படக்கலை நுட்பத் தேர்ச்சிகள் | 144 |

பின்னிணைப்பு

| | | |
|---|---|---|
| 1.0 | உங்களுடைய பாடசாலையில் ஊடகக் கழகம் ஒன்றை ஆரம்பிக்குக. | 181 |
| 2.0 | பாடத்திட்டம் | 184 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்குரிய பிள்ளைகளுக்கு,

இப்பாடநூலை நன்றாகக் கற்று
உங்கள் அறிவாற்றல்களை வளர்த்து
அடுத்த வருடம், உங்கள் வகுப்புக்குச்
சித்தியடைந்து வரும் தம்பி, தங்கைகளுக்கு
இதனை ஒப்படைப்பது உங்களது பொறுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1 தொடர்பாடல் வகைப்படுத்தல்




## நோக்கம்

தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கை என்ற பாடத்தை நீங்கள் இந்த அத்தியாயத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளீர்கள். தொடர்பாடலைப் பற்றியதொரு அடிப்படை அறிவுடன் அவற்றை எவ்வாறு வகைப்படுத்திக் கற்பது என்பது பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த அத்தியாயத்தில் தொடர்பாடலின் பல்வேறு பிரிவுகளைப் பற்றிய அடிப்படைத் தேர்ச்சிகளை உங்களுக்கு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பாடத்தில் உள்ள விடயங்களை மனனஞ் செய்வதை விட அதன் கருத்து எவ்வாறானது என விபரித்துக் கூறும் தேர்ச்சியை நீங்கள் அடைவது முக்கியமானதாகும்.

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைப் பற்றி அடிப்படை விளக்கத்தை செயல்முறை வழியாக விபரிக்கும் தேர்ச்சிகளை நீங்கள் அடைந்திட இப்பாடம் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1 தொடர்பாடல் அறிமுகம்

சாதாரணமாக நோக்குமிடத்து தொடர்பாடல் என்பது ''ஒருவர் ஒன்றை, ஒரு செய்தியை ஊடகமொன்றைப் பயன்படுத்தி மற்றொருவருக்கு வெளிப்படுத்துவது அல்லது ஒவ்வொருவருக்கிடையில் தகவல்களையும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வதாகும்.'' இது மனித சமூக செயற்பாட்டினது இயல்பாகும். மனிதனுடைய அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக தொடர்பாடலைக் கொள்ளலாம். மனித சமூக வழிநடத்துகைக்கும் மனித சிந்தனையை கட்டியெழுப்புவதற்கும் தொடர்பாடல் அவசியமாகின்றது. தனியாள் சார்ந்த பொதுவான, மற்றும் தனிப்பட்டதும் தொடர்ச்சியானதுமான சமூகச் செயற்பாடு என தொடர்பாடலைக் குறிக்கலாம். நீங்கள் உங்களுடைய தோழி அல்லது தோழனோடு பேசும்போது நிகழ்வது எதுவோ? அதுவே தொடர்பாடலாகும். இங்கு நாங்கள் சொற்களால் மட்டுமின்றி ஐம்புலன்களாலும் ஒன்றை பிறருக்கு வெளிப்படுத்த முடியும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் மனதும் தொடர்பாடலுடன் தொடர்புபடுகின்றன. கண்ணால் எதையும் பார்ப்பதும் காதால் எதையும் கேட்பதும் நாவால் எதையும் ருசிப்பதும் மூக்கால் எதையும் நுகர்வதும் சரீரத்தால் எதையும் உணர்வதும் மனதால் நினைப்பதும் ஆகிய இவையாவும் தொடர்பாடல் செயற்பாடு உள்ளவைதான். மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் இதைப் போலவே தொடர்பாடல் செய்கின்றன. ஆதலால் தொடர்பாடலில் உயிரியல் விஞ்ஞான அடிப்படை உண்டு. விலங்குகளுக்கு மோப்பமும் மனிதருக்கு நரம்புத் தொகுதியும் மூளையும் சகலதையும் அறிந்துகொள்ள உதவுகின்றன.

மனிதனுடைய பிரதான தொடர்பாடற் கருவியாக மொழி விளங்குகின்றது. மொழியைப் பயன்படுத்துவதற்கு முன்பதாக மனிதன் அங்க அசைவு, அபிநயம், கைச் சைகை மூலமும், சித்திரம், குறிப்புக்கள், ரேகைகள் என்பன மூலமும் தொடர்பாடலை மேற் கொண்டான்.

பண்டைக் காலத்து மனிதர்கள் வாழ்ந்த கற்குகையில் வரையப்பட்ட சித்திரங்கள் மூலம் இது தெரிய வருகின்றது. உதாரணமாக பிரான்சில் 'லஸ்கோ' கற்குகையிலும் ஸ்பெயினில் 'அல்டமீரா' குகையிலும் காணப்படும் சித்திரங்களைக் குறிப்பிடலாம். தற்போது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ள 15,000 ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட சித்திரங்கள் பண்டைய தொடர்பாடலுக்கு உதாரணமாக விளங்குகின்றன.





படம் :- 1.1.1
அல்டமீரா
குகைச்சித்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சமூகங்களினதும் மக்கள் பொருத்தமான தொடர்பாடல் முறைகளைக் கட்டியெழுப்பிக் கொண்டமையைக் காணமுடிகின்றது. 'கூக்குரல் சத்தம், தீ மூட்டல், இலைகுழைகளை தொங்க வைத்தல், முரசறைதல், ஊதுகுழல், எக்காளமிடல், மணியடித்தல் போன்ற பல்வேறு பாரம்பரிய தொடர்பாடல் முறைகளை பண்டைக் கால சமூகம் பாவித்தமை தெரிகிறது. இவைகளுடன் நவீன தொழில் நுட்பமும் சேர்ந்து பிற்காலத்தில் 'வெகுஜன ஊடகம்' உருவாகியது. தொழில் நுட்ப முறைகளைப் பாவித்து பத்திரிகை, வானொலி, சினிமா, தொலைக்காட்சி, இணையம் போன்ற நவீன ஊடகங்கள் உருவாகின.



படம் :- 1.1.2 வெகுஜன ஊடகங்கள்

தொடர்பாடல் ஊடகங்கள் அச்சு ஊடகம், (Print Media) இலத்திரனியல் ஊடகம் (Electronic Media) என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. வெகுஜன ஊடகங்கள் உலகம் முழுவதும் பிரபல்யமாகியுள்ளதால் தொடர்பாடல் பலமான சமூகச் சக்தியாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மனித சமூகத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு நிறுவனமாக வெகுஜன ஊடகங்கள் அமைந்திருப்பது இந்த பலத்தினாலாகும்.

### அ) தொடர்பாடலைப் பற்றி லக்ஸ்வெல் என்பவரின் வரைவிலக்கணம்

அரசறிவியல் பேராசிரியர் 'ஹெரல் டீ லக்ஸ்வெல்' 1948 ஆம் ஆண்டளவில் தொடர்பாடல் என்றால் என்னவென்பதற்கு வரைவிலக்கணமொன்றை முன்வைத்துள்ளார். அதாவது **"ஒரு நபர் ஏதாவதொரு தகவலை ஏதாவது அலைவரிசையில் யாரேனும் நபருக்கு ஏதேனுமொரு தாக்கம் ஏற்படுத்துவதற்காக முன்வைப்பது"** தொடர்பாடல் என அவர் குறிப்பிடுகின்றார்.

| | | |
|---|---|---|
| 1. Who | - ஒருவர் | - தொடர்பாடுபவர் |
| 2. Says what | - ஒரு விடயம் | - தகவல் / செய்தி |
| 3. In which channel | - ஏதாவது ஊடகம் | - ஊடகம் |
| 4. To whom | - மற்றொருவருக்கு | - பெறுநர் |
| 5. With what effect | - என்ன தாக்கம் | - தாக்கம் |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஸ்வெல்லின் விளக்கத்தின் படி ஒருவர் அதாவது தொடர்பாடுபவர் தொடர்பாடல் செயற்பாட்டை ஆரம்பிக்கும் இடத்திலிருப்பார். அவர் ஏதாவது ஒரு அடிப்படையில் ஒரு தகவலை தயாரிப்பார். பரந்த வரைவிலக்கணமாக புரிந்து கொள்ளவேண்டுமாயின் இங்கு தகவற்தொடர்பாடுபவர் என்பவர் ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனம் எனக் கொள்ளலாம். தகவற்பரிமாற்ற வியலாளர்களால் வெளியிடப்படுபவை செய்திகள் அல்லது தகவல் எனப்படும். சமூகத்தில் காணப்படும். பல்வேறு தகவல்கள் செய்திகளாக உருவாகின்றன.

தொடர்பாடல் ஊடகம் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியை முன்வைக்கப் பாவிக்கப்படும் முறையாகும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற எந்த ஊடகத்தையும் இதற்காக பயன்படுத்திக் கொள்ளலாம். செய்தியைப் பெற்றுக்கொள்கின்ற நபர் அல்லது நபர்கள் அல்லது பெண்கள் அல்லது ஆண்கள், கிராம அல்லது நகரவாசிகள் வயது, கல்வித்தராதரம் சமூக கலாசார வடிவங்கள் ஆகியவற்றுக்கேற்ப வேறுபடும். தாக்கம் என்பது செய்தியின் இறுதியில் ஏற்படுகின்ற பலனாகும். மனப்பாங்கு அல்லது நடத்தை அல்லது நடைமுறை என்பவற்றால் தாக்கத்தை விளக்கமுடியும்.

## தொடர்பாடுபவர் (Communicator)

தொடர்பாடுபவர் என்பவர் ஏதாவதொரு தகவலை வெளியிடுபவராவார். தான் அனுபவிக்கும் ஏதாவதொரு சம்பவம் அல்லது சந்தர்ப்பத்தின் ஊடாக ஒரு செய்தியை தயாரித்து முன்வைப்பவர் தொடர்பாடுபவராவார். இவர் தொடர்பாடற் செயலின் ஆரம்ப இடத்தில் இருப்பார்.



படம் :- 1.1.3
தொடர்பாடுபவர்

## தகவல் (Message)

செய்தி என்பது முன்வைக்கப்படும் ஒரு விடயமாகும் சமூகத்தின் ஒரு நிகழ்வினூடாக உருவாகுவதே செய்தியாகும். ஒரு செய்தியில் இடம் பெற வேண்டியது எது என்பதைத் தொடர்பாடுபவர் புரிந்து கொள்ள வேண்டும்.

## ஊடகம் (Medium)

மேற் கூறப்பட்ட தகவல்களை வெளியிட ஏதாவதொரு ஊடகம் பயன்படுத்தப்படுகின்றது. சைகை, சமிக்ஞை, சித்திரங்கள் அல்லது மொழி ஆகிய பல வித ஊடக வடிவங்களால் தகவலானது வெளியிடப்படுகின்றது. பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி என்பவை இத்தகைய ஊடகங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுநர் (Receiver)




படம் :- 1.1.4 பெறுநர்கள்

பெறுநர் என்பவர் தொடர்பாடுபவரால் வழங்கப்படுகின்ற செய்தியை பெற்றுக் கொள்பவராவார். பத்திரிகையை வாசிப்பவர் வாசகர் என அழைக்கப்படுவார். வானொலியைச் செவிமடுப்பவரும் தொலைக்காட்சி பார்வையாளரும் பெறுநராகவே கொள்ளப்படுகின்றனர். ஊடகங்களுக்கேற்ப பெறுநருடைய இயல்பும் வேறுபடலாம். பெறுநர் சமூக, கல்வி, கலாசாரம், பொருளாதாரம் ஆகிய பல்வேறு காரணிகள் பற்றியும் விளக்கமுடையவராக இருக்க வேண்டும். பெறுநர் எப்போதும் பெறுநராகவே இருக்கமாட்டார். ஏதாவது ஒன்றை வெளியிடும் பொழுது அவரும் தொடர்பாடுபவர் ஆகிவிடுவார். ஆகையால் தொடர்பாடுபவர், பெறுநர் ஆகியோர் ஒரே நபரின் இரு வேறு வகிபாகங்களை வகிப்பவர்கள் ஆவார்.

## தாக்கம் (Effect)

தாக்கம் என்பது ஒரு ஊடகத்தை உபயோகித்து செய்தியொன்றை பெறுநருக்கு வழங்கி அதன் பெறுபேறாக பெறுநரிடம் எதிர்பார்க்கப்படும் விடயமாகும். எதிர்பார்க்கும் தாக்கம் கிடைக்கவோ அல்லது கிடைக்காமல் இருக்கவோ சந்தர்ப்பம் உள்ளது. சில நேரங்களில் எப்போதும் நாம் எதிர்பார்க்காத ஒன்று தாக்கமாக கிடைக்கப் பெற இடமுண்டு.

## ஆ) எளிமையான தொடர்டபாடல் சூத்திரம் (ஷெனோனும் வீவரும்)

தொடர்பாடலின் இயல்பை விஞ்ஞான பூர்வமாக விளங்கிக் கொள்வதற்கு பல்வேறு விடயங்களின் பண்புகளை கவனத்தில் கொண்டு ஆராய வேண்டும். சமூகவியல், உளவியல் அரசறிவியல், உயிரியல், கணிதம், பொறியியல் என்னும் பல்வேறு பாடங்களில் உள்ள தொடர்புகளே தொடர்பாடல் துறையாக உள்ளது. அவற்றைப் பற்றிய ஆய்வுகளிலீடுபட்ட விஞ்ஞானிகள் இருவராக க்ளோட் ஷெனோன், வொரன் வீவர் ஆகியோர் விளங்குகின்றனர். அவர்கள் கணிதம் மற்றும் மின்பொறியியல் பற்றிய நிபுணர்கள் ஆவர். அவர்கள் 1949 இல் முன்வைத்த தொடர்பாடற் சூத்திரம் கீழே தரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம் மாதிரிக்கிணங்க ஏதாவதொரு செய்தி அல்லது தூது ஒரு மூலாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்படுகின்றது. அது ஒரு ஊடகத்தின் வழியாக முன் வைக்கப்படும். அங்கு சிற்சில தடைகள் ஏற்படலாம். அவை கருத்துத் தடை அல்லது ஊடகத் தடையாக இருக்கலாம். இச்செய்தி வெற்றியையோ தோல்வியையோ அடையக்கூடும்.

## இ) தொடர்பாடலின் நோக்கங்கள்

எந்தவொரு சமூகத்திலும் அவ்வத் துறைகளின் பணிகளும் நோக்கங்களும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார காரணங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. ஆகையால் தொடர்பாடலுடன் சம்பந்தப்பட்ட நோக்கங்கள் பொதுவான இயல்புகளையும் அவ்வந் நாட்டுக்குரிய இயல்புகளையும் கொண்டனவாக விளங்குகின்றன.

1. தகவல்கள் வழங்குவது
2. கல்வி வழங்குவது
3. மகிழ்வூட்டல்
4. தூண்டல் ஏற்படுத்துதல்.

போன்ற விடயங்களை தொடர்பாடலின் குறிக்கோளாக எடுத்துக் காட்ட முடியும்.



படம் :- 1.1.5 தொடர்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக சமூகமயமாக்கல் உரையாடல்கள், வாதப்பிரதிவாதங்கள் ஆகியவற்றை நடத்துதல், கலாசார முன்னேற்றம், சமூக ஒருமைப்பாடு என்பவற்றை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்களும் நோக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## தகவல்கள் வழங்கல்

மக்கள் தொடர்பாடலின் முக்கிய நோக்கமாவது மானுட சமூகத்துக்கு தேவையான தகவல்களை தயாரிப்பதாகும். இன்றைய சமூகம் தகவற் சமூகமாகவும் அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகமாகவும் கருதப்படுவது இதனாலேயாகும். நாம் அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் சம்பவங்கள், தகவல்கள், செய்திகள் போன்றவற்றின் இயல்புகளை அறிந்து கொள்ள முயல்வோம். யார்? என்ன? எவ்வாறு? எப்போது? எப்படி? எங்கே? ஏன்? என்ற கேள்விகளை எழுப்பி ஒன்றைப்பற்றி அறிந்து கொள்ள முயல்வோம். ஆதிகாலத்திலிருந்து மனிதன் தன்னைப் பற்றிய தகவல்களை மட்டுமன்றி தனது சுற்றம், சுற்றாடலிலும் சமூகத்திலும் புதிதாக நிகழ்வன பற்றியும் அறிந்துகொள்ள ஆவலாக இருந்தான். அவ்விதமான மானுடத் தேவைகளைப் பூர்த்திசெய்வது தொடர்பாடலின் பணியாகும். இன்று இச்செயலொழுங்கு உயர்வான வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது. தற்போது தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தகவல்களைக் வழங்கும் பிரதான நிறுவனங்கள் பல காணப்படுகின்றன.

## கல்வி வழங்குதல்

அறிவை வழங்குதல் தொடர்பாடலின் முக்கிய குறிக்கோளாகும். வெகுஜன ஊடகங்கள் ஊடாகவும் இப்பணி மேற்கொள்ளப்படுகின்றது. வகுப்பறைக் கற்றலை மேலும் பொருள் நிறைந்ததாக்கிட ஊடகங்களைப் பயன்படுத்தலாம். முறைசார் விதத்திலும் முறைசாரா வழிகளிலும் ஊடகங்கள் வழியாக கல்வி நிகழ்ச்சிகள் பல முன்வைக்கப்படுகின்றன. ஏதாவதொரு பாடத்துக்கிணங்க பாடவிடயங்களையும் கருத்துக்களையும் படிமுறையாக தெளிவுபடுத்துவது முறைசார் வழியாகும். பாடமொன்றை நேரடியாகத் தெரிந்தெடுக்காமல் நிகழ்ச்சி ஊடாக, பொதுவாக முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் வழியாக முறைசாராக் கல்விப் பணிகள் நடத்தப்படுகின்றன. உதாரணமாக ஒரு நாடகம் இரசிகர்களுக்குத் ஏதாவதொரு திருப்தியைக் கொடுப்பது போலவே வாழ்க்கைக்குத் தேவையான எடுத்துக்காட்டுதல்களையும் தரக்கூடியதாக முன்வைக்கலாம். முக்கியமாக சிறுவர் கல்விக்காக வெகுஜன ஊடகங்களினால் ஆற்றப்படுகின்ற சேவைகள் கலந்தாலோசிக்க வேண்டியவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிழ்ச்சியை ஏற்படுத்துவது

ஒருவருக்கு அவரது வாழ்க்கையில் ஏதேனும் ஆறுதல், மகிழ்ச்சி, தூண்டல் ஆகியன தேவைப்படும். அதனூடாக காரியத்தை செய்வதற்காக ஏற்படும் ஆர்வம் அதிகரிக்கும். செம்மையான மென்மையான நகைச்சுவை, ஓய்வு, சமநிலை, ஆறுதல் ஆகியவை பெறுநரின் ஆர்வத்தை அதிகரிக்க அவசியமாகின்றன. வெகுஜன ஊடகங்கள் வாயிலாக இவற்றைப் பூர்த்தி செய்யலாம். இதைவிட தனி நபர்களுக்கிடையில் அல்லது சமூகத்துக்கிடையில் தொடர்பாடலினூடாக மகிழ்ச்சியடைய முடியும். சமய மத்திய ஸ்தலங்களிலும், நோய்நொடிகளுக்குச் செய்யப்படுகின்ற சடங்கு நிகழ்ச்சிகளிலும் எமக்குப் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. வெகுஜன ஊடகங்களில் சங்கீதம், நாடகம், விநோதம் அடையும் நிகழ்ச்சிகள், கார்ட்டூன், திரைப்படங்கள் போன்றவற்றாலும் களிப்படையலாம். தற்காலத்தில் பொழுது போக்கு மகிழ்ச்சிக்காக வெகுசன ஊடகங்கள் அதிக கவனம் செலுத்துகின்றமையைக் காணலாம்.

### தூண்டுதல்

தனிமனித தேவைக்களுகாக சிற்சில வளங்களையும் செயற்பாடுகளையும் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதாயுள்ளது. தொடர்பாடல் ஊடாக அவை வெளிக் கொண்டுவரக் கூடிய விதத்தில் தொடர்பாடல் செய்யும் போது தூண்டுதலை ஏற்படுத்த முடியும். வர்த்தக விளம்பரங்களை இதற்கான உதாரணங்களாகக் காட்ட முடியும்.

## 1.2 அகமுகித் தன்மைத் தொடர்பாடல்

### அ) ஒருவருடைய மனோபாவங்களும் எதிர்விளைவுகளும்

தொடர்பாடல் நடைபெறும் விதத்தைப் பொறுத்து முதலில் எமக்கு தென்படுவது அகமுகித் தொடர்பாடலேயாகும். ஒருவர் தனது மனதோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு மேற்கொள்ளும் தொடர்பாடல் அதாவது ஒருவருக்குள்ளே நடைபெறும் தொடர்பாடல் அகமுகித் தொடர்பாடலாகும். இதனை எளிமையாகச் சொல்வதனால் தான் தன்னுடனையே உரையாடுகின்ற தொடர்பாடல் என்று கூறலாம்.

தொடர்பாடலின் தொடக்கம் அகமுகித் தொடர்பாடல் ஊடாகவே ஏற்படுகின்றது. பல்வேறு ஒலிகள், ஒலிச் சமிக்கைகள், உருச்சமிக்கைகள், நுகர்சமிக்ஞைகள், சுவைச் சமிக்ஞைகள், ஸ்பரிச சமிக்ஞைகள் என்பவற்றை உள்வாங்கும் விதத்துக்கு இணங்கவே ஏனைய எல்லாத் தொடர்பாடல் நடத்தைகளும் உருவாகின்றன. இங்கு மனிதனுடைய மனோபாவங்கள் அவற்றுக்கான எதிர்விளைவுகள் காரணமாக தொடர்பாடல் ஏற்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும். மனிதனுடைய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றிற்கு உணர்த்தப்படுகின்ற சமிக்ஞைகளை மனிதன் உள்வாங்குகின்றான்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் :- 1.2.1 அகமுகித் தொடர்பாடல்கள்

அதனைத் தொடர்ந்து, அதனடிப்படியில் மனதினூடாக (உள்ளம்) அச் சமிக்ஞைகளுக்கான துலங்கல்கள் காட்டப்படும்



படம் :- 1.2.2 பஸ் சாரதி பஸ்ஸை நிறுத்துதல்

**உதாரணம்**

சாரதியொருவர் பேரூந்து ஒன்றை ஓட்டும்போது திடீரென பாதையின் குறுக்காக பாயும் விலங்கொன்றைக் கண்டவுடன் பேரூந்தை நிறுத்த வண்டியின் தடுப்பினை உடனே அழுத்துவது.

இங்கு நிகழ்வது வெளித்தூண்டலினால் உருவாகும் மனோநிலையின் அடிப்படையில் தேவையான துலங்களைக் காட்டுவதாகும். மனம் பல்வேறு மனோபாவங்களை அமைத்துக் கொள்வது புலன்களினால் பெறும் சமிக்ஞைகளை அடிப்படையாக கொண்டேயாகும். பயம், துக்கம், மகிழ்ச்சி, கவலை, வெறுப்பு, போன்ற மனதுக்குத் தெரியும் மனோபாவங்களைத் தொடர்ந்து அவற்றுக்கான துலங்ககளும் வெளிப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ) தூண்டல் - துலங்கல்களின் இயல்புகள்

அகமுகித் தொடர்பாடல் நிகழும் விதத்தை துல்லியமாகப் பரிசீலனை செய்யும் போது அது ஒரு தூண்டல் - துலங்கல் செயலொழுங்கு என்பதை அறிந்து கொள்ளலாம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்கள் பல்வேறு சமிக்ஞைகளால் தூண்டப்படுகின்றன (stimulus). புலன்கள் மூலம் அவற்றுக்கான துலங்களைக் காட்ட மனிதன் ஊக்குவிக்கப்படுகின்றான். தூண்டல் - துலங்கல் (stimulus response) செயற்பாடுகள் ஊடாக தொடர்பாடலின் இயல்பை அறிந்து கொள்ள முடியும். நாம் உலகை புரிந்து கொள்வது எமது மனதுக்குள் நடைபெறுகின்ற இவ்வாறான செயலொழுங்கை அடிப்படையாகக் கொண்டேயாகும். மரங்கள், இலைகள், பூக்கள், செடிகொடிகள் நிறம், அலங்காரம், வடிவம் என்பவற்றை நாம் இவ்விதமே அனுபவிக்கின்றோம்.

அது போன்றே ஒருவர் பேசும் சொற்களுக்கு மறுமொழி கொடுப்பதும் இவ்வாறான தூண்டல் - துலங்கல்களுக்கு இணங்கவேயாகும். சுருக்கமாகச் சொன்னால் உலகத்தில் தொடர்பாடல் தோன்றுவது மனதுக்குள் ஏற்படும் சமிக்ஞைகளுக்கு விடையாக வழங்கப்படும் வரைவிலக்கணங்களாலாகும். அதே போலவே மனது பெற்றுக் கொண்ட தூண்டல்களுக்கு வழங்கப்படும் துலங்கலாலும் ஆகும். இந்த எளிமையான உதாரணம் தொடக்கம் மூளையினால் ஒரு அணு அளவு சமிக்ஞையைக் கூடப் புரிந்து கொள்ளும் விதம் வரைக்கும் விரிவாக ஆராய முடிகின்றது.

ஒரு மொழியின் சொற்களையும் அவை உணர்த்தும் கருத்துக்களையும் விளங்கிக்கொள்வதும் இந்த நடத்தையினால் வருவதாகும். கோலத்தினூடாகவே ஓர் உயிரியல் இயல்பாக தூண்டல் - துலங்கல் கோட்பாட்டை இனங்கண்டு கொள்ளலாம். அது ஏன் எனில் மனித உடலின் புலன்கள், சமிக்ஞைகள், மூளை ஆகிய தொகுதிகள் சார்ந்ததாக நிகழும் ஒரு மனித, உடல், உயிர் நடத்தையாக, தூண்டல் துலங்கல் கோட்பாடு நிரந்தரமாக செயலாற்றுகின்றமையை அறியக் கூடியதாக இருப்பதாகும்.

## இ) சிந்தனையைக் கையாளல்

உங்களுடைய எண்ணங்களை உங்களால் வழிநடாத்த முடிகின்றதா? இந்தக் கேள்விக்கு நீங்கள் சொல்லும் விடை 'ஆம்' என்றால் நீங்கள் மிகுந்த வெற்றியாளராவீர்கள். நீங்கள் வழங்கும் பதில் ''இல்லை'' என்றால் நீங்கள் உங்களைப் பற்றி மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கும். வழமையாக ஒருவருக்கு 1 நிமிடத்துக்குள் 350 சொற்கள் அளவில் சிந்தனை செய்ய முடிகின்றது. எண்ணங்களை வழிநடாத்துவது உங்களுக்குக் கடினமாக இருக்குமேயானால் சில வினாடிகளுக்குள் தேவையில்லாத ஏராளமானவைகளைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டியேற்படும். சிந்தனைகளோடு இன்னும் இரண்டு சந்தர்ப்பங்கள் தொடர்புபடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்கள் மூலமாக எமக்குள் பல்வேறு உணர்வுகள் உண்டாகின்றன. பின்னர் அவற்றை நடத்தைகளாக வெளிப்படுத்த நாம் தூண்டப்படுகிறோம். எண்ணங்களும் உணர்வுகளும் எமது மனதில் ஏற்பட்டாலும் நடத்தையே வெளிப்படையாக மற்றவர்களுக்குப் புலப்படுகின்றது.


சிந்தனைகள்


உணர்வுகள்


நடத்தைகள்

படம் :- 1.2.3 சிந்தனைகள், உணர்வுகள், நடத்தைகள்

நீங்கள் பாடசாலைக் கூட்டத்தில் பேசியிருக்கிறீர்களா? சிலருக்கு மேடையில் பேசுவது சிரமமான விடயமாகும். சிலருக்கு அது மகிழ்வானதாக இருக்கும். ஒரு கூட்டத்தின் முன்னால் பேசுவதற்கு மாணவர்களாகிய உங்கள் எல்லோருக்கும் இயலுமாயிருத்தல் வேண்டும். பேச்சாளனும் கூட்டமும் ஒருவரையொருவர் அறிந்தவர்களாகவும் அறியாதவர்களாகவும் இருக்கலாம். பேச்சாளன் தனது பேச்சை சபையிலுள்ளவர்களைக் கவருமாறு நிகழ்த்த வேண்டும். அது இலகுவான காரியமல்ல. அதற்காக நல்ல பயிற்சியும் அனுபவமும் பேச்சாளனுக்கு இருக்க வேண்டும். ஒரு கூட்டத்தில் பேசுவதற்குரிய நோக்கங்கள் பல்வேறுபட்டவையாக இருக்கலாம். சில வேளை கூட்டத்தை ஏதாவது ஒரு செயலுக்காக தூண்ட வேண்டியிருக்கலாம். ஒரு விடயத்தை சமூகத்துக்கு விளக்குவதாக இருக்கலாம். கூட்டத்துக்கும் பேச்சாளருக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதும் அதனைப் பேணுவதும் பேச்சாளரின் பொறுப்பாகும்.

## ஈ) தொடர்பாடற் செயலொழுங்கின் ஆரம்பம்

ஓர் ஆறு தொடங்குவதற்கு குறிப்பான ஒரு இடமுண்டா? அதே போலவே தொடர்பாடற் செயலைத் தொடங்குவதற்கும் குறிப்பான இடம் ஏதும் உண்டா? என உங்களைக் கேட்டால் நீங்கள் அளிக்கும் பதில் என்ன?

மனித மனதிலிருந்தே தொடர்பாடற் செயல் தொடங்குகின்றது. அதாவது அகமுகித் தொடர்பாடலே தொடர்பாடற் செயன் முறையின் அடிப்படையாகும். சிறிய ஊற்று பெரிய நதியாக மாறி, பரந்த பூமி ஊடாகப் பாய்வதால் அது செழிப்படைகின்றது. அதே போலவே ஒருவரின் மனதுள் உதிக்கும் தொடர்பாடற் செயல் இறுதியில் மனித சக்தியாக மாறி மனித சமூகத்தையே ஊட்டம் பெறச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய சகல தொடர்பாடல்களான
- ஆளிடைத் தொடர்பாடல்
- குழுத் தொடர்பாடல் மற்றும்
- வெகுஜனத் தொடர்பாடல்

ஆகிய செயலொழுங்குகள் நடைபெறுவது மனிதர்களின் தொடர்பாடற் செயலை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

ஆளிடைத் தொடர்பாடலிலும் குழுத்தொடர்பாடலிலும் குறைந்த எண்ணிக்கையினரே இருப்பார்கள். வெகுஜன தொடர்பாடலுக்காக அச்சு, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த ஊடகங்களில் எந்தளவு நவீன நுட்பங்கள் இருந்தாலும் அவற்றை உயிர்ப்பான பயனுள்ளதாக ஆக்கிட மனிதர்கள் தேவைப்படுகின்றனர். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற அனைத்து ஊடகங்களிலும் ஊடகவியலாளர்களே முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.

இதன்படி நாம் விளங்கி கொள்ள வேண்டிய முக்கிய விடயம் ஒன்றுள்ளது. தொடர்பாடல் செயலொழுங்கில் உள்ள எல்லா உபகரணங்களையும் தொழில் நுட்பங்களையும் விட ஆட்களே முக்கியத்துவம் பெறுகின்றனர். அதற்குக் காரணம் தொடர்பாடற் செயல் மனிதர்களிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதேயாகும்.

## 1.3 ஆளிடைத் தொடர்பாடல் (Inter Personal Communication)

### அ) இருவர் அல்லது பலருக்கிடையிலான தொடர்பாடல்

இருவருக்கிடையே நடைபெறும் தொடர்பாடல் ஆளிடைத் தொடர்பாடலின் இயல்பாகும். ஒரு தோழன் தோழியுடன் பேசுவதாயின் அதுவும் ஆளிடைத் தொடர்பாடலாகும். தொடர்பாடலின் போது ஒருவரை ஒருவர் அறிமுகமாகிக் கொள்வதற்கும் அறிமுகமாகிப் பழகுவதற்கும் சந்தர்ப்பம் கிடைகின்றது. இதன் சிறப்பம்சம் யாதெனில் ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்கவும் பார்த்தும் பேசும் சந்தர்ப்பமாக இருத்தலாகும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களுண்டு. தொலை பேசியில் இருவருக்கிடையே நடைபெறும் தொடர்பாடலும் ஆளிடைத் தொடர்பாடலே ஆகும். அதன் போது ஒருவருக்கொருவர் முகம் பார்த்துப் பேசுவதில்லை. எனவே சந்தர்ப்பத்துக் கேற்ப இதன் இயல்புகளைப் புரிந்து கொள்ள வேண்டும். மொழி பற்றிய அறிவு இல்லாத நிலையிலும் கூட ஆளிடைத் தொடர்பாடல் நிகழ முடியும்.



படம் :- 1.3.1 ஆளிடைத் தனியாள் தொடர்பாடல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது அங்க அசைவுகள், உருக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி வெற்றிகரமான தொடர்பாடலொன்று நடைபெற முடியும். அவ்வாறு நடைபெறாதிருக்கவும் முடியும். அத்துடன் ஆளிடைத் தொடர்பு நடைபெறும் சந்தர்ப்பம், நேரம் சூழற் தாக்கம், இடைத்தூரம் போன்ற விடயங்களும் தொடர்பாடலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும்.

## ஆ) சமூக நிலைப் பாட்டின் அத்தியாவசிய அங்கம்

ஆளிடைத் தொடர்பாடல் சமூக நிலவுகையின் அத்தியாவசிய அங்கமாக காணப்படுகின்றது. மனிதன், தனியாக இருப்பதற்கு விரும்பும் ஓர் உயிரினமல்ல. குழுவாக இருப்பதற்கே விருப்பம் காட்டுவான். குழுவாக இருக்கும்போது ஒவ்வொருக்கிடையில் தொடர்பு இருத்தல் வேண்டும். ஒருவருக்கொருவர் அறிமுகமாகி தமது செயற்பாடுகளை தொடர்புபடுத்திக் கொள்ள செயற்பாடு நடத்திச் செல்ல தொடர்பாடல் அவசியம். அயல்வாசிகளுடன் நட்பாக இருப்பதற்கும் தொடர்பாடல் அவசியம். அலுவலகத்திலும் பாடசாலையிலும் கடைத் தெருவிலும் சந்திக்கும் நாம் அறிமுகமானவர்களோடு நாம் பேச வேண்டியேற்படும். ஒரு சமூகமாகக் கட்டியெழுப்பபடுவதென்பது நம் ஒவ்வொருக்கிடையேயும் ஏற்படும் உறவாகும். சமூகம் எனக் கட்டியெழுப்பப்படுவது நம் ஒவ்வொருத்தருக்கும் இடையில் ஏற்படுகின்ற புரிந்துணர்வேயாகும். இந்நட்பு தொடர்பாடல் மானுட சமூகத்துக்குள் மட்டுமன்றி விலங்குகளின் சமூகத்திலும் காணப்படும் பொதுவான இயல்பாகும்.

## இ) ஆளிடைத் தொடர்பாடலின் சிறப்பியல்புகள்

1. ஆளிடைத் தொடர்பாடல் வாய் மொழி மூலமும் வாய் மொழியல்லாத வகையிலும் நிகழலாம். சொற்களால் மட்டுமன்றி சமிக்ஞை, குறியீடு, சித்திரம் போன்றவைகளாலும் கருத்துக்களை வெளியிட முடியும்.

2. ஆளிடைத் தொடர்பாடல் உயிர்ப்பானதாகும். ஒருவருடன் முகம் பார்த்துத் தொடர்பாடலில் ஈடுபடுவதனால் ஒவ்வொருவரின் நடத்தைகளை நன்கு இனங்கண்டு கொள்ள முடியும்.

3. ஆளிடைத் தொடர்பாடலின் போது துலக்கங்களையும் பின்னூட்டலையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு தொடர்பாடற் செயலொழுங்கைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வாய்ப்பும் உண்டு.

4. ஆளிடைத் தொடர்பாடலின் பெறுபேற்றை அதே நேரத்திலேயே பெற்றுக் கொள்ளும் வாயப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒருவரிடம் தூண்டலை ஏற்படுத்தி ஊக்குவிக்கும் செயலொழுங்கில் ஆளிடைத் தொடர்பாடலுக்கு ஒரு பங்குண்டு.

6. தொடர்பாடலில் ஏற்படும் தடைகளைக் குறைத்துக் கொள்ளக் கூடிய நிலை ஆளிடை தொடர்பாடலுக்குண்டு

7. மீண்டும் மீண்டும் ஒன்றை வலியுறுத்தி விரிவான விளக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் பயன்படும் ஒரு முறையே ஆளிடைத் தொடர்பாடலாகும்

8. பயனாளியின் சூழல், அனுபவங்களின் பின்னணிகளுக்கேற்ப ஒன்றை விளக்குகின்ற, புரிந்து கொள்ளச் செய்கின்ற ஆற்றல் ஆளிடைத் தொடர்பாடலுக்குண்டு.

9. ஒருவருடைய மனோபாவத்தை அறிந்துகொள்வதற்கும் அதன்படி செயற்படுவதற்கும், தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதற்குமான விரிவான வாய்ப்பு ஆளிடைத் தொடர்பாடலுக்குண்டு.

10. ஆற்றுகை உணர்வுகளை வெளிப்படுத்துவதில் ஆளிடைத் தொடர்பாடல் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒருவரின் மகிழ்ச்சி, பயம், கோபம், அன்பு என்பவற்றை மற்றவருக்கு விளங்கும் வகையில் முன்வைக்க இம்முறை பயன்படுகின்றது.

## ஈ) ஆளிடைத் தொடர்பாடலுக்கான தொழில் நுட்பக் கருவிகள்

ஆளிடைத் தொடர்பாடல் என்பது சோடித் தொடர்பாடலாகும். பொதுவாக நாம் இதனை முகத்துக்கு முகத் தொடர்பாடல் என்று கூறுவோம். எனினும் நவீன தொடர்பாடற் தொழில் நுட்பங்களினால் இதன் தோற்றப்பாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது ஆட்கள் முகத்துக்கு முகம் பார்த்து பேச அண்மையில் இருப்பதில்லை. இப்போதெல்லாம் தொழில் நுட்பம் இடையில் புகுந்துள்ளது.



படம் :- 1.3.2

ஆறிடைத் தொடர்பாடல் கருவிகளின் பாவனை

இங்கு தொலைபேசி ஒரு பிரதான தொழிநுட்பக் கருவியாக ஆகியுள்ளது. தெருவில், பேருந்துகளில், அலுவலகங்களில் அல்லது நேரடியாக பார்க்கும் போது தனியாக சிரிக்கின்ற பேசுகின்ற நபர்களை நீங்கள் கண்டிருக்கின்றீர்களா? சுற்றியிருப்பவர்களைப் பற்றி அவர்கள் கொஞ்சமும் அவதானிக்க மாட்டார்கள். தமது பேச்சை தொடர்ச்சியாக செய்து கொண்டிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையடக்கத் தொலைபேசி கருவிகளினூடாக இங்கு தொடர்பாடல்கள் நடைபெறுகின்றன. ஒருவர் இந்த இடத்திலும் மற்றவர் உலகின் மற்றொரு எல்லையிலும் இருப்பார்.

இன்று உலகில் தோன்றியுள்ள நவீன தொழில் நுட்பத்துக்கு இணங்க தொலைபேசி உரையாடலில் ஈடுபடுபவர்களின் முகம் தொலைபேசித் திரையின் ஊடாக தெரியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதே போலவே இணையத்தில் உரையாடல் வசதியைப் பெற்று இருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் இயலும்.

## 1.4 கூட்டுத் தொடர்பாடல் (Group Communication)

### அ) கூட்டுத் தொடர்பாடலின் தோற்றப்பாடு

ஒரு குழுவினரிடையே நடைபெறுவது கூட்டுத் தொடர்பாடலாகும். சிறிய குழுக்கள் பெரியகுழுக்கள் என சமூகத் தொடர்பாடல் இரு வகைப்படும். சிறிய குழுக்கள் என்பதை சில வேளையில் இருபது பேருக்கு மேற்படாத குழுவென வரைவிலக்கணப்படுத்தலாம். பெரிய குழு என்பது இருபது பேருக்கு மேற்பட்டதாகும். கூட்டுத் தொடர்பாடலும் ஆளிடைத் தொடர்பாடலினைப் போலவே தொடர்படுபவரும் பெறுநரும் நேருக்கு நேராக தொடர்பாடலில் ஈடுபடுவார்கள். ஆனால் ஆளிடைத் தொடர்பாடலைப் போல மிக நெருக்கமாக இருக்காது.

எனினும் வெகுஜன தொடர்பாடலை விடக் கூட்டுத் தொடர்பாடலில் பெறுநருடன் சிறிது நெருக்கமாக இருப்பர். ஒவ்வொருவரின் நடத்தைக்கேற்ப அவர்களின் துலங்கல்களுக்கேற்ப தொடர்பாடல் நிகழும். ஒரு விகாரையின் முற்றத்தில், கோயிலில், பள்ளிவாசலில், வயலில், வகுப்பறையில், அலுவலகத்தில் நிகழ்வது கூட்டுத் தொடர்பாடலாகும்.

கூட்டுத் தொடர்பாடலில் அனேகமாக ஒரு குழுத்தலைவர் இருப்பார். அவர் தன்னுடைய குழுவை நெறிப்படுத்துவார். முறைசார் குழுக்களைப் போலவே முறைசாராக் குழுக்களும் உண்டு.



1.4.1 படம்:- கூட்டுத் தொடர்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைசார்ந்ததாக ஒரு சங்கம், விளையாட்டுக் கழகம், வகுப்பறை போன்றவற்றில் சந்திக்கும் குழுவைக் கூறலாம்.




படம் :- 1.4.2 முறைசார் தொடர்பாடல்




படம் :- 1.4.3 முறைசாராத தொடர்பாடல்

ஒரு பஸ்தரிப்பு நிலையத்தில் மழைக்காக ஒதுங்கும் சிலரிடையேயும் கடை விறாந்தையில் கூடும் சிலரிடையேயும் நிகழ்வதை முறைசாராத் தொடர்பாடல் என்று கூறலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் விடயங்களைப் பற்றி, பொருட்களின் விலைபற்றி உரையாடப்படலாம். இங்கு முறைசார் தன்மை இல்லாவிட்டாலும் ஒவ்வொருவருக்குமிடையிலான தொடர்பாடற் கருமங்கள் முக்கியமானவை.

முறைசார் குழுக்கள் ஒரு முறையான திட்டத்திற்கு இணங்கச் செயற்படுகின்றன. மரண நலன்புரி சங்கத்தில் ஒன்று கூடுபவர்கள் நோக்கத்துக்கு இணங்க கிராம நலன் கருதி வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றனர். ஒரு கிராம அபிவிருத்தி சங்கத்திலே அந்த ஊரில் நடைபெற வேண்டிய அபிவிருத்திச் செயல்முறைகள் பற்றி உரையாடுவார்கள். அங்கு ஊர்மக்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி அதைப்பற்றி உரையாடுவார்கள் கூட்டுத் தொடர்பாடலின் இயல்பானது, பலவாறான கருத்துக்களை முன்வைத்து அதிலிருந்து சிறந்த கருத்தொன்றை தெரிந்தெடுக்க வசதியாக இருப்பதாகும். பழங்காலத்திலிருந்து மிகச் சிறப்பாக பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் முறையாகக் கூட்டுத் தொடர்பாடலைக் குறிப்பிடலாம். உலகில் தோன்றிய உன்னதமான சமயத் தலைவர்கள் தங்களது சமய தர்மங்களை பிரசாரம் செய்வதற்கு கூட்டுத் தொடர்பாடல் முறையை உபயோகித்தனர் அதேபோல இன்றும் மிகச்சிறப்பாக கூட்டுத் தொடர்பாடல் முறையை சமூக, சமய, அரசியற் செயற்பாடுகளில் பயன்படுத்துவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆ) கூட்டத்திற்கும் பேச்சாளருக்குமிடையிலான தொடர்பு

கூட்டம் என்பது சில மனிதர்களை அல்லது ஒரு குழுவைக் குறிப்பதாக இருக்கலாம். ஒரு குழு எனும் போது ஒன்றாக வேலை செய்பவர்கள் என்பது அதன் பொருளல்ல. எனவே அவர்களுக்கென்று ஒரு தலைவரும் இருக்க மாட்டார். ஒரு குழு என்பது ஒரு பொது நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ஒன்று சேரும் தனி மனிதர்களின் கூட்டமாகும். அப் பொது நோக்கத்தை அடைவதை அடிப்படையாகக் கொண்டு ஒரு பிணைப்பு அவர்களிடம் இருக்கும். அவர்களிடையே ஒரு தலைவரும் இருப்பார். கூட்டத்தின் முன்னால் பேசுவதற்கு இடம் கிடைப்பது யாருக்கு? பாடசாலை ஊடக சங்கக் கூட்டத்தில் சகோதர மாணவ மாணவிகள் முன்பாகப் பேச உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதா? இவ்வாறாக ஒரு கூட்டத்தின் சிறந்த பேச்சாளர் ஆவதென்பது ஒருவருக்கு மகிழ்ச்சியான சவாலாக அமைவதுடன் மற்றொருவருக்கு விரும்பத்தகாத அனுபவமாக இருக்கலாம்.

கூட்டத்துக்கும் பேச்சாளருக்குமிடையே கவர்ச்சியான தொடர்பு இருக்க வேண்டும். குழு என்றாலும் கூட்டம் என்றாலும் அதில் வேறுபாடில்லை. கூட்டம் என்பது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆட்களாக இருக்க பேச்சாளர் தனி நபராக இருப்பர். தான் பேசும் நேரத்தில் சபையைக் கவரும் பொறுப்பு பேச்சாளரைச் சார்ந்ததாகும். முறைசார் குழுக்களில் ஒரு கூட்டுப் பொறுப்பிருக்கும். முறைசாரா குழுவில் அத்தகைய பொறுப்பிருக்காது. பேச்சாளர் குறிப்பிட்ட நேரத்தில் இத்தகைய குழுவையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சமூக இயல்பு எவ்வாறானதாக இருந்தாலும் அவர்களின் முன் போகும் சந்தர்ப்பத்தில் ஒரு கணத்திலே பேச்சாளருக்கும் அந்தக் கூட்டத்துக்குமிடையில் ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடுகின்றது.

சில பேச்சாளர்கள் இரண்டு கைகளையும் உயர்த்தி வணங்கிக் கூட்டத்தின் முன்னால் வருவர். எல்லோரும் இவ்வாறாக வரவேண்டும் எனக் கூற முடியாது. இருப்பினும் கூட்டத்தின் கவனத்தை தொடக்கத்திலேயே பேச்சாளர் தன்பால் ஈர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களது பாடசாலை மாணவர் மன்றத்தில் பேசுவதற்கு சபையேறி வரும் நண்பர்களின் நடத்தைகளை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா?

அந்த மாணவப் பேச்சாளர்களின் முகங்களை நன்றாகப் பாருங்கள். அவர்களின் கண்கள் மேல் நோக்கியுள்ளது. அல்லது தங்கள் முன்னே நிலத்தை நோக்கியுள்ளது. இதற்கு காரணமென்ன? தான் நன்றாக அறிந்த தனது பாடசாலைச் சிநேகிதர்களை நேரடியாகப் பார்ப்பதற்கு பயம் ஏற்படுவதாகும். இதனை சபைக் கூச்சம் என்று கூறுவர். சபைக் கூச்சம் அல்லது சபை முன்னால் நிற்பதற்கு உண்டாகும் வெட்கத்தால், பயத்தால் ஒரு பேச்சாளராக விரும்பும் உங்களுக்கும் கூட்டத்துக்குமிடையிலான தொடர்பு முறிவடைந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரையை நோக்கிப் பேசுவதற்குப் பதிலாக சபையை நோக்கிப் பேசுவதன் மூலம் கூட்டத்தோடு ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

விழிவழித் தொடர்பு (Eye Contact) என்பது தன்முன்னால் இருக்கும் கூட்டத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்குள்ள மிகச் சிறந்த ஒரு முறையாகும். சபையை நோக்குவதன் மூலம் பார்த்தபடியே அவர்கள் கண்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு பேச்சை ஆரம்பிக்கலாம். அதுமட்டுமல்ல இந்த விழிவழித் தொடர்பு தனது பேச்சை நிகழ்த்துகின்ற நேரம் முழுவதுமே வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு முடியுமாயிருத்தல் வேண்டும்.

சில பேச்சாளர்கள் தங்கள் முன்னேயுள்ள சபையில் ஒரு பகுதியினருடன் மட்டுமே தன்னுடைய விழிவழித் தொடர்பை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. முன் வரிசைகளில் உள்ளவர்களோடு அல்லது தன் அருகில் இருப்பவர்களோடு மட்டும் இவ்வாறான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதால் மிகப்பெரிய சிரமம் ஏற்படும். இதனால் பேச்சைத் தொடங்கி சிறிது நேரத்தில் சபையில் பெரிய அளவினர் இந்தப் பேச்சுக்கு செவிசாய்க்காமல் தத்தமக்குள் பேச்சுக்களை பேச ஆரம்பிப்பார்கள். இந்த நிலை நீடித்தால் சிறிது நேரத்துக்குள்ளேயே பேச்சாளருக்கு எதிர்ப்பு ஏற்படுவதற்கு இடமுண்டு. ஒரு சபையிலே பல்வேறான நடத்தைகள் ஒரு உள்ள நபர்கள் வந்து இருப்பார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. கூட்டத்துக்கும் பேச்சாளருக்கும் இடையிலான தொடர்பை கட்டியெழுப்புவதையும் நடத்திக் செல்வதையும் ஒரு கலங்கரை விளக்க உபாயமாகக் கூறலாம்.



படம் :- 1.4.4
கிரகிப்பவர்களின் தோற்றப்பாடுகள்

(Light House Technique)

கூட்டத்துக்கும் பேச்சாளருக்கும் இடையிலான தொடர்பை கலங்கரை விளக்கத்துக்கு உதாரணமாகக் கூறினோம். அதனை நன்கு விளங்கிக் கொள்ள கலங்கரை விளக்கம் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் அல்லவா?



படம் :- 1.4.5 கலங்கரைவிளக்கம்

கலங்கரை விளக்கம் மிக உயரத்தில் அமைந்துள்ளது. சமுத்திரத்தில் ஓடும் கப்பல்களுக்கு பாதை காட்டுவதற்காகவே கலங்கரை விளக்கம் மிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான கூர்மையான ஒளியை வெளியிடும் ஓர் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கரை விளக்கத்தின் உச்சியிலே இருக்கின்றது. அது சாதாரணமாக ஒரு நிமிடத்துக்கு ஒருதடவை சுழலும். நீங்கள் கலங்கரை விளக்கில் சுழலும் ஒளியை நோக்கினால் அது ஒருநிமிடத்துக்கு ஒருமுறை தெரிந்து மீண்டும் மறைந்து போய்விடுவதைக் காண்பீர்கள்.

இவ்வாறாக பேச்சாளர் தம் முன்னால் இருக்கும் எல்லோருக்கும் கலங்கரை விளக்க ஒளியாக விளங்க வேண்டும். பேச்சாளர் தனது பேச்சை நடாத்திக் கொண்டு போவதற்கு இடையில் ஒரு நிமிடத்துக்கு ஒரு தடவையாவது சகலரையும் நோக்கவேண்டும். அல்லாவிடில் விழிவழித் தொடர்பை வைத்துக்கொள்ளல் வேண்டும். பேச்சாளர் தமது பேச்சினை நடாத்திச் செல்லும் பொழுது இடைக்கிடை இரண்டு நிமிடத்திற்கு ஒரு முறையாவது சபையோர் மீதும் தமது பார்வையை செலுத்துதல் வேண்டும்.

இந்த உத்திகளைப் பயன்படுத்துதல் முதலில் கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்றாக பேச்சாளன் செய்ய வேண்டும். பின்பு அது பழக்கமாகி தானாகவே நிகழும். எவ்வாறாயினும் ஒரு நபர் தனது கூட்டத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு கலங்கரை விளக்க உத்திக்கு மேலதிகமாக பேச்சு உபாயங்கள் அதாவது நகைச்சுவை, கேள்வி கேட்டல், கலந்துரையாடல் சம்பவங்கள் கலை அம்சங்களைக் கையாளுதல் போன்றவற்றைப் பொருத்தமாகக் கைக்கொள்ள வேண்டும். கண்கள் ஊடாக மிகவும் சிறப்பாகச் சபையிலுள்ள எல்லோருடைய அவதானிப்பையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றபடியால் அது முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் அதுவே சபையிலுள்ளவர்களின் கவனத்தை ஈர்க்க உதவும்.

## இ) தொழில்நுட்ப உபகரணப் பயன்பாடு

கூட்டத்திலுள்ளவர்களது எண்ணிக்கை அதிகரிக்கும் போது பேச்சாளருக்கும் கூட்டத்துக்குமிடையில் அதிகளவு பௌதிகத் தூரமொன்று ஏற்படும். பேச்சாளர் ஒருவர் என்றபடியினால் கூட்டத்திற்கேற்ப தனது குரலை உயர்த்திக் கொள்ள முடியாது. ஆகையால் பேச்சாளருடைய குரலை அதிகரித்துக் கொள்வதற்கான தொழில்நுட்பக் கருவிகள் தேவைப்படும். அதற்காக ஒலி பெருக்கிகளை உபயோகித்துக் கொள்வோம். பேச்சாளருக்கு ஒலிவாங்கி (Micro phone) கிடைப்பதாலும் கூட்டம் அந்தப் பேச்சை கிரகித்துக் கொள்வதற்காக ஒலிபெருக்கிக் கருவிகள் இருப்பதாலும் பேச்சு சபைக்கு நன்கு கேட்கும்படியாக அமைத்துக் கொள்ளலாம்.



படம் :- 1.4.6 கொழுவும் ஒலிவாங்கி (Clip Micro Phone)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஒலிபெருக்கிக் கருவிகளுக்குப் பதிலாக தற்காலத்தில் உயர்தொழில் நுட்பத்தினூடாக ஒலிபெருக்கிகள் பாவனைக்குட்படுத்தப்படுகின்றன. இங்கு குறிப்பிடத்தக்கது எப்.எம் ஒலிவாங்கி ( FM Micro Phone) இதனால் வயரில்லாத ஒலிவாங்கிகளைப் பாவிப்பதற்கு எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பேச்சாளருக்கு தனது விருப்பமான இடத்திலிருந்து நடந்து கொண்டே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. அது மாத்திரமல்ல சபையிலிருந்து வினாக்களைத் தொடுப்பதற்கு கம்பியில்லா ஒலிவாங்கிகளை பயன்படுத்த முடியும். இது மிகவும் வசதியானதாகும். கம்பியில்லாத ஒலிவாங்கிகள் தற்காலத்தில் மிக அதிகமாகப் பாவிக்கப்படுகின்றன. கையால் பிடித்துக் கொண்டிருப்பதற்கு அதனை பதிலாக அவருடைய மேற்சட்டையில் இதனை கொழுவி வைக்க முடிகின்றது.



படம் :- 1.4.7
கூட்டு ஊடக நிழல் கருவிகள் பாவனை

கூட்டம் பெரிதாகும்போது ஏற்படும் மற்றுமொரு பிரச்சினை தனது பேச்சுடன் தொடர்பான உருக்கள் புகைப்படங்கள் போன்றனவற்றை முன்வைப்பதில் உள்ள சிக்கலாகும். எனவே செவிப்புல, கட்புல சாதனங்களை பயன்படுத்த வேண்டியிருக்கும். பக்கப்புரட்டி, சுவரொட்டி, கணனியின் திரை, சினிமாச்சுருள், மேல்தலை எறிவை (Over Head Projector) வழுக்கி என்பன இதில் அடங்கும். தேவைக்கதிகமாகக் கட்புல செவிப்புல உபகரணங்களையும் பயன்படுத்துதல் பேச்சை உரிய முறையில் முன்வைக்கத் தடையாக அமையும்.

## இ) கூட்டுத் தொடர்பாடலின் சிறப்பியல்புகள்

1. தொடர்பாடலை உயிர்ப்புடனிருக்கச் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தல்
2. பங்குபற்றுபவர்களிடையே ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தி அவர்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தல்.
3. ஏதாவதொரு எண்ணம் அல்லது பிரேரணை பற்றி ஆலோசனைகளை பொதுவாக எல்லோருடைய கருத்துக்களையும் அத்தருணத்திலேயே தெரிந்து கொள்ள முடிதல்
4. ஏதாவதொரு பிரேரணையை நடைமுறைப்படுத்துவதில் பொது உடன்பாடு காணல்.
5. குழுவுக்குள் ஒரு தலைவன் இருத்தல்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பங்குபற்ற ஒரே ஒரு குழு இருந்தாலும் அவர்களிடையே பல்வேறு அபிப்பிராயங்கள் இருத்தல்
7. பல்வேறு கோணங்களில் ஏதாவது ஒரு பிரேரணை அல்லது கருத்துக்கள் கலந்துரையாடப்படும் வாய்ப்பு கிட்டுதல்.
8. குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க முறையாக செயற்படுத்தல்
9. குறிப்பிட்ட கால அட்டவணையில் பணியாற்ற முடிகின்றமை.
10. பல்வேறு திறன்கள் உள்ளவர்களை பங்குபற்ற வைக்கவும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடிதல்
11. கூட்டத்தினர் ஒன்றாக இருத்தல்.
12. தொழில்நுட்பக் கருவிகளை பாவிக்க வேண்டியிருத்தல்

## 1.5 வெகுஜன தொடர்பாடல் (Mass Communication)

### அ) வெகுஜன தொடர்பாடலின் இயல்பு

உங்கள் முன்னாலிருக்கும் கூட்டத்துடன் தொழிநுட்பக் கருவிகளைப் பாவித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உங்களால் முடியும். உங்கள் முன்னால் இல்லாத நீங்கள் அறியாத பெருந்தொகையான மக்கள் கூட்டத்துடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது எவ்வாறு? அதற்காக தொழில் நுட்பத்தை பாவிக்கவேண்டியுள்ளது. கூட்டுத் தொடர்பாடலில் கம்பிகள் இணைக்கப்பட்ட ஒலிபெருக்கிக் கருவிகளை பெருந்தொகையான மக்களுக்கான தொடர்பாடலின்போது கம்பியுள்ள தொழிநுட்பக் கருவிகளுக்குப் பதிலாக வேறு முறைகளை பயன்படுத்த வேண்டியிருக்கும்.

தொடர்பாடுபவர் தனக்கு முன்னால் இல்லாத போதும் பெருந்தொகை மக்கள் தொகையுடன் தொடர்பாடலை மேற் கொள்வதை நாம் வெகுஜன தொடர்பாடல் என அழைக்கின்றோம். வெகுஜன தொடர்பாடலுக்காக பயன்படுத்தும் ஊடகங்கள் வெகுஜன ஊடகங்கள் (Mass Media) என அழைக்கப்படுகின்றன.

வெகுஜனத் தொடர்பாடல் ஏனைய தொடர்பாடல் முறைகளிலிருந்து வேறுபட்ட ஒரு செயற்பாடாகும். அதன் சில இயல்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. தொடர்பாடுபவர் எதிரேயில்லாத எங்கேயோ இருக்கும் பெறுநருடன் நிகழும் தொடர்பாடல்.
2. அடிப்படையில் இது ஒரு வழித் தொடர்பாடல்.
3. இது ஒரு ஒருங்கமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
4. உபரணங்கள் அல்லது கருவிகள் என்பன பயன்படுத்தப்படல் வேண்டும்
5. தொடர்பாடலும் பெறுநரும் நேருக்கு நேராக இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுஜன தொடர்பாடல் ஓர் முறைசார்ந்த நடைமுறையாகும். அதே போலவே ஒழுங்கமைப்பு ரீதியிலான பலரின் பங்கு பற்றலுடன் கூடிய நிகழ்வாகும்.

அது நிரந்தரமாகவே பொது மக்களை நோக்கியதாக இருக்கும். வெகுஜனம் எனபது இங்கு பல்வேறு சமூக, பொருளாதார, கல்வி, இனத்துவ, தேசிய, தொழில்சார் என்றவாறு பரந்து நிற்கும் மக்கள் கூட்டத்தைக்குறிக்கும் இது எண்ணிக்கை ரீதியான ஒரு திரட்டு மட்டுமின்றி பண்பு ரீதியிலும் தொடர்புடையதாகும்.

## ஆ) வெகுஜன தொடர்பாடலுக்கும் வெகுஜன ஊடகங்களுக்கும் இடையிலான தொடர்பு

இந்த நூற்றாண்டில் வெகுஜன ஊடகங்களினால் உங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் எவ்வகையானதென ஒரு கணம் யோசித்துப் பார்க்கவும்.

- ஐக்கிய அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் தீப்பற்றி அழிவதை அது நிகழும் போதே கண்டோம்.
- 1996 உலக கிண்ண கிரிக்கற் போட்டிகளை அது நடைபெறும்போதே கண்டு இரசித்தோம்.
- விளையாட்டு வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க 2000இல் சிட்னி நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் 200 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டதை நாம் நேரடியாகவே கண்டுகளித்தோம்.



படம் :- 1.5.1
சுசந்திகாவின் வெற்றிக் களிப்பு



படம் :- 1.5.2
1996 இல் உலகக்கிண்ணம் வெல்லப்பட்டபோது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுசன · தொடர்பாடலுக்கு இத்தகைய வேகமான உயிருள்ள உலகளாவிய நிலைமை எவ்வாறு கிடைத்தது? அப்பெருமை வெகுசன ஊடகங்களையே சாரும்.

இக்கருத்துக்களினால் வெளிப்படுவது யாது?

1. வெகுஜன தொடர்பாடலுக்காக மக்கள் வெகுஜன ஊடகங்களை உபயோகித்துக் கொள்வார்கள்.
2. வெகுஜன ஊடகங்கள் இன்றி வெகுஜன தொடர்பாடல் நடைபெற முடியாது.

வெகுசன ஊடகம் தொழில் நுட்பத்தை அடிப்படையாக கொண்ட தொடர்பாடற் செயலொழுங்கை கொண்டதாகும். வெகுஜன ஊடகத்தில் இன்றைய நிலை தீர்மானிக்கப்படுவது வெகுஜன ஊடகத்துக்காக எவ்வளவு தூரம் உயர் தொழில் நுட்பம் பயன்படுத்த முடியுமென்பதை பொருத்தேயாகும்.

## இ) சமூகத் தேவைகளும் தாக்கங்களும்

மின்சாரமற்ற வீடுகளில் வசிப்பவர்கள் வாகன மின்கலங்களை (Battery) அல்லது சூரிய வெப்ப மின்கலத்தை உபயோகித்து தொலைக்காட்சியைப் பார்ப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். சில நேரங்களில் அவ்வாறான வீடுகளிலுள்ள மிகவும் பெறுமதியான வீட்டு உபகரணம் தொலைக்காட்சியாக இருக்கலாம். தொலைக்காட்சியை முழுமையாக பணம் செலுத்தி வாங்க முடியாதவர்களுக்கு தவணை அடிப்படையில் பணம் கட்டுவதற்கு வியாபாரிகள் இடமளித்துள்ளனர். தனது விருப்பத்திற்குரிய தொலைக்காட்சி நாடகத்தைக் கண்டு களிப்பதற்காக இரவில் தீப்பந்தங்களை எடுத்துக்கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கும் வீடுகளுக்குப் போகும் கிராம வாசிகள் பலர் உள்ளனர்.



படம்:- 1.5.3 தொலைக்காட்சியின் தாக்கம்

பேருந்து சாரதி கூட வானொலி அலைவரிசையொன்றினூடாக ஒரு பாட்டைக் கேட்காமல் பேருந்தை ஓட்ட முடியாத நிலை இன்றுள்ளது. அவர்கள் விரும்பும் பாட்டுக்களைக் கேட்க பயணிகள் தயாராக இருக்க வேண்டும். தொலைக்காட்சி, வானொலி, இலத்திரனியல் ஊடகங்களோடு ஒப்பிடும்போது பத்திரிகை வேறுபட்ட தோற்றம் கொண்டதாக இருப்பினும் வாரந்தோறும், தினந்தோறும் வெளிவரும் பத்திரிகைகளை வாசிப்பது மக்களுடைய பழக்கமாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் பத்திரிகைகளை காசு கொடுத்து வாங்குவார்கள். பாடசாலைகள், அலுவலகங்கள், நூலகங்களில் பொதுவாக பத்திரிகைகளை வாங்குவது வழக்கம். இன்னும் பலர் தொழிலுக்குச் செல்லும் வழியில் பத்திரிகையை விற்பனை செய்யும் கடையருகே சென்று பத்திரிகையின் பிரதான செய்திகளை வாசிப்பார்கள். கிராமங்களை நோக்கினால் கிராமம் முழுவதும் வாசிப்பதற்கான பத்திரிகை தேநீர் கடையிலேயே வைக்கப்படும். சில வேளைகளில் கிராமிய தேநீர்க் கடைகளுக்குச் செல்லும் மக்கள் தேநீரை அருந்திக்கொண்டே பத்திரிகையை வாசிப்பார்கள். அவற்றிலுள்ள செய்திகள் பற்றியும் வேறு விடயங்கள் பற்றியும் அங்கு கலந்து உரையாடுவார்கள்.

இன்றைய ஊடக சூழலைப் பற்றி மிக எளிமையாகக் கூறினால் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்றவற்றுடன் சமூகம் குறைந்த கூடிய அளவில் இணைந்திருப்பதும் அவை மக்களின் அன்றாட வாழ்வின் ஓர் இன்றியமையாத அங்கமாக மாறியிருப்பதுவும் முககியமான அம்சங்கள் ஆகும்.

வெகுஜன ஊடகங்கள் மூலமாக முன்வைக்கப்படுகின்ற செய்திகளும் பிற ஆக்கங்களும் இரண்டு முக்கிய காரணங்களுக்காகச் சமூகத்துக்கு தேவையாக உள்ளன. முதலாவது பொழுது போக்காகும். இரண்டாவது தகவல்கள், செய்திகளை அறிந்து கொள்வதாகும். மானுட நிலை முக்கிய தேவைகளாக கல்விக்கு வெகுஜன ஊடகத்தைப் பாவிப்பது சம்பந்தமாக மக்களிடையே மிக உதாசீனப் போக்கே காணப்படுகின்றது. அதேபோன்று பொருட்கள் சேவைகளுக்கான விளம்பரங்கள் போன்றே எண்ணக்கருக்கள், கருத்துக்கள் தொடர்பாகவும் ஓர் தூண்டலை ஏற்படுத்த வெகுஜன ஊடகத்தைப் பயன்படுத்தும் தேவை சமூகத்திற்குண்டு.

இறுதியான நோக்கும் போது தகவல்கள், கல்வி, தூண்டுதல் போன்ற மூன்று கருமங்களில் பொழுதுபோக்கினை முன்னிலைப் படுத்த வேண்டியேற்பட்டுள்ளது. இதற்கிணங்க உலகில் உருவாகியுள்ள புதிய எண்ணக் கருவானது கல்வியையும் பொழுதுபோக்கையும் ஒன்றிணைப்பதேயாகும். ஆங்கிலத்தில் Education and Entertainment என்ற இரு சொற்களையும் ஒன்றிணைத்து Edu + Entertainment= Edutainment என்ற புதிய சொற்றொடர் ஒன்று ஆக்கப்பட்டுள்ளது.

மானுட சமூகத்தில் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கான தாகம் பொழுதுபோக்கைப் பெறும் ஆசை என்பவற்றினூடாகத் தெரிய வருவது வெகுஜன ஊடகம் சமூக நிலைப்பாட்டின் அத்தியாவசிய ஓர் அங்கமாக மாறியுள்ளது என்பதாகும். நாளுக்கு நாள் வெகுஜன ஊடகத்தின் உயர்தொழில் நுட்பங்களை விருத்திசெய்வது மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காவேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் :- 1.5.4
தொலைக்காட்சியை பார்த்தல்

வெகுஜன ஊடகத்தின் சமூகத் தாக்கங்களைப்பற்றி ஆராயும்போது மகிழ்ச்சி ஒரு பக்கம் இருபக்கங்கள் மறு பக்கம் துக்கமும் என காணப்படுகின்றன. மானுட சமூகத்தினுடைய உன்னதமான நிலைக்கு வெகுஜன ஊடகங்கள் மிகப்பெரிய தாக்கங்களை உண்டாக்கியுள்ளன வென்பது மகிழ்ச்சியான பக்கமாகவும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள, அழகியல் இரசனைக்கு, அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கைத்தொழில் மற்றும் சேவைகள் மேம்பாட்டுக்கு, மனித தர்மங்களை ஊட்டம் பெறச் செய்வதற்கு, ஊடகங்களில் ஏற்பட்டுள்ள செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட முடியாது. வெகுஜன ஊடகங்களினால் சமூகமயமாக்கல் தொடர்பிலும் பாரிய பங்களிப்பு நடைபெறுகின்றது. சமூக இருப்பு பல்வேறு அம்சங்களின் இருப்பு நவீனமயப்படுத்தல் ஆகிய சமூகத் தேவைககளில் மட்டும் அன்றி பொதுசன அபிப்பிராயத்தை நெறிப்படுத்துவதிலும் ஊடகம் சீராக பணியாற்றுகின்றது.

சில நிகழ்ச்சிகளைக் தயாரிக்கும்போது சமூகக் கோட்பாடுகளைப் பற்றி கவனம் செலுத்தாதனால் மனிதவிழுமியங்களைக் குறைத்து மதிப்பிடும் நிலை இன்றைய சமூக நடத்தைக் கோலத்தினூடாக தென்படுவதாக பலரும் கருதுகின்றனர்.

## ஈ) நவீன தொடர்பாடல் தொழில் நுட்ப வளர்ச்சி

தொடர்பாடற் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி கடந்த காலங்களில் வேகமடைந்துள்ளதைக் காணமுடிகின்றது. 1440 ஆம் ஆண்டு ஜொஹன்னஸ் குட்டன் பேர்க் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்ததற்குப் பின்பு தொடர்பாடல் தொழில் நுட்பம் புதிய பாதையை அடைந்தது. சலனப்படம், புகைப்படக் கருவி, தொலைபேசி, மோர்ஸ் சமிக்ஞை நடைமுறை, கம்பியில்லாத் தொழில்நுட்பம், தொலைபேசி, சினிமா, தொலைக்காட்சி போன்ற பல்வேறு ஊடகக் கருவிகளும் உபகரணங்களும் பிற்கால உலகில் தோன்றின.



படம் :- 1.5.5 நவீன தொடர்பாடல் கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தொடர்பாடற் கலை வெகுவேகமாக செய்மதித் தொடர்பாடல் வரை தொழில்நுட்முறையூடாக வளர்ச்சியடைந்துள்ளது. இதனால் உலகில் எந்தவொரு இடத்திலும் நடைபெறுகின்ற சம்பவங்களை மிக விரைவாக அறிக்கையிடுவதற்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இப்புதிய தொடர்பாடல் தொழில்நுட்பத்தால் இயலுமாக உள்ளது.

மேலும் தொடர்பாடற் கருமங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற இணயத்தளத்தினூடாகவும் நவீன தொழில் நுட்பச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

எந்தவொரு நாட்டிலிருந்தும் எந்தவொரு செய்தியையும் ஒருவருடனான உரையாடலைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், இரசனையைப் பெற்றுக் கொள்ளல் போன்ற தொடர்பாடல் நோக்கங்களை பூர்த்திசெய்வதும் இதன் மூலம் இலகுவாகின்றது. மென்பொருள் (Soft ware) ஊடாக தொடர்பாடலின் புதிய கோலங்களை உருவாக்கவும் இன்று நவீன தொழில் நுட்பம் ஆற்றல் பெற்றுள்ளது.

பல்வேறு கம்பனிகள், நிறுவனங்கள் அவர்களுக்குத் தேவையான மென்பொருட்களைத் தயாரித்து முன்வைக்கின்றன. இங்கு நிறுவனத்தின் தேவைக்கும் சமூகம் கொடுக்கல் வாங்கல்களுக்கான நிறுவன நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான வகையிலும் இவை ஆக்கப்படுகின்றன.



படம் :- 1.5.6 செய்மதித்தொழில் நுட்பம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல் தொழில் நுட்பம் விரிவடைந்ததோடு மானுட சமூகத்தில் பிரபஞ்ச ரீதியாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுகின்றதொரு தாகம் ஏற்பட்டுள்ளது. பூமிக்கு வெளியே வேறு கிரகங்களில் ஏதேனும் முன்னேற்றமான உயிரிகள் உள்ளார்கள் என்பதும், அவர்களுடன் எவ்வாறு தகவல் பரிமாறிக் கொள்வது என்பதும் இன்று விஞ்ஞானிகள் எதிர் நோக்கியுள்ள சவாலாகும்.

தொடர்பாடற் தொழில் நுட்பத்தின் விருத்தி உலகில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை ஆராயும் போது, நாம் மறந்து விடக் கூடாத மற்றுமொரு முக்கிய விடயமுண்டு. அதாவது நவீன உலகம் சமனற்ற இயல்புகளுடனும் சம பலத்துடனும் காணப்படுகின்றது என்பதும், தகவல் பரிமாற்றுதல் கோலம் அதனுடன் இணைந்துள்ளது என்பதுமே அவ்விடயமாகும்.

ஒப்படை 1.

1. தொடர்பாடல் என்பதை அறிமுகஞ்செய்து அது வெற்றிகரமாக இயங்குவதற்கு தேவையான அடிப்படைகள் எவையெனக்கூறுக
2. தொடர்பாடலின் நோக்கங்கள் எவையென விபரிக்க
3. முறைசார் தொடர்பாடலிலும் முறைசாரா தொடர்பாடலிலும் உள்ள வேறுபாடுகளை விளக்குக
4. தொடர்பாடலின் தோற்றப்பாடு எத்தகையதென்று விபரிக்குக.
5. நவீன தொடர்பாடற் தொழில்நுட்ப உபகரணங்கள் எவையென்று அறிமுகஞ்செய்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2 தொடர்பாடலின் வடிவங்கள்




**நோக்கம்**

தொடர்பாடலின் இயல்பு ஒன்றாய் இருப்பினும் அதன் தோற்றப்பாடுகள் பல்வேறு வகைப்படும். பல்வேறு தோற்றப்பாடுகளில் தொடர்பாடல் நிகழ்ந்திட முடியும் என்பதே இதன் கருத்தாகும். எத்தோற்றத்தை எவ்வாறு பயன்படுத்துவதென்பது அதன் தேவையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படலாம். அல்லது அச்சந்தர்ப்பத்தில் வழங்க முடியுமான வடிவத்தின் படியாக இருக்கலாம். தொடர்பாடலைக் கற்பவர் என்ற வகையில் நீங்கள் இவ்வடிவங்களின் வேறுபாடுகளை ஒப்பீட்டு ரீதியில் இனங்கண்டு கொள்வது மட்டுமின்றி அவற்றின் பாரம்பரிய தனித்துவமான பண்புகள் யாவை? அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? ஆகியன பற்றிய அனுபவத்தையும் பெற வேண்டும். அதன்படி இவ்வத்தியாயத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுவது பல்வேறு தொடர்பாடல் வடிவங்களின் சிறப்பியல்புகளை வேறுபடுத்தி இனங்கண்டு கொள்வதுடன், அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய விதத்தைப் பற்றிய தேர்ச்சிவிருத்தி உங்களில் ஏற்படுத்துதலாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

தொடர்பாடல் மனித சமூகத்தின் இருப்பினதும் அபிவிருத்தியினதும் பிரிக்க முடியாத ஒரு காரணியாகும். அதனைத் தவிர்த்து மனித சமூகத்தின் எந்தவொரு தனியான செயற்பாடு பற்றியும் நாம் சிந்திக்க முடியாதுள்ளது. ஒரு சமூகப் பிராணி என்ற வகையிலும் மனித நிலைப்பாட்டின் இயல்பே தொடர்பாடல் சார்ந்ததாகவுள்ளது. சமூகத்தொடர்பாடல் செயன்முறையாகும். இதன்படி தொடர் பாடல் வடிவமைப்பென்பது பயனாளி தகவல்களைப் பெறும் விதத்தையே குறிப்பிடுகின்றது. நாம் அன்றாடம் ஏதோ ஒரு வடிவத்திலேயே தகவல்களைப் பெறுகின்றோம். அது வாய்மொழி மூலமாக இருக்கலாம். கட்புல அல்லது செவிப்புல மூலமாக இருக்கலாம். அத்துடன் முறைசார்ந்த அல்லது முறைசாராத விதத்திலாகவும் அமைந்திருக்கலாம்.




படம்:- 2.0 தொடர்பாடல் நிகழும் விதம்.

மொத்தத் தொடர்பாடல் செயலொழுங்கு நிகழும் விதம் நாம் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளும் கருத்துக்கள், விளக்கங்கள் பொருள், உணர்வுகள் ஆகியவற்றை தொடர்பாடலின் உள்ளடக்கம் எனக் கொள்ளலாம். அவற்றை எம்மிடம் கொண்டு வருவதற்காகப் பயன்படுத்தப்படும் ஊடகங்களான சொற்கள், அபிநயங்கள், அங்க அசைவுகள், எழுத்துக்கள் ஆகியனவற்றை கட்புல செவிப்புல ஊடகங்களினது தொடர்பாடற் செயலொழுங்கின் பல்வேறு வடிவங்களில் நாம் காணமுடியும்.

அத்துடன் பத்திரிகையை எழுத்துத் தொடர்பாடல் வடிவமாகவும், வானொலியை செவிப்புலத் தொடர்பாடல் வடிவமாகவும், தொலைக்காட்சியை செவிப்புல, கட்புலத் தொடர்பாடல் வடிவமாகவும் அறிமுகப்படுத்துவது மிகவும் பொருத்தமானது. அதே போன்றே உடல் அங்க அசைவுகள், அபிநயங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல்வேறு வழிகளில் நடைபெறும் கருத்து வெளிப்பாடுகள் வாய்மொழியல்லாத தொடர்பாடல் வடிவமாகவும் மொழியைப் பயன்படுத்தி வாய்மொழியாக முன்வைக்கும் வெளிப்பாடுகள் வாய்மொழித் தொடர்பாடற் வடிவங்களாகவும் விளங்குகின்றன. இதற்கு மேலதிகமாக தொடர்பாடற் செயலொழுங்கில் விளக்கங்கள், கருத்துக்கள், உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளும் போது (அசைவுகளின் போது) அவை முறைசார், முறை சாரா இருவழிகளிலும் நிகழலாம். முறைசார் தொடர்பாடல் வடிவம் என்பது ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனப் பொறிமுறையூடாக நடைபெறும் தொடர்பாடலாகும். முறைசாராத் தொடர்பாடல் வடிவம் என்பதாற் கருதப்படுவது ஒரு திட்டமின்றி நடைபெறும் தொடர்பாடலாகும். இங்கு தொடர்பாடல் மூலாதாரம் தெளிவற்றது. பெரும்பாலும் அது பிரபல்யமற்றதாக இருக்கும். இத்தகைய தொடர்பாடல் வடிவங்கள் உத்தியோகப்பூர்வ ஊடகத் தொகுதிக்கு வெளியே நடைபெறும்

## 2.1 வாய்மொழித் தொடர்பாடல்

### அ) வாய்மொழித் தொடர்பாடலின் இயல்பும் அவசியமும்

மொழியைப் பயன்படுத்தி பேச்சு மூலம் நிகழும் தொடர்பாடலே வாய்மொழித் தொடர்பாடலாகும். மனித சமூகத்தில் நிகழும் தொடர்பாடல்களில் பெரும்பான்மையானவை இவ்வடிவத்திலேயே நடைபெறுகின்றன.

பொதுவாக மானிட மொழி இயற்கை மொழியாகக் கருதப்படுவதுடன் அவ் இயற்கை மொழியின் தொடர்பாடற் பணிகள் வாய் மூல வெளிப்பாடு, எழுத்து மூல வெளிப்பாடு என்ற இரண்டு பிரிவுகளில் அடங்கும்.

வாய்மொழித் தொடர்பாடலின் அவசியத்தை வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து தெரிய வருவது, ஆரம்பகால மனித சமூகத்தின் அங்கத்தவர்களிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கு அது தேவைப்பட்டது என்பது தெரிய வருகின்றது. வாய்மொழித் தொடர்பாடல் எழுத்து மூலத் தொடர்பாடலுக்கு முன்னரே தோன்றியதாகும். அத்துடன் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் வாய்மொழித் தொடர்பாடலின் அடிப்படையிலே ஏற்பட்டதென்பது வரலாற்று உண்மை.

### ஆ) வாய்மொழித் தொடர்பாடல் , மொழியும் அதன் பணிகளும்

மனித மொழி சில அடிப்படைப் பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. உண்மையை இனங்காணல்
2. நேரத்தை தொடர்பாடல்
3. சிந்தனையை நெறிப்படுத்தல்
4. அறிவை உள்வாங்கும் பணி
5. அறிவைச் சேமிக்கும் பணி
6. நிலவுகை தொடர்பான காரணிகளை முன்னெடுத்தல்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழித் தொடர்பாடலின் வரலாற்று ரீதியான விருத்தியானது தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கான ஓர் ஊடகமாக மட்டுமன்று, அது மனிதர்களில் செல்வாக்கு செலுத்தும் ஒரு முறையாகவும் காணப்படுகின்றது. அதாவது மானிட தொடர்பாடலைக் கட்டுப்படுகின்ற, கையாளுகின்ற கண்காணிக்கின்ற ஒரு வடிவமாகவும் அது விளங்குகின்றது. மானிட கலாசார, போதனை செயலொழுங்கில் வாய்மொழித் தொடர்பாடலானது விசேடமானதொரு பணியை நிறைவேற்றியுள்ளது. வாய்மொழித் தொடர்பாடலை மானிடத் தொடர்பாடலின் ஒரு வடிவம் மட்டுமின்றி அது மனித இருப்பின் ஒரு பணியாகும். மனிதரின் நியம சிந்தனை, தர்க்க ஞானம், ஆழ்சிந்தனை, கட்டுருவாக்கம் ஆகிய மானிடப்பண்புகள், மொழி, மற்றும், வாய்மொழித் தொடர்பாடல் வடிவத்துடன் பரஸ்பரம் தொடர்புற்று காணப்படுகின்றது. அப்பண்புகள் இல்லாதவொரு மானுடம், சமூகம் என்பன பற்றிச் சிந்திக்க முடியாது. தனியாள் ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கும் வாய்மொழித் தொடர்பாடல் பயன்படுகின்றது. மானிட சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் பல்வேறு பரிமாணங்களில் பல்வேறு பரிமாணங்களில் ஏற்படும் பல்வேறு மோதல்கள், பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வாய் மொழித் தொடர்பாடல் வடிவம் மிக அத்தியாவசியமான ஒன்றாகும். இன்றைய உலகில் பிரச்சினை தீர்ப்பதற்காக கலந்துரையாடல் உபாய முறை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தொடர்பாடல் வடிவாக உள்ளது.

ஏனைய தொடர்பாடல் வடிவங்களை விட வாய்மொழித் தொடர்பாடல் வடிவத்திற்கு, மானிடத் தொடர்பாடல்களைப் பேணவும். அவர்களிடையே பரஸ்பரபுரிந்துணர்வு நல்லுறவு என்பவற்றை விருத்தி செய்யவும் தேவையான சிறப்பான ஆற்றலுண்டு. இது சொற்களை மாத்திரம் பயன்படுத்தி மேற்கொள்ளும் தொடர்பாடல் வடிவமாகும். எனவே இது மனித உறவுக்கும், உரையாடலுக்கும் மிக நெருக்கமானதொரு தொடர்பாடல் வடிவமாகக் காணப்படுகின்றது.

## இ) வாய்மொழித் தொடர்பாடலின் பணிகள்

ஒவ்வொருவருக்கிடையே கருத்துப் பரிமாற்றலின் போது மிக இலகுவாகப் பயன்படுதத்க்கூடிய ஒரு தொடர்பாடல் வடிவமாக வாய்மொழித் தொடர்பாடலைக் கூறலாம். ஆட்களிடையே தொடர்பாடலைப் பேணவும் அன்றாட வாழ்வின் கருமங்களை சரியான முறையில் நிறைவேற்றிக் கொள்ளவும் வாய்மொழித் தொடர்பாடல் தவிர்ந்த வேறொரு முறையை பயன்படுத்த முடியாது. வாய்மொழித் தொடர்பாடலின் பாணிகள் பலவாகும்.



படம் :- 2.1.1 அன்பு, இரக்கம், பரிவு பரிமாறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தகவல்கள், கருத்துக்களைப் பறிமாறிக் கொள்ளல்.
2. அன்பு, கருணை, பாசம் என்பவற்றைப் பரிமாறிக்கொள்ளல்.
3. சமூகமாக பேணுதல்
4. தமது கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு
5. கற்றலுக்கும், ஆலோசனை வழங்குவதற்கும், வழிகாட்டுவதற்கும்
6. ஒரு விடயத்தைத் தூண்டுவதற்கு
7. சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு
8. மோதல்களைத் தவிர்ப்பதற்கு
9. உள உணர்வுகளை நெறிப்படுத்துவதற்கு
10. இடைத் தொடர்புகளைப் பேணுவதற்கு

## ஈ) வாய்மொழித் தொடர்பாடற் தேர்ச்சிகள்

வாய்மொழித் தொடர்பாடலில் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் ஈடுபடுவதற்காக நாம் அதனை வளர்த்து கொள்ள வேண்டும். மனித மொழியிலும் பேச்சிலும் உள்ள ஆக்கத்திறனான இயலுமையை அதனைக் கையாளுபவரின் திறன், திறமை அடிப்படையில் வெளிக் கொண்டு வரலாம். கடந்த கால, நிகழ்கால, எதிர்கால நிகழ்வுகளை வேறுபாடின்றி தொடர்பாடல் செய்யும் ஆற்றல் மானிட மொழிக்கு உண்டு. சொற்களை உச்சரிக்கும் பாணியைப் பொருத்தும், பேசும் வேகத்தைப் பொருத்தும், ஒலியின் அளவைப் பொருத்தும், குரல் இனிமையைப் பொருத்தும் பல்வேறு தொடர்பாடல் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் ஆற்றல் பேச்சுக்குண்டு. அத்துடன் ஒரு கருத்தை நேரடியாக வெளியிடும் போது அதனை ஆக்கபூர்வமாக முன்வைப்பதன் மூலம் செவிமடுப் போரில் அதிக செல்வாக்கை ஏற்படுத்திட முடியும். இங்கு பேச்சாளரின் அல்லது தொடரபாடல் புரிபவரின் பேச்சுத்திறனுக்கேற்ப கேட்போரின் இதயத்தை அல்லது அறிவை வழிப்படுத்தும் ஆற்றல் கிடைக்கிறது.

வாய்மொழித் தொடர்பாடலை மிக உன்னத மட்டத்தில் பயன்படுத்தும் தேர்ச்சியை ஒருவர் அடைந்து கொள்ள முடியுமானால் தாம் வாழும் சமூகத்தில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடியுமென்பது உறுதி. இங்கு கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் பல உள.

1. பேச்சுக் கோலப் பயிற்சி
2. சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்ளல்
3. தம் வசமுள்ள தகவல்களையும் கருத்துகளையும் விரிவுபடுத்திக் கொள்ளல்
4. முன் ஆயத்தம்
5. முன்வைக்கும் திறன் விருத்தி
6. செவிமடுக்கும் திறன் விருத்தி
7. மோதல் நிலைமைகளைச் சவாலுடன் எதிர்கொள்ளலாம்
8. ஏனையவர்களை உடன் இனங்காணும் ஆற்றல்.
9. வாய்மொழியில்லாத தொடர்பாடல் திறன் விருத்தி,
10. தனக்கேயுரிய தனித்துவத்தை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பட்டியலை வாசிக்கும் போது உங்கள் மனதில் உதிப்பது என்ன? வாய்மொழித் தொடர்பாடல் தேர்ச்சி முன்னேற்றம் சிரமமானது என்பதா? அவ்வாறு நீங்கள் நினைப்பதில் அதிசயமோ தவறோ இல்லை. உங்களுக்கு பேசத் தெரியும் அல்லவா? அவ்வாறாயின் வாய்மொழித் தொடர்பாடல் தேர்ச்சியை அடைந்து கொள்வதென்பது வெறுமனே பேசுவதற்கு மட்டுமல்ல நன்றாகப் பேசுவதற்கான ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்காகும்.

## 2.2 வாய்மொழியற்ற தொடர்பாடல்

### அ) வாய்மொழியற்ற தொடர்பாடலின் இயல்பு

சொற்களின் பயன்பாடின்றி நிகழும் தொடர்பாடலே வாய்மொழியில்லாத தொடர்பாடலாகும். இதில் சொற்கள் பயன்படுத்தப்படாவிட்டாலும் குரல் பயன்படுத்தப்படுகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். ஒருவரின் தொடர்பாடலில் சொற்கள் பயன்படுத்துவதற்கும் குரலைப் பயன்படுத்துவதற்குமிடையில் தெளிவான வேறுபாடுண்டு. வாய் மொழித் தொடர்பாடல் வடிவத்தின் ஊடகம் மொழியாகும். வாய் மொழியில்லாத தொடர்பாடலை சமிக்ஞைகள், குறியீடுகள் மட்டுமின்றி சில வேளைகளில் குரலும் பயன்படுத்தப்படுகின்றன. கையசைத்தல் தலையாட்டுதல், கைத்தட்டுதல் முகத்தோற்றங்கள், அங்க அசைவுகள், அபிநயங்கள், செய்து காட்டல் ஆகிய சமிக்ஞைகளைப் பயன்படுத்தி வாய்மொழியில்லாத தொடர்பாடல் நடைபெறுகின்றது. உடலில் பல்வேறு அங்க அசைவுகளினாலும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட அசைவுகளினாலும் வாய்மொழியில்லாத தொடர்பாடல் நடைபெறும். இது உடல் மொழி (Body Language) என்றும் அழைக்கப்படும்.

மனித சமூகம் ஆரம்பத்தில் வாய்மொழியற்ற தொடர்பாடலிலேயே ஈடுபட்டதாகத் தெரிகின்றது. எனவே மனிதனின் பரிணாம வளர்ச்சியுடன் விரிவடைந்த ஒரு தொடர்பாடல் வடிவமாக வாய்மொழியில்லாத தொடர்பாடலைக் குறிப்பிடலாம். இயற்கையான தொடர்பாடல் ஊடகங்களில் மிகவும் பழமை வாய்ந்த தொடர்பாடல் ஊடகம் வாய்மொழியில்லாத தொடர்பாடலே ஆகும்.

வாய்மொழியில்லாத தொடர்பாடற் செயல்களின் முக்கிய அம்சமாக மனித உடல் காணப்படுகின்றது. அதிலும் முகம், கண், கைகள் என்பன மிக முக்கியத்துவம் பெறுகின்றன. மனிதன் தனது முகபாவனையால் பல்வேறு உணர்வுகளையும் பொருள் மிகுந்த கருத்துகளையும் வெளிப்படுத்துவதை நாம் அவதானிக்கலாம். போட்டி, கோபம், ஆச்சரியம், பயம், மகிழ்ச்சி, வெறுப்பு, கவலை, விருப்பமின்மை, ஆர்வம், அதிர்ச்சி, கலக்கம் என்பன அவற்றுள் சிலவாகும். பிறவியிலே பேச முடியாத, ஒலிகளைக் கேட்கமுடியாத நிலையில் உள்ளவர்கள் தம் கருத்துக்களை வெளியிட கைவிரல்கள், கைகளின் அசைவுகளைப் பயன்படுத்துகின்றனர். இன்று அவர்களது கருத்து வெளியிடும் மேற்கூறிய சைகை முறையினை சிறப்பாக பயன்படுத்தித் தொலைக்காட்சி செய்திகளைக் கூட முன்வைப்பதைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட ரீதியாகவும் மற்றும் சமூகத்திலும் வாழ்வின் பல்வேறு கட்டங்களில் மனிதன் தனது கருத்துக்களையும், உரிமைகளையும் நெறிப்படுத்துவதற்காக முகத்தை ஒரு தொடர்பாடல் ஊடகமாக பயன்படுத்துகிறதைக் காணலாம். குறிப்பாகக் கண்ணை மையமாகக் கொண்டு மனிதனின் பல்வேறு ஆன்மீகப் பண்புகளைக் காட்டும் சமிக்ஞைகள் வெளிப்படும் எடுத்துக்காட்டாக இருவருக்கிடையே நிலவும் அன்பு, பாசம், நேசம் இரக்கம், கருணை போன்ற உணர்வுகள் பரிமாறப்படுகின்றன. ஆளிடைத்தொடர்புகளைப் போல சமூக உறவுகளை முறையாகவும், உணர்வு பூர்வமாகவும், நேச மனப்பான்மையுடனும் நடத்துவதற்கும் முகத்தினால் வெளிப்படுத்தப்படும் தொடர்பாடல் பயன்படுகின்றது.

வாய்மொழியில்லாத தொடர்பாடலின் ஒரு வகையாகப் பார்வையும் பயன்படுத்தப்படுகின்றது. சமூகப்பார்வை, கடமைப் பார்வை, இரக்கப் பார்வை என்பன அத்தகைய சில பார்வைகளாகும். இங்கு தொழிற்படும் பொது அடிப்படை தொடர்பாடுபவர் பார்வையில் அளந்து சார்ந்த இடத்திலிருந்து கீழ் நோக்கி முக்கோணப் பரப்பில் கண் அசைவை வழிப்படுத்துவதாகும்.

இரு கைகளையும் பயன்படுத்தியும் மனிதன் வாய்மொழியில்லாத தொடர்பாடலில் ஈடுபடுகின்றான். குறிப்பாக கைவிரல்களை கையாளும் விதத்தைப் பொருத்து இது பெரும்பாலும் நடைபெறும். நடுவிரல், சுட்டுவிரல் இரண்டையும் ஆங்கில V எழுத்துபோல வைத்துக் காட்டுவது வெற்றியைக் குறிக்கும். பெருவிரலை உயர்த்தி ஏனைய விரல்களை மடித்துக் காட்டுவது நட்பை வெளிப்படுத்துவதாகவும் கருதப்படுவது இதற்கான உதாரணங்களாகும்.


படம் :- 2.2.1 வெற்றி


படம் :- 2.2.2 நட்பு

மனிதனின் உடைகளும் வாய்மொழியில்லாத தொடர்பாடல் விடயமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஒருவர் அணியும் ஆடை அணிகலன்களின் படி அவரின் தொழில், பதவி, சமூக, அந்தஸ்த்து நிலை என்பன தொடர்பாடப்படுவதைக் காணலாம். இராணுவம், பொலிஸ், தாதிசேவைகளில் ஈடுபட்டிருப்போர் மற்றும் பாடசாலையில் பிள்ளைகளின் சீருடை ஆகியன மூலம் அவர்களை இலகுவாக இனங்கண்டு கொள்ளமுடிகின்றது. சமூகத்தின் ஒவ்வொரு தரத்திலும் வாழும் இளைஞர்களும் தம் ஆடை மூலம் சமூக அந்தஸ்த்தைக் காட்ட முயற்சிக்கும் சந்தர்ப்பங்களை நீங்கள் கண்டிருப்பீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் வாழும் பல்வேறு இன, மதம், பிரிவினர்களை அவர்களின் ஊடக மூலம் இனங் கண்டு கொள்ளலாம். இருப்பினும் நீங்களும் இது தொடர்பான ஏதேனும் தேடலில் ஈடுபட வேண்டியது முக்கியமாகும்.

வாய்மொழியில்லாத தொடர்பாடலின் போது ஒலிகளும் நிறங்களும் பயன்படுத்தப்படுகின்றன. கூக்குரல், பறையடித்தல், மணி ஒலி என்பனவும் வாய்மொழியில்லாத தொடர்பாடலின் போது பயன்படுத்தப்படும் முறைகள் எனக் கூறலாம். வாய்மொழியில்லாத தொடர்பாடலின் வேறு ஓர் இனத்தவர் ஒரு கருத்தை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் நிறத்தை மற்றுமொரு கலாசார பிரிவினர் பிறிதொரு கருத்தைப் பிரதிபலிப்பதற்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களுமுண்டு. கத்தோலிக்க மக்களிடையே கறுப்பு நிறம் துக்கத்தை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும். பௌத்தர்கள் அதே விடயத்துக்காக வெள்ளை நிறத்தைப் பயன்படுத்துகின்றனர்.



படம் :- 2.2.3 நாட்டில் உபயோகிக்கப்படும் கலாசார ஆடைகள்

இதற்கமைய விளங்குவது யாதெனில், வாய்மொழியில்லாத தொடர்பை ஒரு சமூக, கலாசாரக் காரணியாக நோக்குமிடத்து அதனூடாக வெளிப்படும் கருத்துக்கள் சமூக கலாசாரப் பின்னணியைப் பொறுத்து வேறுபடுகின்றது என்பதாகும். கலாசாரத்துக்கும் வாய் மொழியில்லாத தொடர்பாலுக்கும் இடையேயுள்ள பரஸ்பர தொடர்புகளை மரபு ரீதியான தொடர்பாடல் முறைகளின் போது நன்கு அவதானிக்க முடிகின்றது. உலகின் இனங்களுக்கிடையே காணப்படும் பழக்க வழக்கங்களை நோக்கும் போது இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். வணக்கம் அல்லது வாழ்த்துக்களின் போது ஒரு இனத்தவர் கைகளைக் கூப்பும் போது மற்றொரு இனத்தவர் அதனை கைக்குலுக்குவதனூடாக நிறைவேற்றுகின்றனர். பண்டைக்காலம் முதல் மனிதன் நடத்துகின்ற பூஜைகள், நடன முறைகள், கிராமிய நடனங்கள், கூற்றுக்கள் ஆகிய செயற்பாடுகளில் வாய் மொழியியல்லாத தொடர்பாடல் இயல்புகளைக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ) சமூகக் காரணிகள்

சமூகம் என்பது தனிமனிதர்களின் கூட்டமாகும். அதன்படி வாய் மொழியில்லாத தொடர்பாடலின் சமூகக் காரணி என்பது தனியாள்களின் நடத்தைகள் எத்தகைய தொடர்பாடற் கருத்தை வெளிக் கொண்டு வருகின்றன என்பதை வரைவிலக்கணப் படுத்துகின்றன. பின்வரும் சில உதாரணங்களைப் பாருங்கள்.

நீங்கள் தாயுடன் அல்லது தந்தையுடன் பேசும் போது மிகக் குறைந்த இடைவெளியே அங்கு காணப்படும் அதனைத் தூரம் என்று கூடச் சொல்ல முடியாது.

நீங்கள் உங்கள் வகுப்பு ஆசிரியர் அல்லது ஆசிரியையுடன் பேசும்போதும் உங்கள் ஒவ்வொருக்குமிடையில் குறிப்பிட்ட அளவு தூரம் உண்டல்லவா?

நீங்கள் ஒரு போதும் சந்தித்திராத ஒருவருடன் பேசும் போது அந்நியத் தன்மையுடன் அவர் மிகத் தூரத்திலிருந்து பேசுவது பற்றி உங்களுக்கு தெரியும் அல்லவா?

சமூகக் காரணியின் கீழ் பிரதானமாக அமைவது தனியாட்களிடையே இருக்கும் பௌதிக இடைவெளியாகும். உங்களுக்கு அறிமுகமில்லாத இருவர் ஒருவரையொருவர் உரசும் விதத்தில் பாதையில் கதைத்துக் கொண்டு செல்வதைக் கண்டால் அவர்களிடையே உள்ள உறவு பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அவர்கள் மிக நெருங்கிப் பழகுபவர்கள் என்ற நினைப்பீர்களா? உங்கள் ஆசிரியரைச் சந்திக்கும்படி உங்களுக்கு செய்தி வந்தால் ஓடிச்சென்று தூரத்தில் நிற்பது ஏன்? அவரைத் தாண்டிச் செல்ல உங்களால் ஏன் முடியாது? அதற்கான காரணம் உங்களுக்கும் ஆசிரியர்களுக்கிடையேயுள்ள உண்மையான தூரத்தினால் உங்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே ஆளிடைத் தொடர்பாடலின் வடிவம் இயல்பாகவே விளங்குவதாகும்.

இதன் படி தனியாள் இடைவெளி வாய்மொழிப்படி தொடர்பாடலைப் பாதிக்கும் நான்கு விதங்களைக் காண முடியும்.

| | |
|---|---|
| 1. நேச இடைவெளி | (15 - 20 செ.மீ) |
| 2. தனியாள் இடைவெளி | (30 - 60 செ.மி) |
| 3. சமூக இடைவெளி | (1.2 - 1.8 செ.மி) |
| 4. மக்கள் இடைவெளி | (3.6 - 4.8 செ.மீ) |

நேச இடைவெளியில் மிக நெருங்கியவர்களே இருக்க முடியும். பெற்றோர் பிள்ளைகள், உற்ற நண்பர்கள், கணவன், மனைவி இதற்குள் அடங்குவர். தனியாள் இடைவெளியின் கீழ் நண்பர்களே இருப்பர். சமூக இடைவெளியில் தன்னுடன் கொடுக்கல் வாங்கல் செய்வோர் இருப்பர். ஒரே பஸ் வண்டியில் பயணம் செய்பவர்கள், சுற்று மின் தூக்கியில் ஒன்றாகச் செல்பவர்களுக்கு இடையிலான தூரம் பற்றி ஆராய்வது ஆர்வத்தைத் தூண்டும் ஒரு விடயமாகும். அவர்கள் இருப்பது உண்மையில் நேச இடைவெளிக்குள்ளாகும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரை ஒருவர் பார்க்கவும் மாட்டார்கள். சிரிக்கவும் மாட்டார்கள். கதைக்கவும் மாட்டார்கள். இதற்கான காரணம் இது போன்ற சந்தர்ப்பத்தில் தனியாள் இடைவெளி கட்டாயத்தில் நேரில் ஏற்படுத்தப் பட்டதாகும்.

ஒரு உயர் அதிகாரியுடன் அல்லது பணிப்பாளர்களுடன் கதைக்கும் போது நிலவும் தூரம் அவ்விருவரின் தராதரங்களை வெளிக்காட்டும். இதன்படி அதிகாரி தனக்குரிய இடத்தையும் தனக்குரிய இடைவெளியையும் பாதுகாக்கும் அதிகாரம் கொண்டவர். ஆனால் கீழ்மட்ட ஊழியர்களுக்கு அத்தகைய அதிகாரம் கிடையாது. அதுமட்டுமன்றி கீழ்மட்ட உத்தியோகஸ்தரின் இடத்தையும் இடைவெளியையும் தாண்டிச் செல்லும் அதிகாரம் மேலதிகாரிகளுக்குண்டு.

## இ) சூழற் காரணிகள்

நீங்கள் வாழும் சூழல் பற்றி ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். வீட்டடினுள்ளும் வீட்டுக்கு வெளியேயும் பல்வேறு இடங்களிலும் உள்ள அனைத்துப் பொருட்களும் உங்களுக்கு ஏதோ சொல்கிறதை ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாரா? நிச்சயமாக உங்கள் சூழல் உங்களைப் பற்றிப் பேசுகிறது. உங்கள் சூழல் அதற்கேயுரிய பல்வேறு தொடர்பாடற் கருத்துக்களை வெளிக் கொண்டுவருகிறது.

உங்களது பாடசாலை அதிபரின் அலுவலகத்திற்கு நீங்கள் சென்றிருக்கிறீர்களா? அங்கு போனபோது உங்களுக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் என்ன? முதலில் அங்கு மரியாதைக்குரிய கம்பீரமொன்று விளங்குவதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அதற்கு என்ன காரணம்? அவவாறே உங்களது வீட்டிலுள்ள அறையைவிட வித்தியாசமானதாக இருப்பது எப்படி?

இத்தகைய பல வினாக்களுக்கும் விடை கண்டுபிடிக்க முயலும் போது விளங்குகிற முதலாவது விடயம் யாதெனில் சூழலினால் அங்கிருப்பவர்களுக்கு ஒரு தனித்துவம் உண்டாக்கபடபட்டிருப்பதாகும். இரண்டாவதாக அச்சூழலின் இயல்பை மாற்றுவதன் மூலம் அங்குள்ள தனியாட்களின் தனித்துவத்தையும் மாற்ற முடியும் எனபதாகும். அத்தனித்துவம் அவர்களின் தராதரத்துடன் தொடர்புபட்டதாகும்.

பின்வரும் மாற்றங்களைக் கற்க முயலுங்கள்

- காரியாலய மேலதிகாரிக்கு தாழ்ந்த சாய்வுள்ள கதிரைக்குப் பதிலாக உயர்ந்த சாய்வுள்ள கதிரையை வைத்தல்
- அக்கதிரை நான்கு கால்களைக் கொண்டதாக அன்றி சுழலக்கூடிய சில்லுகள் பொருத்தப்பட்டதாக மாற்றப்படல்
- மேலதிகாரியின் மேசை சிறியதாக இருப்பின் அதற்கு பதிலாக பெரியதொன்றை மாற்றுதல்
- காரியாலய தரைக்கு கம்பளம் விரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு நிர்மாணக்கலை சூழற் காரணிகளைத் திட்டமிடலின் பாற்பட்டதாகும். நாம் ஒரு வீட்டை எடுத்துக் கொள்வோம். அதில் எந்தப்பகுதி உங்கள் கவனத்தை ஈர்க்கும் கட்டடக்கலை நுட்பங்களின் படி அந்த வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் திட்ட வரைபின் அடிப்படையிலேயே யாவும் உட்படுத்தப்பட்டுள்ளது. வீட்டில் உட்புறம் பற்றியும் பல கேள்விகளைக் கேட்டு அவற்றை ஆராய்ந்து கற்க உங்களால் முடியும். மொத்தச் சுற்றாடல் கட்ட நிர்மாணத்திட்டம், அறைகளின் வடிவம், உபகரணங்கள் அவை வைக்கப்பட்டுள்ள விதம் என்பவற்றையும் இவ்வாய்வில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

- அவ்வீட்டுத் திட்டம் வரைபில் பாதுகாப்பு தொடர்பான எண்ணக்கருவை விட அதிகமாக வேறு ஏதும் உள்ளடக்கப்பட்டுள்ளதா?
- வீட்டின் சூழல், வீட்டில் வசிப்பவர்கள் பற்றி எத்தகைய உணர்வுகள் ஏற்படும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது?
- வீட்டைச் சுற்றியுள்ள மதில், படலை என்பன ஏனையவற்றில் இருந்து வேறுபட்ட விதத்தில் திட்டமிடப்பட்டுள்ளதா? அவ்வாறு செய்வதற்கான அவசியம் என்ன?
- வீட்டுக்கும், மதிலுக்கும், படலைக்கும் எவ்வாறு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது?

சூழற் காரணிகள் அவற்றின் தொடர்பாடற் செயற்பாட்டின் மீது செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றிய சிறந்த உதாரணத்தை நவீன வங்கி அமைப்பில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். சில காலத்துக்கு முன்பு வங்கிகளின் உள்ளக நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த முறையானது அங்குவரும் அப்பாவி வாடிக்கையாளர்களை பயமுறுத்தும் வகையிலேயே அமைந்திருந்தது. இப்போது அந்நிலையை மாற்றி முற்றிலும் நட்பு ரீதியான விருப்புக்குரிய மகிழ்வான ஒரு தொடர்பாடற் கோலம் தென்படும் வகையில் வங்கி அலுவல்களுக்கான உள்ளமைப்புள்ளது. திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு தம் வணிக நிறுவனங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களிடையே விருப்பு ஏற்படும் வகையில் வாய்மொழி அல்லாத தொடர்பாடல் சூழற்காரணிகளைப் பயன்படுத்தும் விதத்தை உங்கள் வீட்டிலும், அறையிலும், பாடசாலையிலும் நீங்கள் பயன்படுத்த முடியும்.

## ஈ) உடற்காரணிகள்

தன்னால் கட்டுப்படுத்த முடியுமானதும் கையாள முடியுமானதுமான வாய்மொழி அல்லாத தொடர்பாடலைச் சார்ந்த ஏழு காரணிகள் இதில் சம்பந்தப்படுகின்றன.

1. அபிநயமும் தோற்றமும்
2. முகத்தோற்றம்
3. கண்களின் நடத்தை
4. குரல்
5. உடை
6. ஸ்பரிசம்
7. மணம், நாற்றம்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வினாக்களுக்கு விடையளித்து உடற் காரணிகள் இயல்பை இனங்கண்டு கொள்ளல்

- நீங்கள் காலையில் பாடசாலைக்கு வரும்போது கண்ணாடியில் முகம்பார்ப்பது எதற்காக?
- யாரும் காணாத வகையில் நீங்கள் கண்ணாடி முன்னால் நின்று உங்களுக்குப் பொருத்தமான ஒரு சிரிப்பை பரீட்சித்துப் பார்ப்பதுண்டா?
- உங்கள் தலைமுடியை விதவிதமாக அலங்கரிக்க முயற்சிப்பதுண்டா?
- நீங்கள் அணிந்திருப்பது பாடசாலைச் சீருடையாக இருப்பினும் அதன் சில இயல்புகள் திறந்த சமூகத்தின் பொதுவான ஆடை அணிகளுக்கு ஒத்ததாக இல்லையா? அவ்வாறாயின் பாடசாலை சீருடையில் அவைகளை இணைத்து கொள்வது எவ்வாறு?

இதிலிருந்து தெளிவாகின்ற விடயம் யாதெனில், நாம் தெரிந்தோ, தெரியாமலோ எமது உடற் காரணிகளைத் தொடர்பாடலுக்கு மிகத் துல்லியமாகப் பயன்படுத்துகின்றோம் என்பதாகும். இவ்விதமாக எமது அபிநயம், அசைவுகள், நடத்தைக் கோலம். நாம் பேசும் விதம், எமது கண் அசையும் விதம், ஒட்டுமொத்தமான முகபாவம், எம்மிலிருந்து வீசும் வாசம், உடலுடன் ஏற்படும் ஸ்பரிசம் என்பன மூலம் பல்வேறு தொடர்பாடல் அர்த்தங்கள் வெளிப்படுகின்றன. இவை எமது வாழ்க்கையின் நிலைப்பாட்டுக்கு அவசியம் என்பதை அறிந்திருத்தல் வேண்டும்.

உடற் காரணிகளின் தொடர்பாடல் தேவையை நன்கு விளங்கிக் கருமமாற்றுவது வர்த்தகர்கள் என்பது தெளிவான ஒரு விடயமாகும். எமது உடற் காரணிகளைச் சீராகப் பேணுவதற்கு அவர்கள் சிரமப்பட்டு உதவி செய்கிறார்கள். எமக்குத் தேவையில்லாத இவ்விதமாக பெருமளவில் பணம் சம்பாதிக்க வர்த்தகத்துக்கு வாய்ப்பு கிடைத்திருப்பதற்கும் காரணம் உடற் காரணிகள் பற்றி நாம் பொறுப்பற்ற விதத்தில் கண்மூடித்தனமாக கருமமாற்றுதலினால் ஆகும்.

## உ) வாய்மொழியில்லாத் தொடர்பாடல் தேர்ச்சிகள்

வாய்மொழியில்லாத தொடர்பாடற் திறன்களை எம்மிடம் விருத்தி செய்து கொள்வது நாம் வாழ்வதற்குத் தேவையான ஒரு காரணியாகும். பரந்த சமூகத்தில் ஒரு தொழில்புரியுமிடத்தில் வீட்டிளல் அல்லது நண்பர்களுக்கு மத்தியில், உங்கள் வாழ்க்கையை மிக நன்றாக சுவைக்க வேண்டுமானால் திறமையான தொடர்பாடலைப் பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும். இங்கு வாய்மொழியல்லாத தொடர்பாடலுக்கு முக்கிய இடமுண்டு. எனவே வாய்மொழித் தொடர்பாடலின் பல்வேறு வடிவங்கள் பற்றி நன்கு அறிந்திருத்தல் மிக அவசியம். இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய மற்றுமொரு விடயம் என்னவெனில் உங்களிடமுள்ள வாய்மொழியில்லாத தொடர்பாடற் தேர்ச்சி குறித்துத் திருப்தியடைய முடியுமா என்பதாகும்.

வாய்மொழியில்லாத தொடர்பாடலை வாய்மொழித் தொடர்பாடலுடன் இணைந்தோ அல்லது தனியாகவோ பயன்படுத்த முடியும். நீங்கள் திறமையாக வாய்மொழியில்லாத தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவதனூடாக திறமையான ஒரு தொடர்பாடல் புரிபவராக மாறுவது மட்டுமின்றி நீங்கள் வாழும் சமூகத்தில் ஏனையோர் மதிக்கும், அங்கீகாரம் பெற்ற ஒருவராக வருவதற்கான வாய்ப்பும் உங்களுக்கு கிடைக்கும் இதற்காக பல்வேறு வழிமுறைகளை படிமுறைகளைப் பின்பற்றலாம்.

## 2.3 எழுத்து மூலத் தொடர்பாடல்

### அ) மொழியும் எழுத்தும்

வாய்மொழித் தொடர்பாடலின் போது உச்சரிப்பு வடிவத்தில் மொழி பயன்படுத்தப்படும். ஆயினும் எழுத்தின் போது அது கட்புலனாகும் விதத்திலான ஓர் உருவமாக மாறும். இந்த உருவத்தை நாம் எழுத்து என்போம். பல்வேறு மொழிகள் உருவானதன் மூலம் எழுத்துக்களை ஆக்கிக் கொண்டது மனித வரலாற்றின் ஒரு சிறப்பான செயற்பாடாகும். எழுத்தின் நோக்கம் ஒரு கருத்தை நிலையாகப் பதித்து வைத்தலாகும். வாய்மொழித் தொடர்பாடலின் போது அவ்வாறான பதித்தல் நடைபெறாது. இங்கு இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது யாதெனில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட மொழியில் ஓர் ஆவணத்தை தயாரிக்கும்போது அவ்வெழுத்துக்களை வாசிக்கவும் அம்மொழி தெரிந்த வேறொருவருக்கும் அதனை விளக்கவும் முடியும் என்பது முக்கியமாகும்.



படம் :- 2.3.1 பெயர்ப்படிவம்

### ஆ) பயனுறுதியுள்ள ஓர் ஆவணத்தின் இயல்பு

ஓர் ஆவணம் வினைத்திறன் மிக்கதாக அமைவது எப்படி? இங்கு நடைபெற வேண்டிய பிரதான பணி அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் ஒரு குறிப்பிட்ட பெறுநரை அடைந்து உரிய துலங்களைப் பெறுவதாகும். அவ்வாறாயின் அந்த ஆவணம் எதிர் பார்த்த நோக்கத்தை அடையக் கூடியதாக எழுதப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மொழி சரியாகவும் உரிய படியும் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். இங்கு பிழையின்மை என்பது மொழியின் தனித்துவமான பண்பாகும். உரிய தரம் என்பது மொழியை உரிய முறையில் பயன்படுத்தி தேவையான கருத்துக்களும் தரவுகளும் இணைக்கப்பட்டிருத்தலைக் குறிக்கும்.

2. ஆவணத்துக்குப் பொருத்தமான ஒரு திட்டத்தை விளக்கத்துடன் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆவண வகைக்கும் தனித்துவம் உண்டு என்பதால் அதன்படி கருமமாற்றாவிடின் அந்த ஆவணத்துக்க எவ்வித அங்கீகாரமும் கிடைக்காது. உதாரணமாக ஒருவருக்கு தனிப்பட்ட கடிதமொன்றை எழுதும் போதும் காரியாலயத்துக்கான உத்தியோகக் கடிதத்தை எழுதும் போதும் சிறப்பான முறையில் அதற்கேயுரிய விதத்தில் எழுதப்படல் வேண்டும்.

3. ஆவணத்தில் உள்ள கருத்து நிச்சயமானதாக இருத்தல் வேண்டும். அதாவது இருவர் வாசிக்கும் போது இருவேறு கருத்துக்களை கொடுப்பதாக இருக்கக் கூடாது. எவ்வாறாயினும் இலக்கியத்தில் இரசனைக் கேற்ப கருத்து பலவிதமாகிட முடியும்.

4. எழுதுவதற்காக தாள் உபயோகிக்கப்படுகின்றது. பொதுவாக நாம் A4 அளவு தாளையே எழுதுவதற்குப் பயன்படுத்துகின்றோம். அவ்வாறு பயன்படுத்தும் தாள் தேவைக்கேற்ப நிரல்கள் விட்டு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுவதா இரண்டு பக்கங்க ளிலும் எழுதுவதா என்பது பற்றி சரியான தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. வாசிப்பவர் முறையாக கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளும் வகையிலும் தேவையற்ற தகவல்கள் சென்றடையாத விதத்திலும் எழுதப்படல் வேண்டும். அதனூடாகவே எதிர்ப்பார்க்கும் துலங்களைப் பெற முடியும்.

## இ) எழுத்துப் பரிச்சயமும் நிபுணத்துவமும்

உங்களால் எழுத முடியுமா? என்று யாராவது கேட்டால் விடை நிச்சயம் 'ஆம்' என்பதாக தான் உங்களது பதில் இருக்கும். அத்துடன் மற்றுமொரு கேள்வியை உங்களிடம் கேட்கலாம். உங்களால் நன்றாக எழுத முடியுமா? இதற்கு நீங்கள் அளிக்கும் விடை என்ன?

எழுத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்கே திறமையாக எழுத முடியும். தொடர்ந்து எழுதி எழுத்துப் பரிச்சயத்தையும் பெற்ற ஒருவராலேயே எழுத்தில் தேர்ச்சி பெற முடியும். எதாவதொன்றை எழுதும் போது அதற்காக ஒரு நோக்கம் இருத்தல் வேண்டும். பரீட்சைக்காகப் படிக்கும் போது சிறுகுறிப்பைத் தயார் செய்வதற்கு நல்ல திறமை வேண்டும். சிறு குறிப்பின் நோக்கம் உடனடியாக நினைவுக்கு கொண்டு வருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிப் பாட நெறியொன்றைப் பயன்படுத்துவதற்கான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு கடிதத்தை எழுதும் போது அதன் நோக்கம் சிறு குறிப்பு எழுதும் நோக்கத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கும். எனவே நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதாகவே எழுத வேண்டும். சாதாரண தரப் பரீட்சைக்காக உங்களுக்கு கிடைக்கும் பிரவேசப் பத்திரத்தில் ஏதாவது ஒரு திருத்தத்தைச் செய்யும்படி பரீட்சை ஆணையாளருக்கு ஒரு கடிதம் எழுதும் போது அது மேற்கூறியவற்றிலிருந்து வேறுபட்டதாக அமையும்.

தம் சுயவிபரப் பத்திரமொன்றை எழுதுவது இவற்றையெல்லாம் விட வேறுபட்டதாகும். இவையெல்லாவற்றையும் விட வேறுபட்டதும் முக்கியமானதுமான எழுத்தாக்கம் யாதெனில் பரீட்சையில் விடை எழுதுவதாகும். இங்கும் மொழியே பயன்படுத்தப்படும். ஆயினும் அது மேற்கூறிய சந்தர்ப்பங்களை விட முற்றிலும் வேறுபட்டதாகும்.

அத்துடன் ஆவணத்தை முன்வைப்பது தொடர்பான பயிற்சி தொடர்பாக கவனம் செலுத்தும் போது தெரியவரும் ஒரு முக்கிய விடயம், கணனித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் தேவை இக்காலத்தில் எழுந்துள்ள மையாகும். பொதுவாக நாம் கருதுவது ஆவணம் என்பது முதலில் கையால் எழுதிப் பின்னர் தட்டச்சில் தயாரிக்கப்படுதென்பதாகும். ஆயினும் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக இச் செயல் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போதெல்லாம் ஆவணம் ஆரம்பிக்கப்படுவதே கணனியிலேயே ஆகும். அது மிகவும் இலகுவானதும் வினைத்திறன் மிக்கதாகவும் உள்ளது. கையெழுத்தின் போது ஒன்றைத் திருத்தி மீண்டும் எழுதுவதும், பதிப்பாக்கம் செய்வதும் தட்டச்சில் சிரமமான பணிகளாகும். தட்டச்சில் வேறு ஒன்றையும் திருத்துவதனால் மீண்டும் தட்டச்சு செய்ய வேண்டும் கணினிப் பாவனையில் இவ்வனைத்து சிரமங்களும் நீக்கி மிக அழகாக மிகவும் சரியாக ஆவணத்தை நிறைவு செய்ய முடியும்.


படம் :- 2.3.2 கனிணி நுட்பப் பாவனை

ஆவண நடவடிக்கைகளின் போது அறிக்கைகள், கடிதங்கள் விண்ணப்பப்படிவங்கள் பிரதான இடம் வகிக்கின்றன. அவற்றுள் உலக அனுபவங்களைப் பார்க்கும் போது தெரிய வருவது யாதெனில், நாம் மரபு ரீதியிலாகப் பயன்படுத்தும் கடிதங்கள், அறிக்கைகள், விண்ணப்பபடிவங்களைத் தயாரிக்கும் முறையை விட வேறுபட்ட முறையில் புதிய மாதிரிகளை உலகம் பயன்படுத்துகிறது என்பதாகும். எனவே அத்தகைய ஆவண முறைகள் பற்றிக் கற்பதற்கு உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பையும் ஆற்றல்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிதங்கள்

உத்தியோகக் கடிதம் தொடர்பான அனுபவத்தைப் பெறுவதற்கு பல்வேறு உத்தியோக கடிதத்தை ஆராய வேண்டும் இதிலுள்ள சிறப்பம்சம் யாதெனில் ஒரு குறிப்பிட்ட விடயத்துக்கு ஒரு உத்தியோகக் கடிதம் எழுதப்படுவதாகும். மாறுபட்ட பல விடயங்களுக்காக ஒரே உத்தியோக கடிதம் எழுதப்படுவதில்லை.

அத்துடன் கடிதம் அனுப்புவரின் பெயர், முகவரி, பெறுவது யார் என்பதும் கடிதத்தில் என்ன இடம் பெற வேண்டும் என்பதும் திகதியும் மிகவும் முக்கியமாகும். அடுத்த முக்கிய விடயம் கடிதத்தின் தலைப்பை சுருக்கமாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதாகும்.

## அறிக்கைகள்

ஒரு விசேட பெறுநர் குழுவை இலக்காகக் கொண்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அதில் நிகழ்வுகளின் சுருக்கம் புதிய தகவல்கள் எதிர்காலத்துக்கான முன் மொழிவுகள் இடம் பெறலாம். ஒரு மகாநாடு , ஒரு கூட்டம், சபை அல்லது ஒரு கடிதம் முடிவடைந்ததுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரிக்க வேண்டி இருக்கும். அதன் எதிர்ப்பார்ப்பு உரிய விடயங்களை குறிப்பிட்ட பிரிவுக்கு சுருக்கமாக உத்தியோக பூர்வமாக முன்வைப்பதாகும்.

தற்போது கணணித் தொழினுட்பத்தைப் பயன்படுத்த முடியாததால் அறிக்கை தயாரித்தல் என்பது மிகவும் இலகுவான ஒரு காரியமாக உள்ளது. இங்கு கஷ்டமான காரியமாவது அறிக்கையின் முன்பக்கத்தை தயாரிப்பதாகும். இதற்காக சிறந்த பரீட்சயம் இருத்தல் வேண்டும். முன்வைக்க வேண்டிய தகவல்கள் அவற்றின் பகுப்பாய்வுப் பண்பு அறிக்கை இணையான குழுவினர்க்கு அல்லது கீழ் மட்டக் குழுவினர்க்கு அல்லது உயர் மட்ட குழுவினர்க்கு முன்வைக்கப்படுகின்றதா? போன்ற விடயங்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

அறிக்கை தயாரித்தல் என்பது கூட்டங்கள் பற்றிய தகவல்களை முன்வைக்கும் ஒன்று மட்டுமல்ல. எந்தவொரு தகவல் தொகுதியையும் குறிப்பிட்ட விதத்தில் தயாரித்து ஏனைய பிரிவினர்க்கு முன்வைக்கும் எதுவுமே அது ஒரு அறிக்கையாகின்றது. அதிலுள்ள தகவல்களை அதே விதமாக எடுத்துக் காட்டவோ அத்தகவல்களை ஒரு பகுப்பாய்வுடன் முன்வைக்கவோ முடியும்.

## சுயவிபரக் கோவை

சுயவிபரப் பத்திரங்களைத் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை.

1. A4 அளவிலான புகைப்படப் பிரதி எடுக்கும் தாள் பொருத்தமானது.
2. ஒரு பக்கம் போதுமானது. அவசியமான விடயம் இருப்பின் இரண்டு பக்கங்களில் தயாரிக்கலாம்.
3. கையெழுத்தில் தயாரிக்கும் படி கேட்டிருப்பின் மட்டுமே அவ்வாறு தயாரிக்கலாம். அவ்வாறாயின் கணனியில் தயார் செய்யலாம்.
4. தாளில் சரியான நிரல்களை வைக்கவும்.
5. ஒரே பார்வையில் வாசிப்பதற்கு கவர்ச்சியாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சகல முக்கிய தலையங்களையும் கறுப்பு எழுத்தினால் காட்டவும்.
7. நேர்க் கணியமாகத் தகவல்களை முன்வைக்கவும்.
8. இடைவெளி நிரப்பும் விண்ணப்பப்படிவம் போல சுயவிபரப் பத்திரம் தயார் செய்யக் கூடாது.
9. கையெழுத்தில் எழுதுவதானால் எவ்விடத்திலும் எழுதிய ஒன்றைத் திருத்தியெழுதக் கூடாது.
10 அலங்கார எழுத்துக்கள், வர்ணத் தாள்கள் பயன்படுத்தக் கூடாது.
11. முடியுமான அளவு சுருக்கமாகவும் தேவையாக தகவல்கள் உட்படும் வகையிலும் தகவல்கள் எழுதப்படல் வேண்டும்.
12. உங்கள் பொழுது போக்கு சுயவிபரப் பந்தியின் முக்கிய ஒரு தகவல் என்பதை மறக்க வேண்டாம்.
13. கல்வித் தகைமையைக் காட்டும் போது அதிகூடிய தகைமையில் இருந்து ஆரம்பிக்கவும்.
14. சகல சுயவிபரப் பத்திரத்திலும் விளக்கக் கடிதம் ஒன்று இணைக்கப்படல் வேண்டும். உரிய நிறுவனத்துடன், வர்த்தகத்துடன் தமக்குத் தேவையான தொழிலை அல்லது பயிற்சியை இக்கடிதத்தின் மூலமாகவே கோர வேண்டும்.

எழுத்து மூலத் தொடர்பாடலில் எழுதப்பட்டவையும் எழுதும் முறையும், உள்ளடக்கமும் எழுதும் மாதிரியும் முக்கியமானதாகும். சுருக்கமான எளிமையான பாணியில் ஒருவர் எழுத முடியும். குறிப்பாக ஊடகங்களுக்கு எழுதும் போது உரிய ஊடகத்துக்கும் பொருத்தமான ஒரு பாணியைத் தெரிவு செய்து கொள்ளல் அவசியமாகும். உதாரணமாக வானொலிக்கு எழுதுவது பத்திரிகைக்கு எழுதும் பாணியிலிருந்து வேறுபட்டதாக அமைய வேண்டும். வானொலிக்கு எளிமையான சுருக்கமான பாணி பொருத்தமாக இருப்பதுடன் பத்திரிகையில் ஆழமான கருத்துக்களை வெளியிடுவதற்கு அதைவிட இறுக்கமான, துல்லியமான ஒரு பாணியைப் பயன்படுத்தலாம். அதே போன்று ஒரு பாடலை, கவிதையை எழுதும் போது எதுகை, மோனைப் பாணிகளைத் தெரிவு செய்து கொள்வது பயனுள்ளதாகும். இவ்வாறு வெவ்வேறு ஊடகங்களுக்கு ( பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சினிமா, சங்கீதம், பாடல், கவிதை, மரபுக் கவிதை, சிறுகதை, நாவல்) பொருத்தமான எழுத்துப் பாணிகள் இருப்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

எந்த மொழியிலும் அதற்கேயுரிய எழுத்து மரபுண்டு. அவ்வெழுத்து மரபைப் புரிந்து கொள்வது எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஆழமான ஒரு நிபந்தனையாகும் சமூக மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் கருத்துக்கள் உணர்வுகள் உரிய பிரிவிற்கு விளங்கும் வகையில் முன்வைக்கப்படல் வேண்டும். சந்தர்ப்பத்துக்கு ஏற்ப சுவைபடவும் உருவாக்கும் மொழி நடை எழுத்தாளரிடம் இருத்தல் வேண்டும்.

மொழி எத்தோற்றப்பாட்டில் காணப்படினும் அதற்கேயுரிய இலக்கணமுண்டு. மொழியைப் போன்றே அதன் இலக்கணமும் என்றுமே ஒரே இடத்தில் ஒரே விதமாக நிலைப்பதில்லை. பொதுவாக எழுதும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கணத்தின் படி எழுதுதல் வேண்டும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத் துறையில் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமானால் தொடக்கத்திலிருந்தே தினமும் எழுத வேண்டும். அதிகமதிகம் பயிற்சி பெற வேண்டும். பல நூல்களை வாசிக்க வேண்டும். பல்வேறு வடிவங்களை எழுதி அனுபவங்களைப் பெற வேண்டும். எழுத்து ஆற்றொழுக்காக அமைவது எழுத்தாளரின் உள்ளத்திலிருந்து வரும் ஒன்றல்ல. அதற்குத் தேவையான மூலப் பொருட்களை அவன் சமூகத்திலிருந்தும் பெறுகின்றான்.

## 2.4 கட்புலத் தொடர்பாடல்

### அ) கட்புல ஊடக இயல்பு

மனிதன் உலகுடன் தொடர்புபடும் தொடர்பாடல் வடிவங்களில் கட்புலத் தொடர்பாடல் மிகவும் பலமான தொடர்பாடல் வடிவமாகும். மனிதனின் பரிணாமம் பற்றி நோக்கும் போது ஆரம்பத் தொடர்பாடல் வடிவமாக அன்றைய மனிதன் தனது உணர்வுகள், அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு கட்புல வடிவத்தையே கையாண்டான். உதாரணமாக ஆரம்பகால மனிதன் வேட்டைக்குச் சென்ற போது எதிர் கொண்ட சிரமங்களை, சவால்களை, அனுபவங்களை ஏனையவர்களுக்கு நடித்துக் காட்டி அதாவது அபிநயம், அங்க அசைவுகள், செயற்பாடுகள் மூலம் காட்சிப்படுத்தினான். இது கட்புல நிலையை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல்களாகும். மொழிக்கு முந்தியகாலத்தில் மனிதன் வரைந்துள்ள குகைச் சித்திரங்களும் இதனைத் தெளிவுப்படுத்துகின்றன.

நெருப்பு, புகை என்பனவற்றை பண்டைய கட்புல தொடர் பாடல் முறையாக மனிதன் பயன்படுத்தியுள்ளான் என்பது தெரியவந்துள்ளது. ஒளி, இருள் சார்ந்ததாக ஏற்படும் நிழலை மட்டுமின்றி சூரிய ஒளியையும் பல்வேறு முறைகளுடனான கட்புலத் தொடர்பாடலுக்காக பண்டைய மனிதன் பயன்படுத்தியுள்ளான். உதாரணமாக பாரசீகர்கள் யுத்தங்களின் போது ஒளித்தெறிப்பு ஆடிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இதிலிருந்து தெரிய வருவது மானிட வரலாற்றின் ஆரம்பப் பருவத்தில் தோன்றிய பல்வேறு கட்புலத் தொடர்பாடல் முறைகளை அதே அடிப்படையில் அல்லது சில மாற்றங்களுடன் இன்றைய மக்களும் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது என்பதாகும். இதனால் கட்புலத் தொடர்பாடல் வடிவத்துடன் தொடர்புடைய ஆரம்பத் தொடர்பாடல் முறைகள் இன்று வரை ஏதோ ஒரு வகையில் தொடர்கிறது எனதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

கட்புலத் தொடர்பாடல் வடிவம் யதார்த்தத்தை ஊடுருவிப் பார்க்கும் ஒரு முறையாகும். அது மனிதன் உலகுடனான தொடர்புப் பரவுகையினதும் ஆழத்தினதும் பெறுபேறாகும். அத்துடன் அது மனித சமூகத்தின் தொடர்பாடலின் மட்டுமின்றி அழகியல் விருத்தியினதும் புதிய படிமுறையுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ) கட்புலத் தொடர்பாடல் வகைகள்

இங்கு கட்புலத் தொடர்பாடல் என்ற பதம் பரந்த கருத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. அதாவது காண்பதன் மூலம் ஒரு கருத்தை வழங்கக் கூடிய எந்த ஒரு ஊடகமும் இவ்வகையில் அடங்கும்.

எமது மரபு ரீதியான தொடர்பாடல் முறைகளில் கட்புலத் தொடர்பாடல் பரவலாக இடம் பெற்றுள்ளது. கிராமங்களில் வாழ்ந்த மக்களின் கலாசார இயல்புகளைப் பேணுவதற்காக கட்புலத் தொடர்பாடல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக ஒரு வீட்டில் ஒரு நோயாளி இருப்பின் வீட்டின் முன் வாசலில் ஒரு தென்னக் குருத்தை வேப்பிலைக் கொத்தைத் தொடங்க விடுவது வழக்கமாக இருந்தது. மங்கள கருமங்களின் போது இது போன்ற பல்வேறு கட்புல குறியீடுகள் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

இன்னும் கூட சமூகத்தில் சில விடயங்களில் கட்புலத் தொடர்பாடற் குறியீடுகள் பயன்படுத்தப்படுவது தெரிகிறது. உதாரணமாக புகைத்தல் தடை, இங்கே கடக்கவும், இங்கே வாகனம் திருப்புவது தடை, நிறுத்தவும், பாதணிகளை இங்கே வைக்கவும், அமைதி என்ற கருத்துக்களைக் குறிக்கும் கட்புலக் குறியீடுகள் இன்னும் கூடப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் இவற்றுள் சில கட்புலத் தொடர்பாடற் குறியீடுகள் சர்வதேச மட்டத்தில் பயன்படுத்தப்படுவதுடன் வேறு சில உள்நாட்டு அல்லது சர்வதேச மட்டத்தில் பயன்படுத்த கூடியனவாகும்.

உலகின் எந்த ஒரு நாட்டினரையும், கலாசாரத்தினரையும் அழைக்கும் ஆற்றல் சாதாரண மொழியை விட கட்புல மொழி வழியாக உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. கட்புலத் தொடர்பாடல் வடிவம் மொழியில் உருவாகியிருப்பது எழுத்து, சொல், வாக்கியம் ஆகிய சாதாரண மனித மொழியின் அலகுகளுடனான வளர்ச்சி வடிவங்களை அடிப்படையாகக் கொண்டேயாகும். கட்புல மொழியில் வடிவமானது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகிறது. வடிவ மொழியை விளங்கிக் கொள்வதற்கு எழுத்தறிவு அவசியமாகும். கட்புல மொழியின் அடிப்படை அலகு வடிவம் என்பதுடன் வடிவம், வடிவங்களுக்கிடையிலான தொடர்பு மூலம் கருத்துக்களை விளங்கிக் கொள்வதன் அடிப்படையில் உருவ மொழியின் பயன்பாடு தீர்மானிக்கப்படுகின்றது.

## இ) கட்புல மொழியின் உபயோகம்

எமது வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு பணிகளின் போதும் கட்புல மொழியைப் பயன்படுத்த வேண்டியேற்படுகிறது. அது தனியாக அல்லது ஊடகங்கள் இணைந்ததாகப் பயன்படுத்தப்படும். அவை பயன்படுத்தப்படுவது தமக்கு வினாவிக் கொள்வதற்காக அல்லது ஏனையவர்கள் விளங்கிக் கொள்வதற்காக இருக்க முடியும். உலகளாவிய ரீதியில் எழுத்து (வடிவ) மொழிகள் காணப்படுவதுடன் புவியியல், கலாசார, சமய அல்லது தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைகளுக்குட்பட்ட வடிவ மொழிகளும் பயன்படுத்தப்படுவதை இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டும்.

பெருவீதியில் போகும் போது மஞ்சள் கோட்டில் பாதையைக் குறுக்காக கடப்பதற்கான வாய்ப்பு எமக்குண்டு. ஆயினும் மஞ்சள் கோடுகளில் நடைபெறும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகம் என்றும் தெரிகிறது. ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது? அதற்கான முதலாவது காரணம் கட்புல ஊடகம் பற்றிய போதிய விளக்கம் இன்மையேயாகும். இரண்டாவது கட்புல ஊடகத்தை பயன்படுத்துவது பற்றிய தேர்ச்சியின்மையாகும்.




படம் :- 2.4.1 சமிக்ஞைகள்

## ஈ) கட்புல ஊடகத் தேர்ச்சி

மஞ்சள் கோட்டில் குறுக்காகக் கடக்கும் உரிமை தமக்கு இருப்பதாகச் சிலர் நினைக்கின்றனர். அது பிழையாகும் பாதையைக் கடப்பதற்குப் பொருத்தமான ஓர் இடத்தைக் காட்டுவதற்காகவே மஞ்சள் கோடு இடப்பட்டுள்ளது. ஆயினும் பாதையில் செல்லும் வாகனங்கள் பற்றிய அவதானமின்றி பாதையைக் கடக்க முடியாது. எனவே மஞ்சள் கோடாக இருப்பினும் கடக்கும் முன்னர் பாதையின் இருபக்கமும் நன்றாக அவதானிக்க வேண்டும். மஞ்சள் கோட்டை நெருங்கி வாகனம் வருவது தெரிந்தால் கடக்கக் கூடாது. வாகனம் தூரத்தில் வருவதாயின் கடப்பது பற்றி யோசிக்கலாம். நெருங்கி வருவது வாகனமாக இருப்பின் கையால் சமிக்ஞை செய்து வாகனத்தின் வேகத்தை குறைத்ததன் பின் அல்லது நிறுத்திய பின் கடக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பார்க்கும் போது கட்புல ஊடகம் தொடர்பாக எமக்கொரு சமூகப் பொறுப்பு இருப்பது தெரிகிறது. பல்வேறு கட்புல ஊடகங்கள் பயன்படுத்துவது தொடர்பாக நீங்கள் தேர்ச்சி பெற வேண்டுமானால் அது பற்றி பார்த்துக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

## 2.5 செவிப்புலத் தொடர்பாடல்

### அ) செவிப்புலத் தொடர்பாடலின் இயல்பு

செவிப்புலத் தொடர்பாடல் என்பது ஒலி, குரல், சப்தம் என்பவற்றைக் கொண்டு நடைபெறும் தொடர்பாடலாகும். குரல் என்பது மனிதனது பௌதிக இயல்பின் ஒரு பகுதியாகும். ஒருவரின் குரலை நாம் நேரடியாக உயிர்ப்பாக, உணர்வு பூர்வமாக செவிமடுக்கும் போது அவரின் தனிப்பட்ட ஆளுமைப் பண்புகள் பற்றி மட்டுமின்றி அவரின் ஆற்றல் பற்றியும் கூட சில விடயங்களைப் புரிந்து கொள்ளலாம். குரல் தனித்துவம், உச்சரிப்பு வடிவம், பேச்சுப்பாணி என்பன செவிமடுப்போருக்கு பேசுபவர்கள் (தொடர்பாடுபவர்) பற்றிய மேலதிக தகவல்களை வழங்கும். அவ்வாறு ஒருவரின் பேச்சில் கருவைக் கவனிக்காது அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிக்காது எவ்வாறு பேசுகின்றார் என்பதை மட்டுமே அவதானித்து குறிப்பிட்ட நபர் இளமையானவரா? வயது முதிர்ந்தவரா? என்பதை மட்டுமின்றி புத்திசாலியா? நட்பாகப் பழகுவாரா? முதிர்ச்சியடைந்த நிலையிலுள்ளவரா? அன்புள்ளம் கொண்டவரா? ஊமையா? என்பதையும் புரிந்து கொள்ளலாம். இவ்வாறு ஒருவரின் வடிவம் அவரின் ஒளிவு மறைவின்மை, நேர்மையின் அளவு ஆகிய பண்புகள் தொடர்பாகவும் சில விடயங்களைக் கூறலாம்.

### ஆ) செவிப்புல ஊடக வகைகள்

வானொலி ஊடகத்தில் ஒலிபரப்பப்படும் பல்வேறு தொடர்பாடல் ஆக்கங்கள், படங்கள், கலந்துரையாடல்கள், நாடகங்கள், அறிவித்தல், செய்திகள் போன்றவற்றை அவதானமாகச் செவிமடுப்பதின் மூலம் செவிப்புல ஊடகத்தின் இயல்பைப் புரிந்து கொள்ளலாம்.

தொடர்பாடல் வடிவங்களில் செவிப்புல தொடர்பாடலின் சிறப்பியல்புகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். வானொலி ஊடகம் மூலம் எல்லா விதமான ஒலிபேதங்களையும் குரல்களையும், பேச்சுக்களையும், சங்கீதம், கோஷம் என்பவற்றையும் ஒலிபரப்ப முடியும். அதன் மூலம் ஒரு நிகழ்வைப் பற்றிய அனைத்துப் பக்கங்களிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு படத்தை ஆக்கும் ஆற்றல் அதற்குண்டு. உண்மையில் செவிப்புல ஊடகம் ஒலிகளால் வரைந்த சித்திரமொன்றை நேயர்களுக்கு வழங்குகின்றது. ஆயினும் செவிப்புல ஊடகம் என்பது வானொலி ஊடகமன்று. அது பல்வேறு ஒலிகள், சப்தங்கள், பேச்சு ஆகிய வகைகளின் கூட்டமாகும். உயிரினங்களின் ஒலிகளுக்கும், இயற்கை ஒலிகளுக்கும், செயற்கை ஒலிகளுக்கும் தொடர்பாடலில் பல கருத்துக்களை முன்வைக்கும் ஆற்றல் உண்டு.


நூலகம் பயன்பாட்டிற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ) செவிப்புல ஊடக பாவனை

ஒலியை அடிப்படையாகக் கொண்ட மரபு ரீதியான ஊடகம் எமது சமூகத்தில் பல்வேறு தொடர்பாடற் கருத்துகளை பிறப்பிக்கக் கூடியதாகவுள்ளது. ஆந்தை கத்தும் சப்தம், கோயில், மாதா ஆலய மணிச் சத்தம், பள்ளி வாசல் அழைப்புச் சத்தம் ஆகிய சப்தங்களினால் பல்வேறு கருத்துகள் வெளிக் கொண்டு வரப்படுவதைக் காணலாம். இவை சிலவேளை மக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருப்பதுண்டு. உண்மையற்றவையாகவும் இருக்கலாம். கூக்குரல் சத்தமும் செவிப்புலத் தொடர்பாடலின் ஒரு அங்கமாகும். கூக்குரல் எத்தனை அர்த்தங்களைத் தருகின்றது? நள்ளிரவில் வீடொன்றிலிருந்து கூக்குரல் கேட்டால் மற்றவர்கள் எப்படி விளங்கிக் கொள்வார்கள்? இவ்விதமாக பல்வேறு ஒலிப்பாவனைக்கும் வெவ்வேறு கருத்து உண்டு.

சமய நிறுவனங்களிலிருந்து வெளிப்படும் கருத்தில் தேவாரம், அதான் (தொழுகை அழைத்தல்) என்பன மக்களிடையே பக்தியுணர்வைத் தோற்றுவிப்பவை. இவையனைத்தும் மனித சமூகத்தில் நிலைப்பாட்டுக்கான தேவைகள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே பல்வேறு ஒலிகள், எமது தொடர்பாடல் வாழ்க்கை நிலையைக் கொண்டு நடத்தும் விதத்தை நாம் ஆராய வேண்டும்.

## ஈ) செவிப்புல ஊடகத் தேர்ச்சி

செவிப்புல தொடர்பாடல் வடிவத்தில் காணப்படும் கட்புலனாகாத் தன்மை காரணமாக பயனாளிகள் செய்தியை உள்வாங்கும் போது ஒலி, சப்தம், சங்கீதம், பேச்சு என்பவற்றிலிருந்து விலகிச் செல்லும் நிலை இல்லாதிருப்பதுடன் உரிய செய்தியை ஆழமாக புலன்களில் பதிவு செய்து கொள்ளும் ஆற்றலைப் பெறுவார்கள். கட்புலத் தொடர்பாடல் வடிவத்தின் போது பயனாளியின் புலக்காட்சி கட்புல செவிப்புலத் துறைகளிடையே பிரிந்து செல்லும். உதாரணமாக ஒரு சாஸ்திரிய சங்கீத ஆக்கத்தை வானொலியில் கேட்பதற்கும் தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும் இடையே பாரிய வேறுபாடு இருப்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இங்கு முதலாவதில் ஏற்கெனவே தயாரித்த ஒரு சங்கீதத்தைச் செவிமடுக்கும் அதே நேரம் இரண்டாவதில் பாவனையாளர்கள் சங்கீதம் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது என்பதற்கு சாட்சியாகவும் உள்ளனர். முதலாவதில் முடிவடைந்த ஒன்றைக் கேட்பதூடாக இரண்டாவதில் அவர் அதனை அவதானிக்கவும் செய்கின்றார். தொடர்பாடற் புலக் காட்சியின் படி இவ்விரண்டுமே ஒன்றுக்கொன்று வேறுபட்ட செயற்பாடுகள் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். செவிப்புல தொடர்பாடலில் தொடர்பாடற் சந்தர்ப்பத்திற்கான பல பகுதிகள் ஒருவகையான வடிகட்டலுக்குட்படுத்தப்பட்டு பயன்நிலை அடைகின்றது.

மரபு ரீதியான தொடர்பாடலுக்கு அப்பாற் சென்று தொழில் நுட்ப ரீதியான தொடர்பாடல் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வானொலி உட்பட ஒலியை மையமாகக் கொண்ட பல்வேறு தொழில் நுட்பக் கருவிகளை இன்றைய மக்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.6 முறைசார், முறைசாராத் தொடர்பாடல்கள்

### அ) முறைசார் தொடர்பாடலின் இயல்பு

ஒரு நிறுவனத்தின் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் நடைபெறும் தொடர்பாடல் முறைசார் தொடர்பாடல் எனப்படும். எந்த ஒரு நிறுவனத்தினதும் உயிரோட்டம் தொடர்பாடலிலேயே தங்கியுள்ளது. அதற்கான காரணம் நிறுவனத்தில் உள்ளவர்களிடையே தொடர்பைப் பேணுவதில் தொடர்பாடல் பெரும் பங்கை வகிக்கிறது என்பதாகும்.

அதன் படி ஒரு நிறுவனத்தில் மூன்று வழிகளில் முறைசார் தொடர்பாடல் நடைபெறுகின்றது.

#### 1. மேலிருந்து கீழ் நோக்கிய தொடர்பாடல்

இங்கு நிறுவனத்தின் உச்சியிலிருந்து கீழ் மட்டம் வரை தகவல்கள் பாய்ந்து செல்வதற்கான முறையான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். ஒரு இயந்திரம் சரியாக இயங்குவதற்கு சிறிய ஆணியும் கூட முக்கியமாகும். அதே போன்று ஒரு ஒழுங்கமைப்பின் செயற்பாட்டுக்கு அதில் கீழ் மட்டத்திலுள்ள ஊழியனும் அத்தியாவசிய அங்கமாகும். எனவே ஒரு நிறுவனத்துள் தகவல்கள் மேலிருந்து கீழ் நோக்கி உரிய முறையில் செல்ல முறைசார்ந்த ஒழுங்குகள் ஸ்தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

மேலிருந்து கீழ் நோக்கிய தொடர்பாடலுக்காகப் பெருமளவில் பயன்படுத்துவது பல்வேறு அறிவித்தல்களும் சுற்று நிருபங்களுமாகும். இவற்றுள் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் கையொப்பமிடப்பட்டி ருப்பதுடன் அதன்படி ஒரு செய்தி ஒரே நேரத்தில் சரியாக எல்லோராலும் அறிந்து கொள்ளப்படுகின்றது.

ஆயினும் நடைமுறையில் நிறுவனத்தின் தகவல்கள் மேலிருந்து கீழ் நோக்கியதாகச் சரியாகச் சென்றடைவதில்லை என்பதைக் காணமுடிகிறது.

#### 2. கீழிருந்து மேல் நோக்கிய தொடர்பாடல்

ஒரு நிறுவனம் வெற்றிகரமாகச் செயற்பட வேண்டுமானால் அந்நிறுவனத்தில் கீழ் நிலை ஆளணி முதல் உயர் முகாமைத்துவம் வரை தகவல்கள் வினைத்திறனாகச் சென்றடைய வேண்டும். இங்கு நிறுவனத்தின் நிலமைக்கு கீழ் மட்ட ஊழியரும் பயன்படுகிறாரா என்பதையும் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். அவ்வாறாயின் கீழ் நிலை வறியவரின் கருத்துக்களையும் மேல் முகாமைத்துவம் அறிந்திருத்தல் வேண்டும்.

கீழிருந்து மேல் நோக்கிய தொடர்பாடலை விருத்தி செய்ய பின்வரும் முறைகளைப் பயன்படுத்தலாம்.

1. அன்றாடக் கலந்துரையாடல்
2. நெறிப்படுத்தல் கட்புல கலந்துரையாடல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முன் மொழிவுகளுக்கான பெட்டி வைத்தல்
4. நிறுவனத்தின் கல்விப் பாடநெறி
5. சிறப்புக் குழுக்கள் அமைத்தல்
6. வருடாந்தக் கூட்டம்
7. விசாரணைகள்
8. வாத்தியக் குழுக்கள்
9. பிரிவுக் கூட்டங்கள்
10. குறைகேள் அதிகாரி அல்லது ஆலோசனை சேவையாளர் நியமித்தல்

### 3. குறுக்குத் தொடர்பாடல்

இது ஓர் அமைப்புக்குள் ஆளணியினர்க்கிடையே உள்ள தொடர்பாடலாகும். செயற்பாட்டுடன் குறுக்குத் தொடர்பாடல் இடம் பெற வேண்டும். அவ்வாறில்லாத போது அன்றாடக் கருமங்களைக் கூட நிறைவேற்றும் அவகாசம் கிடைக்காது போகலாம். குறுக்குத் தொடர்பாடலின் போது ஒவ்வொரு கருமத்தையும் நிறைவேற்றுவதற்குத் பொதுவான தேவையான தகவல் மற்றும் சொந்த தகவல்களும் பரிமாறப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் தொடர்பாடற் செயலொழுங்கின் மூன்றில் இரண்டு பகுதி குறுக்குத் தொடரபாடல் சார்ந்ததாகும் கருமங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தகவல்கள் முறைசார்ந்த தொடர்பாடல் வகையில் சேரும்.

குறுக்குத் தொடர்பாடல் பலவீனமடைவதற்கேதுவாக இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. திணைக்களம் அல்லது துறைகள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல்.
2. பல்வேறு குழுமங்கள், கும்பல்களாகப் பிரிந்திருத்தல்

குறுக்குத் தொடர்பாடலை விருத்தி செய்வதற்கான சில வழிமுறைகள் கீழே தரப்படுகின்றன.

1. அமைப்பின் சரியான ஒரு குறிப்பு தயாரிக்கப்படல்
2. ஒவ்வொருவர் ஆற்ற வேண்டிய பணிகளைப் பகிரங்கமாக நிறுவனத்தில் காட்சிப்படுத்தல்.
3. துறைகளுக்கிடையிலான வேலைகளை ஒழுங்கமைத்தல்

### ஆ) முறைசாராத் தொடர்பாடலின் இயல்பு

ஒரு நிறுவனத்தில் காணப்படும் முறைசார் தொடர்பாடலுக்கு வெளியே செயற்படும் சகலவிதத் தொடர்பாடல்களும் முறைசாராத் தொடர்பாடல் எனப்படும். அவ்வாறே ஒரு நிறுவனத்தின் முறைசார் தொடர்பாடல் ஓரளவேனும் பலவீனமடைந்திருந்தால் அப்பலவீனம் முறைசாராத் தொடர்பாடல் பிரிவிலடங்கும். ஒரு நிறுவனத்தில் முறைசார் தொடர்பாடல் பிரவாகத்தின் மூலம் நடைபெறுவது அச்சிறிய சமூகத்தில் உள்ளோர்க்கு முறையாகத் தகவல்களை வழங்குவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறைசார் பிரவாகம் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தடைப்பட்டுவிட்டது என எடுத்துக் கொள்ளுங்கள். அப்போது ஆளணியினருக்குத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு முறை இருக்காது. ஆளணியினர் மூலாதாரமற்ற, நம்பகத் தன்மையற்ற தகவல்களை முறைசாரா விதத்தில் பெற்றுக் கொள்ள முன்வருவார்கள். அப்போது இவ்வாறு முறைசாரா வகையில் ஒருவரின் வதந்தியை அல்லது கட்டுக் கதையை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். அதுமட்டுமின்றி எவ்வளவுக்கு முறைசார் விதத்தில் தகவல்கள் கிடைத்தாலும், அதன் பின்னணியில் கிடைக்காத தகவல்களும் ஊழியர்களின் தேடலுக்கு உட்படுகின்ற ஆனால் கிடைக்காத தகவல்களும் இருப்பதைத் தவிர்ப்பதற்கில்லை.

இதன் பெறுபேறாக எந்த ஒரு நிறுவனத்தில் அல்லது பாரிய சமூகத்திலாயினும் கூடிய குறைந்த அளவுகளில் செயற்படும் முறைசாராத் தொடர்பாடற் செயலொழுங்குகள் இருக்கவே செய்யும். அத்துடன் ஒரு நிறுவனத்தில் அல்லது சமூகத்தில் ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவிக்கவும் முறை சாராத் தொடர்பாடலால் முடியும். ஒன்றில் அக்குழப்பம் தானாக ஏற்படலாம். அல்லது அது வேண்டுமென்றே ஏற்படுத்தப்படலாம். முறைசாராத் தொடர்பாடலைப் பற்றி அதிலுள்ள இத்தகைய இயல்புகளின் காரணமாக நீங்களும் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

முறைசாராத் தொடர்பாடல் செயற்படும் விதத்தை மூன்று வடிவங்களில் குறிப்பிடலாம்.

### 1. தனிச்சங்கிலி

இங்கு ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கும் அங்கிருந்து இன்னொருவருக்கும் என்றவாறு தகவல்கள் பரவும். இவ்வாறு தகவல்கள் இடமாறும்போது சில மாற்றங்கள் நிகழும். ஒருவருக்குக் கிடைக்கும் தகவலை அவர் விளங்கிக்கொள்வது அவரிடமுள்ள விளங்கும் ஆற்றல், அவரில் அது பாதிக்கும் விதம், அவரது தனிப்பட்ட காரணிகள் ஆகியவற்றின் அடிப்படையிலாகும். இக்காரணங்களினால் ஒரே தகவலை இரண்டு பேர் விளங்கிக் கொள்ளும் விதம் சமமாக இருக்காது. இரண்டாவதாக ஒருவர் தனக்குக் கிடைக்கும் தகவல்களை மற்றொருவருக்கு வழங்கும் போது இரண்டு கருமங்களைச் செய்கின்றார். ஒன்று தனக்குக் கிடைத்த தகவல்களில் சிலதை விட்டுவிடுவதாகும். இது அவரது நினைவாற்றலைப் பொருத்து இயல்பாகவே நடைபெறவும் முடியும். அல்லது வேண்டுமென்றே தகவல்களின் ஒரு பகுதியை மறைக்கவும் முடியும். இரண்டாவது தமக்கு கிடைக்காத தகவல்களையும் இணைத்து முன்னைய செய்தியை மறு ஆக்கம் செய்வதாகும். இவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி விளைவு சங்கிலியின் முதல் வட்டத்தில் வெளியிடப்படும் செய்தி மாற்றமடைந்து, திரிபடைந்து, திருத்தியமைக்கப்பட்டு கடைசியில் முழுமையாகவே மாறுபட்ட ஒரு செய்தியாக ஆக்கப்படுவதாகும்.

### 2. நிகழ்தகவுச் சங்கிலி

இதன்படியுள்ள செய்தியின் இயல்புப்படி அது சுதந்திரமாக பரவாது. அதாவது முதற்கட்டத்தில் செய்தி யாருக்கு வழங்கப்படுகின்றது எனபதை அனுமானிக்க முடியாது. இச்சங்கிலியின் போது செய்தி தெரிவு செய்யப்பட்ட சிலரூடாகவே செய்தி பரவும். எல்லோருக்கும் செய்தி கிடைப்பதில்லை. எனவே தேவையான சிலரிடையே மட்டும் செய்தி பர்வுதேயன்றி பரந்த அளவில் பரவாது.

### 3. கொத்தணி முறை

இங்கு செய்தி ஆரம்பிப்பவர் தான் தெரிவு செய்த சிலருக்கு மட்டுமே செய்தியை வழங்குவார் பின் அவர்கள் தாம் தெரிவு செய்யும் சிலருக்கு அதனை வழங்குவர். இது நிகழ்தகவுச் சங்கிலியில் இருந்து வேறுபடுவது. ஒரு துறையைச் சார்ந்தவர்களிடையே மட்டும் கொத்தணிச் சங்கிலி செயற்படுவதிலாகும். இம்முறையின் இயல்பு காரணமாக ஒரு தகவலைப் பரப்புவதற்காக இதனைப் பயன்படுத்த இதன் மேலதிகாரியால் முடியும்.

## இ) முறைசார் முறைசாராத் தொடர்பாடல்களுக்கிடையிலான தொடர்பு

முறைசார், முறைசாராத் தொடர்பாடல் என்பது தொடர்பாடல் நிகழும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு தொடர்பாடல் வடிவங்களாகும். மனித சமூகத்தில் இவ்விரண்டு வடிவங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு மட்டங்களில் செயற்படுவதைக் காணலாம்.

முறைசார் தொடர்பாடலில் தீர்மானிக்கப்பட்டதும் ஒரு சட்டரீதியான நிலையைக் கொண்டதும், திட்டமிடப்பட்டதுமான ஒரு வடிவத்தைப் பெறும் முறைசார் தொடர்பாடல் செயலொழுக்கு ஒரு நோக்கத்துடன் கூடியதாக இருக்கும். முறைசாரா தொடர்பாடலில் தீர்மானிக்கப்பட்டது ஒரு மூலாதாரம் இருப்பது நிச்சயமாக தெரியாது. அது உத்தியோகபூர்வமற்ற பொதுவான சட்டரீதியற்ற ஒரு மனிதர் தொடர்பாடல் வடிவம் என அழைக்கப்படலாம்.

முறைசார், முறைசாராத் தொடர்பாடல் வடிவங்களில் உள்ள வேறுபாடு அதன் உள்ளடக்கத்திலன்றி பெரும்பாலும் மாதிரியிலேயே இருக்கும். விசேடமாக முறைசாராத் தொடர்பாடல் மனித சமூகத்தில் பல்வேறு வடிவங்களில் நிகழும். வதந்தி, கோள், பெயரற்ற பிரசுரங்கள் இவற்றுக்கான உதாரணமாகும்.

## ஈ) முறைசார், முறைசாரா தொடர்பாடல் மாதிரி

மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக, குறுக்காக நிகழுகின்ற தொடர்பாடல்களில் முறைாசார் மாதிரிகள் / படிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை சில நிறுவனங்களிலுள்ள பதவியடுக்கு முறைக்கிணங்க அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உ) முறைசாரத் தொடர்பாடற் தேர்ச்சிகள்

முறைசாரா தொடர்பாடலுக்குரிய பிறவிடயங்களைத் தேடல், வதந்தி, கோள் மூட்டல் போன்றவை தொடர்பிலான தேர்ச்சியை நீங்கள் பெற்றிருப்பது அவசியமா? அவ்வாறானால் அத் தேர்ச்சியை நிறுவனத்தின் நன்மைக்காகப் பயன்படுத்த முடியுமா? கோள், வீண்பேச்சு, வதந்திகளை சாதகமாக நோக்கிப் பார்ப்பது உங்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருக்கலாம்.

முறைசார் தொடர்பாடலினால் கிடைக்காத சில தகவல்கள் வதந்திகள், கோள் மூலமாக நிறுவனத் தலைவர்களுக்குக் கிடைக்கலாம். நிறுவனத்தின் உத்தியோகஸ்தர்கள் பற்றி அல்லது ஒரு நடவடிக்கை பற்றியுள்ள அதிருப்தி இத்தகைய வதந்திகளுடாகவே பரவும்.

அவ்வாறில்லாவிடின் கீழ்நிலை ஊழியர் ஒருவருக்கு நேர்ந்த அநியாயம் தொடர்பாக அல்லது அந்தரங்கமாக நிகழும் ஒரு ஊழல் பற்றியோ வதந்திகளுடாகவே தெரிய வருவதுண்டு. இத்தகைய தகவல்கள் ஒரு போதும் முறைசார் தொடர்பாடற் பிரவாகத்தில் இடம் பெறுவதில்லை. இவற்றை முறைசாராத் தொடர்பாடல் வழியாக மட்டுமே பெற முடியும்.

உதாரணமாக நிறுவனத்தின் கீழ் மட்ட ஊழியருடன் அதன் பிரதானி காரியாலயத்தில் தனியாக பேசிக் கொண்டிருக்க நேரிடலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் நிறுவனத்திலுள்ள வெளியே தெரியாத தகவல்களை வெளிப்படுத்த முடியும். இத்தகவல்களை நிறுவனத்திலுள்ள சீரான செயற்பாட்டுக்காகக் கவனமாகப் பயன்படுத்த முடியும். ஒரு திறமையான முகாமையாளர் இத்தகைய முறைசாராத் தொடர்பாடல்களை நிறுவனத்தின் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 2.7 தொடர்பாடலுக்கான தடைகளும் பரிகாரங்களும்

உலகில் எந்த இரு மனிதர்களும் உள ரீதியாகவோ, உடல் ரீதியாகவோ, உணர்வு வேகத்தாலோ சமமானவர்கள் அல்ல என்பதை முதலில் நாம் விளங்கிக் கொள்வது முக்கியமாகும். அத்துடன் மனிதர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் கலாசார, சமூக, சூழற் காரணிகளின் வேறுபாட்டுக் கேற்பவும் இச்சமமின்மை விரிவடையலாம். இந்த அனைத்து நிலைமைகளும் தொடர்பாடல் சுதந்திரமாக இடம் பெறுவதற்கான தடைகளாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேறுபாடுகள் காரணமாக ஏற்படும் ஒரு விளைவு யாதெனில் ஒவ்வொருவரும் தமது மனதை ஒரு வடிகட்டியாக (filter) பாவிப்பதாகும் வடியின் தொழில் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களல்லவா? வடியினூடக எந்த வொன்றும் சுதந்திரமாக ஊற்றுப்பட முடியாது. தன்மைக் கேற்ப இவற்றை வடி தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டு எஞ்சியதையே அப்பால் அனுப்பும். இச் செயலாழுங்கு முதலில் நிகழ்வதற்கு தடையாக இருப்பதை தொடர்பாடல் தடைகள் என அழைப்பர். அவை இரண்டு வகைப்படும்.

## பல்வேறு தடைகள்

1. **கருத்து ரீதியிலான தடைகள்** - இதன்மூலம் கருதப்படுவது தொடர்பு படுபவரினால் வழங்கப்படும். செய்தியைப் பெறுவோர் சரியாக விளங்கிக் கொள்வதில் உள்ள தடையாகும். போதிய மொழியின்மை, செய்தி சரியாகத் தயாரிக்கப்படாமை என்பன இதற்கான காரணங்களாக இருக்கலாம்.

2. **ஊடகத் தடைகள்** - தொடர்பாடற் செயலொழுக்கு சீராகச் செயற்படுவதற் கேதுவான விதத்தில் ஒலி சரியாகச் செல்லாததன் காரணமாக ஏற்படும் தொழில் நுட்ப ரீதியிலான தடைகள் இதில் அடங்கும். உதாரணமாக வானொலி அலைவரிகளில் சரியான சமிக்ஞை கிடைக்காமையைக் கூறலாம்.

## பொருத்தமான பரிகாரங்கள்

தொடர்பாடற் தடைகளுக்கான பரிகாரங்களாக கருத்துக்கள் தெளிவாக விளங்கும் வகையில் செய்தியைத் தயார் செய்தல் பெறுநர் பற்றிய சரியான விளக்கத்துடன் பொருத்தமான ஊடகத்தைப் பயன்படுத்துதல் அது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடைமுறைகளைத் கையாளுதல் என்பவற்றைக் கூறலாம்.



**ஒப்படை 2**

1. வாய்மொழித் தொடர்பாடல் என்றால் என்ன என்பதை அறிமுகப்படுத்தி அதன் அடிப்படைகள் பற்றி விபரிக்குக.
2. வாய்மொழி, வாய்மொழியில்லாத தொடர்பாடல்களின் ஆரம்பம் பற்றி சுருக்கமாக விளக்குக.
3. எழுத்து மூலத் தொடர்பாடலின் விளைதிறன் பற்றி விளக்குக.
4. முறைசார் தொடர்பாடல், முறைசாராத் தொடர்பாடல் பற்றிய உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
5. கட்புலத் தொடர்பாடலை அறிமுகப்படுத்தி அதனால் விளையும் சேவைகள் பற்றி விசாரணை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3 செயல்சார் ஊடகத் தொழில் நுட்பத் திறன்கள்




## நோக்கம்

தொடர்பாடல் மற்றும் ஊடகம் தொடர்பான தொழில் நுட்பம் அண்மிய தசாப்தத்தில் மிக வேகமாக மாற்றமடைந்துள்ளதுடன் பல்வேறு தொடர்பாடல் உபகரணங்களும் கருவிகளும் எமது அன்றாட வாழ்வின் பங்குதாரர்களாகியுள்ளன.

இந்தப் பல்வேறு தொடர்பாடல் மற்றும் ஊடக உபகரணங்கள், கருவிகளைக் கையாள்வது தொடர்பான தேர்ச்சியை உங்களுக்கு வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். இங்கு நடைபெற வேண்டியது ஒவ்வொரு ஊடக உபகரணங்கள் கருவிகளின் பெயர்களையும் அவை பற்றிய விபரங்களையும் மனப்பாடம் செய்வதன்று. மாறாக அத்தகைய உபகரணங்கள் கருவிகள் இயக்குவது தொடர்பான அனுபவங்களை செயல் முறை ரீதியாகப் பெற்றுக் கொள்வதாகும். அவ்வாறு செய்ய வேண்டுமாயின் அத்தகைய ஊடக உபகரணங்கள், கருவிகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அது தொடர்பான செயன் முறை அனுபவங்களைப் பெற வேண்டும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

நவீன சமூகத்தை ஆராயும் போது தெரிய வரும் ஓர் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், அங்கு காணப்படும் பல்வேறுபட்ட பணிகளின் தொகுதியாகும். அவற்றுள் சில பொதுவான நிலைமைகளாக இருப்பதுடன் அவற்றை உடன் விளங்கிக் கொள்ளவும் முடியும். சில பணிகள் சிறப்புத் தன்மை வாய்ந்ததாக இருப்பதுடன் பெரும்பாலும் அவற்றில் ஈடுபட்டிருப்போருக்கே அவற்றை நன்கு விளங்கக் கூடியதாகவுள்ளது. இத்தகைய பணிகள் எமது வாழ்வில் சாதாரணமாக இருந்தவைகளல்ல. உதாரணமாக மின்னஞ்சல் (Fax) ஒன்றை அனுப்புவது பற்றிச் சித்தித்துப் பாருங்கள். ஒரு செய்தி அடங்கிய ஆவணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு கொண்டு செல்ல பண்டைய சமூகத்தினர் பல்வேறு வழிகளைப் பயன்படுத்திக் கொண்டனர்

**அவை :**

- ஒரு தூதுவருடாக அனுப்புதல்
- முரசறைவோன் மூலம் தெரிவித்தல்
- பறவைகள் மூலம் கொண்டு செல்லல் (புறா)
- ஈட்டியில் இணைத்து எறிதல்

இவ்வனைத்து முறைகளையும் விட மின்னஞ்சல் வேறுபட்டதாகும். அது ஒரு தொழில் நுட்பச் செயலொழுங்காகும். அத்துடன் அத்தொழில் நுட்பச் செயலொழுங்கை இயக்க அது தொடர்பான தேர்ச்சி அவசியமாகும்.

இவ்வாறு எமது அன்றாட வாழ்வுடன் தொழில் நுட்பச் செயலொழுங்கும் தொழில் நுட்ப உபகரணங்கள் கருவிகளும் இணைந்து காணப்படுகின்றன. நீங்கள் இவை தொடர்பான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**உதாரணம் :**

1. ஊடு காட்டித்தாள் ஒட்டும் இயந்திரத்தை இயக்குதல் (Laminatiion)
2. புகைப்படம் பிரதியெடுத்தல்
3. மின்னஞ்சல் அனுப்புதல்
4. அறிக்கையொன்றை இயந்திரத்தினூடாக கட்டுதல்
5. அட்டைப்படமொன்றைக் கணனியில் தயாரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்று பல்வேறு பணிகளுடன் தொடர்பான பல்வேறு தொழில் நுட்ப உபகரணங்கள், கருவிகளை இயக்கும் தேர்ச்சியை நீங்கள் பெற்றிருத்தல் வேண்டும். கணனி சார்ந்த வெளியீடுகள், உபகரணங்கள் போன்றவற்றை இயக்கும் தேர்ச்சியை நீங்கள் பெற்றிருத்தல் வேண்டும். கணனி சார்ந்த வெளியீடுகள், உபகரணங்கள், காரியாலய ஊடக உபகரணங்கள் தகவல்கள், தகவல் பரிமாறும் ஊடக உபகரணங்கள், வகுப்பறை ஊடக உபகரணங்கள் போன்றவற்றை இயக்கும் அனுபவத்தைப் பெறும் வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

இன்றைய உலகில் மிக வெற்றிகரமான ஒரு குடிமகனாக மாறுவதற்காக கணனிப் பாவனை ஆற்றலை நீங்கள் விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். துரிதமாகக் கருத்துப் பரிமாறுவதற்கும், சிறந்த தொடர்பாடலுக்கும், சுய கற்கைக்கும், பொழுது போக்கிற்கும் இவற்றினால் கிடைக்கும் துணை அளப்பரியதாகும். எழுத்தறிவை அளக்கும் நவீன அங்கமாகவும் கணனிப் பாவனை ஆற்றல் கொள்ளப்படுகின்றது.

## 3.1 கணினிசார் வெளியீட்டு உபகரணங்கள்

### அ) கணனிசார் வெளியீட்டுச் செயலொழுங்கு (Desktop Publishing)

உங்கள் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் அறிக்கையை கூட்ட முடிவில் பெற்றுக் கொள்ள முடிகின்றதா?

ஆரம்ப காலத்தில் ஓர் ஆவணத்தை அச்சிடுவதானால் ஒரே மேசையில் வைத்து அதனை நிறைவு செய்யும் நிலை இருக்கவில்லை. எனினும் கணனி வெளியீட்டுச் செயலொழுங்கு (Desktop Publishing DTP) மூலம் ஒரு மேசையிலேயே அச்சு வேலைகளை மிகக் குறுகிய நேரத்தில் நிறைவு செய்ய முடியும். இச்செயலொழுங்கு உங்களுக்குப் புதிய அனுபவமாக இருக்கலாம். ஒரு தட்டச்சு இயந்திரத்தில் ஒரு மெழுகுப் பத்திரத்தைத் தட்டச்சு மூலம் தயாரித்து அதன் மூலம் ஆவணங்களை இரட்டிப்புச் செய்து ஊசி இணைப்பு இயந்திரத்தினால் (Stapler machine) இணைத்துப் பயன்படுத்துவதை அனேகமாக நீங்கள் கண்டிருக்கலாம். ஆரம்ப காலத்தில் பரீட்சை வினாத்தாள்கள் இவ்வாறு தான் அச்சிடப்பட்டன. இம்முறையை ஆரம்பகால DTP செயலொழுங்கு என்று கூறலாம்.



படம் :- 3.1.1 கணனிசார் வெளிப்பாட்டுச் செயல்பாடுகள்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DTP செயலொழுங்கின் நடைமுறைகள்

DTP செயலொழுங்கின் முதலாவது படிமுறை கையெழுத்துப் பிரதியைத் தயாரிப்பதாகும். அக்கையெழுத்துப் பிரதி கணனி மென்பொருள் உதவியுடன் DTP செயலாழுங்குக்கு உட்படுத்தப்படுகின்றது. மென்பொருள் பாவித்து கை எழுத்துப் பிரதி கணனி எழுத்தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டு அது மூலப் பிரதியுடன் ஒப்பு நோக்கப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். தமிழ் அல்லது சிங்கள மொழியில் கணனியில் வடிவமைக்கப்பட்ட பின் கணனித் திரையில் வைத்து திபாஸ், ஹெலபிம, எப்.எம். அபய, அமில, கழகம், பாமினி (Kalaham, Bamini) போன்ற எழுத்துத் (font) தொகுதியைப் பயன்படுத்திச் சரிபார்த்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு பெற்றுக் கொள்ளும் ஆவணத்தின் அச்சுப் பிரதியொன்றை திரையில் தேவையான உருக்கள், வடிவங்களை, இணைத்து தளக்கோலத்தைத் (Layout page) தயார் செய்து கொள்ள முடியும். சரியான அமைப்பை கணனியில் திரையில் பார்த்துத் தேவை ஏற்படின் கணனி அச்சுப் பொறி (Printer) ஒன்றின் உதவியுடன் பிரதியொன்றைப் பெற முடியும்.

## DTP செயலொழுங்கின் சிறப்பியல்புகள்

1. குறைந்த செலவு
2. குறைந்த பட்ச மனித வலுவே தேவைப்படல்
3. குறுகிய நேரத்தில் அச்சுப் பிரதி கிடைத்தல்
4. தேவையான போது திருத்தங்கள் செய்து கொள்ளலாம்

## DTP செயலொழுங்கு உரு மூலம்

கையெழுத்துப் பிரதி தயாரித்தல் → எழுத்தமைப்பும் பக்க வடிவமைப்பும் → பிரதிகள் தயாரித்தல்

மேற்கூறிய கணனி வெளியீட்டுச் செயலொழுங்குக்காகவும் இறுதி வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பல உபகரணங்கள் பயன்டுத்தப்படுகின்றன. இவ்வுபகரணங்கள் ஒரு சங்கிலி வட்டத்தைப் போல் ஒன்றோடொன்று தொடர்புற்றுக் காணப்படுகின்றன. அவற்றின் செயற்பாட்டை அடுத்து வரும் பகுதிகளில் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ) கணனிசார் வெளியீட்டு உபகரணங்களை இனங்காணல்

### கணனி (Computer)

கணனி என்பது தரவுகளை வழங்குதல், தரவுகளைத் தயாரித்தல், தரவுகளை களஞ்சியப்படுத்துதல், தயாரிக்கப்படும் தரவுகளை வெளிக் கொணர்தல் என்பவற்றைச் செய்யும் ஒரு இலத்திரனியல் கருவியாகும். வெளியீட்டுப் பணிகளுக்காக கணனியின் சில உள்ளக உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### வன்பொருளும் மென்பொருளும் (Hardware and Software)

கணனி வெளியீட்டுத் தொழில்பாட்டில் பங்கு கொள்ளும் கட்டாயமான இரு அங்கங்களாக வன்பொருள், மென்பொருள் ( Software and Hardware) காணப்படுகின்றன.

### வன்பொருள் (Hardware)

பௌதிக ரீதியாக கணனியைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படும் அனைத்துப் பகுதிகளும் வன்பொருள் என்ற பெயரால் அழைக்கப்படும்.



படம் :- 3.1.2 மைய செயலகம் (System Unit)



படம் :- 3.1.3 கணனித் திரை (Monitor*
(ஒரு வெளியீட்டுக் கருவி)



படம் :- 3.1.5
அச்சுப் பிரதியெடுக்கும் இயந்திரம் (Printer)
(ஒரு வெளியீட்டுக் கருவி)



படம் :- 3.1.4 சுட்டி
(Mouse)
(உள்ளீட்டுக் கருவி)



படம் :- 3.1.6 இறுவட்டு இயக்கி
(Compack Disk Drives)
(உள்ளீட்டு மற்றும் வெளியீட்டுக் கருவியாக பயன்படுத்தலாம்)



படம் :- 3.1.7 விசைப்பலகை
(Key Board)
(உள்ளீட்டுக் கருவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்பொருள் (Software)




படம் :- 3.1.8

கணனி செய்ய வேண்டிய அனைத்து சேவைகளையும் விளக்குவது மென்பொருளாகும். இதன்படி மென்பொருள் கணனியின் மூளை எனலாம்.




படம் :- 3.1.9

மென்பொருள் மூலமாகவே கணனியின் இயலுமை ஆற்றல் தீரமானிக்கப்படுகின்றன.

உதாரணமாக :




படம் :-3.1.10

பாடநூலக்கத்தின் போதும் கொரல்ட்ரோ மற்றும் போட்டோ ஷொப் என்ற மென்பொருள்ளே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.




படம் :-3.1.11

கணனி வெளியீட்டுச் செயலொழுங்கை (DTP) இயக்கிப் பெற்றுக் கொள்ளும் வெளியீடுகளை ஒன்றிணைப்பதற்கும், கூடிய பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பல உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன் செயற்பாடு பின்வருமாறு அமையும்.

**செயற்பாடு 3.1**

உங்கள் வகுப்பு நேர அட்டவணையின் கணனி அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்க.



## கட்டி இணைக்கும் இயந்திரம் (Binder)

- DTP செயலொழுங்கு மூலம் பெற்றுக் கொள்ளும் ஆவனங்களைப பயன் படுத்துவதற்காக அவற்றை முறைப்படி இணைத்து அமைத்துக் கொள்ள வேண்டும்.



படம் :- 3.1.12
கட்டு இயந்திரம்

- முற்காலத்தில் ஆவணத்தில் துளைகள் இட்டு (Punch) ஒரு நூலினால் கட்டி இதனைச் செய்வார்கள். பிற்காலத்தில் பிரதிகளை ஒன்றிணைத்து ஸ்டெப்ளர் இயந்திரத்தினால் (Stepler Machine) கம்பி இணைத்துக் கட்டப்படும். அத்துடன் பிசின் அல்லது பசை பாவித்தும் புத்தகங்கள் கட்டப்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொதுவாக காரியாலய நடவடிக்கைகளின் போது தாள்களை ஒன்றாக இணைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மிகச் சிறந்த முறை யாதெனில் கம்பியால் தாள்களை ஒன்றாக வைத்துக் கட்டுவதாகும். இவ்விதம் கட்டப்படும் தாள்களைப் புரட்டுவது இலகுவாக இருக்கும்.

## ஊடுகாட்டித் தாள் ஒட்டும் இயந்திரம் (Laminater)

- முக்கியமான ஆவணங்களை நீண்ட காலம் பாதுகாத்து வைப்பதற்காக தடிப்பான பொலிதினால் அட்டையிடுவதே இந்த இயந்திரத்தின் தொழிற்பாடாகும்.

- . A4, B5, ID, Legal என்ற அளவுகளில் உள்ள ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களை இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி பொலிதின் அட்டையிடலாம்.



படம் :- 3.1.13
லெமினட்டிங் கருவி

- . இயந்திரத்தில் உள்ள வெப்பம் காரணமாக பொலிதின் ஒட்டுவதுடன் இவை காற்று உட்புகவோ வெளியாகவோ வாய்ப்பில்லை. இது ஆவணத்தை நன்கு பாதுகாக்க உதவும்.

## எண்சார் இரட்டிப்பு இயந்திரம் - (Digital Duplicator Mechine)

அதிக எண்ணிக்கையிலான பிரதிகள் குறுகிய நேரத்தில் அச்சிடுவதற்கு இந்த இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது. அச்சிடுவதற்கான பிரதி இயந்திரத்தின் மீதுள்ள கண்ணாடியில் சமநிலையாக வைக்கப்பட்டு நிறச் செயலாழுங்கு, பிரதிகளின் எண்ணிக்கை, பிரதியின் அளவு, நிரலின் (Margin) அமைவு, நிறங்களின் இயல்பு போன்ற கட்டளைகளை இயந்திரத்துக்கு வழங்க வேண்டும்.



படம் :- 3.1.14
எண்சார் பிரதியெடுக்கும் கருவி

அச்சிட வேண்டிய பிரதிகளின் அளவை வழங்குவது இயந்திரத்தில் உள்ள எண்கள் சார்ந்த பித்தான்களைத் தொடுவதன் மூலமாகும். அச்சிடும் கட்டளைக்காகவுள்ள பித்தானை அழுத்தியவுடன் (Printing Position Button) நிரலின் (Margin) அளவையும் சரிசெய்து பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் தரத்திலான பிரதிகளைப் பெற முடிகின்றமை, வினைத்திறன் வாய்ந்த பெறுபேறு, ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவு என்பன இந்த இயந்திரத்தின் அனுகூலங்களாகும்.

### தாள் வெட்டும் இயந்திரம்



படம் :- 3.1.15 வெட்டும் இயந்திரம்

காரியாலய ஆவணங்களை ஒன்றாகக் கட்டுவதில், அத்தாள்களை ஒரே அளவில் வெட்டிக் கொள்வது முக்கியமானவை. இதற்காக மேசைமீது வைத்துத் தாள்களை வெட்டக்கூடிய ஒரு உபகரணத்தைப் பயன்படுத்துவது அவசியம். வசதியான இவ் உபகரணத்தில் தாளில் தேவையான அளவை வைப்பதற்கான மில்லி மீற்றர் கோடுகள் இருக்கும். தாள்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பின் கட்டிய பின் இந்த உபகரணத்தில் வைத்து வெட்டிச் செப்பனிட்டுக் கொள்ள முடியும்.

### இ) கணனிசார் வெளியீட்டு உபகரணங்களைப் பயன்படுத்துகின்றதன் அவசியம்

- **வினைத்திறன் வாய்ந்த சேவையைப் பெறுதல்**

ஆரம்ப காலங்களில் ஓர் அச்சுப் பிரதியை கூட்ட அறிக்கையை முன்னேற்ற அறிக்கையை அச்சிட்டு வெளியிட அதிக காலம் தேவைப்பட்டது. ஆனால் இன்று கணனிப் பாவனை மூலம் இதனை மிக இலகுவில், விரைவில் செய்து கொள்ளும் ஆற்றல் கிடைத்துள்ளது.

- **பயன்படுத்துதல் இலகுவாக இருத்தல்**

முன்னரெல்லாம் வெளியீட்டு உபகரணங்களில் எளிமையான தொழில் நுட்ப முறைகள் காணப்பட்டாலும் அவற்றைக் கையாளுவதில் சிரமம் காணப்பட்டது.



படம் :- 3.1.16 இலகுவான பயன்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : அச்சு இயந்திரத்திற்கு எழுத்துக்களை பொருத்துதல்

எனினும் தற்போதய உபகரணங்களில் துரித தொழில் நுட்ப உத்திகள் கையளப்பட்டிருப்பினும் அவற்றை சாதாரண பயிற்சியின் பின் உபயோகிப்பது மிகவும் எளிதாகும்.

- **நம்பகத் தன்மை**

தரவுகளைக் களஞ்சியப்படுத்தி பாதுகாப்பதற்கான ஆற்றல் இவ்வெளியீட்டு உபகரணங்களுக்குண்டு அத்துடன் வெளியீட்டு வடிவமைப்பு காரணமாக நம்பகத்தன்மையும் அதிகரித்துள்ளது.

- **நீடித்துழைக்கவும் காணாமற் போவதைத் தவிர்ப்பதற்குமான ஆற்றல்**

ஒரு நிறுவனத்தின் நிர்வாகத்தை நடத்தும் போது தரவுகள், ஆவணங்களின் பாதுகாப்பு மிக முக்கியமானதாகும். அத்துடன் அத்தகைய ஆவணங்களின் பகுதிகள் காணாமற் போகும் நிலையைத் தவிர்ப்பதும் முக்கியமானது. இக்காரணங்கள் கணனி சார் வெளியீட்டு உபகரணங்களில் நடைபெறுகின்றது.

- **வேகமான தொடர்பாடலுக்காக**

உலக வர்த்தக பொருளாதார கோலத்தில் நிறுவனங்களுக்கு இடையிலான துரிதமான தொடர்பாடற் பரிமாற்றம் தேவைப்படுகின்றது. இதற்காக மேற்படி உபகரணங்களினால் கிடைக்கும் உதவி அளப்பெரியது.

- **பொருளாதார நன்மைகளை பெற்றுக்கொள்ளல்**

ஒரு வணிக அல்லது சேவை நிறுவனமொன்று தம் செலவுகளை முகாமைத்துவம் செய்யும் போது பொருளாதார நன்மை குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான மேற்படி உபகரணங்களைப் பயன்படுத்த முடியும்.

**செயற்பாடு 3.1**

மேலே நாம் கலந்துரையாடிய உபகரணங்களின் செயற்பாட்டை செயன்முறையாக அறிந்து கொள்வதற்காக உங்கள் பிரதேசத்தின் விஞ்ஞான நிலையம், இ-நனசல நிலையம் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி ஒரு செயலமர்வை ஏற்பாடு செய்யவும்.




இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 காரியாலய ஊடக உபகரணங்கள்

ஒரு காரியாலயம் என்பது சீரான முகாமைத்துவம் நிலவ வேண்டிய முறையான நிர்வாகம் மற்றும் திட்டமிடலுக்கான ஆவணங்கள், புத்தகங்கள் தயாரிக்கும் கையாளும் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தியுள்ள ஓர் சிறந்த இடமாகும். சமூகத்தின் பல்வேறு நிறுவனங்கள் தம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக காரியாலயங்களை நடத்துகின்றன. இந்நிலைமை அரசாங்க, தனியார் ஆகிய இரு துறைகளுக்கும் பொதுவானதாகும். வெற்றிகரமாக ஒரு காரியாலயத்தை நடத்துவதற்காக அதனுடன் தொடர்பான ஒரு தொடர்பாடற் செயலொழுங்கு இருக்க வேண்டும். அத்தகைய தொடர்பாடற் செயலொழுங்கைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

A. தகவல்களை சேகரித்தல்

B. தகவல்களை களஞ்சியப்படுத்தல்

C. தகவல்களைத் தயாரித்தல்

D. தகவல்களை வெளியிடல்

E. சொத்துக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான கட்டளைகளைத் தயார் செய்தல்

இத்தகைய காரியாலய தகவல்களை துரிதமாக தொடர்பாடுவது முக்கியமாகும். காரியாலயம் விரிவடையும் போது தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இத்தகவல் பரிமாற்றத்தை இயக்க முடியும். எவ்வாறாயினும் எந்த ஒரு நிறுவனத்திலும் நடைமுறையிலுள்ள ஊடக செயலொழுங்குகளை நான்கு பிரதானத் தொடர்பாடல் முறைகளினால் எடுத்துக் காட்டலாம்.

A. வாய் மொழி மூலம் செய்யும் தொடர்பாடல்

B. எழுத்து மூலம் செய்யும் தொடர்பாடல்

C. சமிக்ஞை / குறியீடுகள் மூலம் செய்யும் தொடர்பாடல்

D. நவீன தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் தொடர்பாடல்

ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (அ) காரியாலய ஊடகச் செயலொழுங்கை இனங்காணல்





| வெளியகத் தொடர்பாடல் (நிறுவனம் தொடர்பாக வேறு பிரிவினருடன் மேற்கொள்ளும் தொடர்பாடல்) | உள்ளகத் தொடர்பாடல் (நிறுவனத்துள் நடைபெறும் அனைத்து வகையான தொடர்பாடல்களும்) |
|---|---|
| - தொலைக்காட்சி | - உள்ளக மகாநாடு |
| - வானொலி | - பல்வேறு சமிக்ஞைகள் |
| - பத்திரிகை | - அசையும் உருவங்களில் ஆன பலகைகள் |
| - சஞ்சிகைகள் | - தொலைபேசி |
| - கூட்டங்கள் | - அழைப்பு மணி |
| - தொலைபேசி | - உபசாரங்கள் |
| - கடிதங்கள் | - கடிதங்கள், அறிவிப்பு பலகை |
| - கலந்துறையாடல்கள் | - ஒலிபரப்பு |
| - அறிவித்தல்கள் | - இணையம் |
| - பிரசுரங்கள் | - மின் அஞ்சல் |
| - மின் அஞ்சல் | |
| - சுவரொட்டி | |
| - கண் காட்சி | |
| - அனுசரணையாளர் | |

## ஆ) காரியாலய ஊடக உபகரணங்களை இனங்கானல்

ஒரு காரியாலயத்தில் அறைகளின் தொகுதியொன்று காணப்படும் நிலையில் அங்கு நிகழும் ஊடகச் செயலொழுங்கைச் சிறப்பாச் செய்வதற்கு பல்வேறு தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தவேண்டி ஏற்படும். காரியாலயத் தொடர்பாடலின்போது பரவலாகப் பயன்படுத்தும் சில தொழில் நுட்ப உபகரணங்களைக் கையாளும் விதத்தைப் பார்ப்போம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பான்



படம் :-3.2.1 கணிப்பான்

காரியாலயங்களில் கணக்கீட்டு வேலைகளின் போது பல்வேறு கணிதச் செய்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் மனக் கணிதத்தில் ஏற்படக்கூடிய பிழைகளைத் தவிர்ப்பதற்காக கணிப்பான் பயன்படுத்தப்படுகின்றது. கணக்குகளைச் சரியாகவும் துரிதமாகவும் செய்ய இது உதவும். பாடசாலை மாணவர்கள் முதல் உயர் மட்ட ஊழியர் வரை இன்று கணனிமயமாக்க ஆற்றல் கொண்ட பெரிய கணிப்பான் வரை பல அளவுகளில் இன்று சந்தையில் கிடைக்கின்றன.

## காசுப் பதிவு இயந்திரம்


படம் :- 3.2.2 காசுப்பதிவு இயந்திரம்

சந்தைப் பொருளாதாரத்தின் பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு இது பெரிதும் உதவுகின்றது. இந்த இயந்திரத்தில் ஒரு காட்சித் திரை, பணம் வைக்கும் இழுவை அறை, கணக்குகளைக் கூட்டுவதற்கான எண்பித்தான்கள் என்பன காணப்படுகின்றன. இதில் உள்ளிடப்படும் கணக்குகளின் விபரங்களை வாடிக்கையாளரும் காட்சித் திரையூடாகப் பார்க்க முடியும் கணக்கில் ஏற்படும் தவறுகளும் உடனுக்குடன் திருத்தப்பட இதனால் முடிகின்றது. கணிதச் செய்கை மேற்கொள்ளும் பகுதி இலக்கங்கள் பொறித்த விசைப்பலகை கொண்டது. அதில் செய்யப்படும் கணக்கு விபரம் திரையில் தெரியும் விசைப்பலகையிலுள்ள திறப்பை அழுத்தியவுடன் பணம் வைக்கும் இழுவை அறை திறக்கப்படும். பொருட்களின் குறியீட்டு விலைகளை வாசிக்கும் ஆற்றலும் இந்த இயந்திரத்தில் இணைக்கப்படலாம் (Barcode Reader) கணக்குகளைக் காட்டும் ஒரு அச்சுப் பிரதியை வெளியிடும் ஆற்றலும் இதற்குண்டு.

## முத்திரை இயந்திரம்

நாள் தோறும் அதிகளவான கடிதங்களைத் தபாலில் அனுப்ப வேண்டியுள்ள காரியாலயங்களில் ஒவ்வொரு கடிதமாக முத்திரை ஒட்டுவது மிகவும் சிரமமாகும். இதற்குப் பரிகாரமாக தபாற் காரியாலயத்திலிருந்து ஒரு முத்திரை இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்த இயந்திரத்தை இயக்குவதற்கான ஒரு சாவி வழங்கப்படும். காரியாலயத்தின் முத்திரைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையைப் பொருத்து வாராந்தம் ஒரு பெறுமதியை தபாற் காரியாலயத்தினூடாக இதில் உள்ளீடு செய்யலாம். உதாரணமாக ரூ. 5000 ஆன முத்திரைப் பெறுமதி உள்ளீடு செய்யப்பட்டால் அத்தொகை முடியும் வரை கடிதங்களில் முத்திரைப் பதிவுகளைச் செய்யலாம். ஒவ்வொரு முத்திரைப் பதிவின் போதும் அத்தொகை இயந்திரத்திலுள்ள தொகையிலிருந்து குறையும். முழுத் தொகையும் முடிந்த பின்னர் மீண்டும் தபாற் கந்தோருக்கு இயந்திரத்தைக் கொண்டு சென்று மீள் பெறுமதியிடலாம். வேறுபட்ட பெறுமதி கொண்ட முத்திரைகளையிடும் வசதியும் இதில் உண்டு. இதன் மூலம் கிடைக்கின்ற விசேட நன்மையானது வெவ்வேறு எடைகளிலான கடிதங்களை அஞ்சலிடுகையில் எடைகளின் பொருத்து தொடர்புடை முத்திரைகளின் பெருமதி சரியாக காட்டப்படும்.



படம் :- 3.2..3
தபால் முத்திரை இயந்திரம்

## திகதி முத்திரைக் கருவி

பொதுவாக ஒரு நிறுவனத்துக்கு நாளாந்த பெருந்தொகையான கடிதங்க வருவதுண்டு. அவை கிடைத்த திகதியைக் குறிப்பது நிர்வாகத்தின் போது அத்தியாவசியமாக விடயமாகும். இப்பணியை வினைத்திறனாகவும் நம்பக தன்மையுடனும் செய்வதற்கு உதவும் ஒரு கருவியே திகதி முத்திரை உபகரணமாகும். மேலோட்டமாகப் பார்க்கும் போது பதவி முத்திரை போன்று சாட்சியளிக்கும் இது பொலிமர் அல்லது இறப்பரினால் ஆக்கப்பட்டிருக்கும். வருடம், மாதம், திகதி என்பவற்றை மாற்றியமைக்கும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. காரியாலயத்தின் ஸ்தாபனம், அல்லது குறிப்பிட்ட பிரிவின் பெயரையும் இம் முத்திரையில் சேர்த்துக் கொள்ள முடியும்.

புகையிரதத் திணைக்களத்தில் டிக்கட்களில் திகதியைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தும் கருவி இதிலிருந்து சற்று வேறுபட்டதாகும். இரு முகப்புகள் கொண்ட இக்கருவி இரும்பினால் ஆக்கப்பட்டது. அதன் பின்பகுதி வருடம், மாதம், திகதி என்பற்றைக் காட்டுவதாகவும் சுழற்றுவதன் மூலம் திகதி பதியப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.



படம் :- 3.2.4
திகதி முத்திரையிடும் கருவி


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி முத்திரைகள்

இவை பண்டைக் காலம் முதலே ஆவணங்களின் சட்டரீதியிலான தன்மையை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு உபகரணங்களாகும். பதவி முத்திரை ஓர் அதிகாரியை அல்லது நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கும். ஆரம்பத்தில் இறப்பரினால் செய்யப்பட்ட பதவி முத்திரைகள் இப்போது பொலிமர் மூலம் தயாரிக்கப்படுகின்றது. ஒரு திண்டில் மையை ஊற்றி பதவி முத்திரையை அதில் அழுத்தி தயாரிக்கப்படும். பதவி முத்திரைகளில் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மை உட்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட நிறமைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பும் உண்டு.



படம் :- 3.2.5 பதிவி முத்திரைகள்

## பணம் எண்ணுதல் இயந்திரம்

பணத் தாள்களையும் சில்லறைக் காசையும் எண்ணிக் கணக்கிடுவதற்காக இது பயன்படுத்தப்படுகின்றது. வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் பெருமளவு நாணயத் தாள்கள் புழங்குவதால் அவற்றைச் சரியாகவும் துரிதமாகவும் எண்ணிக் கணக்கிட இவ்வியந்திரம் பயன்படுகின்றது. இது ஆங்கிலத்தில் டேலர் எனப்படும். இதன் பணம் எண்ணுதல் என்பதை பணத்தாள்களை எண்ணிக் கணக்கிடுவது மட்டுமின்றி போலி நாணயத்தாள்களை இனங்கண்டு கொள்ளும் ஆற்றலும், இந்த தாள்கட்டுக்கிடையே வேறு பெறுமதியுள்ள தாள்கள் இருப்பதையும் இந்த இயந்திரம் கண்டுபிடித்து விடும். ஈற்றில் பணக்கூட்டுத்தொகையை சரியாக இது தரும்.



படம் :- 3.2.6 பணம் எண்ணும் கருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோணியோ இயந்திரம்

தாள்களைப் பிரதியெடுப்பதற்கான நவீன இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் நீண்ட காலமாக காரியாலயங்கள், பாடசாலைகளில் பிரதி பண்ணுதல் செய்வதற்காக இந்த ரோணியோ இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. ஸ்ரென்சில் என்று அழைக்கப்படும் மெல்லிய மெழுகுத்தாள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மெழுகுத் தாள்களில் அழுத்தி எழுதப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்டதனால் ஏற்பட்ட சிறிய துவாரங்களினூடாகச் செல்லும் மை பிரதி செய்யப்படும் தாளில் பதிவதன் மூலமே இவ்வகை அச்சிடல் மேற்கொள்ளப்படுகின்றது. நவீன தொழில் நுட்பக் கருவிகளின் உதவியால் மெழுகுத் தாளுக்கு பதில் இறப்பர் (ஸ்டென்ஸில்) தாள் ஊடாகவும் பிரதி செய்ய முடியும். இன்றும் கூட சில இடங்களில் ரோனியோ அச்சு முறை வழக்கத்திலுள்ளதைக் காணலாம்.



படம் :- 3.2.7 ரோணியோ இயந்திரம்

## புகைப்படப் பிரதி இயந்திரம்



படம் :- 3.2.8
புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரம்

நிறுவனமொன்றின் ஆவணங்கள் பிரதியெடுக்கப்பட வேண்டியேற்படும் போது பயன்படுத்தப்படும் இயந்திரம் புகைப்படப் பிரதி இயந்திரமாகும். நிலைமின்னேற்ற செயற்பாட்டின் படி இவ்வியந்திரம் இயங்குகிறது. இவ் இயந்திரத்தின் உருளை முதன்முறை சுழலும்போது பிரதிபண்ணுவதற்குரிய ஆவணத்தின் போட்டோ பிரதிக்குறிப்பு இங்கு நிலைமின்னேற்ற இருப்பு பதிக்கப்படுகின்றது. உருளை இரண்டாம் முறை சுழலும்போது அதன் போட்டோ பிரதி கடதாசியில் அச்சாகின்றது. இவ்வாறு அச்சிடலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற கறுப்பு நிற தூள் வகையானது உருளையால் கவரப்பட்டு அதில் பதியப்படுகின்றது. நிலைமின்னேற்றம் இதற்கு உதவுகின்றது. புகைப்படப்பிரதி இயந்திரம் இவ்வாறு இயங்குகின்றது.

நிகழ்காலத்தில் சந்தையில் டிஜிட்டல் நுட்ப வளத்தினால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற நிழற்பட இயந்திரங்கள் காணப்படுகின்றன. ஏதாவதொரு வியாபாரம் அலுவலகம் அல்லது பாடசாலைகளில் இந்த நிழற்பக்கப் பிரதி இயந்திரத்தை விலைகொடுத்து வாங்கும்போது அங்கு உட்பட்டுள்ள சலுகைகள் தங்களுக்கு உண்மையாகவே தேவைப்படுகின்றனவா என அறிந்து கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலத்திரனியல் அட்டைகள்



படம் :- 3.2.9 இலத்திரனியல் அட்டைகள்

இலத்திரனியல் காந்தக் கோலத்திற்கமைய தரவுகள் உள்ளிடப்பட்ட தகவற் தொகுதியே இலத்திரனியல் அட்டை எனக் குறிப்பிடலாம். இவை பல்வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன அவற்றுள் சில பின்வருமாறு :

1. நிதி நடவடிக்கைகளுக்காக
2. ஆளடையாளத்தைக் காட்டுவது
3. தொலைபேசி அழைப்புகளுக்கு
4. புகையிரதப் பிரவேசப் பத்திரமாக
5. சாவித் திறப்புகளாக
6. வரவுப் பதிவுப் பத்திரமாக
7. சர்வகலாசாலை மாணவர் அடையாள அட்டையாக
8. நூல் நிலைய அங்கத்துவ பத்திரமாக
9. சாரதி அனுமதி பத்திரமாக
10. கடன் அட்டையாக

இலத்திரனியல் அட்டைகள் பாவிப்பதில் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் ஆளடையாள அட்டை ஒருவரின் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்ட ஆவணமாக இருக்கும். இலத்திரனியல் அட்டைகள் பயன்படுத்துவதன் சிறப்பம்சம் யாதெனில் இரகசிய எண் ஒன்றைப் பயன்படுத்த முடிவதாகும். அந்த எண் அதன் உரிமையாளருக்கு மட்டுமே தெரியும்.

## இ) காரியாலய ஊடக உபகரணப் பாவனையின் அவசியம்

A. தகவல்கள் வழங்குதல்
B. அறிவுறுத்தல்கள் கட்டளைகள் வழங்குதல்
C. ஊழியர் ஊக்குவிப்புக்காக
D. வினைத்திறனை அதிகரிப்பதற்கு
E. ஆவணங்களின் கவர்ச்சியை மேம்படுத்த
F. நம்பகத் தன்மையை அதிகரிக்க
G. வினைத்திறனை அதிகரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3 தகவற் பரிமாற்று ஊடக உபகரணங்கள்

### அ) தகவற் பரிமாற்று ஊடகச் செயலொழுங்கு

தகவற் பரிமாற்றச் செயலொழுங்கு மிக உயிர்ப்பாக நடைபெறும் ஓர் இடமாக "காரியாலயத்தைக்" குறிப்பிடலாம். ஒரு நிறுவனத்தின் உயிர்நாடியாக இருப்பது தகவற் தொடர்பாடற் செயலொழுங்காகும். பல்வேறு தொடர்பாடல் உபகரணங்களையும் மாதிரிகளையும் பயன்படுத்தி நிறுவனங்களில் தகவற் பரிமாற்றம் நடைபெறும்.

### தொலைபேசி

தகவற் பரிமாற்று ஊடக உபகரணம் என்ற வகையில் தொலைபேசி மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

ஆரம்ப காலத்தில் கம்பியூடாக இணைக்கப்பட்டதாகவே தொலைபேசிகள் பாவிக்கப்பட்டன. எனவே கம்பிகள் இணைக்க முடியாத கஷ்டப் பிரதேசங்களுக்கு தொலைபேசி வசதிகளை வழங்க முடியாதிருந்தது. ஆனால் இன்று எண்சார்ந்த தொழில் நுட்பத்தினால் உருவான சீ.டி.எம்.ஏ (CDMA) தொழில் நுட்பத்தின் மூலம் கம்பியில்லாத தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பெறுபேறாக முன்னர் தொலைபேசி வசதி கிடைக்காதிருந்த பல இடங்களுக்கும் இப்போது அவ்வசதியை வழங்கக் கூடியதாயுள்ளது. இதன்படி இன்று மூன்று விதமான தொலைபேசி வசதிகள் நடைமுறையிலுள்ளன.

1. நிலையான கம்பியுடன் கூடிய தொலைபேசிகள்
2. நிலையான கம்பியுடன் இல்லாத தொலைபேசிகள்
3. செல்லிடத் தொலைபேசிகள்

முன்னர் பயன்படுத்தப்பட்ட தொலைபேசிக் கருவி எண்களைச் சுழற்றும் ஒரு முகமும் காணப்பட்டது. இதில் உரிய எண்களை சுழற்றுவதன் மூலம் அழைப்பைப் பெற்றுக் கொள்ளமுடியும். இது வினைத்திறனுடைய தொடர்பாடலுக்கு தடையாகவே கருதப்பட்டது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய இலக்கங்களை அழுத்தும் தொலைபேசி கருவி அறிமுகப் படுத்தப்பட்டன. இவ்வகைத் தொலைபேசியின் மீள் அழைப்பு (Redial) வசதி ஒரு பித்தானை அழுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசியுடன் கணனித் தொழில் நுட்பமும் இணைக்கப்பட்டதால் பல புதிய வசதிகள் தொலைபேசியுடன் இணைக்கப்பட்டுள்ளன.



படம் :- 3.3.1 தொலைபேசி வகைகள்

கம்பியுடனான தொலைபேசியை பரவலடையச் செய்வதில் ஏற்பட்ட பிரச்சினைகளிலாலும் ஊடகத் தடைகள் அதிகரித்திருந்தமையினாலும் சீ.டீ.எம்.ஏ (CDMA- Call Division Multiple Access) தொழில் நுட்பம் அடங்கலான நிரந்தர தொலைபேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகவல் பரிமாற்றல்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நவீன தொலைபேசியில் உள்ள சில மேலதிக வசதிகள் பின்வருமாறு.

1. சி.எல்.ஐ. (CLI - Clear Line Identifiction) அழைப்பின் தொலைபேசி எண்ணை அறிந்து கொள்ளுதல்
2 தொலைபேசி விபரக் கொத்து (Menu Button) வசதிகள் பட்டியல் மூலம் கிடைக்கும்.
3 எஸ்.எம்.எஸ். (SMS- Short Message System) குறுஞ் செய்தி சேவை
4 மின் அஞ்சல் (E.Mail)
5 ஐ.டி.டி.(IDD- International Direct Dialing) சர்வதேச நேரடி அழைப்புச் சேவை

இலங்கையில் இதுவரை வர்த்தக மட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாவிடினும் பல நாடுகளின் அழைப்பவர்களின் முகம் பார்த்துக் கதைக்கும் வசதியும் உண்டு. இதனால் நேர்முகமாகப் பேசும் உணர்வு ஏற்படும். அத்துடன் அழைப்புகளை ஒலிப்பதிவு செய்தல் வேறு ஒரு எண்ணுக்கு அழைப்பைத் திருப்பி விடுதல் (Call forwording) ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் ஒரே நேரத்தில் தொலைபேசியில் உரையாடும் வசதி (Call Confererce) ஒரு முன்னோடி எண் ஊடாக ஒரு தொகுதி எண்களுடன் தொடர்பு கொள்ளல் (Call hunting Service) போன்ற வசதிகள் மூலம் தகவற் தொடர்பாடல் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

செல்பேசி (செல்லிடப்பேசி) என்பது தொலைத் தொடர்பு துறையில் ஒரு திருப்பு முனையாகும். இலங்கையின் தொலைபேசிப் பாவனையில் 60% செல்பேசியாகும். இதனூடாக ஒருவருடன் துரிதமாக நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்பட்டுள்ளது.

செல்பேசி இத்துறையில் நவீன பெரிய கண்டுபிடிப்பாகும். இலங்கையில் நுகர்வோரில் 60% மானோர் பயன்படுத்துவது இவ்வகையான தொலைபேசிகளையே ஆகும். இதன் வகைமை காரணமாக துறையில் உரிய அதிகாரி / தனியாள் / கட்டுப்பாடு நிலையம் மற்றும் உடனடி தொடர்பு கொள்ள இயலுமாயிருத்தல் என்பன இதன் சிறப்புக்களாகும்.

செல்பேசி என்பது மரபுரீதியான தொலைபேசி அல்ல. அது இன்று பல வேலைகளைச் செய்ய பல்லூடக உபகரணமாக விருத்தி பெற்றுள்ளது. புகைப்படம் எடுத்தல் வீடியோபடமெடுத்தல், வானொலி கேட்டல், தகவற் களஞ்சியப்படுத்தல், கணினித்திரையாக்ப் பயன்படுத்தல், ஒலிப்பதிவு செய்தல், நாட்காட்டியாக நேரம் காட்டல், பயன்படுத்தல், நினைவூட்டல், மணிகளை வைத்தல், நேரம் குறிக்கும் கருவியாகவும் கணினியாகவும் பயன்படுத்தல், வீடியோ விளையாட்டுக்களில் ஈடுபடல் போன்ற பல்வேறு வசதிகளை வழங்கும் உபகரணமாக விருத்தி பெற்றுள்ளது. செல்பேசியில் உள்ள சிறப்பான வசதி யாதெனில் தான் இருக்குமிடததிருந்தே செய்திகளை பெறுவதற்கும் செய்திகளை அனுப்புவதற்கும் பேசுவதற்குமான வாய்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேஜர்

செல்பேசியிலுள்ள குறுஞ்செய்தி வசதி வந்தவுடன் காலாவதியான ஓர் உபகரணம் தான் பேஜர். வைத்தியசாலை போன்ற வேலைப்பளு மிக்க இடங்களில் குறுஞ் செய்திகளை அனுப்ப பேஜர் பாவிக்கப்பட்டது. உதாரணமாக ஒரு சத்திர சிகிச்சை செய்யப்பட இருக்கும் போது அதில் பணியாற்ற வேண்டிய ஆளணியினருக்கு உடனடியாக அறிவித்தல் பற்றி யோசித்துப் பாருங்கள் குறிப்பிட்ட ஒரு தகவலை எழுத்து மூலம் அனுப்பவும் வாசித்து அதனைப் பெறவும் பேஜர் உதவும் இங்குள்ள பேஜர் திரையில் ஆங்கிலத்தில் உள்ள செய்திகளை காணலாம்.




படம் :- 3.3.2 பேஜர் கருவி

## பக்ஸ் இயந்திரம்

பக்ஸ் மூலம் அனுப்புவது என்பது ஒரு கடிதத்தை அல்லது ஆவணத்தை அல்லது படத்தை இலத்திரனியல் அலையாக மாற்றுவதாகும். செய்தி அனுப்ப ஒரு பக்ஸ் இயந்திரமும் அதனைப் பெறுமிடத்தில் மற்றுமொரு இயந்திரமும் இருத்தல் வேண்டும். தொலைபேசி மூலமே இரண்டுக்குமிடையிலான தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது. பக்ஸ் இயந்திரத்தில் உள்ளீடு செய்யப்படும் தாளில் உள்ள செய்தி முதலில் இலத்திரனியல் அலையாக மாற்றப்பட்டு தொலைபேசியினூடாக உரிய இடம் வரை சென்று மீண்டும் பழைய ஆவணத்தின் வடிவத்திற்கு மாறி பக்ஸ் இயந்திரத்தினூடாக வெளிப்படுகிறது. இது இன்று பரவலாகச் செய்தி மற்றும் ஆவணங்கள் பரிமாற்றுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு இயந்திரமாகும்.



படம் :- 3.3.3 பக்ஸ் கருவி

## மின் அஞ்சல்

இணைய வசதியுள்ள கணினி மூலம் பரிமாறப்படுகின்ற ஒரு முறையே மின்னஞ்சலாகும்.

மின்னஞ்சல் சாதாரண அஞ்சலில் இருந்து பல வழிகளிலும் வேறுபடுகின்றது. இதற்கு முத்திரையோ எழுதும் தாளோ தேவைப்படுவதில்லை. சாதாரண கடிதத்திலுள்ள எழுத்துக்களை விட வேறுபட்ட எழுத்துவடிவம், படம், ஒலி என்பவற்றை இணைத்து மின்னஞ:சலை அனுப்ப முடியும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னஞ்சலில் ஒரு கடிதத்தை அனுப்புவதும் பெறுவதும் எவ்வாறு என்பதை அறிந்திருத்தல் பயனுள்ளதாகும். இன்று உலகிலுள்ள பாவனையின்படி இலவசமாக மின்னஞ்சல் சேவையை நடத்தும் சில நிறுவனங்களுண்டு. யாஹு (Yahoo) எம் எஸ் என் (MSN) குகல் (Google) என்பன அவற்றுக்குச் சிலவாகும். இவற்றினூடாக எவருக்கும் தம் மின்னஞ்சலை இலவசமாகவே கணினித்திரையில் தயார் செய்து கொள்ள முடியும். தம்மிடம் கணினி இணைய வசதி என்பன இல்லாவிட்டாலும் இணைய வசதிகளை வழங்கும் நிறுவனங்களூடாக தமது மின்னஞ்சல் தேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.



படம் :- 3.3.4 மின்னஞ்சலில் பெற்ற கடிதம்

நீங்கள் ஒருவருக்கு மின்னஞ்சல் மூலம் கடிதமொன்றை அனுப்ப வேண்டுமானால் அவரது மின்னஞ்சல் முகவரி உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் அம்முகவரி மிகச்சரியாக கணினியில் உரிய இடத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறில்லாத போது கடிதம் போய்ச் சேராது திரும்பிவிடும்.

மின்னஞ்சலில் பல அனுகூலங்களுண்டு. அவற்றுற்சில பின்வருமாறு

1. சில நொடிகளில் உலகின் எந்த இடத்துக்கும் மின்னஞ்சலை அனுப்ப முடியும்.
2. கிடைத்தவர் அதனை வாசிக்கும் வரை அந்த முகவரியில் அது தங்கியிருக்கும்.
3. அனுப்பும் கடிதத்டாக இணைத்து வேறு ஆவனங்கள், புகைப்படங்கள், சித்திரங்கள், வாழ்த்துக்களையும் அனுப்ப முடியும்.
4. அனுப்பும் கடிதத்தின் பிரதியைப் பாதுகாத்து வைக்க முடியும்.
5. கிடைக்கும் கடிதங்களை கிடைத்த ஒழுங்கில் பாதுகாத்து வைக்க முடியும்.
6. தேவையற்ற கடிதங்களை திறந்து அல்லது திறக்காது அழித்து விட முடியும்.

மின்னஞ்சல் முறை வலைப்பின்னலுடன் இணைந்துள்ளதனால் அங்கிருக்கும் பிரதான தீமை என்னவென்றால் எமக்குத் தெரியாத எமக்குத் தேவையற்ற கடிதங்கள், தகவல்கள், படங்கள் போன்றவற்றைப் பெறுவதற்கு இருக்கும் வாய்ப்புடன் கணினி வைரஸ் ஐயும் இதனோடு சேர்த்து அனுப்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தகவல்களுக்காக பின்வரும் மின்னஞ்சல் முகவரிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. நீங்கள் விருப்பப்பட்டால் இந்த மின்னஞ்சல் முகவரிகளின் ஊடாக உங்களுடைய கருத்துக்கள், கேள்விகள், யோசனைகள் முதலானவற்றை பெறமுடியும்.

மின்னஞ்சல் என்பது இணையத்துடன் தொடர்ந்து இருப்பதால் அதிலுள்ள ஒரு பிரதான பிரதி கூலம் என்னவென்றால் எமக்குத் தொடர்பில்லாத அல்லது தேவையற்ற கடிதங்கள், புகைப்படங்கள் கிடைப்பதற்கான சந்தர்ப்பமாகும். அத்துடன் கணினி வைரஸ் வந்து சேர்வதற்கான வாய்ப்புண்டு.

உங்கள் பயன் பாட்டுக்காக பின்வரும் மின்னஞ்சல் முகவரிகள் தரப்படுகின்றன. நீங்கள் விரும்பினால் இந்த முகவரியூடாக தொடர்பு கொண்டு கருத்துக்களைப் பெறவோ தெரிவிக்கவோ முடியும்.

| | | |
|---|---|---|
| கல்வி அமைச்சு | : | **isurupaya@moe.gov.lk** |
| கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | : | **epd@edupub.gov.lk** |
| கல்விப் பதிப்பக ஆணையாளர் | : | **commisioner @edupub.gov.lk** |
| தேசிய கல்வி நிறுவகம் | : | **nie.lk@hotmail.com** |

### இலத்திரனியல் பரீட்சிப்புக் கருவி

பல்வேறு பரீட்சிப்புகளுக்காக இலத்திரனியல் சோதனைக் கருவி பயன்படுத்தப்படுகிறது. இது எந்த எல்லைகளும் வகுக்க முடியாத அளவுக்கு விரிவடைந்துள்ளது. குறிப்பிட்ட சோதனை உபகரணத்தைக் கொள்வனவு செய்து கொள்ள முடியுமா முடியாதா என்பதைப் பொருத்தே மட்டுப்பாடுகள் காணப்படும். உதாரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் விமான நிலையக் கருமங்கள் வர்த்தக நடவடிக்கைகள் கைத்தொழிற்சாலைகள் போன்றவற்றில் இலத்திரனியல் சோதனை உபகரணங்கள் பரவலாகப் பயன் படுத்தப்படுகின்றன. பொது வாழ்வில் பாதுகாப்பு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் போது இதனைக்காணக் கூடியதாக இருக்கும்.



படம் :- 3.3.5 இலத்திரனியல் சோதனைக் கருவி


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலத்திரனியல் சோதனை உபகரணங்களின் அனுகூலமாமாவது பாதுகாப்பு தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகும். சுப்பர் மாக்கட் ஒன்றில் பொருட்களைக் கொள்வனவு செய்துவிட்டு பணம் செலுத்தாது வெளியேற முனையும் தந்திரமான நுகர்வோரைப் பிடித்து சட்டத்தின் முன்நிறுத்த முடியும். பொருட்களுக்குப் பணம் செலுத்துவது, வெளியே கொண்டு செல்லும் பொருட்கள் தொடர்பான தரவுகள் வந்தவுடன் சமிக்ஞை ஒளி விழுவதால் திருடர்களையும் இலகுவில் கண்டு பிடித்து விடலாம்.

மின்பாதுகாப்பு உபகரணங்களைப் பாவிப்பதற்கு எடுப்பதற்கான தன்மையை மின் பரிசோதனை உபகரணங்களின் நன்மையாகக் கொள்ளலாம். பல்தேவைப் பொருள் விற்பனைச் சந்தையில் பொருட்களைப் பெற்றுக் கொண்டு பணத்தை வழங்காமற் போகும் திருட்டு வாடிக்கையாளர்கள் இந்த உபகரணத்தினால் பிடிபடுவார்கள். பணம் வழங்காமல் எடுத்துச் செல்லப்படும் பொருட்களைப் பற்றிய தரவுகள் கிடைத்தவுடன் உடனடியாக அந்த உபகரணத்தால் வெளிப்படுத்தப்படும் ஒலியைக் கொண்டு திருடர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் சுலபமாகும்.

அதே போலவே பாதுகாப்புத்துறையினரால் நபர்கள் பரிசோதனை செய்யப்படும் போது மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதை நாம் கண்டிருக்கின்றோம். முக்கியமாக விமான நிலையங்களில் மின் பரிசோதனை உபகரணங்களை பாவித்து நபர்கள் மட்டுமன்றி அவர்களது பொருட்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

**குறுந்தூர தொலைக்காட்சி வலையமைப்பு**



படம் :- 3.3.6 குறுந்தூர தொலைக்காட்சி இணையம்




படம் :- 3.3.7 இலண்டன் நகரில் தாக்குதலுடன்தொடர்புடைய நபர் குறுந்தூர தொலைக்காட்சி கெமராவினால் படம் பிடிக்கப்படல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சித் தொழில் நுட்பத்தைப் பல்வேறு பரீட்சிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் சிறப்பான ஒரு கட்டமாக குறுந்தூரத் தொலைக்காட்சித் தொகுதியைக் கூறலாம். இவை ஒரு நிறுவனத்தின் உள்ளக ரீதியாகவும் வெளியக ரீதியாகவும் இணைக்கப்பட முடியும். அனைத்து வீதிகளிலும் குறுந்தூரத் தொலைக்காட்சிக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் ஒரு தொலைக்காட்சி இருந்து கொண்டு முழு நகரத்தையும் பரீட்சிக்க முடியும். இதன் மூலம் நாம் பல்வேறு குற்றவாளிகளை சட்டத்தின் படிக்குள் கொண்டுவர சந்தர்ப்பம் கிடைக்கும். அத்துடன் வர்த்தக நிலையங்கள் வங்கிகள் போன்ற மக்கள் நடமாட்டமுள்ள இடங்களில் குறுந்தூரத் தொலைக்காட்சிக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. வங்கிகள் பணம் பெறும் இயந்திரங்களுக்கு மேலாக இத்தகைய கமராக்கள் பொருத்தப்பட்டு பணம் பெறுபவர்கள் புகைப்படமெடுக்கப்படுகிறார்கள். இதைச் சில இடங்களிலும் காண முடியும். அவ்வாறில்லா விட்டாலும் சகல வங்கிகளிலும் பாதுகாப்புத் தேவையுள்ள இடங்களிலும் இதுபோன்ற குறுந்தூரத்தொலைக்காட்சிக்கமராக்கள் பொருத்தப்பட்டு அந்த இடங்களுக்கு வருபவர்கள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டியது இன்றைய பொதுவான தேவையாகவுள்ளது.

அதுமட்டுமன்றி குறுந்தூரத் தொலைக்காட்சி நடமாடும் வாகனங்களும் உலகின் முன்னேறிய நாடுகளின் நகரங்களில் நடமாடிப் பரிசிலனைக்குட்படுத்தப்படுகின்றது. இவையாவற்றையும் தகவற் தொழில்நுட்பம் சமூக நன்மைக்காக பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களாகக் கொள்ளலாம்.

## இணையம்



படம் :- 3.3.8 பொது நூலகமொன்றில் இணைய நிலையத்தில் இணைய தேடல் நடைபெறல்



படம் :- 3.3.9 எவரஸ்ட் மலையுச்சியில் உள்ள இணைய நிலையம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத் தளமென்பது இன்று எவ்வளவு தூரம் விரிவடைந்துள்ளது என்பதை விளங்கிக் கொள்ள மேலேயுள்ள இரண்டு படங்களுமே போதுமானவை. இணையம் என்பது ஒன்றோடுடொன்று தொடர்புபட்ட ஒரு வலைப்பின்னலாகும். இவ்வலைப்பின்னலில் முழு உலகும் அடங்கும். இதன் மூலம் கருதப்படுவது அமெரிக்காவில் இணையத்தினூடாக வெளியிடப்படும் ஒரு ஆவணத்தை இலங்கையிலிருந்தும் பார்க்கலாம் என்பதாகும். ஏற்கனவே விவரிக்கப்பட்டது போல மின்னஞ்சலும் இணையத்தினூடாகவே செயற்படுகின்றது. அதேபோன்று இணையமும் தொலைபேசியினூடாகவே செயற்படுகிறது. இதனால் கம்பியிலுள்ள அல்லது கம்பியில்லாத எந்தத் தொலைபேசியூடாகவும் இணைய வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும். தம்மிடம் ஒரு கணினியும் தொலைபேசி வசதியும் இருப்பின் இணையத்தொடர்பை பெற்றுக் கொள்ள முடியும்.

## இணையத்தின் பயனடைவோர்




படம் :- 3.3.10 நவீன தளபாட பாணிகள்



படம் :- 3.3.11 நவீன பயிற் நிலம்

இணையத்திலிருந்து பயனடைவது யார் என்பது ஒரு வகையில் விவாதத்துக்குரிய ஒரு வினாவாகும் ஆராய்ச்சியாளர்கள் கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், வையத்தியர்கள் போன்றொர் இணையத்திலிருந்து பயனடைவது உண்மை தான் சிலவேளை ஐக்கிய அமெரிக்காவில் அல்லது இங்கிலாந்திலுள்ள வைத்தியர்கள் இணையத்தினூடாக அறிவுறுத்தல் வழங்கி ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஒரு வைத்தியசாலையின் சத்திரசிகிச்சையை நெறிப்படுத்த முடியும். இத்தகைய சந்தர்ப்பங்கள் உலகின் உதாரணமாகக் காணக் கூடியதாக உள்ளது.



படம் :- 3.3.12 வெப் ப்ரவுஸர்

எனவே சாதாரண மக்களுக்கு இணையத்தினால் பயனேதுமில்லை என்பது இதன் கருத்தல்ல. இணையத்தின் பெறுமதியை உணர்ந்த ஒரு பிரிவினர் அதனைப் பரவலாகப் பயன்படுத்துகின்றனர். ஏனையவர்களும் இதன் பெறுமதியை விளங்கிக்கொள்வார்களானால் அவர்களும் இதனைக் பயன்படுத்துவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளுக்கு இது பயனுள்ளது என்பது அவர்களுக்குத் தெரியவந்துள்ளது. அதேபோன்று கட்டடத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அல்லது தளபாட உற்பத்தியாளர்களுக்கு இணையத்தினூடாக நவீன தகவல்களைப் பெற்று தம் தொழிலை உயர் மட்டத்தில் நடத்த முடியும்.

அன்றியும் இணையத்தினூடாக பல நாடுகளில் வசிப்பவர்கள் ஒன்றாகக் கலந்துரையாடவும் முடியும். இந்நிலைமை இன்று எந்த அளவுக்கு பரவலாகப் பாவிக்கப்படுகிறதெனில் சில வேளைகளில் சர்வதேசமட்டத்திலான தொழில வல்லுனர்களைத் தொழில்களில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முக பரீட்சைகூட இணையத்தினூடாக நடைபெறுகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் கணினிக் கமராக்களை உபயோகித்து இணையத்தினூடாக ஒருவரையொருவர் பார்க்கவும் முடியும்.

## இணையமும் இலங்கையும்

இலங்கையில் இணைய வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் அச்சேவையை வழங்கும் ISP (Intern Service Provider) நிறுவனம் முக்கியமானது. இங்கு பயனாளி பின்வரும் வசதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1. சேவை பெறுவோர் செலுத்த வேண்டிய இணைப்புக் கட்டணம்
2. தொலைபேசிக் கட்டணம்

சேவை வழங்கும் நிறுவனமொன்றுடன் தொடர்புபடாது இணையத் தொடர்பைப் பெற்றுக் கொள்ள முடியுமாயினும் தொலைபேசிக் கட்டணம் அதிகரிக்கும் என்பதால் அவ்வாறு செய்வது பொருத்தமாக இல்லை. எவ்வாறாயினும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிறுனங்களிலிருந்து இலங்கையில் இணைய வசதிகளைப் பெற முடியும்.

A. ஸ்ரீலங்கா டெலிகொம்
B. லங்கா இன்டநெட் கம்பனி
C. இலங்கைக்கல்வி ஆராய்ச்சி வலைபின்னல் (LEARN)
D. இன்போலப் நிறுவனம்
E. இலக்றோ டெக்ஸ் நிறுவனம்
F. இட்மின் (ITMIN)
G. ஸன்டெல் கம்பனி
H. பான் லங்கா நெட்வர்க் நிறுவனம்
I. இலங்கா கொம்னிகேஷன் நிறுவனம்
J .ஸீகொம் (CEYCOM) நிறுவனம்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெப் தளம்**

1991 ஆம் ஆண்டளவில் வெப்தளப் பக்கங்களில் ஆக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழில் நுட்பம் ரீம்பர்ணஸ்லி என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. அவர் வெப் தளத்தின் தந்தை (Father of Web) என்றழைக்கப்படுகின்றார். இணையத்தில் வெப்பக்கங்களை வாசிப்பதற்கு வெப் ரஷர் ஒன்றின் சேவையைப் பெற வெண்டும். இது ஒரு மென்பொருளாகும். எந்த ஒரு வெப் பரவுஸரிலும் அதில் தேவையான முகவரியைக் குறிப்பிட்டு வெப் பக்கங்களைத் திறந்து கொள்ள முடியும்.

http:// www.microsoft.com/front page/ product

↑ protocol ↑ web server ↑ domain ↑ path

அத்துடன் வெப் பக்கங்கள் பல்வேறு தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன.

.com - அரச நிறுவனங்களுக்காக (for Commercial Enterprises)
.gov - அரச நிறுவனங்களானது (for Government Organization)
.edu - கல்வி நிறுவனங்களானது (for Educational Institition)

**தகவற் பரிமாற்ற ஊடக உபகரணப் பாவனையின் அவசியம்**

1. சேவைகளின் வினைத்திறனுக்கு.
2. விளம்பரத்தைப் பெற்றுத்தர.
3. பாதுகாப்பான தொடர்பாடலுக்கு.
4. நேர முகாமைத்துவத்துக்கு.
5. குறைந்த செலவில் செய்வதற்கு.
6. காரியாலயத் தகவல்கள் களஞ்சியம் ஒன்றை அமைக்க.

## 3.4 வகுப்பறையின் ஊடக உபகரணங்கள்

### அ) வகுப்பறையின் ஊடகச் செயலொழுங்கு

வகுப்பறையில் நடைபெறுவது பிரதானமாக கூட்டத் தொடர்பாடலாகும். ஆசிரியர் தம் முன்னால் உள்ள மாணவர் குழுவுடன் தொடர்பாடற் செயலொழுங்கில் ஈடுபடுகின்றார். இதன் படி வகுப்பறையின் பிரதான தொடர்பாடுபவர் ஆசிரியராவார். மாணவர்களும் தொடர்பாடற் செயலொழுங்கில் பங்குதாரர்களே. அவர்கள் செவிசாய்ப்பர். எழுதுவர்; பேசுவர்; கேள்வி கேட்பர்; விடை கூறுவர்; சிந்தனையில் ஈடுபடுவர். ஆசிரியர் சில போது தொடர்பாடுபவராகவும் வேறு சில போது பெறுநராகவும் இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறைத் தொடர்பாடலில் காணப்படும் சிறப்பியல்பு திட்டமிட்ட ஒரு நோக்கத்தின் அடிப்படையிலான ஒரு நடத்தை மாற்றத்தை தம் மாணவர்களிடையே குறிப்பிட்ட நேரத்துக்குள் ஏற்படுத்தும் எதிர்பார்ப்புடன் கருமமாற்றுவதாலாகும். இதற்காக ஆசிரியர் பேசினால் மட்டும் போதாது பல்வேறு ஊடக உபகரணங்களையும் பேச்சுடன் இணைத்துக் பயன்படுத்த வேண்டியேற்படும் வகுப்பறையின் ஊடக செயலொழுங்கு இவ்வாறாகவே ஏற்படுகின்றது.

வகுப்பறை ஊடகச் செயலொழுங்கு நன்கு திட்டமிட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும். கற்பித்தலின் போது குறிப்பிட்ட அலகின் குறிக்கோள்கள் இலக்குகளைத் தீர்மானித்து பொருத்தமான ஊடக முறைகளைப் பயன்படுத்த வேண்டும். பினவரும் விடயங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. பாடத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ள முடியுமா?
2. வகுப்பின் மட்டத்துக்குப் பொருத்தமானதா?
3. மூலப்பொருள் இலகுவில் பெற முடியுமா?
4. குறைந்த செலவினைக் கொண்டுள்ள முறையா?
5. பயன்படுத்துவதால் அனுகூலம் அதிகரிக்குமா?
6. உயர் வினைதிறனும் விளைதிறனும் காணப்படுமா?
7. பாடவேளைக்குப் போதுமானதா?
8. அலகுக்குப் பொருத்தமானதா?
9. மாணவர்களின் ஆர்வம் அதிகரிக்குமா?
10. ஊக்குவிப்புக்கான சந்தர்ப்பம் அதிகமாக உண்டா?

அத்துடன் இவ்வூடகச் செயலொழுங்கை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தும் போது பல்வேறு உபகரணங்கள் துணையாகக் கொள்ளப்படும். அவற்றை நெறிப்படுத்தும்போது பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. பாடத்தில் தேவையான இடத்தில் மட்டும் அவற்றை பயன்படுத்தல்
2. அனைத்து மாணவர்களுக்கும் காட்சிப்படுத்த முடியுமாயிருத்தல்
3 படிமுறையொழுங்கில் விளக்குவது முக்கியமாகும்
4. பாடத்தின் குறிக்கோளை நோக்கி நெறிப்படுத்தல்
5. உபகரணத்தைத் தொட்டுப்பார்க்க மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்
6. தேவையான போது மீள்பாவனை

இவ்வாறு வகுப்பறையில் ஊடகச் செயலொழுங்கினை நெறிப்படுத்தும் போது உயிர்ப்பான ஒரு பாடவேளையை மாணவர்களுக்கு வழங்க முடியும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ) வகுப்பறை ஊடக உபகரணத்தை இனங்காணல்

வகுப்பறை ஊடக உபகரணங்களை வகைப்படுத்தும் போது அடிப்படையில் இரண்டு முறைகளைக் கையாள முடியும். அவை பின்வருமாறு.

1. எறிவையில்லாத ஊடக உபகரணங்கள்
2. எறிவை ஊடக உபகரணங்கள்

### (1) எறிவையில்லாத ஊடக உபகரணங்கள்

### கரும்பலகை (Black Board)

வகுப்பறையின் பிரபல்யமான ஊடக உபகணம் கரும்பலகையாகும். இன்னும் கூட உலகின் பல நாடுகளிலும் வகுப்பறைகளில் இந்த உபகரணம் கூடிய குறைந்த அளவுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் மூன்றாம் உலக நாடுகள் குறிப்பிட்டத்தக்கவை. மரத்தினால் சீமெந்தால், செயற்கைப் பலகைகளினால் கரும்பலகை செய்யப்படுவதுடன் வெண்கட்டிகளை உபயோகித்து எழுத அல்லது வரைய முடியும்.

கரும்பலகையைக் கையாளும் போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. வகுப்பின் அனைத்து மாணவர்களுக்கும் தெரியக்கூடிய இடத்தில் வைக்கப்படல் வேண்டும்.
2. கரும்பலகைகளில் எழுதும்போது அல்லது வரையும் போது பலகை முழுமையாக மறைத்த வண்ணம் நிற்கக் கூடாது.
3. இடமிருந்து வலமாக எழுத வேண்டும்.
4. எழுத்துக்கள் நடுத்தர அளவில் அல்லது பெரிய அளவில் எழுதப்பட வேண்டும்
5. வரிகளுக்கிடையில் இடைவெளி விட வேண்டும்
6. 1-5 தரங்களில் கரும்பலகையில் கோடுகள் வரைந்து எழுத வேண்டும்
7. திகதி, நேர அட்டவணை என்பன கரும்பலகையில் ஒரு நிரலில் காட்டப்பட வேண்டும் (புதிய கல்விச் சீர்திருத்தங்கள் படி)
8. கரும்பலகையில் கீழ் நிரல் வெறுமையாக விடப்பட வேண்டும்.



படம்:- 3.4.1 கரும்பலகை

இக்காலத்தில் வெண்கட்டித்தூள் விழுவதைக் குறைப்பதற்காக விசேட சுண்ணாம்பு வகைகள் பயன் படுத்தப்படுவதால் கரும்பலகை பாவனையில் பிரதி கூலங்களை இழிவாக்க முடிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பலகை (White Board)


படம்:- 3.4.2 வெண்பலகை

கரும்பலகைக்கான வெற்றிகரமான பிரதியீடு வெண்பலகையாகும். இதனை தேவையான அளவு நீள, அகலத்தில் தயாரித்துக் கொள்ளலாம். பலகையைப் பாதுகாப்பது தாக்குவதற்காக சுற்றிவர அலுமினிய சட்டகம் இடப்படும். வெண்பலகையில் எழுதுவதற்காக தடித்த எழுத்துள்ள நிறப் பேனைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை Marker Pen எனப்படும். இவ்வுபகரணத்தினால் மாணவர்களின் ஈர்ப்பது அதிகரித்தல், இலகுவாகப் பயன்படுத்த முடிகின்றமை, ஆசிரியரது அசௌகரியம் குறைதல், எழுத்துக்கள் தெளிவாகத் தெரிகின்றமை, ஆகிய அனுகூலங்களுண்டு.

## காந்தப் பலகை (Magnet Borad)

வகுப்பறையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் போது பாடத்துடன் தொடர்பான பல்வேறு இணைப்புகளைக் (உருக்கள், அட்டவணைகள், படங்கள்) பொருத்த வேண்டியேற்படும். அதற்காகப் பயன்படுத்தப்படும் ஒன்றே காந்தப் பலகையாகும். இது உலோகத்தினால் செய்யப்பட்டுள்ளதுடன் காந்தத்துண்டுகளினால் தேவையான பத்திரங்களை பலகையில் நிறுத்த முடியும்.



படம்:- 3.4.3 காந்தப் பலகை

## பக்கம் புரட்டி (Flip Chart)

இங்கு ஒரு விடயத்துடன் தொடர்புடையதாக சில "டிமெய்" கடதாசிகளைப் படிமுறையாக இணைத்துத் தயார் செய்து கொள்ளப்படும். இதிலுள்ள அனுகூலம் யாதெனில் ஒரு பாடத்தை ஒரு கருத்தை அல்லது ஒரு தகவலை முன்வைக்க முன்னர் போதியளவு முன்னாயத்தம் செய்து கொள்ள இப்பக்கம் புரட்டி உதவுகின்றது.


படம்:- 3.4.4 பக்கம் புரட்டி

ஒரே அளவான தாளில் சிலவற்றை புரட்டக் கூடிய விதமாக தாங்கியில் பொருத்தி இதனைத் தயாரித்துக் கொள்ளலாம். மீண்டும் மீண்டும் புரட்டக் கூடியதாக இருக்கின்றமை இதன் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் புரட்டியின் மற்றுமொரு அனுகூலம் ஒரு முறை பயன்படுத்தியதைப் பாதுகாத்து வைத்து மீண்டும் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதாகும். அன்றாடப் பாடங்களுடன் தொடர்பாக இதனை ஒரு முறை தயாரித்துக் கொண்டால் கற்பித்தற் கருமம் இலகுவாகும்.

பக்கம் புரட்டியைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் எழுத்துக்கள் பெரிய அளவில் இருக்க வேண்டும் என்பதாகும். வகுப்பின் பின் வரிசையில் அமர்ந்துள்ளவர்களுக்கும் வாசிக்கும் படியாக இருக்க வேண்டும். படங்களும் பெரிய அளவில் வரையப்பட வேண்டும்.

## (2) எறிவை ஊடக உபகரணங்கள்

### மேந்தலை எறிவை (Over Head Projector)



படம்:- 3.4.5 மேந்தலை எறிவை

சராசரி அளவுடையதாக அமைந்துள்ள வகுப்பறையொன்றில் பயன்படுத்தக் கூடிய ஜனரஞ்சகமான ஒரு கற்பித்தல் உபகரணமாக இதனை அறிமுகப்படுத்தப்படலாம். தமிழில் இது மேந்தலை எறிவை என்று அழைக்கப்பட்டாலும் OHP என்ற சுருக்கமான பெயரே வழக்கிலுள்ளது.

இந்த இயந்திரத்தில் இருப்பது மிக எளிமையான ஒரு செயலொழுங்காகும். உள்ளே அதீத ஒளியுள்ள மின் குமிழ் எரிவதுடன் அதன் ஒளி இயந்திரத்தின் மேற்புறத்தில் உள்ள ஊடுகாட்டிக் கண்ணாடியூடாகச் செல்லும். நாம் ஏற்கனவே தயாரித்து வைத்துள்ள ஊடுகாட்டிப் பத்திரத்தை அந்தக் கண்ணாடி மீது வைக்கும் போது ஒளி அதனூடாகச் செல்லும். இதிலிருந்து கிடைக்கும் ஒளிக்கதிர்களுடாக ஊடுகாட்டியுள்ள குறிப்புகள் எழுத்துக்கள் இயந்திரத்தின் மீதுள்ள வில்லையினால் பெற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு வில்லை பெற்றுக் கொள்ளும் குறிப்புகள் அடியினூடாக ஒளித்தெறிப்புச் செய்து முன்னால் உள்ள வெணிபலகையில் அல்லது சுவரில் எறிவையாக விழும். A4 அளவில் தயார் செய்து கொள்ளும் ஓர் ஆவணம் இருமடங்கு பெரிதாக எறிவையாகும். இதனால் வகுப்பறையிலுள்ள அனைவருக்கும் ஒரே தடவையில் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

இதற்கான ஊடுகாட்டிகளைத் தயார் செய்யப் பல முறைகளைப் பயன்படுத்தலாம். தயார் செய்யப்பட்டுள்ள பேனையால் ஊடுகாட்டித்தாளில் எழுதுவதாகும். இவ்வகைப்பேனாக்கள் பல நிறங்களில் உண்டு. அன்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான மை தற்காலிக மை என்ற இரு வகைப் பேனாக்களுண்டு. நிலையான மையுடைய பேனாவால் எழுதினால் அதனை அழித்து வேறொன்றை எழுதிப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு அழிக்க வேண்டுமாயின் 'தினர்' எனப்படும் திரவம் தடவப்பட வேண்டும். தற்காலிக மையினால் எழுதியவற்றை விரல்களாலும் அழுத்தியும் கூட அழிக்க முடியும். எந்த மையைப் பயன்படுத்த வேண்டும் என்பதை தேவைக்கேற்பத் தீர்மானிக்க வேண்டும்.

ஊடுகாட்டித் தாள்களைத் தயார் செய்து கொள்ளும் மற்றுமொரு முறை கணினி மூலம் செய்வதாகும். கணினியில் எழுத்தமைத்து அச்சுப்பதியின் போது சாதாரண தாளுக்குப் பதிலாக ஊடுகாட்டித்தாளைப் பயன்படுத்திடலாம். அவ்விறில்லாத போத கணினியில் தயாரித்து எடுத்த மூலப்பிரதியை புகைப்படப் பிரதி இயந்திரத்தில் (Photostat) ஊடுகாட்டித் தாளில் பிரதியெடுத்துக் கொள்ள முடியும். அதே போன்று OHP இயந்திரத்தைக் கையாள்வது தொடர்பான அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். OHP பாவனையின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள் பின்வருமாறு.

1. தேவையானபோது மட்டும் மின் குமிழை எரிய விட வேண்டும்.
2. மின் குமிழை அணைத்தாலும் இயந்திரத்தின் மின் இணைப்பைத் துண்டிக்கக் கூடாது. சூடேற்றப்பட்டுள்ள மின் குமிழை ஆற வைப்பதற்காக உள்ளேயிருக்கும் காற்றாடி தொடர்ந்து இயங்கச் செய்ய வேண்டும். காற்றாடி இயங்குவதற்கு மின் இணைப்புத் தேவை. மின்குமிழ் ஆறியதும் மின் இணைப்பைத் துண்டித்து விடலாம்.
3. ஒரு OHP யில் இரண்டு மின்குமிழ்கள் இருக்கும் ஒரு குமிழ் சுட்டுவிட்டால் மற்றையதைக் கொண்டு வேலையைத் தொடர்வதற்கே இவ்வாறு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சுட்ட மின் குமிழை உடனடியாக மாற்றிவிட வேண்டும்.
4. இயந்திரத்தின் கண்ணாடித் தளத்தின் மீது புத்தகம் போன்ற பொருட்களை வைத்து ஒளியைத் தடை செய்யக் கூடாது அதிக வெப்பம் வெளியேறாத போது வெடித்து விடும் ஆபத்துண்டு.
5. இயந்திரத்தை வைப்பதற்கு பொருத்தமான ஓர் இடம் இருத்தல் வேண்டும். இடம் மாற்றும்போது கவனமாகக் கையாள வேண்டும்.

## வழுக்கி எறிவை (Slide projetor)

இது மேந்தலை எறிவையிலிருந்து வேறுபட்ட ஓர் இயந்திரமாகும். இதில் ஊடுகாட்டித் தாளுக்குப் பதிலாக ஊடுகாட்டியிலான படங்கள் பயன்படுத்தப்படும். மேற்தலை எறிவையிற் போன்றே அதிக ஒளி கொண்ட மின் குமிழ் மூலம் படங்கள் எறியப்படுத்தப்படும். சாதாரண கமராவின் மூலம் பெறப்பட்ட புகைப்படச் சுருளை இயந்திரத்திலுள்ள வட்டமான தாங்கியில் அல்லது நீளமான தாங்கியல் வைத்து இணைப்பதன் மூலம் அதிலுள்ள படங்கள் ஒவ்வொன்றாக எதிரேயுள்ள சுவரில் அல்லது வெண்திரையில் எறிவையாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுகாட்டிப் படங்கள் 'ஸ்லயிட்' எனப்படும் இதிலுள்ள சிறப்பு புகைப்படமே ஊடுகாட்டியாகப் பயன்படுத்துவதாகும். புகைப்படம் உரிய நிறத்திலேயே எறிவையில் தெரிவதால் இயற்கையான காட்சிகளைக் காண முடியும். உதாரணமாக நீங்கள் பாடசாலையில் கல்விச் சுற்றுலாவில் கலந்து கொண்டு திரும்பியவுடன் வழுக்கிகளை உபயோகித்து நீங்கள் கண்ட காட்சிகளை அதேவிதமாக முன் வைக்கலாம்.



படம்:- 3.4.6 வழுக்கி எறிவை

வழுக்கி எறிவையை இயக்கும் போது மின் குமிழ் தொடர்பான நடைமுறை மேந்தலை எறிவையிற் போன்றே அமையும். இந்த இயந்திரத்தின் வ சிறப்பம்சம் படங்களை ஏறுவரிசையாக அல்லது இறங்கு வரிசையாக வெளியில் இருந்து கட்டுப்படுத்தி இயக்கலாம். நவீன இயந்திரங்களின் தானியங்கி முறையும் உண்டு. வழுக்கி எறிவையில் படங்கள் காட்டப்படுவதற்குச் சமாந்தரமாக ஒலி நாடா ஒன்றை அல்லது இறுவட்டை ஒலிபரப்புவதன் மூலம் ஒலி ஒளி வடிவத்தையும் ஆக்க முடியும்.

## துரித எறிவை (Digital Presenter / Visual / Processor)

முன்னர் விளக்கப்பட்ட மேந்தலை எறிவை வழுக்கி எறிவை என்பவற்றில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஊடுகாட்டிகள் அல்லது காட்சிகளே முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இந்தத் துரித எறிவை இந்திரம் மூலம் ஏலவே தயார் செய்யப்படாத துரிதமான ஒன்றையும் எறிவைக்குட்படுத்த முடியும்.



படம்:- 3.4.7 துரித எறிவை

உதாரணமாக ஒரு கற்பித்தலின் போது ஒரு புத்தகத்திலுள்ள படமொன்றை எறிவையாகக் காட்ட வேண்டும். எனக் கொள்வோம். அப்போது செய்ய வேண்டியது. குறிப்பிட்டபடத்தை இயந்திர முகப்பில் வைப்பதாகும். இப்போது அதன் இரு பக்கங்களிலிருந்தும் ஒளி பாய்ச்சப்படுவதுடன் அப்படம் இயந்திரத்திலுள்ள கமரா மூலம் பெற்று (Scan) எறிவையாக்கும். இது முப்பரிமாண உருவங்களையும் பதிவு செய்யக் கூடிய இயந்திரமாகும்.

இந்த இயந்திரத்தின் அனுகூலம் எந்த ஒரு ஆவணத்தையும் படத்தையும் எறிவை மூலம் உடனடியாகக் காட்டக் கூடியதாக இருப்பதாகும். அத்தகைய படம் களஞ்சியப்படுத்த படுவதில்லை சில வேளைகளில் வகுப்பறைகளில் பயன்படுத்தும் நிறப்புகைப் படங்களை அளவில் பெரிதாக்கி இவ்வியந்திரத்தினூடாக வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லூடக எறிவை (Multi media Projetor)

கணினி அல்லது தொலைக்காட்சி திரையின் காட்சிகளை உருபெருப்பித்து ஒரு வெண்திரையில் காட்சிப்படுத்துவதே பல்லூடக எறிவையின் பணியாகும். இங்கு நேரடியாகவே கணினி அல்லது தொலைக்காட்சி திரையிலுள்ள காட்சிகளை பல்லூடக எறிவைத் திரையிலும் காட்ட முடியும். அல்லது பல்லூடக எறிவைத் திரையில் மட்டும் காட்ட முடியும். இதிலுள்ள நன்மை யாதெனில் பெருந்தொகையானோருக்கு ஒரே தடவையில் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுவதாகும். இதனூடாக சினிமா இறுவட்டுக்களையும் முன்வைக்கலாம்.



படம்:- 3.4.8 பல்லூடக எறிவை

இன்று ஒரு கூட்டத்தினருக்கு நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் பல்லூடக எறிவை பயன்படுத்தப்படுவது பிரபல்யமாயுள்ளது. இதிலுள்ள வசதி பற்றி ஓர் உதாரணம் கூறுவதாயின், ஒரு விரிவுரையாளரிடம் ஒரு கையடக்கமான கணினியும் சிறிய பல்லூடக எறிவையும் இருப்பின் அதனூடாக நிகழ்ச்சிகளை மிக இலகுவாக வினைத்திறனாக முன்வைக்கலாம்.

## ஒலி பரப்பும் நுட்பம்

வகுப்பறையில் உரையாற்றும் போது ஒலி பரவிச் செல்வது தடைப்படுமானால் அந்நிகழ்ச்சி வெற்றி பெறாது விடலாம். எனவே தெரிவு செய்யப்பட்ட ஒரு வகுப்பறையில் ஒலி பெருக்கி வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம். பலமுறைகளில் ஒலி பெருக்கி இணைப்பை ஏற்படுத்தலாம். எம்முறையில் செய்வதென்பது தேவைக்கேற்ப வேறுபடலாம்.

வகுப்பறை பூராவும் ஒலிபரவக் கூடிய விதமாக ஒலி பெருக்கியை வைத்து அதனை ஒலி வாங்கியுடன் தொடர்புபடுத்தும் முறையும் இதன் மூலம் விரிவுரையாளரும் பேச்சாளருக்கு அல்லது ஆசிரியருக்கு ஒலிவாங்கி முன்னால் இருந்து தம் கருத்துக்களை முன்வைக்க முடியும்.



படம்:- 3.4.9 மைக்ரோபோன் பயன்பாடு

மற்றொரு முறை வகுப்பறையின் ஒவ்வொரு மேசையிலும் ஒலிவாங்கிகளை பொருத்துவதாகும். இதில் பேச்சாளர்களை போன்றே பங்கு பற்றுவோருக்கும் தம் முன்னேயுள்ள ஒலி வாங்கியூடாக கருத்துக்களை முன்வைக்கலாம். இது சிறந்த உயிர்ப்பான தொடர்பாடற் சூழலை ஏற்படுத்த ஏதுவாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாளரின் ஒலிவாங்கி தொடர்பாக எழும் ஒரு பிரச்சினை யாதெனில் அது ஓரிடத்தில் பொருத்தப்பட்டிருப்பின் அவர் இடம் மாறக் கூடியதாயிருப்பதாகும். இது வெற்றிகரமான தொடர்பாடலுக்கு தடையாகும். இதனால் இப்போதெல்லாம் இடம் பெயர் ஒலிவாங்கியாக எப்.எம். ஒலிவாங்கி பயன் படுத்தப்படுகின்றது. அதில் கம்பியில்லாத படியால் பேச்சாளர் சுதந்திரமாக நடமாட முடியும். ஒலி பெருக்கித் தொகுதியில் இறுவட்டு ஒலி, ஒளிப்பேழைகளும் அதனை இயக்கும் கருவிகளும் வானொலியும் பயன்படுத்த முடியும். எவ்வாறாயினும் ஒலி பெருக்கி வசதி கொண்ட ஒரு வகுப்பறை அமைக்கப்படுவதாயின் அது நன்கு பராமரிக்கப்பட வேண்டும். அது பற்றிய தெளிவான அறிவுடன் கருமமாற்ற வேண்டியது அவசியம்.

## (இ) வகுப்பறை ஊடகப் பாவனையின் அவசியம்

மனிதன் ஐம்புலன்களையும் பயன்படுத்தி சுற்றல் செயன்முறையில் ஈடுபடுவதுடன் ஒரு புலனைப் பயன்படுத்தி கற்பதை விட பல புலன்களையும் இணைத்துக் கற்பது கூடிய பயனளிக்கும். இதற்காக நேரடி ஊடக உபகரணங்கள் பயன் படுத்தப்படல் வேண்டும். இக்கூற்று வகுப்பறையில் ஊடக உபகரணங்கள் பாவனையின் அவசியத்தை நன்கு புலப்படுத்தும் அத்தகைய வேறு சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு:

1. கற்றல் யதார்த்தமானதாக அமையும்.
2. விரைவாக ஒரு பாடத்தை முன்வைக்க முடியும்.
3. மாணவர்களின் ஊக்குவிப்பு அதிகரித்தல்.
4. மாணவர்களின் செயலூக்கம் அதிகரிக்கும்.
5. சிக்கலான எண்ணக் கருக்களை எளிமையாக விளக்குவதற்கும் பயன்படுத்த முடியும்.
6. மாணவர்களின் ஆர்வம் அதிகரிக்கும்
7. விருப்புக்குரிய கற்றலுக்காக பயன்படுத்தலாம்
8. சொற்களினால் கிடைக்கும் கருத்தை விட அதிக வீச்சில் பாடத்தின் கருத்தை விளக்க முடியும்.
9. மொழி ஆற்றலை, பேச்சாற்றலை விருத்தி செய்ய முடியும்.
10. கற்றல் கற்பித்தற் செயற்பாட்டின் சலிப்பைப் போக்க முடியும்.
11. நேர முகாமைத்துவத்தைச் சீராகப் பேணுவதற்கு உதவும்
12. ஆசிரியர் மாணவர் தொடர்பு விருத்திக்கு உதவும்

**ஒப்படை 3**

1. கணினிசார் வெளியீடுகளைக் குறிப்பிடுக.
2. காரியாலய ஊடக உபகரணங்களினால் நடைபெறும் பணிகளை விபரிக்குக
3. தகவற்பரிமாற்று உபகரணங்களின் அவசியத்தை மதிப்பிடுக.
4. 'இணையம் பயனுள்ள ஒரு பெறுநர் ஆகும்' இதுபற்றிய உமது கருத்தைக் கூறுக.
5. வகுப்பறை ஊடக உபகரணங்களினால் அறிவை விருத்தி செய்து கொள்ளும் விதத்தை விபரிக்குக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4 ஊடக நிறுவனங்கள் பற்றிய கற்கை




### நோக்கம்

ஊடகம் என்ற பதத்துடன் எமது நினைவுக்கு வருவது வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், செய்தி ஆசிரியர்கள் போன்றவர்களே. ஊடக நிறுவனம் என்பது அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களாகும். ஒரு அலைவரிசையுடன் ஊடகப் பரிமாற்றம் செய்யும் போது அந்த நிறுவனத்தின் பின்னணியை நாம் மறந்து விடுகின்றோம். அது மட்டுமன்றி அந்த ஊடகத்தை நிருவகிக்கும் நிறுவனம் எது என்பது பற்றிக்கூட நாம் அறியாதிருக்கக்கூடும்.

அத்தகைய ஊடக நிறுவனங்கள், அவற்றின் உரிமையாளர்கள், அவர்களின் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அவர்களின் ஊடகங்கள் ஆகியன பற்றி சமநிலையில் விமர்சிப்பதற்குத் தேவையான தேர்ச்சியை உங்களுக்கு வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். அதற்காக நீங்கள் ஊடகம் பற்றிய தேடலில் ஈடுபட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1 இலங்கையின் ஊடக நிறுவன உரிமையின் தோற்றமும் வளர்ச்சியும்

### அ) அரச தனியார் ஊடக உரிமைகள் வளர்ச்சியடைந்த விதம்

ஊடக நிறுவனங்களற்ற ஒரு சமூகத்தைத் தேடிக் கொள்வது முடியாத காரியம். ஊடகம் என்பதை இனங்காணும்போது அதன் ஒரு பிரதான இயல்பாகக் காணப்படுவது ஒரு முறைசார் நிறுவனமாகச் செயற்படுவதாகும். அதற்கான காரணம் அதில் காணப்படும் பாரிய செயலொழுங்காகும். ஒரு புத்தகம் வெளியிடும் பணியைத் தனியாகச் செய்ய முடியுமாக இருப்பினும், ஒரு பத்திரிகை வெளியிடுவதையோ, வானொலி அல்லது தொலைக்காட்சி நிறுவனத்தையோ தனியாக நடத்துதல் சாத்தியமில்லை. எனவே ஊடகம் ஒரு கைத்தொழிலாக விரிவடைந்ததுடன் அதன் உரிமையும் முறைசார் விதத்திலும், ஒழுங்கமைப்பு ரீதியாகவும் விரிவடைந்தமை இலங்கையின் ஊடக வரலாற்றை ஆராயும்போது தெரியவருகிறது.




படம் :- 4.1.2
பத்திரிகைகள் சிலவற்றின் பெயர்கள்




படம் :- 4.1.1
தொலைக்காட்சி செல்வழிகள் சிலவற்றின் இலச்சினைகள்

உலகின் வேறு நாடுகளைப் போன்றே இலங்கையிலும் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட ஊடகம் பத்திரிகையாகும். பின்னர் வானொலி, தொலைக்காட்சி என்பன ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான காலப் பிரிவு நூற்றாண்டுகளைத் தாண்டிச் செல்கிறது. நினைவில் வைத்திருக்க வேண்டிய மற்றுமொரு விடயம் யாதெனில் இலங்கையில் தாபிக்கப்பட்ட ஊடகங்கள் அவ்வக் காலங்களில் நிலவிய சமூக அரசியல், பொருளாதாரச் செயலொழுங்குடன் நேரடியாகவே தொடர்புபட்டுக் காணப்பட்டன என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிகைகள்

வரலாற்றுச் சான்றுகளின்படி இலங்கையில் 1737 ஆம் ஆண்டு அச்சியந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு அச்சுஊடகம் ஆரம்பமானது எனினும் அச்சிடலுக்குத் தேவையான கடதாசி உள்நாட்டில் இருந்ததாகக் கூறமுடியாது. இலங்கையின் முதலாவது பத்திரிகையாக 1832 ஆம் ஆண்டில் அரச அனுசரணையுடன் 'கலம்பு ஜெர்னல்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் அதன் ஆசிரியர் அது ஒரு அரசாங்கப் பத்திரிகையல்ல என்று குறிப்பிட்டார். இப்பத்திரிகை 1833 இல் நிறுத்தப்படக் காரணம் அதன் ஆசிரியர் இங்கிலாந்து அரசைக் கடுமையாக விமர்சித்தமை தான் என்று தெரிய வந்துள்ளது.

இரண்டாவதாக 1834 ஆம் ஆண்டு அக்லாண்ட், டார்லி ஆகிய இருவரும் சேர்ந்து 'ஒப்ஸவர்', 'கொமர்ஷல் அட்வர்டைஸர்' ஆகிய ஆங்கில பத்திரிகைகளை தனியார் உரிமையாக ஆரம்பித்தனர்.

இவ்வாறு அச்சுக்கலை படிப்படியாக பரவியதைத் தொடர்ந்து உள்நாட்டுப் பத்திரிகைத் துறைக்கு அத்திவாரமிட்டது. 1841 ஜனவரி 07 ஆம் திகதி இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான 'உதயதாரகை' என்ற பத்திரிகை ஹென்றி மார்டின், எஸசப் பெய்ஷன் ஆகிய இரு ஆசிரியர்களால் மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதன்பின்பு 1841 இல் உதயாதித்தன் 1845 இல் உரைகல் 1848 இல் இலங்கை நேஷன், 1853 இல் 'வித்தியா தர்ப்பணம்' மற்றும் 'மிலிட்டரி மிரர்'. 1859 இல் 'பால்ய நேஷன்' என்ற பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. புலத்கம தம்மாலங்கார தேரரின் தலைமையில் தாய்லாந்து மன்னரின் உதவியுடன் இலங்கையின் முதலாவது சிங்களப் பத்திரிகையான " லங்கோபகாரய" காலி லங்கோபகாரய அச்சகத்தில் 1860 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சிங்களப் பத்திரிகைகள் உரிமை இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தை நோக்கியதாக மக்கள் தலைவர்களிடையே வேகமாக விரிவடைந்தது. அதற்கான சில உதாரணங்களைப் பின்வருமாறு கூறலாம்.

| உரிமை | பத்திரிகை/சஞ்சிகை |
|---|---|
| மகாபோதி சங்கம் | சிங்கள பௌத்தய |
| பரம விஞ்ஞானார்த்த சங்கம் | சரசவி சந்தரச |
| கத்தோலிக்க சபை | ஞானர்த்த பிரதீபய |
| சூரியமல் சங்கம் | கம்கருவா |
| இலங்கை சமசமாஜக் கட்சி | சமசமாஜ |
| சிங்கள மகாசபா | சிங்கள பலய |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1908 இல் வெளியிடப்பட்ட "ஸ்டாண்டர்ட்" என்ற பத்திரிகை வசதி படைத்த சிங்களவர்கள் சேர்ந்து ஆரம்பித்த தாகும். 1909 இல் எச். எஸ் பெரேராவின் உரிமையாக தினமின பத்திரிகை வெளியிடப் பட்டது. பிற்காலத்தில் எச்.எஸ். பெரேரா அவர்களால் தினமின பத்திரிகையை தனி யாக நடத்த முடியாமற் போனதால் டி. ஆர். விஜேவர்தனாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.



படம் :- 4.1.3 பத்திரிகைகள் சில

அதன் பின்னர் இலங்கை ஊடகவியல் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாக அமைந்தது. டி. ஆர். விஜேவர்தன அவர்களால் லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்காக 'சிலோன் டெயிலி நியூஸ்' மற்றும் ஒப்ஸவர் ஆகிய பத்திரிகைகளின் உரிமையைத் தனதாக்கிக் கொண்டார்.

1846 இல் ஆரம்பிக்கப்பட்ட 'ரைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகை நிறுவனம் இலங்கையின் இரண்டாவது பத்திரிகை நிறுவனமாகப் பிரபல்யம் பெற்றது. 1947 இல் டி.பி. தனபால என்பவரின் தலைமையில் லங்காதீப பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

இதிலிருந்து தெரியவருவது ஆரம்பகாலத்தில் ஆசிரியரையே உரிமையாளராகக் கொண்டு பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் தொடர்ந்து அவ்விதமாகவே நடத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டமையாகும். இதன் பெறுபேறாக படிப்படியாக வணிகத்தன்மை வாய்ந்த முறைசார் ஒழுங்கமைப்புகளாக பத்திகைத் துறை மாற்றமடையத் தொடங்கியது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் நிலைமை மேலும் விரிவடைந்து பத்திரிகை வெளியீடு ஒரு வணிக நிறுவனமாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

1961 இல் எம்.டி. குணசேன கம்பனியின் உரித்துரிமையின் கீழ் வரையறுக்கப்பட்ட சுயாதீனப் பத்திரிகைக் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. அதன் நாளாந்த வெளியீடுகளாக சிங்களமொழியில் 'தவச', தமிழ்மொழியில் 'தினபதி' யும் ஆங்கிலத்தில் 'சன்'னும் வெளியிடப்பட்டன. ஞாயிறு வெளியீடுகளாக முறையே ரிவிரஸ, சிந்தாமணி என்பன வெளியிடப்பட்டன. இதனைவிட 'சன்' (Sun), 'வீக் எண்ட்' (Weekend) என்ற ஆங்கில பத்திரிகைகளையும் இந்நிறுவனம் வெளியிட்டது.

இதனையடுத்து சில தசாப்தங்களில் இலங்கைப் பத்திரிகைத் துறை வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. 1973 இல் லேக் ஹவுஸ் நிறுவன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுடைமையாக்கப்பட்டமை 1974 இல் குணசேன பத்திரிகை நிறுவனம் அரசாங்கத்தினால் மூடப்பட்டு முத்திரையிடப் பட்டமை. 1985 இல் டைம்ஸ் பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டமை என்பன அத்தகைய நிகழ்தகவு களாகும்.

1981 இல் உபாலி பத்திரிகை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. திவயின, இரிதா திவயின, த ஐலண்ட் ஆகிய பத்திரிகைகளும் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இந்நிறுவனத்தின் உரிமையாளர் உபாலி விஜேவர்தன ஆவார்.



படம்:- 4.1.4 பத்திரிகைகள் சில

லேக் ஹவுஸ் தாபனத்தின் உரிமையாளராக இருந்த டி ஆர். ஜயவர்தனவின் புதல்வராக ரன்ஜித் விஜேவர்தன 1986 இல் 'விஜய' பத்திரிகை நிறுவனத்தை ஆரம்பித்தார். லேக் ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்கும் போது அதன் தலைவராக இருந்தவரும் இவரே. டைம்ஸ் நிறுவனத்தை கொள்வனவு செய்ததுடன் 'லங்கா தீப' பத்திரிகை மீண்டும் ஆரம்பிக்க வழியேற்பட்டது.

ஆரம்ப காலகட்டத்தில் பல தமிழ்ப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன. லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் அந்த வரிசையில் முதலாவதாகும். அதனைத் தொடர்ந்து வீரகேசரி ஆரம்பிக்கப்பட்டது. தினக்குரல், சுடர் ஒளி ஆகிய பத்திரிகைகள் பிற்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. நவமணி, எங்கள் தேசம், மீள்பார்வை, மித்திரன், விஜய் போன்ற வாராந்த மாதாந்தம் பத்திரிகைகளும் இவற்றில் அடங்கும்.

## வானொலி


படம் :- 4.1.5
இ. ஒ. கூட்டுத்தாபனத்தின் ஆரம்பம்

1924ஆம் ஆண்டு இலங்கையின் முதல் வானொலி சேவை அரசுடைமையாக ஆரம்பிக்கப்பட்டது.

1949 இல் இது இலங்கை வானொலி சேவைத் திணைக்களம் என்ற பெயரில் ஒரு அரசாங்கத் திணைக்களமாக மாற்றப்பட்டது.

1966 இல் இது இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றப் பட்டது. இதன்படி இலங்கையில் வானொலி சேவை அரசாங்கத்தின் பொறுப்பிலேயே ஆரம்பிக்கப்பட்டதைக் காணலாம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த பொருளாதாரம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடரந்து ஏற்பட்ட மாற்றங்களினால் தனியார் வானொலிச் சேவை ஆரம்பிக்கப்படுவதில் கவனம் திரும்பியது. அதுவரை பத்திரிகைகள் மட்டுமே தனியார் உடைமையாக நடத்தப்பட்டு வந்தன. தொலைக்காட்சி சேவை அப்போது ஆரம்பமாயிருக்க வில்லை. வானொலி அரசுரிமையாய் இருந்தது. தனியார் வானொலிச் சேவைக்காக அனுமதிப் பத்திரம் வழங்க அரசு தீர்மானித்தது. இதன்படி கடந்த இரண்டு தசாப்தங்களில் ஏராளமான தனியார் வானொலிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் உரிமை பெரும்பாலும் தனியார் கம்பனிகளைச் சார்ந்ததாகவே உள்ளது. அவ்வாறல்லாத ஒரே சேவை ரன்கிரி தம்புள்ளை விகாரையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள வானொலிச் சேவையாகும்.




படம் :- 4.1.6 வானொலி நிலையங்கள் சிலவற்றின் இலச்சினைகள்

### தொலைக்காட்சி

இலங்கையில் முதலாவது தொலைக்காட்சி சேவை தனியார் துறையினராலேயே ஆரம்பிக்கப்பட்டது. 1979 ஏப்ரில் 13 ஆம் திகதி இது ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான பரீட்சார்த்த ஒளிபரப்பு 1974 முதல் 1979 வரை தொடர்ந்தது. அனில் விஜேவர்தன, சான் விக்கிரம சிங்ஹ ஆகிய இலங்கையர்களும் பொபி கிரிஸ்டி என்ற ஆங்கிலேயரும இணைந்து இதனை ஆரம்பித்தனர். பின்னர் 1979 ஜுன் 05 ஆம் திகதி இந்தச் சுயாதீன தொலைக்காகட்சி சேவை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. அன்று முதல் அது அரச நிறுவனமாக மாற்றப்பட்டது.

1982 ஆம் ஆண்டில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. பாராளுமன்றச் சட்ட மூலமொன்றின் மூலம் இக்கூட்டுத்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் தனியாள் தொலைக்காட்சி சேவைகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதில் அரசு கவனம் செலுத்தியது. தனியார் பத்திரிகைகள் விடயத்தில் அரசின் தலையீடு காணப்படாத போதும் இலத்திரனியல் ஊடகம் தொடர்பில் அரசாங்கத்திடம் அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் என்று விதிக்கப்பட்டது. தொலைத் தொடர்பு நெறிப்படுத்தல் ஆணைக்குழுவே இத்தகைய அனுமதிப் பததிரங்களை வழங்குவதற்கும் பொறுப்பாக உள்ளது.



படம் :- 4.1.6 தொலைக்காட்சி நிலையங்கள் சிலவற்றின் இலச்சினைகள்

## ஆ) ஊடக நிறுவன உரிமையில் அரசின் பங்களிப்பு

இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச ஊடக நிறுவனங்கள் பற்றிய விபரம்

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ஓர் அரச கூட்டுத்தாபனம்)
- ஐக்கிய செய்திப் பத்திரிகை நிறுவனம் - (அரச கம்பனி)
- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் - (அரச கூட்டுத்தாபனம்)
- சுயாதீன தொலைக்காட்சி சேவை - (அரச கம்பனி)
- லக் ஹண்ட வானொலிச் சேவை - (அரச கம்பனி)

இதன் படி அரசாங்க ஊடக நிறுவன உரிமைகளும் ஒரே அமைப்பில் இல்லை. அரசாங்கக் கூட்டுத்தாபனம் என்பதன் கருத்து பாராளுமன்றம் சட்டமூலமொன்றின்படி அமைக்கப்படும் ஒரு நிறுவனமாகும். இவ்வகைக் கூட்டுத்தாபனம் ஒரு பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படும். தலைவர் உட்பட பணிப்பாளர் சபை அமைச்சரால் நியமிக்கப்படுவார்கள்.

அரசுடமையாக்கப்பட்ட கம்பனி என்பது கூட்டுத்தாபனத்திலிருந்து வேறுபட்டதாகும். மேலோட்டமாகப் பார்க்கும் போது இது அரச நிறுவனமாகக் காணப்பட்ட போதும் சட்டத்தின் முன்னால் இவையிரண்டும் வேறுபட்ட நிலைமையைக் கொண்டவை. சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக் ஹவுஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனம் என்பன அவற்றின் பங்குதாரர்களுக்கே சொந்தம். அதிக எண்ணிக்கையிலான பங்குகளை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளதால் அவற்றின் உடைமை அரசாங்கத் திறைசேரியைச் சாரும். இதன் படி சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக் ஹவுஸ் என்பவற்றின் தலைவரையும் பணிப்பாளர் சபையையும் தெரிவு செய்யும் அதிகாரம் திறைசேரியின் தலைவருக்கேயுண்டு. அமைச்சர் இவர்களை நியமிப்பதாக இருப்பினும் நியமனக் கடிதங்களில் கையொப்பமிடுவது திறைசேரியின் தலைவரேயாவார்.

### இ) ஊடக நிறுவன உரிமையில் தனியார் பங்கு

அரசுக்குச் சொந்தமில்லாத ஏனைய அனைத்து ஊடக நிறுவனங்களும் தனியார் கம்பனிகளுக்குச் சொந்தமானவை. அரசாங்கப் பத்திரிகை வெளியீட்டு நிறுவனம் இதிலிருந்து சற்று வேறுபட்டதாகும். அது வரையறுக்கப்பட்ட அரசாங்கக் கம்பனியாகச் செயற்படுகின்றது. அதில் பங்குதாரர்கள் எவரும் முதலீடு செய்யவில்லை. அரச கம்பனிச் சட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய ஊடக நிறுவனங்கள் அனைத்தும் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளாகும். இவை பெரும்பாலும் வேறு வணிகங்களின் சகோதர நிறுவனங்களாகச் செயற்படுகின்றன. ரன் கிரி தம்புள வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் இரண்டும் வேறுபட்ட உரிமை அமைப்பைக் கொண்டதாகவுள்ளன.

தனியார் ஊடகக் கம்பனிகளில் ஒரு பொது இயல்பாக இருப்பது அவை பொதுக்கம்பனிகளாக இல்லை என்பதாகும். அதாவது எவரும் அவற்றின் பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியாது. அவை முழுமையாகத் தனியார் உடமைகளாகும்.

## 4.2 ஊடக நிறுவனங்களின் உள்ளகச் செயற்பாடுகளின் இயல்பு

பொதுக் கம்பனியாக, அரச கம்பனியாக அல்லது அரச கூட்டுத்தாபனமாக இருந்தாலும் அவை அனைத்தும் ஒரு பணிப்பாளர் சபையினாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. எனினும் இவற்றுள் நிறைவேற்று அதிகாரம் தனியொரு பிரதான நிறைவேற்று அதிகாரி வசமேயுண்டு.

| நிறுவனம் | பிரதான நிறைவேற்று நிர்வாகி |
|---|---|
| இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | பணிப்பாளர் நாயகம் |
| இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | பணிப்பாளர் நாயகம் |
| சுயாதீன தொலைககாட்சி சேவை | பொது முகாமையாளர் |
| லக்ஹண்ட வானொலிச் சேவை | பொது முகாமையாளர் |
| ஐக்கிய பத்திரிகை கம்பனி | பொது முகாமையாளர் |
| வேறு தனியார் கம்பனிகள் | பொது முகாமையாளர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர் நாயகம் அல்லது பொதுமுகாமையாளர், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருப்பதோடு அவரின் பணிகள் வேறு இருவரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் இருக்கும். ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாக ஒவ்வொருவர் நியமிக்கப்படுவர். இதனடிப்படையில் பிரதிப்பணிப்பாளர் நாயகம், உதவிப்பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள், பிரதி, உதவி பணிப்பாளர்கள் நியமிக்கப்படலாம். அல்லது பொது முகாமையாளர், பிரதி, உதவி முகாமையாளர்கள் நியமிக்கப்படலாம்.

இதன்படி அரசாங்க அல்லது தனியார் ஊடக நிறுவனங்கள் தம் பணிகளை முறையாகப் பகிர்ந்து கருமமாற்றுவதைக் காண முடிகின்றது. இவ்வனைத்து நிறுவனங்களையும் பொதுவாக நோக்குமிடத்து அவற்றின் பணி இயல்புகளை இரு பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. பொதுக் கருமங்கள்
2. தொழில் சார் கருமங்கள்

நிர்வாகம், நிதி, பாதுகாப்பு, போக்குவரத்து, பராமரிப்புச் சேவைகள் என்பன பொதுக் கருமங்களில் அடங்கும். நிறுவனத்தின் இருப்புக்கு இப்பிரிவு முக்கிய பணிகளை ஆற்றும். இரண்டாவது தொழில்சார் பிரிவாகும். ஊடக நிறுவனமொன்றில் தொழில்சார் பிரிவுக்கு உட்படுவது ஊடகவியலாளர்களே. இலத்திரனியல் ஊடகமொன்றின் துணைச் சேவைகளை வழங்கும் புகைப்படப் பிடிப்பாளர்கள், ஒளி, ஒலி, ஒப்பனை, நெறியாள்கை, பொறியியல் சேவைகளும் இப்பிரிவுகளுட்படும். இலங்கையில் இவ்விரு பிரிவுகளும் சற்றுத் தெளிவற்ற நிலையிலே காணப்படுகின்றன. பொதுப் பதவிகளும் தொழில்சார் பதவிகளும் சரியாக வேறுபடுத்தப்படாமை இதற்கான காரணமாகும்.

பத்திரிகை, வானொலி அல்லது தொலைக்காட்சி நிறுவனமொன்றின் உள்ளகக் கட்டமைப்பு மற்றும் அடிப்படை இயல்புகள் பெரும்பாலும் ஒத்ததாகவே இருப்பதுடன் விஷேட வேறுபாடுகளும் உண்டு. ஊடகங்களைப் பொருத்து அவற்றிற்காக தொழில்சார் கருமங்கள் வேறுபடுவதே இதற்கான காரணம். இவற்றை விளங்கிக் கொள்வதற்காக பின்வரும் கட்டமைப்புக் குறிப்புகளைக் கற்பது போதுமானது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ) பத்திரிகை நிறுவனமொன்றின் உள்ளக கட்டமைப்பும் செயற்பாட்டு அடிப்படையும்

பத்திரிகை நிறுவனமொன்றின் பொதுக் கட்டமைப்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிக்கையின் முதன்மை அதிகாரி அதன் பிரதம ஆசிரியரே. பத்திரிகையின் அனைத்து விடயங்கள் குறித்தும் இறுதிப் பொறுப்பு ஆசிரியரைச் சாரும். ஆசிரியர் தலையங்கம் எழுதுவது அவரது பொறுப்பாகும். பிரதான செய்திகளைத்தெரிவு செய்து பிரசுரிப்பது தொடர்பாக பிரதம ஆசிரியர் நேரடியாக ஈடுபடுவோரின் பணிகளை உதவி ஆசிரியர்களுக்குப் பங்கீட்டு வழங்க முடியும். ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாக உதவி ஆசிரியர்கள் இருப்பர். இவர்களையெல்லாம் உள்ளடக்கிய அமைப்பை ஆசிரியர் பீடம் எனலாம்.

## பிராந்தியச் செய்திப் பிரிவு

பத்திரிகைக்கான செய்திகளை வழங்குபவர்கள் அவற்றின் பிராந்தியச் செய்தியாளர்களே. அவர்கள் தொடர்பில் கரும மாற்றுபவர் பிராந்திய செய்தி ஆசிரியரே. அதன் கீழ் பதவி நிலைச் செய்தியாளர்கள், பதவி நிலைக் கட்டுரையாளர்கள் இருப்பர்.

## வெளிநாட்டுச் செய்திப் பிரிவு

வெளிநாட்டுச் செய்தி ஆசிரியர் இப்பிரிவுக்குப் பொறுப்பாக இருப்பார். உலக நிகழ்வுகள் குறித்துக் கவனம் செலுத்தி செய்திகளைப் பெற்றுக் கொள்வதும், உரிய முறையில் அவற்றை நெறிப்படுத்திப் பிரசுரிப்பதும் அவரின் பொறுப்பாகும். இதற்காகப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. தற்காலத்தில் நவீன தொழில் நுட்பத்தின் கீழ் வெளிநாட்டுச் செய்திகளைப் பெற்றுக் கொள்ள பரந்த அளவில் இணையம் பயன்படுத்தப்படுகின்றது. சர்வதேச செய்தி முகவர் நிறுவனங்களிடமிருந்து நேரடியாகவும் செய்திகள் கிடைப்பதுண்டு.

## விளையாட்டு / பெண்கள் /சிறுவர் / சமயப் பிரிவுகள்

ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாக உதவி ஆசிரியர்கள் இருப்பர். தத்தம் பிரிவுடன் தொடர்புடைய கட்டுரைகள், செய்திகள், புகைப்படங்கள், ஆகியவற்றைத் தேடிப் பெறுவது, பதிப்பாக்கம் செய்வது, பிரசுரத்துக்காக தயார்படுத்துவதும் இவர்களது பொறுப்புகளாகும்.

## சிறப்பு அம்சப் பிரிவு

இது பத்திரிகையின் ஜனரஞ்சகமான ஒரு பிரிவாகும். காலத்துக்குக் காலம் வாசகர்கள் ஆர்வம் காட்டும் அல்லது ஆர்வ மூட்டச் செய்ய வேண்டிய விடயங்களைக் கவர்ச்சியாக, ஆக்கத்திறனாக முன்வைப்பது இப்பிரிவின் பொறுப்பாகும். இப்பிரிவின் உதவி ஆசிரியரின் கீழ் சிறப்புக் கட்டுரையாளர்கள் கடமையாற்றுவதுடன், சுயாதீன எழுத்தாளர்களும், ஊடகவியலாளர்களும் இத்துறைக்காகப் பணியாற்றுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒளிப்படப் படப்பிரிவு

பத்திரிகையில் பிரசுரிப்பதற்குத் தேவையான ஒளிப்படங்களைத் தெரிவு செய்து வழங்குதல் புகைப்படப்பிரிவு உதவி ஆசிரியரின் பொறுப்பாகும். இதற்காக நியமிக்கப்பட்ட நிலையப் படப்பிடிப்பாளர்களும் சுயாதீனப் புகைப்படக் கலைஞர்களும் சேவையில் அமர்த்தப்படுவர். இதனைவிட இணையம் மற்றும் பல்வேறு செய்திமுகவர்களிடமிருந்தும் புகைப்படங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

### சித்திரப் பிரிவு

பத்திரிக்கைக்குத் தேவையான சித்திரங்களை வரைவது இப்பிரிவின் பொறுப்பாகும். பதவிநிலை சித்திரக்கலைஞர்களும் சுயாதின ஓவியர்களும் இப்பிரிவுகளில் பணியாற்றுவார்கள்.

### ஒப்பு நோக்கல் மொழி செம்மையாக்கப் பிரிவு

பத்திரிகையில் மொழி செம்மையாக இருப்பது மிக முக்கியம். இதற்காக பயிற்சி பெற்ற மொழிப் பதிப்பாசிரியர்கள், ஒப்பு நோக்குனர்கள் பணியாற்றுகின்றனர். ஒப்புநோக்குவது என்பதன் கருத்து கணினியில் எழுத்தமைத்து எடுக்கப்பட்ட அச்சுப் பிரதியை மூலப் பிரதியுடன் ஒப்பிட்டுச் சரிபார்ப்பதாகும். மொழிச் செம்மையாக்கம் என்பதன் கருத்து மூலப் பிரதியிற் கூட மொழிப் பிழைகள், இலக்கணப் பிழைகள் இருந்தால் அவற்றை சரி செய்து செம்மைப் படுத்துவதாகும்.

### விளம்பரபீடம்

பத்திரிகைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு பிரதான பிரிவாக இது காணப்படுகின்றது. விளம்பரங்கள் ஆக்கத்திறனுடன் வடிவமைக்கப்படினும் அவை செய்திகளில் இருந்து வேறுபட்டவைகளாகும். பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான விளம்பரங்களைப் பெற்றுத் தயார்படுத்துவது விளம்பரப் பிரிவின் பொறுப்பாகும். பத்திரிகையின் எப்பக்கத்தில் எந்த அளவில் விளம்பரத்தைப் பிரசுரிப்பது என்பது குறித்துத் தீர்மானிப்பதும் அவற்றை அச்சகப் பகுதிக்கு அனுப்புவதும் விளம்பரப் பிரிவின் பணிகளாகும். குறிப்பிட்ட பக்கங்களில் விளம்பரங்கள் அறிவித்தல்கள் வடிவமைக்கப்பட்ட பின் எஞ்சிய இடங்களில் செய்திகளைக் கட்டுரைகளைப் பிரசுரிக்க முடியும். சில காலங்களில் விளம்பரங்கள் அதிகரித்து வாசகர்களுக்கான இடம் குறையும் நிலையும் உண்டு. இதற்கான பொறுப்பை ஆசிரியர்பீடம் ஏற்க முடியாவிட்டாலும் வாசகர்களுக்குப் பொறுப்பு கூறும் கடமை ஆசிரியர் பீடத்துக்குண்டு.

பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்படும் பக்கத்தையும் அளவையும் பயன்படுத்தும் நிறங்களைப் பொறுத்து விளம்பரத்தின் கட்டணம் தீர்மானிக்கப்படும். முதற்பக்கத்தில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களின் கட்டணம் அதிகமாக இருக்கும். முழு அல்லது அரைப் பக்கங்களாக, பத்திகளாக, சென்ரிமீற்றர் அளவுகளாக, சிறுவிளம்பரங்கள் தேவைக்கேற்ப கட்டணம் செலுத்தி பத்திரிகைளில் இடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கிக் கொள்ளலாம். இவ் விளம்பரங்களுக்கான கட்டணங்கள், சொற்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அறவிடப்படும். பத்திரிகைக் காரியாலயத்தின் விளம்பரப் பிரிவுக்கு நேரடியாகச் சமூகமளித்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதேச முகவர்களூடாகவோ விளம்பரங்களை வழங்க முடியும். விளம்பரப் பிரிவுக்கும் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்துக்குமிடையே நேரடித் தொடர்பு கிடையாது. இதனால் விளம்பரங்களில் முன்வைக்கப்படும் கருத்துக்களுக் கெதிரான கட்டுரைகளும் சில வேளைகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படலாம்.

## ஆ) வானொலி நிறுவனமொன்றின் உள்ளகக் கட்டமைப்பும் செயற்பாட்டு அடிப்படையும்

### வானொலி நிறுவனப் பொதுக் கட்டமைப்பு





இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் உள்ளகப் பணிகளின் இயல்பு, நிறுவனத்துக்கேற்ப வேறுபடும். விசேடமாக நவீன தொழில் நுட்பத்தின் பங்களிப்புடன் இயங்கும் வானொலிச் சேவைகளில் மிகக் குறைந்த ஆளணியினரே இருப்பதுடன் அங்கு பயன்படுத்தப்படும் செயலொழுங்கு குறுகியதாகும். தனியார் வானொலிச் சேவைகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் தொகை குறைவாக இருப்பதுடன் அதன் செயலொழுங்கும் குறுகியதாக அமைகிறது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் நிலை முற்றிலும் வேறுபட்டதாக இருப்பதுடன் அங்கு பெரும்பாலான நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டே ஒலிபரப்பப்படுகின்றன. பொதுவாக நோக்குமிடத்து பின்வரும் பதவிகளின் இயல்புகளை விளங்கிக் கொள்வது முக்கியமாகும்.

### பணிப்பாளர்

விளையாட்டு, சமயம், இளைஞர், சிறுவர், பெண்கள், செய்தி என்ற வகையில் காணப்படும் பிரிவுகளின் பூரண பொறுப்பு பணிப்பாளரைச் சாரும். அப்பிரிவுகளின் நடவடிக்கைகளை திட்டமிடல், திட்டங்களை மறுசீரமைத்தல், நடை முறைப்படுத்தல் என்பன பணிப்பாளரின் அங்கீகாரத்தின்படியே நடைபெறும்.

### தயாரிப்பாளர்

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புவதற்காகத் தயார் செய்பவர் இவரே. அவர் அதனைத் தனியாகச் செய்யமுடியாது. எனவே தயாரிப்பாளர் என்பவர ஒரு குழுவின் தலைவராவார். அக்குழுவின் தொழில் நுட்ப உதவியாளர்,ஊடகவியலாளர், இசை வழங்குவோர் இருக்கலாம்.

### அறிவிப்பாளர் / முன்வைப்பவர்

அறிவிப்பாளர் என்பதனால் கருதப்படுவது தயாரிக்கப்படும் பிரதியை முன்வைப்பவர் என்பதாகும். அவருக்கு பேசுவதில் நல்ல தேர்ச்சி இருத்தல் வேண்டும். அறிவிப்பாளர் ஒன்றை வாசிப்பவராக இருப்பார். முன்வைப்பாளர் என்பது அதனை விடச் சற்று ஆக்கத் திறன் வாய்ந்த பணியாகும். எழுதப்பட்ட ஒரு ஆவணத்தினூடாகவோ அத்தகைய ஒரு ஆவணமின்றியே அவர் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விதமாக கருத்துக்களை முன்வைக்க வேண்டும். இதற்காக மொழி தொடர்பாக தேர்ச்சி மட்டமுமின்றி பல் துறை சார்ந்த அறிவுடன் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

### தொழில்நுட்பவியலாளர்

ஒரு கோணத்தில் பார்த்தால் தொழில் நுட்பவியலாளரும் ஆக்க ரீதியாகச் செயற்படுபராகவே உள்ளனர். அவ்வாறில்லாத போது தயாரிப்பாளர் தனது பணியைச் சிறப்பாகச் செய்ய முடியாது. நல்ல கேள்வி ஞானத்துடன உபகரணங்களை நன்கு கையாளும் திறனும் வேண்டும். இசை நிகழ்ச்சிகளின் போது இவர்களின் பொறுப்பு மேலும் அதிகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிருபர் / செய்தியாளர்

செய்திகளையும் அறிக்கைகளையும் நிறுவனத்துக்கு வழங்குபவர் இவர்களே. இவர்கள் பிரதேச் செய்தியாளர்களாகவோ சுயாதீனச் செய்தியாளர் களாகவே இருக்கலாம்.

## இ) ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் உள்ளகக் கட்டமைப்பு செயற்பாட்டு அடிப்படையும்




இது ஒரு கட்புல செவிப்புல ஊடகம் என்பதால் அதன் கருமங்கள் சிக்கலாக இருக்கும். எனவே பின்வரும் பதவிகள் வானொலி சேவையை விட வேறுபட்டதாகும்.

## பணிப்பாளர்

ஒவ்வொரு பிரிவின் பொறுப்பாளராக இருப்பதுடன் அப்பிரிவின் சகல கருமங்கள் குறித்தும் வகை கூறுபவராகவும் இருப்பார். எதிர்காலக் கருமங்களைத் திட்டமிடுவதும், தயார் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை ஒளிபரப்புக்கு முன் பரிசீலனை செய்வதும் ஒளிபரப்புக்கு அங்கீகரிப்பதும் பணிப்பாளரின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தயாரிப்பாளர்

இது வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளரை ஒத்திருக்கும் பதவியாகும். ஆயினும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கட்புல செவிப்புலக் கூறுகள் கவனிக்கப்படல் வேண்டும். வானொலிச் சேவையை விட எண்ணிக்கையில் அதிகமான ஆளணியினர் இதற்குத் தேவைப்படுவர். சரியாகத் திட்டமிடப்படாத போது வீண் செலவு அதிகரிப்பும் ஏற்பட இடமுண்டு.

## படப் பிடிப்பாளர்

தயாரிப்பாளரின் ஆலோசனைப் படி காட்சிகளைப் படம் பிடிப்பது இவரின் பணியாகும். ஒலி, ஒளிப்பதிப்பு இதில் முக்கியமாகும்.

## ஒலிப்பதிவுக் கலைஞர்

ஒலிகளை உரிய முறையில் பதிவு செய்தல் இவரின் பொறுப்பாகும். சங்கீத, நாடக நிகழ்ச்சிகளின் போது இவர்களின் சேவை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தயாரிப்பாளரின் அறிவுறுத்தலுக்கேற்ப இவர் கருமமாற்றுவார்.

## நெறியாள்பவர்

தயாரிப்பாளரின் அறிவுறுத்தலின் படி ஒலி, ஒளிக் கட்டுப்பாடு, கூட்டல், குறைத்தல் பொருத்தப்பாடு, காட்சி ஒன்றிணைப்பு போன்ற கருமங்களுக்குப் பொறுப்பாக இருப்பார்.

## ஒப்பனைக் கலைஞரும் பின்னணிக் கலைஞரும்

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பின் போது ஒப்பனை என்பது முக்கிய ஒரு அம்சமாக காணப்படுகிறது. தொலைக்காட்சித் திரையில் தெரியும் ஒவ்வொருவரும் பொருத்தமாக, நல்ல தோற்றத்துடன் அழகாக காட்சியளிப்பதற்காக இவர்கள் ஒப்பனை செய்வர். நாடகத்தின் போது உரிய பாத்திரமாக ஒருவரைத் தயார் செய்வதில் இவர்களது பங்கு மிக முக்கியம். நிகழ்ச்சிகளுக்கான பின்னணி அமைத்தல், சுற்றாடலைத் தயார் செய்தல் என்பன விரிவான பணிகளாகும். ஒரு காட்சி பொருத்தமாக அமைவதில் ஒப்பனை, பின்னணி அமைப்பு முக்கியத்துவம் பெறுவது இதனாலாகும்.

## அறிவிப்பாளர் / முன்வைப்பவர்

வானோலிச் சேவையை ஒத்த கடமைகளே இவர்களுக்குண்டு. எனினும் தொலைக்காட்சியில் இவர்கள் தோன்றுவதால் அவர்களிடம் அமையப்பெற வேண்டிய தொழினுட்பத் தேர்ச்சிகள், ஆக்கத்திறன்கள் வானொலி சேவையை விட வேறுபட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 ஊடக நிறுவமொன்றின் உரிமையில் பயனாளி செல்வாக்குச் செலுத்தும் விதம்.

### அ) ஊடக நிறுவன உரிமையும், நிறுவனக் கொள்கைகளும்.

ஊடக நிறுவன உரிமைக்கும் நிறுவன கொள்கைக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. ஆனால் அது வெளியே தெரியக் கூடியதாகவிருக்காது. ஊடக நிறுவனங்களில் மட்டுமன்றி எந்த ஒரு நிறுவனத்திலும் அதன் உரிமை அதன் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். ஊடக நிறுவனங்களுக்கும் இது பொருந்தும். ஓர் ஊடக நிறுவனம் தமது கொள்கையை அமைத்துக் கொள்வது உரிமையாளர்களின் தேவையைப் பொறுத்தாகும். இது அரசாங்க, தனியார் ஊடக நிறுவனங்கள் அனைத்துக்கும் பொருந்தும். அரச ஊடகம் என்பது ஊடக நிறுவனங்களாகும். எனவே அரசுக்குச் சொந்தமான ஊடகத்துள் கொள்கையை வகுப்பதில் இவ்வுரிமை செல்வாக்கு செலுத்திடவே செய்யும்.

சுதந்திர ஊடகம் என்ற எண்ணக்கரு ஏற்படுவது அதன் உரிமைகளால் மட்டும் அன்று மாறாக ஊடகவியலாளர்களால் அந்த ஊடகத்தின் கொள்கை தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற கருத்திலாகும். ஆனால் அது எந்த அளவுக்குச் சாத்தியமானது என்பது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். அந்தக் கருத்தில் நோக்கும் போது உலகில் எந்தவொரு ஊடக நிறுவனமும் தமது கொள்கையை சுதந்திரமாகப் பெறுகின்றன என்பதைக் காணக்கூடியதாக இல்லை.

ஊடக நிறுவன உரிமை, ஊடகவியலாளர் என்பவற்றை ஆராயும் போது தெரிய வருவது ஊடக நிறுவனத் தலைவர்கள் என்போர் அந்த ஊடகத்தின் உரிமையாளர்களன்று. தலைவர் என்போர் நிறுவன உரிமையாளர்களின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஊழியர்களாவர். உரிமையாளர் மறைந்திருப்பார். ஊடக நிறுவனத்தில் கடமையாற்றுவோர், அதன் பிரதானிகள் பிரபல்யமான பாத்திரங்களாக இருப்பர். அவர்கள் எந்த வேளையிலும் ஊடக நிறுவனத்தின் சார்பில் கருத்து தெரிவிக்க ஆயத்தமாக இருப்பர்.

உரிமையாளர் கட்டியெழுப்பும் ஊடக நிறுவனக் கொள்கைகளைச் செப்பனிடுவோர் அதன் ஊடகவியலாளர்களே. அதற்கான காரணம் ஊடக நிறுவனங்களை நடத்துவதற்கு வாசகர்கள், நேயர்கள், பயனாளிகள் ஆகியோர் தேவையாக இருப்பதாகும். ஊடக நிறுவனங்களின் கொள்கையை அதன் பயனாளிக்குரியபடி வடிவமைத்து ஆக்கரீதியாக முன்வைக்கும் பணியை ஊடகவியலாளர் மிக நேர்த்தியாகச் செய்வதை நவீன பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களை ஆராயும் போது தெரிய வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரம் ஊடக நிறுவனங்களும் சில ஊடகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணலாம். உதாரணமாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் புகைத்தல், மதுபானம் பற்றிய காட்சிகளை ஒளிபரப்புவதை இடைநிறுத்துவதை ஒரு கொள்கையாக நடைமுறைப்படுத்துவதைக் காணலாம்.

### ஆ) ஊடக நிறுவன உரிமையும், ஊடகவியலாளரும்.

இது ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். ஊடகவியலாளர் என்பவர் ஒரு தொழில் வாண்மையாளர். தொழில் வாண்மையாளர் அவருக்குரிய ஒழுக்கக்கோவையைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளார். அத்தகைய ஒழுக்கக்கோவை தானாகவே தயாரித்துக் கொண்டதாகவும் இருக்கலாம். இவ்விதம் தம் சொந்த ஒழுக்கக் கோவையின் அடிப்படையில் கருமமாற்றிய ஊடகவியலாளர் முற்காலத்தில் இருந்ததாகவும் தம் மனசாட்சிக்கு விரோதமாக ஒன்றைச் செய்வதற்கான உத்தரவு மேலிடத்திலிருந்து கிடைக்குமிடத்து தொழிலைத் துறந்துவிட்டு கொள்கையைக் காப்பாற்றிக் கொண்டதாகவும் வரலாறு கூறுகின்றது. அதே போன்று பொது ஒழுக்கக் கோவையைக் கடைபிடிக்கும் கடமையும் ஊடகவியலாளர்க்குண்டு.

ஓர் ஊடகவியலாளரில் ஊடக நிறுவனம் செல்வாக்கு செலுத்துவது எவ்வாறு? முதலாவதாக ஊடகவியலாளர் என்பவர் ஒரு ஊடக நிறுவனத்தில் ஒரு பதவியில் நியமிக்கப்பட்டுள்ள ஒருவராவார். அதற்காக அவருக்குச் சம்பளம் அல்லது வேதனம் வழங்கப்படும். அது அவருக்கு வழங்கப்படுவது அந்த ஊடக நிறுவனத்தின் கொள்கைகளுக்கேற்ப அவர் கடமையாற்றுவதற்காகும். இதன்படி ஊடக நிறுவனத்தின் கொள்கையை மீறிச் செயற்படும் ஆற்றல் ஊடகவியலாளருக்கு இல்லை.

இதனால் ஓர் ஊடகவியலாளர் தமது ஊடகப்பணியைச் செய்யும் போது நிறுவன உரிமைக்கும், தனக்கும் இடையில் ஒரு சமநிலை காணவேண்டி யேற்படும். அதேபோன்று ஓர் ஊடக நிறுவனம் ஓர் ஊடகவியலாளரை வேலைக்கமர்த்தும் போது அதன் உரிமையாளர்கள் உருவாக்குகின்ற கொள்கைக்கிணங்க அப்பதவி வழங்கல் இடம்பெறவேண்டும். இதனை இரு விதமாக விளக்கலாம். ஒரு வழி அனுபவம் வாய்ந்த ஓர் ஊடகவியலாளனை வேலைக்கமர்த்துவதாகும். அத்தகைய ஒரு ஊடகவியலாளர் எப்படிப்பட்டவர் என்பது பற்றிச் சமூகம் அறிந்துள்ள படியால் அவரின் கொள்கையை நிறுவனக் கொள்கைகளுடன் பொருத்திக் கொள்ள முன்கூட்டியே வாய்ப்புக் கிடைக்கும். அதன்படி குறிப்பிட்ட ஊடகவியலாளரைத் தம் நிறுவனத்தின் ஒரு பதவிக்காக நியமிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க உரிமையாளருக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ) ஊடக நிறுவன உரிமை, ஊடகவியலாளர், பயனாளி

மேலே சுட்டிக் காட்டியதன்படி ஊடக நிறுவன உரிமை, ஊடக நிறுவனத்தின் கொள்கை மற்றும் செயற்பாடுகள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ தலையிடும் என்பது தெளிவு. அத்தகைய தலையீடு ஊடகவியலாளரையும் பாதிக்கும். ஊடகவியலாளர் உரிமையாளர் சார்பில் தம் ஊடகக் கருத்துக்களைக் நெறிப்படுத்துவார். அத்தகைய ஊடகப்பணிகளின் இலக்கு அதன் பயனாளிகள் அல்லது பொதுமக்கள் அல்லது இளைஞர்கள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்களாக இருப்பர். இந்தக் கருத்தில் பார்க்கும் போது பயனாளிகள் அல்லது பொது மக்கள் வர்த்தகரீதியான நுகர்வோர் என்ற நிலைக்குத் தள்ளப்படுவதோடு ஊடகவியலாளர் உரிமையாளர் சார்பில் ஊடகப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குபவராக உள்ளார்.

இத்தகைய ஊடக சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாக மீண்டும் மீண்டும் கூறினாலும் உண்மையில் நிகழ்வது அதுவன்று. பயனாளிகள் ஊடகச் சந்தையின் கைதிகளாக ஆக்கப்படுகின்றனர்.

இதிலிருந்து வேறுபட்ட ஒரு ஊடகக் கொள்கையை மக்கள் சேவை ஊடகநிறுவனங்களினால் மட்டுமே வழங்கமுடியும்.

ஊடக நிறுவன உரிமை, ஊடகவியலாளர், பொதுமக்கள் என்ற சங்கிலித் தொடரில் மிகப்பலம் வாய்ந்தவர்கள் பயனாளிகள் அல்லது பொதுமக்களே. ஆனால் தம் பலத்தை அறிந்து கொள்ள அவர்களுக்கு இடமளிக்காத வகையில் ஊடகவியலாளர்கள் தம் நிறுவன உரிமையாளர்களின் கொள்கை சார்ந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள ஊடகங்களை நெறிப்படுத்துவதைக் காணக்கூடியதாயுள்ளது. ஊடகத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் பொறுப்புடனும், போதிய விளக்கத்துடனும் கருமமாற்றுவதன் மூலம் மட்டுமே பயனாளிகள் பாதுகாக்கப்படும் ஆற்றல் கிடைக்கும்.

## ஈ) ஊடக நிறுவன உரிமை வாடிக்கையாளர் மீது செலுத்தும் செல்வாக்கின் இயல்பு

இன்றைய ஊடகத் தொகுதியை ஆராயும் போது தெரிய வருவது, ஊடகங்கள் பொதுமக்கள் மீது ஏற்படுத்தும் செல்வாக்கின் இயல்புகளை விளங்கிக் கொள்ளக்கூட முடியாத அளவுக்குக் குழம்பிப் போயுள்ளது என்பதாகும். நிறுவனத்தின் நடவடிக்கைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக முன்வரும் ஊடக ஆய்வாளர்கள், ஊடக நிறுவன பயனாளிகள் மீது பாரிய செல்வாக்கைச் செலுத்துவதை நிருபிப்பதற்கான ஆய்வுத் தளங்கள் காணப்படவில்லை என்று கூறுகின்றனர்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் சமூகத்தில் தொடர்தேர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்களையும், அண்மிய இரண்டு தசாப்த காலங்களில் சமூகம் வழிப்படுத்தப்பட்டுள்ள திசையையும் நோக்கும்போது மனதைக் கவரும் வகிபாகத்தை ஊடகங்கள் நிறைவேற்றுகின்றன என்பதேயாகும். மிக நியாயமான காரணங்களும் வழக்குகளும் முன்வைக்கப்பட்டு இந்த வகிபாகம் நிறைவேற்றப்படுவதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். சிலபோது அது இளைஞர் குரலாக முன்வைக்கப்படுகின்றது. வேறு சில போது அது பெண்கள் குரலாக வெளிப்படுகின்றது. வேறுசில முறைகளில் ஆகக் கூடிய மக்கள் தொகையினர் பயன்படுத்தும் ஊடகமாக வெளிக்காட்டப்படுகின்றது.

பொதுமக்கள் பக்கமாக நின்று நோக்கும் போது ஊடகங்கள் வெளியிடுவது அவர்களுக்குத் தேவையான விடயங்களை அல்ல. வாடிக்கையாளர்களின் உணர்வுகளைத் தூண்டி, தம் விளம்பரத்தாரர்களின் வர்த்தக நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் விடயங்களே பெருமளவில் வழங்கப்படுகின்றன. மிகச்சிறிய அளவில் அறிவு விருந்து, அழகியல் இரசனை விருத்தி தொடர்பான நிகழ்ச்சிகள் முன்வைக்கப்படுகின்றன. துரதிஷ்ட வசமான நிலமை யாதெனில் அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு அனுசரணையாளர்கள் கிடைப்பதில்லை. எனவே அனுசரணையாளர்கள் தேவைகளை நிறைவேற்றும் நிலமை ஊடக நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஓர் ஊடகத்தின் பயனாளிகள் மீதான செல்வாக்கு எத்தகையது என்பதை விசாரிக்கும் போது தெரியவரும் மற்றுமொரு விடயம் சமூகத்தின் மீது பாரிய செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கான ஊடகங்களின் ஆற்றலாகும். இலங்கையர் சமூகத்தின் நலன்களுக்குத் தேவையான மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்காக ஊடகங்கள் நிறையவே பணியாற்றலாம். ஆனால் கல்வி நிகழ்ச்சிகளை வழங்க ஊடக நிறுவனங்கள் முன்வருவது விளம்பரதாரிகளின் அனுசரணை கிடைக்கும் போதாகும்.

## 4.4 வெகுசன ஊடகநிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள் மீதான அரசாங்கத்தின் செல்வாக்கு

### அ) ஊடக நிறுவனங்களின் வர்த்தக நோக்கம்.

ஊடகம் என்பது சமூகத்தை நெறிப்படுத்தக்கூடிய ஒரு செயலொழுங்காகும். ஆனால் ஊடக நிறுவனம் என்பது ஒரு வணிகமாகும். அதனை நடத்திச் செல்ல மூலதனம் தேவை. பல்வேறு பராமரிப்புச் செலவுகளைச் செய்ய வேண்டியுள்ளது. பத்திரிகை எனின் பாரிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியபீடமொன்று கடமையில் அமர்த்தப்பட வேண்டுமாயின் வாகனங்கள் தேவை. வேறுபல தொழினுட்ப உபகரணங்களும் தேவை. வானொலிச் சேவைகளுக்கு பெருந்தொகையான முதலீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படவேண்டியுள்ளது. பராமரிப்புச் செலவும் ஏராளமுண்டு. தொலைக்காட்சி நிறுவனமொன்றின் நிலை இதனை விடவும் சிக்கலானது. அதனை ஆரம்பிப்பதற்கு பாரிய முதலீடு தேவை. நவீன தொழினுட்ப உபகரணங்களைச் கொள்வனவு செய்ய வேண்டும். அந்த உபகரணங்களைப் பராமரிக்க வேண்டும். அவை காலம் கடக்கும் போது புதியவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டும். ஒரு நிகழ்ச்சியைத் தயார் செய்வதற்கும் கூடப் பெருமளவு செலவுகள் ஏற்படுகின்றன.

இதனடிப்படையில் பார்க்கும் போது ஊடகத்தின் பின்னுள்ள வர்த்தக நோக்கத்தை அதன் நடத்தைக் கோலமே உருவாக்குவது தெரிகிறது. பத்திரிகை நிறுவனமொன்று தனது பத்திரிகைகளை விற்பனை செய்வதன் மூலம் வருமானம் பெறும் ஆயினும் பத்திரிகைகள் அதன் உற்பத்திச் செலவின் விலையில் விற்கப்படுவதாக நீங்கள் நினைக்கின்றீர்களா? முப்பது ரூபா விலை குறிக்கப்பட்ட ஒரு பத்திரிகையின் உற்பத்திச் செலவு நூற்றைம்பது ரூபாய் வரை இருக்கும். அந்த விலைக்கு பத்திரிகைகள் விற்பனை செய்யப்பட்டால் என்ன நடக்கும். விற்பனை நடைபெறாது. அவ்வாறாயின் பத்திரிகையின் விலையை குறைப்பதெப்படி? அதற்காக வேறு வருமான வழிகளைத் தேட வேண்டும். அத்தகைய வருமானங்களினால் பத்திரிகைச் தயாரிப்புச் செலவை ஈடுசெய்ய வேண்டும்.

இவ்வாறு வருமானம் பெறக்கூடிய ஒரு வழி விளம்பரமாகும். ஊடக வரலாற்றை ஆராயும் போது விளம்பரமும், ஊடகமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருப்பதைக் காணலாம். எனவே பத்திரிகைப் பக்கங்களின் இடங்களை விற்பனை செய்வதன் மூலமும் வானொலியில் ஒலிபரப்பு நேரத்தை விற்பனை செய்வதன் மூலமும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு நேரத்தை விற்பனை செய்வதன் மூலமும் வருமானத்தை உழைக்க வேண்டிய நிலை ஊடக நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஊடக நிறுவனங்கள் வர்த்தக நோக்கங்களுக்குபடுவது இதனாலேயேயாகும். ஒரு பத்திரிகையின் பிரதிகளை விற்பனை செய்ய முடியுமாயினும் வானொலி அல்லது தொலைக்காட்சி நேரத்தை மட்டுமே விற்க முடியும். வர்த்தக விளம்பரம், அனுசரணை என்ற இரண்டு வரிகளில் இது நடைபெறும். அனுசரணைகளின் போது குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒலி, ஒளிபரப்பு செய்யப்படும் நேரத்துக்கான கட்டணத்தை வெளியார் நிறுவனம் செலுத்துவதாகும். அவ்வாறு அவர்கள் செய்வது ஒரு விளம்பர நன்மை அவர்களுக்கு ஏற்படுவதால் மட்டுமேயாகும்.



படம் :- 4.4.1 விகார வர்த்தக விளம்பரம்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக கூடிய அளவு மக்களைக் கவராத நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்க வர்த்தக நிறுவனங்கள் முன்வருவதில்லை. எனவே வர்த்தக நிறுவனங்கள் விரும்பும் நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொள்வது இலத்திரனியல் ஊடகங்களது வர்த்தக நோக்கத்தினைச் சார்ந்ததாகும். இதன்படி ஊடக நிறுவனத்தின் கொள்கைக்கும் வணிக சமூகத்தின் நோக்கங்களுக்கிடையே சமநிலை காணவேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்படும்.

### (ஆ) வெகுசனஊடக நிறுவனங்களின் நோக்கங்களுக்கும் அரசாங்கத்தின் நோக்கங்களுக்கிடையேயுள்ள தொடர்பு

ஒரு பக்கத்தில் அரசாங்கம் பல ஊடக நிறுவனங்களின் உரிமையாளராக வுள்ளது. மறுபக்கத்தில் நாட்டைப் பரிபாலிக்கும் பிரதான அதிகார பீடமாகவும் அரசு காணப்படுகிறது. ஒரு நாட்டின் ஊடகமும் அரச கட்டுப்பாட்டுக்குரிய ஒரு விடயமாகும். அரசில் ஊடக அமைச்சர் இருப்பார். அதன்படி அரசாங்கத்தின் நோக்கங்களுக்கும் நிறுவனங்களின் நோக்கங்களுக்குமிடையே தொடர்பு காணப்படுகின்றதா என்பதை விசாரித்துப் பார்த்தல் பயனுடையதாக இருக்கும்.

முதலில் அரசாங்கத்துக்கு ஊடகம் ஏன் தேவை? என்ற வினாவுக்கு விடை காணப்பட வேண்டும். அரசாங்கம் என்பது ஓர் அரசியல் கட்சியின் அல்லது பல கட்சிகளின் கூட்டினால் நடத்தப்படுவதாகும். ஓர் அரசாங்கத்துக்கு அரசியல் நோக்கம் உருவாவது அதனாலாகும். இது எந்த அரசாங்கத்துக்கும் எந்த அரசியல் கட்சிக்கும் பொருந்தும். இரண்டாவதாக அரசாங்கம் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. அரசாங்கத்தை நியமிப்பவர்கள் மக்கள் என்பதால் அரசாங்கம் செய்யும் வேலைகளின் உண்மையான நிலமைகளை அறிந்துக்கொள்ளும் உரிமை மக்களுக்குண்டு.

இதன்படி அரசாங்கமொன்றிற்கு வெகுஜன ஊடகத்தின் சேவை பல காரணங்களினால் தேவைப்படுகின்றது.

1. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய தகவல்களைச் சமூகத்திற்குத் தெரிவிப்பதற்கு
2. அரசாங்கத்தை நடத்துவதற்கான பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு
3. அரசாங்கத்தின் நீண்டகால எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்ளக்கூடிய ஒரு சமூகக் கட்டுப்பாட்டை தாபித்தல்.
4. அரசாங்கத்தின் அபிவிருத்தி சார் பணிகள் பற்றி அபிவிருத்தி நோக்கிலான குறை நிறைகளை எடுத்துக் காட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி மேற்படி விடயங்கள் ஒரு நாட்டின் வெகுஜன ஊடகத்தினால் நிறைவேற்றப்படுமானால் அது அந்த அரசாங்கத்தினதும் அபிலாசையாக அமையும். ஆயினும் நடைமுறையில் அவ்வாறு நிகழ்வதில்லை. அதற்கான காரணம் தனியார் உரிமையுள்ள வெகுசன ஊடகங்கள் அதன் உரிமையாளரின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்ப கருமமாற்றுவதாகும். அது எந்த அரசாங்கத்தினதும் நிகழ்ச்சித்திட்டத்துடனும் ஒத்துப் போகாத ஒன்றாக இருக்கலாம்.

இதனால் அரசாங்கம் வெகுஜன ஊடகங்கள் தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன? என்ற கேள்வி எழுகின்றது. நவீன சமூகத்தில் ஊடக உரிமை என்பது ஒரு மனித உரிமையாக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் அதனைக் கட்டுப்படுத்துவதும் சிரமமாக உள்ளது. ஆகவே இங்கு அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கையாக இருப்பது தனக்கென ஊடகங்களை உருவாக்கி மேற்படி நோக்கங்களை அடைந்து கொள்வதாகும். அரசாங்கம் தனக்கு உரித்தான வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் கருத்தை சமூகமயப்படுத்தும் அதே நேரம் தனியார் வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்தி தமது நிகழ்ச்சித் திட்டத்துக்கேற்ப கருமமாற்றுவர். இதன்போது சில வேளை அரச, தனியார் வெகுசன ஊடகங்களிடையே ஒரு ஒருமைப்பாடு காணப்படவும் முடியும். எனினும் அவ்வாறு தொடர்ந்து நடைபெறாமைக்கான காரணம் அதன் மூலம் வெகுசன ஊடகங்களின் வர்த்தக நோக்கம் முறிவடைவதனாலாகும். பொதுமக்கள் எப்போதும் உணர்வு பூர்வமான ஊடகக் கலை குறித்து ஆர்வம் செலுத்துவதென்பது பொதுவான விடயமாகும். இத்தகைய நிலமையை பாதுகாக்க முடியுமாவது சமூகத்தில் முன்வைக்கப்படும் தகவல்களிடையே ஒரு மோதல் ஏற்படுவதன் மூலமாகும். எனவே அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் வெகுசன ஊடக நிறுவனங்களின் நோக்கத்துக்குமிடையே ஒருமுகப்பாட்டை எதிர்பார்க்க முடியாது. பல்வேறு அந்தரங்கத் தகவல்கள், ஊழல் மோசடிகள் பற்றி வெளிப்படுத்துவதற்கு இம்முரண்பாட்டு நிலமையைப் பயன்படுத்திக் கொள்வதை இன்றைய ஊடகப்பரப்பில் காணக்கூடியதாயுள்ளது.

**இ) வெகுசன ஊடக நிறுவனங்கள் மீதான அரசாங்கத்தின் கடமைகளும், பொறுப்புக்களும்.**

சீரான ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு சுதந்திரமான ஊடகத்தொழில் ஒரு நாட்டில் இருக்க வேண்டும். எந்த ஒரு வெகுசன ஊடகத்திற்கும் உரிமையாளர் அல்லது உரிமையாளர்கள் இருப்பது உண்மையாகும். அவர்களின் தனிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இத்தகைய வெகுசன ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களிடையே நேரடியாக அல்லது மறைமுகமாக முன்வைக்கப்படுவதும் உண்மையாகும். அவ்வாறாயினும் அதனை ஒரு சனநாயகச் சமூகத்தின் இயல்பாகக் கருதி வெகுசன ஊடகங்கள் சுதந்திரமாக இயங்க இடமளிப்பது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் அனைத்து மக்களது பொறுப்பாளர் என்ற எண்ணக்கருவிற்கமைய மக்கள் பிரதிநிதித்துவத்தில் நிலவும் பல்வேறு இயல்புகளை, பல்வேறு பணிகளை சமூகநிலைப்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஊடகத்தொழிலின் பக்கத்திலிருந்து நோக்கினால் அரசாங்கத்தின் கடமையும், பொறுப்பும் வழிப்படுத்தப்பட வேண்டிய இருவழிகளுண்டு.

அதில் ஒன்று, உயர் ஊடகத்தொழில் வாண்மையொன்றைப் பேணுவதற்கும், ஊடகத்தொழில் வாண்மையை விருத்தி செய்வதற்குமான அரச வசதிகள் உதவிகள், அவகாசங்களை விரிவுப்படுத்துவதாகும். இரண்டாவது ஊடகங்களின் பிடியில் சிக்கும் பொதுமக்களின் ஊடக அறிவை விருத்தி செய்யத்தேவையான கல்வி வாய்ப்புக்களை வழங்குவதாகும். இவ்வாறு தான் ஊடகக் கைத்தொழிலை சீரான நிலமைக்குக் கொண்டு வர முடியும்.

### ஈ) ஊடகத்தொழில் மீது அரசாங்கத்தின் நேரடி மறைமுகத் தலையீடுகள்.

இத்தலைப்பு தொடர்பான விடயங்களைப் பொறுத்தமட்டில் இலங்கையில் நல்ல அனுபவங்கள் நிகழ்ந்து உள்ளன. அரசாங்கத்தின் நேரடித் தலையீடாக ஏற்கனவே சுட்டிக் காட்டியதன்படி பத்திரிகை நிறுவனங்களை அரசுடமையாளர்கள், முத்திரையிடல் என்பனவற்றை கூறலாம். விசேட சமூக நிலமைகளின் போது ஒவ்வொரு காலப்பகுதியில் அரசாங்கம் அத்தகைய தீர்மானங்களை எடுத்துள்ளமையை இலங்கையின் ஊடக வரலாற்றைப் படிப்பவர்கள் தெரிந்து கொள்ள முடியும். இத்தகைய நேரடித் தலையீடுகளுக்கு மேலதிகமாக பல்வேறு மறைமுகத்தலையீடுகள் அவ்வப்போது நடைபெறுவதுண்டு. ஊடகவியலாளர்களின் பதவிகளை மாற்றுதல் அவர்களின் கடமை இயல்புகளை மாற்றுதல் என்பன இவற்றுள் சிலவாகும்.

அதே போன்று மக்கள் பாதுகாப்பு தொடர்பான சில நடவடிக்கைகளின் போது வெகுஜன ஊடகங்கள் மீது அரசு சில மட்டுப்பாடுகளை விதிக்க நேரிடும். உதாரணமாக அவசரக்காலச்சட்டத்தின் கீழ் ஊடகத் தகுதி வாய்ந்த அதிகாரிகளை ஊடக நிறுவனங்களுக்கு நியமித்தலைக் கூறலாம். அதன் போது இடப்படும் நியமனங்களினால் வெகுஜன ஊடகங்களின் சுதந்திரச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. செய்திகளை வெளியிடுவதற்காக தகுதி வாய்ந்த உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருப்பது இம்மட்டுப்பாட்டுக்கான காரணமாகும். ஆயினும் இத்தகைய மட்டுப்பாடுகள் குறுகிய காலத்தில் தளர்த்தப்படும்.

பத்திரிகை ஊடகத்தை முறைப்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட இலங்கைப் பத்திரிகையாளர் சபையும் ஒருவகை அரசாங்கத் தலையீடாகும். பத்திரிகைச் சபைச் சட்டமூலத்தில் குறிப்பிட்டுள்ளமைக்கமைய பத்திரிகையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கக் கோவையொன்று வெளியிடப்பட்டுள்ளது. (இது பற்றி தரம் 11 நூலில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது) அதிலுள்ளதன் படி ஒரு பத்திரிகையாளர் தமது தகவல்கள் மூலங்கள் நீதிமன்றத்தின் முன் கூட வெளியிடாதிருப்பதற்கான சட்டப் பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது.

வெகுஜன ஊடக நிறுவனங்களின் செயற்பாடு குறித்து அரசாங்கத்தின் மறைமுகமான தலையீடுபற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து முன்வைக்கப்படுவதைக் காணலாம். ஒரு பக்கத்தில் பார்க்கும் போது அத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான சான்றுகள் பத்திரிகை நிறுவனத்திடம் இருக்கலாம். மறுபக்கத்தில் அவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருப்பதனால் அரசாங்கத்தின் தலையீட்டுக்கான தூண்டல் இழிவளவாகின்றது.

எல்லா நாடுகளிலும் போல இலங்கையிலும் எந்த ஒரு அரசாங்கத்துக்கும் வெகுஜன ஊடகங்களுக்குமிடையில் முடிவற்ற போராட்டம் காணப்படுகின்றது. அப்போராட்டம் வெகுஜன ஊடகங்களின் நிலவுகைக்கு மட்டுமன்றி அரசாங்கத்தின் நிலவுகைக்கும் அனுகூலமாகவுள்ளது. ஏனெனில் உண்மையை அறிந்து கொள்வதற்கும் உண்மையென முன்வைக்கப்படும் போலிகளை ஊடுருவிப் பார்க்கவும் இப்போராட்டம் உதவுகின்றது என்பதனாலாகும்.

**ஒப்படை 4**

1 இலங்கையின் ஊடக நிறுவனங்களின் வளர்ச்சியை விபரிக்குக.

2 ஒரு வெகுஜன ஊடக நிறுவனத்தின் உள்ளக செயற்பாட்டின் இயக்கத்தை விளக்குக.

3 வெகுஜன ஊடக நிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள் எவையென சுட்டிக்காட்டுக.

4 வெகுஜன ஊடகங்கள் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகள் எவையென விபரிக்குக.

5 வெகுஜன ஊடகங்களின் நிலவுகை பெரும்பாலும் வர்த்தக விளம்பரங்களுக்குள்ளேயே தங்கியுள்ளது. இதுபற்றிய உங்களது கருத்தை முன்வைக்குக.

6 உங்கள் பிரதேசத்தில் பழுதடைந்துள்ள பாதைபற்றிய ஒரு செய்தியை தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்புவதற்காக தயார் செய்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 5 ஊடகப் பிரதிநிதித்துவக் கல்வி




## நோக்கம்

ஊடகங்கள் மூலம் பல்வேறு விடயங்கள் பல்வேறு வடிவங்களில் முன்வைக்கப்படுகின்றன. செய்திகள், சங்கீதம், நாடகம், நகைச்சுவை நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், என்பன அத்தகைய சில மாதிரிகளாகும். இம்மாதிரிகளுக்கும் அவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முகவர்களுக்கும் இடையிலான தொடர்பைச் சரியாக ஒரே பார்வையில் இனங்கண்டு கொள்ளும் தேர்ச்சி ஒவ்வொருவரிடமும் விருத்தியடைய வேண்டும். பொருளாதார சமூகத் தொடர்புகள், தொழிலும், உழைப்பும், அழகியல், மனித உரிமைகள், ஆண்பெண் சமூக நிலை ஆகிய பல பிரிவுகள் இதிலடங்கும். ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எமது வாழ்க்கைக்கு உதவும் நல்ல விடயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில், அந்த முகவர்களின் உண்மைநிலையையும், நியாயத்தையும் தர்க்க ரீதியாகச் சீர்தூக்கிப் பாரக்கவேண்டும். அத்தகைய விசாரணைக்கான தர்க்க ரீதியான அறிவாற்றலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான தேர்ச்சியை உங்களிடம் விருத்தி செய்வது இவ்வத்தியாயத்தின் எதிர்ப்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

மனிதன் உலகில் தோன்றிய காலம் முதற்கொண்டே மானிடத் தொடர்பாடலும் தோன்றியது. மனித சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை ஆராய்வது தொடர்பாடலின் பரிணாம வளர்ச்சியை ஆராய்வதைப் போன்றதாகும் எனலாம். மானிட சமூகத்தின் விருத்தியுடன் தொடர்பாடல் ஒன்றிணைந்து காணப்படுவதே இதற்கான காரணமாகும். அது ஒரு இணைபிரியாத தொடர்பாகும். ஆயினும் வெகுஜன ஊடகம் கைத்தொழில் வளர்ச்சியிலேயே தோற்றம் பெற்றது.

வெகுஜன ஊடகம் அச்சு, இலத்திரனியல் என இருவகையாகப் பிரிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். இலத்திரனியல் ஊடகத்தை செவிப்புல, கட்புல செவிப்புல, பல்லூடகம் எனவும் வகைப்படுத்த முடியும். பல்லூடகம் என்பது கட்புல, செவிப்புல எழுத்து ஊடகங்கள் இணைந்துள்ள இணையமாகும். இவ்வனைத்து விடயங்களையும் ஆராய்ந்து அதனை மானிடப் பரிணாமத்துடன் ஒப்பிடும் போது வெகுஜன ஊடகத்துக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டென்பது தெளிவாகும்.

சமூகமானது சிக்கலான ஓர் அமைப்பாகும். அது பல்வேறு தொடர்புகளினால் உருவானதாகும். இத்தொடர்புகள் வலை போன்று ஒன்றுடனொன்று கட்டுண்டுள்ளது. அத் தொடர்புகளின் அடிப்படையிலேயே சமூகம் நிலவுகின்றது. அத்தகைய தொடர்புகள் பல்வகைப்படும். அவை சிக்கலானதாகவும் இருக்கும். ஆயினும் அந்த அனைத்துத் தொடர்புகளும் தொடர்பாடற் செயலுடன் இணைந்துள்ளன. இவ்விணைப்பின் அடிப்படையாக இருப்பது அச்சமூகத்தின் கலாசாரமாகும். எனவே ஒவ்வொரு சமூகச் செயற்பாடும் அதற்கேயுரிய கலாசார அர்த்தத்தைக் கொண்டுள்ளது.

வெகுஜன ஊடகம் இச்சமூகக் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இச்சமூகக் கருத்துக்களை, சமூகக் குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் ஒருவரின் செயற்பாடு தொடர்பாக உள, கலாசார, செயலொழுங்கின் ஊடாகவும் சமூக கலாசாரம் என்ற வகையிலும் மனித நடத்தைகளின் துணையுடன் வரைவிலக்கணப்படுத்தலாம்.

ஊடக நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடும் போது இத்தகைய விளக்கமின்மையின் பெறுபேறாக அமைவது அவை எமது வாழ்க்கையில் மட்டுமன்றி மொத்த சமூகத்தின் மீதும் மோசமான தாக்கத்தைச் செலுத்துவதாகும். ஊடக நிகழ்ச்சிகளைத் தயாரிப்போர் இத்தாக்கம் பற்றிய பொறுப்புடன் கருமமாற்றுகின்றனரா என்பதைப் புலனாய்வு செய்யும் ஆற்றலும் பயனாளிக்கு இருக்க வேண்டும்.

 இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.1 சமூகப் பிரதிநிதித்துவக் கற்கை

ஊடகம் பல்வேறு மாதிரிகளுடாக பொதுமக்களை நெருங்குவதாக முன்னர் சுட்டிக்காட்டப்பட்டது. இம்மாதிரிகளை நீக்கிப் பார்க்குமிடத்து ஒவ்வொரு முன்வைப்புக்குள்ளும் உள்ள சமூகக் கருத்து எது என்பதைக் கற்பதே சமூகப் பிரதிநிதித்துவக் கற்கையாகும்.

உதாரணமாக செய்திகள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சமூகப் பின்னணி எது என்பது பற்றி ஆராய முடியும். சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளின் முதற் பக்கங்களில் பிரதான செய்திகளாக வருவது உணர்வு பூர்வமான தகவல்களாகும். குற்றங்கள், கொலைகள் பற்றிய செய்திகளாகவும் அவை இருக்கலாம். ஆனால் ஆங்கிலப் பத்திரிகையின் பிரதிநிதித்துவம் வேறுபட்டதாகும். சிலவேளை அதன் தலைப்புச் செய்தி அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் பற்றியதாக இருக்கலாம். ஒரே நாட்டில் பிரசுரிக்கப்படும் இப்பத்திரிகைகளில் சமூக பிரதிநிதித்துவம் வேறுபட்டதற்கான காரணம் என்ன? அது அப்பத்திரிகைக் கொள்வனவு செய்பவர்களைத் தூண்டும் காரணிகளுடன் தொடர்புபட்டதாகும். சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளின் வாசகர்களை பத்திரிகையை வாங்கச் செய்யவும் அதனை வாசிக்கச் செய்யவும் எத்தகைய சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையிலான செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும் என்பதை ஊடகவியலார்கள் தீர்மானிக்கின்றனர்.

மறுபுறமாக தொலைக்காட்சியில் ஓர் இசை நிகழ்ச்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் எத்தகைய சமூக, கலாசாரப் பின்னணியைக் கொண்டவர்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இவ்விசை நிகழ்ச்சிகளில் பாடகர்கள் ஆடையணியும் விதம், அவர்களின் அங்க அசைவுகளின் இயல்புகள், அவர்களின் முகங்களில் தெரியும் விசித்திரங்கள், பாடல் வரிகள், அவை உச்சரிக்கப்படும் விதம், பயன்படுத்தப்பட்டுள்ள இசை, காட்சிகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ள கருத்துக்கள் போன்றவற்றைக் கவனமாக பரிசீலனை செய்து பார்த்தால் தெரிய வருவது, அவற்றில் பெரும்பாலான விடயங்கள் ஒரு குறிப்பிட்ட சமூக நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். அது நம்மையும் அந்த மேல் நாட்டு இசையின் பால் தூண்டுகிறது. இத்தகைய இசை நிகழ்ச்சிகளைத்தொடர்ந்து உருவாக்கும் போது எமது இரசனை உணர்வுக்கு என்ன நடக்கும்? பல்லுருக் கோலங்கள் மூலம் நடிகநடிகைகள், அறிவிப்பாளர்கள், விரிவுரையாளர்கள் தோன்றும் விதத்தை ஆராயும் போது ஒவ்வொரு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் சமூகப் பிரதிநிதித்துவத் தாக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். வானொலி, பத்திரிகைகளுடாகவும் இத்தாக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ) குடும்ப கட்டமைப்பு

குடும்பம் சமூக ஒழுங்கமைப்பில் மிகச்சிறிய அலகாகும். ஆயினும் அது சமூகத்தின் மிக முக்கிய அலகாகும். ஒரு குடும்பத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படும் நோக்கத்தை அடைந்து கொள்வதில் குடும்பத்தின் தொடர் பாடல் செயன்முறை முக்கிய இடத்தை வகிக்கிறது. அத்துடன் வெகுஜன ஊடகங்களினூடாக குடும்பக் கட்டமைப்பில் சீரான செல்வாக்கைச் செலுத்தக் கூடிய நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து கொள்வதும் ஒரு முக்கிய காரணியாகும்.

குடும்பம் என்பது சிறியதும் இயற்கையானதுமான ஒரு ஒழுங்கமைப்பாகும். அதன் கட்டமைப்பு உறவின் அடிப்படையில் அமைந்துள்ள அந்த உறவுகளை குடும்ப கட்டமைப்புக்குள் உள்வாங்கியிருப்பது எதனால்? புதிதாகப் பிறந்த குழந்தையின் உடல் உளப் போசாக்கை அடிப்படையாகக் கொண்டே ஆகும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால் அக்குழந்தையை உடல்ரீதியாக ஊட்டமளித்து சமூகத்திற்கும் பொருத்தமான பிரசையாக ஆக்குவதாகும்.



படம்:- 5.1.1
குடும்ப கட்டமைப்பு

குடும்பத்தின் மூலம் எதிர்ப்பார்ப்பது சமூக நிலவுகைக்குப் பொருத்தமான அங்கத்தவர்களைத் தோற்றுவிப்பதாகும். அத்துடன் சமூக அங்கீகாரம் பெற்றுள்ள நன்மை தீமைகளை, விழுமியங்களை, பெறுமானங்களை புதிய அங்கதத்தவருக்குக் கற்பிக்கும், வழங்கும் ஒரு பிரதான வழியாகவும் குடும்பம் திகழ்கிறது.

குடும்பத்தில் சமூகமயமாக்கல் செயற்பாடு நடைபெறுவது தொடர்பில் நடத்தைக் கோட்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. அது தூண்டற் துலங்களில் தங்கியுள்ளது. அதாவது குடும்பச் சூழலில் அதன் உறுப்பினர்கள் குழந்தைக்கு வழங்கும் தூண்டல் மற்றும் குழந்தையின் செயற்பாடு குறித்துக் குடும்பத்தின் அங்கத்தவர்களின் துலங்கல் என்பதே இதன் மூலம் விளக்கப்படுகிறது.

ஒரு சமூகத்துள் பிரவேசிப்பது குடும்பத்தின் ஊடாகவே ஆகும். அது மிக உயர்ந்த, நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தும். உணர்வு நேசம், நம்பிக்கை, சுயதேடல், அர்ப்பணிப்பு என்பவற்றைக் குடும்ப உறவில் கண்டு கொள்ளலாம். நெருக்கமான உறவு என்பது இங்கு மிக முக்கியமாகும்.

கீழைத்தேச குடும்பங்களுக்கும் மேலைத்தேச குடும்பங்களுக்குமிடையே பல வேறுபாடுகள் உண்டு. மேலைத் தேசத்தவர்களின் தொடர்புகள், உணர்வுகள், பரஸ்பர இணைப்பு, எதிர்ப்பார்ப்புகள், பிரச்சினைகளை எதிர் கொள்ளல், தீர்மானம் எடுத்தல் போன்றவற்றில் இவ்வேறுபாடு தெளிவாகத் தெரியும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இங்கு கவனம் செலுத்த வேண்டிய விடயம் யாதெனில், எமது வெகுஜன ஊடகங்கள் எத்தகைய குடும்பமொன்றை எடுத்துக் காட்ட முயல்கிறது என்பது பற்றியாகும். அது உள்நாட்டுக் குடும்பக் கூட்டமைப்பா? வெளிநாட்டுக் குடும்ப கட்டமைப்பா? அது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தும் வகையிலான குடும்பக் கட்டமைப்பா? அல்லது சுயநலமிகளாக தத்தமது தனிப்பட்ட இலக்குகளை மட்டும் அடைந்து கொள்ளப்பாடுபடும் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பக் கூட்டமைப்பா? ஊடகங்கள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுவது இவற்றில் எந்தக் குடும்பத்தை என்பது தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு நடுநிலையான ஒரு மதிப்பீட்டைச் செய்ய வேண்டியது அவசியம்.

## ஆ) ஆண் - பெண் சமூகத்தன்மை

ஆண் பெண் சமூகநிலை பற்றிய எண்ணக்கரு 1970களிலேயே சமூக விஞ்ஞானத் துறையுடன் இணைந்து கொண்டது. இந்த எண்ணக்கரு மூலம் விளக்கப்படுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் இச்சமூகம் உருவாக்கி ஒப்படைத்துள்ள பொறுப்புக்கள், பணிகள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மரபு ரீதியான செயற்பாட்டுத் தொகுதியின் வகிபாகமாகும். அது சமூகத்தினால் உருவாக்கப்பட்டு விதிக்கப்பட்டுள்ள பணிகள், பொறுப்புக்கள், நடத்தைக் கோலங்களுடாகச் செயற்படும் ஒரு தெளிவுப்படுத்தல் அல்ல. அது சமூகத்தினால் உருவாக்கி ஒப்படைக்கப்பட்ட பணிகள், பொறுப்புகள் நடத்தைக் கோலங்கள் துணையுடன் அமையும் வரை விலக்கணமாகும். அதன்படி உயிரியல் ரீதியாக ஆணையும் பெண்ணையும் வெவ்வேறாக வரைவிலக்கணப்படுத்தினாலும் சமூகத்தில் வாழும் ஒருவர் என்ற வகையில் ஆணையும், பெண்ணையும் வெவ்வேறாக வரைவிலக்கணப் படுத்தமுடியாது என்பதே இங்கு கருதப்படுவதாகும்.

உலகின் முனனேறிய நாடுகளில் ஆண் பெண் சமூக நிலைக்கு பரந்த அடிப்படையில் சமமானதன்மை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நிலவும் சமூக பொருளாதார செயற்பாடுகளில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இச்சமத்துவத்தை நடைமுறையில் முழுமையாகக் காணமுடியாதுள்ளது. ஆனால் பொதுவாக நோக்கினால் கல்வி மற்றும் தொழில் துறைகளில் ஆண், பெண் சமூக நிலை பற்றிய ஒரு சிறந்த வரைவிலக்கணம் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது ஆண்கள் படிக்க வேண்டியவை, பெண்கள் படிக்க வேண்டியவை என்ற பாகுபாடு இல்லை. தமது விருப்புக்கும் ஆற்றலுக்குமேற்ப எதனையும் கற்பதற்கும் எந்த ஒரு தொழிலையும் செய்வதற்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும் அவகாசமுண்டு என்பது இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஊடகங்களினால் இது எவ்வாறு பிரதிநிதித்துவப்படுகிறது? நாம் எதிர்பார்க்கும் நிலையை அடைவதற்கான மனப்பாங்கை விருத்தி செய்ய வேண்டியது ஊடகங்களின் பணியாகும். அதாவது ஆணையும், பெண்ணையும் சமமின்மையாக முன்வைக்கும் நிகழ்ச்சிகளின் அளவு குறைக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக அவர்களிடையே காணப்படும் பரஸ்பரத் தொடர்பும் சமத்துவமும் வெளிக்காட்டப்படும் நிகழ்ச்சிகள் ஊடகத்தின் முன் வைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக நடைமுறையிலுள்ள சமமின்மை விமர்சனத்துக்குள்ளாகும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஊடகங்களில் முன்வைக்கலாம். ஊடகப் பிரதிநிதித்துவங்களை ஆராயும் போது உண்மையில் ஊடகங்கள் என்ன செய்கின்றன என்பது பற்றிய உங்களது தீர்ப்பை நீங்கள் வழங்க வேண்டும்.



படம்:- 5.1.2 கல்வி தொழில் வாய்ப்புக்காக ஆண் பெண் வேறுபாடு தாக்கம் தராது

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உள்ளக மாதிரி (Domestic) விசித்திரத்தன்மை வாய்ந்ததாக (Romantic) ஆவதற்கு காரணம் பெரும்பாலும் பெண்களை இலக்காகக் கொண்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதுடன் அவற்றைத் தயாரிப்பவர்களும் ஆண்கள் கோணத்திலிருந்து பெண்களைப் பார்க்கும் கண்களாலேயாகும். இத்தகைய நிகழ்ச்சிகள் காரணமாக பெண் என்பவள் மென்மையான, வீட்டு வேலைகளைச் செய்யும், குழந்தைகளை வளர்க்கும் அலங்காரமான ஒருவராக முன்வைக்கப்படும் வரைவிலக்கணங்களே அதிகரித்துள்ளன.

வெகுஜன ஊடகங்களில் ஏராளமான பெண்கள் தோன்றினாலும் அவர்களுள் தீர்மானமெடுக்கும் மட்டத்திலுள்ளவர் வெகுசிலரே. பெண்ணை வீட்டு எல்லைக்குள் மட்டுப்படுத்தி வைக்க ஊடகங்கள் முயற்சி செய்வதாக மானிடவியல் ஆய்வாளர்கள் குறை கூறுகின்றனர். வீட்டுப் பின்னணியில் பெண், சமூக ரீதியாக குறைத்து மதிப்பிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

பண்டைய சமூகத்தில் பெண் சமூகத்திற்குட்பட்டு வாழ்ந்ததாக அறிய முடிகிறது. பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க சமயத்தவர்களின் கோணங்களில் பெண் ஒரே விதமாக வரைவிலக்கணப்படுத்தப்படுவதுமில்லை.

ஊடகச் செய்திகளில் பெண்ணுக்கு இரண்டாம் இடமே கிடைக்கிறது. மலர்க்கண்காட்சி, கைப்பணி, சமையல் என்பவற்றோடு அவள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளாள். பெண் மற்றவருக்காக மறறவர்களைத் திருப்திப்படுவதற்காக இருப்பவளாக ஊடகங்கள் காட்டுகின்றன. விளம்பரங்களின் போது பெண் உருவம் பரந்த அடிப்படையில் பயன்படுத்தப்படுவதுடன் அங்கு அவர்களின் உருவம் விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது. பெண்ணின் உன்னத பண்புகள் இத்தகைய விளம்பரங்களின் போது வெளிக்கொணரப்படுவது மிகவும் குறைவு. பெண்ணிடமுள்ள சமூகப்பணிகளில் ஈடுபடுமியல்பு அங்கீகரிக்கப்படல் வேண்டும். பெண்ணுக்குரிய சமூகத் தோற்றம் அவருக்குக் கிடைக்க வேண்டியிருப்பினும் இப்பணியில் இதுவரை முழுமையாக ஊடகம் இறங்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்தது என்பதால் அவர்கள் சரியாகப் பிரதிநிதித்துவப்படுகின்ற வகையிலான ஒரு ஊடகம் உருவாக்கப்படுவது அச்சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஏதுவாகும். ஆனால் அது அவ்வளவு இலகுவான காரியமன்று. அதற்கான ஒரு காரணம் ஊடகங்கள் தம்மைப் பயன்படுத்தும் விதம் பற்றியோ ஊடகங்கள் மூலம் தாம் காட்சிப்படுத்தப்படுகின்ற விதம் பற்றியோ போதிய விளக்கம் பெண்களிடம் காணப்படாமையாகும். சிலவேளை அவ்விதம் தாம் சித்தரிக்கப்படும் விதத்தை பெண்கள் விரும்புவதாகக் கூடத் தெரிகிறது. இதனால் இவ்வியல்பை தொடர்ந்தும் ஊடகங்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுவதற்கு ஊடகத்திற்கு அவகாசம் கிடைத்துள்ளது.

## இ) இனத்துவம்

இனத்துவம் என்பது சமூகக் கட்டமைப்பில் உள்ள ஓர் இயற்கையான அங்கமாகும். சமூகம் முன்னேற்றமடையும் போது இனத்துவத்தை விஞ்சி குடியுரிமை எண்ணக்கருவாக அது மாறும். எவ்வாறாயினும் உலகில் வாழும் ஒவ்வொருவரும் தனது இனத்துவம் பற்றிய பெருமிதத்துடன் அதனை மதிக்கவும் ஏனையவர்களின் இனத்துவம் பற்றி மதிக்கவும் சமூகம் பழக்கப்படல் வேண்டும். எவருக்கும் தான் சார்ந்த இனம் பற்றியும் கலாசாரம் பற்றியும் ஒரு பெருமிதத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஆயினும் அது அதே போன்ற மற்றுமொரு இனக்குழுவை இழிவுபடுத்துவதற்கான காரணமாக அமையக் கூடாது.


படம்:- 5.1.3 இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடாகும்

இனம் என்பது ஒரு மொழி அல்லது சமயம் அல்லது பொதுகலாசாரத்தின் அடிப்படையில் இணைந்துள்ள மக்கள் கூட்டமாகும். இத்தகைய மக்கள் குழுக்கள் தமக்கேயுரிய தனித்துவத்துடன் வாழ்கின்றனர். மக்களின் உடற்தோற்றத்துக்கும் அவர்களின் ஆளுமை, நுண்ணறிவு, கலாசாரம் தொடர்பான இயல்புகளுக்குமிடையே காரண காரிய தொடர்புண்டு என்ற கருத்தின் அடிப்படையில் இனங்கள் தோன்றியுள்ளன இது ஒரு சமூக ரீதியான வகைப்படுத்தலாகும். ஒவ்வொரு சமூகமும் செலுத்தும் கவனத்தைப் பொருத்து இவ்வகைப்படுத்தல் நடைபெறும்.

ஓர் இனம் மற்றைய இனத்தைவிட உயர்ந்தது. அல்லது தாழ்ந்தது என்ற நம்பிக்கையினால் உருவாகும் இனவாதம், பரஸ்பர நம்பிக்கைக்கு அப்பாற் சென்று செயல் வடிவம் பெற முடியும். ஓர் இனம் மற்றைய இனத்தை இழிவுப்படுத்துதல், அவமானப்படுத்துதல், பொறாமை கொள்ளல், குரோதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுதல், குறைத்து மதிப்பிடல், ஓரங்கட்டல், உரிமைகளை மீறல், இம்சைப்படுத்துதல், தாக்குதல் என்பன இனவாதத்தின் இயல்புகளாகும்.

இனங்கள், பெரும்பான்மை, சிறுபான்மை, பெரும்பான்மை இனத்தவர், சிறுபான்மை இனத்தவர் என்று பாகுப்படுத்தப்படுவதும் இந்த அடிப்படையிலாகும். மனிதர், தனியாள் என்ற வகையிலும் சமூகம் என்ற வகையிலும் பல்வேறு விடயங்களால் வேறுபடுகின்றனர். கூட்டமாக வேறுபட்டு நிற்பது இனம் என்று வரைவிலக்கணப்படுத்தப்படும். அத்தகைய இனம் பேசும் மொழி, பின்பற்றும் சமயம் அல்லது வாழும் பிரதேசத்தைப் பொறுத்து இவ்வேறுபாடு ஏற்படும். ஆயினும் இனம் என்பது வரைவிக்கணப்படுத்துவதற்கு வேறுபட்ட பிரதேசத்தில் வாழ வேண்டும் என்றில்லை.

பொதுவான ஒரு ஆதிமனிதனின் வழித்தோன்றல்கள் தாம் என்பதை அடிப்படையாகக் கொண்டு தான் அவ்வினத்தைச் சேர்ந்தவர் என்று கருதும் தனியாள் கூட்டம் சமூக இனக்குழுவாகும். இக்குழுக்களில் காணப்படும் தனித்துவமான இயல்புகள் இனத்துவ தனித்துவம் உருவாக்குவதற்கான உரிமைகள், மற்றும் சுதந்திரம் என்பன வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள விதத்துக்கேற்ப கருமமாற்ற முடியும்.

ஊடக நிறுவனங்கள் தம் ஊடக உரிமையையும் அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்தி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதுடன் சிறுபான்மைக் குழுக்கள் தமக்குப் போதிய அளவு பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். தொலைக்காட்சி, வானொலி அலைவரிசையிலும் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் தமக்குப் போதியளவு இடமோ, நேரமோ ஒதுக்கித்தரவேண்டுமென்பது அவர்களது கோரிக்கையாகும். இனவாத சமயவாத கலாசார அடிப்படைகளைக் கொண்ட பத்திரிகைகள், வானோலி தொலைக்காட்சி அலைவரிசைகள் உருவாவதும் இதன் பின்னணியிலாகும்.

இனவாதத்தை வெகுஜன ஊடகங்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துதலை நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்ய முடியும். நேரடியான பிரதிநிதித்துவம் சமூகத்துக்கு உடனே தெரியும். ஆனால் மறைமுகமாக நிகழும் பிரதிநிதித்துவம் அவ்வாறு தெரியாது. உதாரணமாக ஒரு நாட்டில் மூன்று இனங்கள் வாழ்வதாக எடுத்துக் கொள்வோம். எண்ணிக்கை ரீதியில் அவர்கள் சமமாக இல்லை. ஆயினும் இனங்கள் விளக்கப்படும் போது மூன்றும் அளவுரீதியாகச் சம அளவில் விளக்கப்பட வேண்டும். செய்திகள், கலந்துரையாடல்கள், சிறப்பு நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகளின் போதும் இத்தகைய சமப் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதன் மூலம் அவ்வூடகத்தின் சமநிலைத்தன்மை தோற்றுவிக்கப்படும். ஆனால் எமது நாட்டு ஊடகங்களில் இச்சமநிலை பேணப்படுகிறதா? எமது நாட்டில் உதாரணம் எடுப்பதாயின் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற இனங்கள் சமமாக சித்தரிக்கப்படுகின்றனவா? சிங்கள மொழிமூலத்தில் ஒரு விதமாகவும், தமிழ் மொழி மூலத்தில் மற்றுமொரு விதமாகவும் இனத்துவம் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது. இது ஒரு நாட்டுக்குகந்த ஊடகக் கொள்கையன்று.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ) சமூக வகுப்புக்கள்

சமூக சமமின்மையின் பெறுபேறாவே சமூக வகுப்புகள் தோன்றுகின்றன. ஒரு மக்கள் குழு சமூகத்தில் அவர்களின் இயல்பு காரணமாக பயன்களை அனுபவிக்கும் விதமும் அவர்கள் பெறும் பணிக் கொடைகள் சலுகைகளின் அடிப்படையில் அவர்கள் வகைப்படுத்தப்படல் சமூக வகுப்பு என வரைவிக்கணப்பட்டுள்ளது. இங்கு நாம் கவனம் செலுத்த வேண்டியது. எவ்வளவு முன்னேறிய ஒரு சமூகத்திலும் சமூக வகுப்பு காணப்படவே செய்யும். சமூக வகுப்பு தோன்றுவதற்கான பிரதான காரணி பொருளாதாரமாகும்.

வகுப்பு முறை என்பது சாதி முறை போன்று மூடப்பட்ட ஒன்றல்ல. சாதி என்பது ஒருவரது பிறப்பில் இருந்தே வருவதாகும். சமூக அவதானத்தில் அதைப் புறக்கணிப்பதன் மூலம் அதனை மாற்ற முடியும். சமூக வகுப்பு மாற்றக் கூடிய ஒன்றாகும். தாழ்ந்த வகுப்புப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளையொன்று தன்னை வெற்றி கொள்வதனூடாக தம் வகுப்பை மாற்ற முடியும். கல்வி, விசேடத்திறன்கள், பொருளாதார அரசியற்பலம் போன்ற காரணிகளினால் இதனை அடைய முடியும்.

சமூக வகுப்புப் பல்வகைமை சமூக அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும். சமூகப் பதகளிப்பு, பிரச்சினைகள், குளறுபடிகள், வேலை நிறுத்தம் மற்றும் வன்முறைச் செயற்பாடுகளின் அடிப்படையில் வகுப்பு வாதச் செயற்பாடுகள் தோன்றும். ஒவ்வொரு சிறு வகுப்பினரும் தத்தம் கோரிக்கைகளை வென்றெடுக்கப் போராட்டங்களை நடத்துவது சாதாரண நிகழ்வாகவுள்ளது.




படம் :- 5.1.4 சமூக வர்க்கப் பிரமிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஆக்கரீதியான ஊடக நிகழ்ச்சிகளின் போது இச்சமூகவர்க்கங்கள் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றிய ஒரு பூரண விளக்கப் பயனாளிக்கு இருக்க வேண்டும். சமூகத்தில் ஒரு ஜனரஞ்சகமான அம்சமாக விளங்கும் தொலைக்காட்சி நாடகங்களை விமர்சிப்பதன் மூலம் இதற்கான ஓர் அடிப்படையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். தொலைக்காட்சி தொடர்களில் சமூக வகுப்புக்கள் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன? அவ்வகுப்புக்ளை மேலும் சமூகத்தில் உறுதிப்படுத்த ஊடகங்கள் முயற்சிக்கினறனவா? சமூக வகுப்புக்களில் இடைவெளியை தொடர்ந்தும் பேண ஊடகங்கள் விரும்புகின்றனவா? ஒரு சமூக வகுப்பு மற்றொரு சமூக வகுப்பை விடச் சிறந்தவர்கள் அல்லது தாழ்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றனவா? போன்ற பல வினாக்களை இங்கு எழுப்பலாம்.

சமூக வகுப்பு உருவாவது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டாயினும் ஒவ்வொரு சமூக வகுப்புக்குரிய தனித்துவமான இயல்புகள், நடத்தைக் கோலங்கள், தொழில் மற்றும் சமூகத் தொடர்புக் கோலங்கள் காணப்படுவதாக சமூகவியல் ரீதியில் விளக்கலாம். இத்தகைய சமூக வகுப்புக்களுக்கிடையிலான இடைவெளியை இழிவாக்குதல் சமூக முன்னேற்றத்தின் போது நிகழவேண்டிய ஒன்றாகும். ஆனால் ஊடகங்கள் இவற்றை இவ்வேறுபாடுகளைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தவும், பேணவும் நடவடிக்கை எடுப்பதாயின் அதனால் சமூக அபிவிருத்தி தடைப்படும்.

வெகுஜன ஊடகங்கள் இவ்வகுப்பு இடைவெளிகளை அதிகரிப்பதைத் தவிர்த்து பொதுத் தேசியக் குறிக்கோளை நோக்கி அதனை நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரச்சினைகள், மோதல்களின் போது பிழையான தகவல் படிவதைக் கட்டுப்படுத்துவதற்கான புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஆற்றல் ஊடகங்களுக்குண்டு.

## உ) குடியுரிமை

குடியுரிமை என்பதால் கருதப்படுவது ஒரு நாட்டில் பரம்பரையாகவோ பதிவு மூலமோ சட்டரீதியாக வசிப்பதாகும். குடிகளுக்கு நாட்டின் மீது ஒரு பொறுப்புண்டு. குடியுரிமைப் பெற்றவர்களுக்கு அந்நாட்டின் மீது ஒரு பொறுப்புண்டு. குடியுரிமைப் பெற்றவர் அந்நாட்டின் பிரசையாவார். பிரசையென்பவர் நாட்டில் அபிவிருத்தியில் பங்களிப்பு செய்பவர். நாட்டை முன்னேற்றுவதற்கு தமது உழைப்பை வழங்குபவர்.

பிரசை என்ற எண்ணக்கரு ஜனநாயக சமூகத்திலிருந்தே தோன்றுகின்றது. தெய்வ வரக்கோட்பாட்டின் அடிப்படையில் கட்சியாளர்கள் நியமனம் பெற்ற நாடுகளில் குடியுரிமை காணப்பட்டாலும் அங்கு பிரசையின் பொறுப்பு ஜனநாயக சமூகத்தின் அழைப்புக்கு சக்தி வாய்ந்ததாக இல்லை. ஆட்சியாளரை நியமிக்கும் வாய்ப்பு அவர்களிடம் காணப்படாமையே அதற்கான காரணமாகும். இத்தகய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களின் ஆட்சியாளர்கள் தாம் தெய்வத்துக்கு மட்டுமே பொறுப்பு கூறவேண்டும் என்று கருதுகின்றனர். அனைத்து பௌதிக சமய ஒழுங்கமைப்புக்களின் அடிப்படை தெய்வச்சட்டங்களாகவே இருக்கும். ஆட்சியாளன் கடவுளின் பிரதிநிதி என்று மக்கள் நம்பினர். அரசனை தந்தையாகவும், மக்களை பிள்ளைகளாகவும் இச்சமூகத்தவர் கருதுகின்றனர்.

கிரேக்கத்தின் நகராட்சியில் இருந்த நேரடி ஜனநாயக சமூகத்தில் ஆண்களுள் மட்டுமே குடியுரிமை பெற்றிருந்தனர். டிமோஸ் என்ற கிரேக்க பதம் முதிர்ந்த ஆண்களைக் குறிப்பதற்கே பயன்படுத்தப்பட்டது. அவர்கள் கிரேக்க பாரம்பரியத்தில் தூய்மையான வழித்தோன்றல்கள் என நம்பப்பட்டது. அதன்படி அச்சமூகத்தின் அடிமைகள், பெண்கள், சிறுவர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறியோர் தூய்மையற்றவர்களாகவே கருதப்பட்டனர். பிரசைகள் அரசில் நேரடியாகப் பங்கு பற்றினர். நேரடியாக வாக்குக்களை அளித்தனர். கலாசாரத்தைப் பாதுகாத்தனர். கலைப்பணிகளில் ஈடுபட்டனர். தத்துவக் கருத்துக்களை வெளியிட்டனர். ‘‘ஒருவரிடம் ஒரு கருத்து இருக்குமானால் அதனை தெளிவாக வெளியிடக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படியென்றேல் அதில் பயனில்லை என்ற எண்ணக்கரு அன்றைய கிரேக்க அரசுகளில் நிலவியது.

இக்கருத்துக்களுக்குச் சமாந்தரமாக இன்றைய சமூகத்தின் குடியுரிமை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். பிரசைகள் சிவில் உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள், பொருளாதார உரிமைகள் ஆகியவற்றை அனுபவிக்கின்றனர். அத்துடன் தனது நாட்டுக்குரிய பொறுப்புக்களைச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெகுஜன ஊடகங்கள் குடியுரிமையையும் உரிமைகளையும் மதிக்க வேண்டும். அவ்வுரிமைகள் மீறப்படும் போது சுதந்திரமான சவாலாக இருக்க வேண்டும். எதிரான குரல் கொடுக்க வேண்டும். பிரசைகளின் பொறுப்பை நிறைவேற்றுவதைத் தெளிவு படுத்த வேண்டும்.

பிரசை என்பவன் ஒரு ஜனநாயக சமூகத்தின் சீரான நிலைப்பாட்டுக்குக்கான அடிப்படை அலகாகும். சர்வசன வாக்குரிமை மூலம் குடியுரிமை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சர்வதேசப் பொறுப்புகளின்படி உலகமக்களின் மேம்பாட்டுக்காகவும் பிரசைகள் பாடுபட வேண்டும். உலகமக்களைப் பாதிக்கும் விடயங்களில் பிரசைகள் ஆர்வம் கொள்ள வேண்டியது அதனாலாகும். ஆயுத பாவனை, நீர்வளத்தைப் பாதுகாத்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல், என்ற அனைத்து விடயங்களிலும் பிரசைகளின் பொறுப்புக்கள் பரந்ததாகும்.

பிரசைகளின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாமை சமூகத்தின் ஒழுங்கமைப்பின்மையின் தாக்கமாகும். பிரசைகள் தமது சுயாதிபத்திய அதிகாரம் பற்றி நம்பிக்கை கொண்டுள்ளனர். அதாவது ஆட்சி செலுத்தும் ஆட்சியாளனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிப்பது பிரசைகள் என்பதாலாகும். பிரசைகளும் நாட்டுக்கான தம் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். பிரசைகளது உரிமைகளைப் பாதுகாக்கவே ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இப்பரந்த தளத்தில் நின்று வெகுஜன ஊடகங்களின் வகிபாகத்தை விளங்கிக் கொள்வது முக்கியமாகும். அத்துடன் சமூகவியற் பின்னணியையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விதமாக ஊடகங்களினால் முன்வைக்கப்படும் பிரசைகளின் எண்ணக்கருக்கள் எவை என்பதை வரைவிலக்கணப்படுத்த வேண்டும். தமது நாடு தொடர்பாக பிரசைகளின் கடமைகள், பொறுப்புக்கள், மட்டுமன்றி பொறுப்பேற்றலை விருத்தி செய்தல் வெகுஜன ஊடகங்களின் பணியாகும். செய்திகள், தொலைக்காட்சித் தொடர்கள் போன்ற ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகள் மூலம் குடியுரிமை எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது என்பதை இனங்காண வேண்டுமெனில் அவற்றை கவனமாக பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

## ஊ) மனித உரிமைகளும் பொறுப்புக்களும்

மனித உரிமைகள் என வரைவிலக்கணப் படுத்தப்படுவது மனிதனுக்கு உரித்தான இயற்கையான உரிமைகளின் தொகுதியாகும் மனிதன் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் கௌரவமாக வாழ்வதற்கும் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் அவகாசமிருக்க வேண்டும். இவை சமூக மரபு ஒழுக்க மாண்புகள் மற்றும் சட்ட ரீதியாகவும், சமூகத்தினாலும், அரசினாலும் தனியாள் நன்மைக்கும் சமூக நன்மைக்கும் தேவையான நிபந்தனைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1789 இல் பிரான்சியப் புரட்சியினூடாக தோன்றிய அரசாங்கத்தில் மனித உரிமைகள் பற்றியும் பேசப்பட்டது. அமெரிக்க யாப்பிலும் இது காணப்பட்டது. 1776இல் அமெரிக்காவில் மனித உரிமைகள் சட்டமாக்கப்பட்டது. அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்திலும் மனித உரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அசோக சக்கரவர்த்தியின் அரசியல் பிரகடனத்திலும் இதன் இயல்புகள் காணப்பட்டன. இஸ்லாமிய வேத நூலான குர்அனில் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

1948 டிசம்பர் 01ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சம்மேளனத்தில் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடன வாதத்தின் மூலம் இன்றைய மக்களின் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மனித உரிமைகளை புறக்கணித்தும் மறுத்துரைப்பதும் மனித இனத்தின் மனங்களைக் கடூரமாக வேதனைக்குள்ளாக்கும் மிலேச்சத்தனமான காரியங்களுக்கு ஏதுவாகும் என மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமயவாதத்தில் விளக்கப்பட்டுள்ளது. பேச்சுச் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் மனிதன் வாழக் கூடிய உலகு பற்றி உன்னதமான பிரார்த்தனையை நிறைவேற்றும் மனிதத் தேவை இதில் அடங்கியுள்ளது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயத்துக்குட்படாது வாழுதல் இனங்களிடையே நட்புறவு, சமூக மேம்பாடு, உச்ச சுதந்திரத்தை அனுபவிக்கும் மகிழ்ச்சிகரமான நிலைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளுதல் உட்பட அடிப்படை மனித உரிமைகள் பற்றிய விடயங்கள் அதில் அடங்கியுள்ளது.

சுதந்திர அரசுகள் தம் அரசியல் யாப்புகளில் மனித உரிமைகள் பற்றிய சரத்துக்களை உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன. இலங்கையில் அரசியல் யாப்பில் பேச்சு, கருத்து வெளியீட்டு, கூட்டம் கூடும்; இடத்துக்கிடம் பிரயாணிக்கும்; தொழில் செய்யும்; சமயத்தைப் பின்பற்றும்; கலாசாரத்தைப் அனுபவிக்கும் சுதந்திரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை அனைத்துப் பிரசைகளுக்குரிய அனுபவிக்கும் உரிமைகளாகும்.

இந்த உரிமைளை அனுபவிப்பதற்கு இணைவாகவே வெகுஜன ஊடகங்கள் கருமமாற்றுகின்றன. சுதந்திரம் என்பது நியாயமான ஓர் உரிமையாகும். ஒரு நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படும் சட்டங்கள் அந்த நாட்டில் பரிணாமமடைந்துள்ள விழுமியங்கள், பண்பாட்டுத் தொகுதிக்கமைய வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டும்.

சமூகத்திற்கு தீங்காக அமையாத வகையில் ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஊடகங்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் மனித உரிமைகள் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பொறுத்து மனித உரிமைகளின் வளர்ச்சிக்கு அல்லது வீழ்ச்சிக்கான செல்வாக்கை செலுத்த முடியும்.

## 5.2 பொருளாதார பிரதிநிதித்துவ நிறுவனங்கள்

பொதுவாக நோக்குமிடத்து ஒரு நாட்டின் பொருளாதார விருத்திக்கு ஊடகத்தின் பங்களிப்பு அவசியம். நேர் மனப்பாங்குகளை விருத்தி செய்வதன் மூலமே அதனைச் செய்ய வேண்டும். சமூகத்தில் பல்வேறு பொருளாதார சீர்கேடுகள் இருக்கலாம். ஆயினும் அவற்றை எப்போதும் தூக்கிப் பிடித்துக் காட்டுவதன் மூலம் சமூகத்தின் பொருளாதார விருத்திக்குத் தடைகள் ஏற்படலாம். பொருளாதார நிதித்துவத்தை ஆராய்வதற்காக தெரிவு செய்யக் கூடிய சில துறைகள் பின்வருமாறு.

### அ) தொழில் உலகம்

அன்றாட வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய பல்வேறு கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான திறன்கள் மனிதரிடத்தில் இருக்க வேண்டியது அவசியம். மனிதத் தேவைகளை நிறைவேற்றும் தொழில்சார்திறன் களை வினைத்திறனுடன் ஆற்றும் விதத்தில் மக்களின் தேர்ச்சி விருத்தி தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் கல்வியை ஆரம்பித்தல் இவ்வேலையுலகத்திற்கு பழக்கப் படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.

தொழில் உலகிற்குப் பொருத்தமான பிள்ளைகளை உருவாக்கும் அவசியத்தை கன்னங்கரா கல்விச் சீர்த்திருத்தம் நன்கு சுட்டிக் காட்டியது. மகாத்மா காந்தி அறிமுகப்படுத்திய கல்வித் திட்டத்திலும் இவ்விடயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. ஒரு மனிதன் பிறப்பது வாயுடனும் வயிற்றுடனும் மட்டுமல்ல என்று காந்தி குறிப்பிட்டார். தலையுடனும் இரு கைகளுடனும் சேர்த்து பிறக்கின்றான். கல்வியானது இத்தலையையும் கைகளையும் போசிப்பதில் வெற்றி பெற வேண்டும். காள்மாக்சின் கல்விச் சிந்தனையில் உழைப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்ததுடன் வேலையுலகு உழைப்பை அடிப்படை யாகக் கொண்டே உருவாக்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வேலையுலகம் பற்றிய எண்ணக்கரு வெறுமனே உழைப்பை விரயமாக்குவது பற்றிய ஒரு விடயமன்று. தொழில்களுக்காக விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் அதிலடங்கும். சமூகத்தின் நிலவுகைக்கு பல்வேறு தொழில் வாண்மையினை உடையவர் தேவைப்படுகின்றனர். அதனை வழங்குவதற்கு கல்வி தேவை. தனது வாழ்க்கைக்குத் உடையவர் தேவைப்படுகின்றர். அடிப்படை உழைப்பையும் தொழில் தேவையையும் ஒருவன் வேண்டி நிற்கின்றான். இது காலத்துக்கு காலம் வேறுபடும். ஒவ்வொரு தொழிலுக்குமான தகைமைகளில் வேறுபாடுண்டு. அவற்றை அடைந்து கொள்ள வேண்டும். இன்றைய சமூகத்தின் வேலையுலகு கைத்தொழில், கணினி, தொழினுட்பம் ஆகிய துறைகளிலும் பரிணமித்துள்ளது. வெகுஜன ஊடகம் இவற்றின் பின்னணிகளையும் இயல்புகளையும் தெளிவுபடுத்த வேண்டும்.

வேலையுலகத்தில் பல்வேறு தொழில்களுக்கான சேவைகள் உள்ளன. இவை அரச, தனியார் துறைகளில் பரந்திருப்பதுடன் இவற்றை இனங்கண்டு கொள்ள வேண்டியுள்ளது. அது பற்றிய அறிவைப் பிரபல்யப் படுத்த வேண்டும். இத்தகைய நிறுவனங்களில் நிர்வாகக் கட்டமைப்பு அதிகார இயல்பு, மரபுகள், என்பவற்றை விளங்கிக் கொள்வது முக்கியமானது. வேலையுலகின் போக்குகள் நாளுக்கு நாள் மாறும். தொழினுட்ப மாற்றங்களுடன் மட்டுமன்றி அரசியல், பொருளாதார மாற்றங்களுடன் அவை வேறுபடும். தொழில்களின் போது தன்னிடமுள்ள பலத்தை விளங்கி அதன்படி இசைவுபெறும் தேவையுள்ளது. தொழிலுக்கான பண்புகளை தம்மிடத்தே விருத்தி செய்து கொள்ள மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்ளல் மட்டுமன்றி தொழில்களுக்காக விண்ணப்பித்தல், விண்ணப்பங்களைத் தயார் செய்தல், பொருத்தமான ஆளுமையை உருவாக்கிக் கொள்ளல் என்பன முக்கியமானவையாகும்.

வெகுஜன ஊடகங்கள் இதற்கு வழிகாட்ட வேண்டும். வேலையுலகில் வாண்மைத் தொழில்கள், கைத்தொழில் நுட்பத் தொழில்கள் மீதாக மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பைத் தோற்றுவிக்கும் விதத்திலும் அவற்றுக்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் வகையிலும் வெகுஜன ஊடகங்கள் கருமமாற்ற வேண்டும். இதன்படி எமது நாட்டின் தொழிற்துறை, நிலமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான மனப்பாங்கு அடிப்படையை விருத்தி செய்தல் ஊடகத்தின் பொறுப்பாகும்.

## ஆ) பல்வேறு தொழில்கள்

வேலையுலகு பற்றி நிலவும் ஒரு சிறப்பான நிலை யாதெனில் சமூக வகுப்புடன் தொடர்புபடுத்தி வரைவிலக்கணப்படுத்துவதாகும். உடல் உழைப்பை அதிகம் விரயம் செய்வோர் சமூக வகுப்பில் மத்திய மற்றும் தாழ் மட்டத்தில் இருப்பதுடன் மற்றைய உளஉழைப்பை அதிகம் விரயமாக்குவோர் உயர் மட்டம் மத்திய வர்க்கத்தவர்களாக உள்ளனர். இதன்படி ஒவ்வொரு தொழில் குறித்த ஒரு வர்க்க வரைவிலக்கணம் சமூகத்திற்குண்டு. சில தொழில்கள் உயர்வாக ஜனரஞ்சகங்களைக் கொண்ட உயர் தொழிலாகவே கருதப்படும். வேறு சில தொழில்கள் உயர்வானதாக ஆனால் ஜனரஞ்சகம் குறைந்ததாக கருதப்படுவதும் இதனாலாகும்.

குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் இலங்கையில ஒவ்வொரு தொழிலில் ஈடுபடுகின்றவர்களிடையேயும் சமூகத் தொடர்பு, தொடர்பாடற் கோலம் வாழ்க்கைக் கோலம் என்பவற்றுக்கிடையே வேறுபாட்டைக் காணலாம். முன்னேற்றமடைந்த நாடுகளின் நிலை வேறுபட்டதாகும். தொழில் என்பது பணம் உழைப்பதற்கான வழியாக இருப்பதுடன் சமூக வகுப்பு அடிப்படையில் பாரிய வேறுபாடுகள் ஏற்படுவதில்லை.

இந்த வகையில் எமது ஊடகங்களில் வெளியுலகம் முன்வைக்கப்படுவது நேர்மனப்பாங்கிலா, மறை மனப்பாங்கிலா என்பதை வரைவிலக்கண்படுத்த வேண்டும். வர்த்தக சமூகத்தில் சில தொழில்கள் தாழ்ந்ததாகவும், வேறுசில தொழில்கள் உயர்ந்ததாகவும் தொடர்ந்திருப்பதற்கு ஊடகங்கள் உதவுமேயானால் அது பொருத்தமற்றதாகும். ஆனால் ஊடகங்களைப் பகுப்பாய்வு செய்யும் போது இவ்வாறு நிகழ்வது உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஒரே நாட்டின் செயற்பாட்டிற்கும் இருப்பிற்கும் பல்வேறு தொழில்களின் தேவையுண்டு. கல்வியூடாக இத்தகைய தொழில்களுக்குத் தேவையானவர்களை உருவாக்கும் தேவையுண்டு. கல்வி பொருளாதார அபிவிருத்தியின் ஓர் அத்தியாவசிய அங்கமாகக் கணிக்கப்படும் போக்கு மிகஅண்மைக் காலத்திலேயே ஏற்பட்டது. ஓரிரு தசாப்தங்களுக்கு முன்பு வரை கல்வி சமூக நல சேவையாகவும், நுகர்வு செயற்பாடாகவும் நாட்டின் அரிதான வளங்களின் மீதான ஒரு சுமையாகவும் கருதப்பட்டது.

இது இன்று ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. கல்விக்கான செலவு எதிரகாலத்திற்கான முதலீடாகவே இன்று கருதப்படுகிறது. ஒரு நாட்டிள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியில் மிக முக்கிய வளம் மனித வளமாகும். பயிற்றப்பட்ட மனித வளம் என்பது அரிய மூலதனமாகும், இயற்கை வளங்கள், வெளிநாட்டு உதவிகள், சர்வதேச வர்த்தகம் ஆகியன அனைத்தையும் விடப் பெறுமதி வாய்ந்தவையாக இவை கருதப்படுகிறன. இன்றைய சமூகத்தில் தொழில்கள் அளவு ரீதியாகவும், தொழினுட்ப ரீதியாகவும் விருத்தியடைகின்றது. இத்தொழில்களுக்கேற்ற விதமாக மனிதவளம் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

எந்த ஒரு தொழிலையும் உயர்ந்தது, தாழ்ந்தது என்று வகைப்படுத்த வேண்டியதில்லை. ஒவ்வொரு தொழிலும் ஒன்றோடொன்று வலைப்பின்னலாகத் தொடர்புபட்டுள்ளது.

சில தொழில்களைத் தாழ்ந்தவையென தள்ளிவிட்டால் அது சமூக நிகழ்வுக்கான பெரும் சவாலாக மாறும். தொழில்களுக்கிடையிலான இடைவெளிகளை இழிவளவாக்குவதன் மூலம் இந்நிலையை ஏற்படுத்தும் மனப்பாங்குகளைத் தோல்வியடையச் செய்ய ஊடகத்தால் முடியும்.

எந்த ஒரு தொழில் குறித்தும் பெற்றுக் கொள்ளும் பாண்டித்தியமும் தேர்ச்சியும் அத்தொழிலைச் செய்பவரின் இருப்புக்கு அத்தியாவசியமாகும். எதிர்காலம் எத்தகைய தொழில் தேவைகளை வேண்டி நிற்கிறது என்பதைத்திட்டமிடுவதும் அதற்கான ஊழியர்ளைப் பயிற்றுவிப்பதும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்வதற்கான அத்தியாவசியக் காரணிகளாகும்.

ஊடகத்தின் பொறுப்பு உழைப்பின் மீதான அபிமானத்தை ஏற்படுத்துதாகும். அத்துடன் சமூகத்தில் நிலவும் மரபு ரீதியான காலங் கடந்த எண்ணக்கருக்களை உடைத்தெறிந்து பட்டியலிடப்பட்ட சில தொழில்களுக்கப்பாற் சென்று வேறு பல தொழில்களை சமூகத்துக்கு அறிமுகப்படுத்தும் பணியை ஊடகங்கள் மேற்கொள்ள வேண்டும்.

## இ) சந்தை

நுகர்வோரும் வர்த்தகமும் சந்திக்குமிடமே சந்தை. நுகர்வோர் தம் தேவைக்கேற்ப சந்தையில் பொருட்களைத் தெரிவு செய்து கொள்வனவு செய்கிறார் என்பது பொதுவான ஒரு கருத்தாகும். வர்த்தகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது போட்டி அதிகரிக்கும். பொருட்களின் விலை குறையும் என்பதும் தரமான பொருட்களைக் கொளவனவு செய்யும் வாய்ப்பு நுகர்வோருக்கு ஏற்படும் என்பதுவும் ஒரு தர்க்கரீதியான காரணியாகும். ஆயினும் இது எப்போதும் சாத்தியமாக இல்லை.

சந்தையையும் வெகுஜன ஊடகத்தையும் நோக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்களுண்டு. அதாவது விளம்பரம் மூலம் உற்பத்தியாளன் நுகர்வோரிடையே தேவையை உருவாக்குகின்றான். விளம்பரத்தினால் நுகர்வோன் பொருட்களை கொள்வனவு செய்யத் தூண்டப்படுவதுடன் அங்கே உற்பத்தியாளரின் நோக்கத்தை நிறைவேற்ற விளம்பரத்தால் முடிகிறது. ஒரு பொருளின் தரத்தினால் அன்றி அதன் விளம்பரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக நுகர்வோரின் தெரிவும் அதன் விலையும் தீர்மானிக்கப்படுகிறது. பொருட்கள், சேவைகளுக்கான விலை, கவர்ச்சி, விளம்பரத்தினால் தீர்மானிக்கப்படுவதால் பல்தேசிய கம்பனிகளுக்கு உள்நாட்டு சந்தையை ஆக்கிரமிப்பது இலகுவாகின்றது.



படம்: 5.2.1 பொருள், சேவை, விளம்பரம்

நுகர்வோருக்கு புதிய சந்தைப் பெறுமானத்தை வழங்கவும், தேவையற்ற பொருட்களை தேவையான பொருட்களாக மாற்றவும் வெகுஜன ஊடக விளம்பரங்கள் ஆற்றல் பெற்றுள்ளன. இதன்படி வெகுஜன ஊடகம் நுகர்வோரின் சந்தையை உற்பத்தியாளரின் சந்தையாக மாற்றியுள்ளது.

வெகுஜன ஊடகத் தகவல்களும் ஒரு சந்தைப் பொருளாக மாறியுள்ளது. தகவல்களைச் சேகரித்தல், விநியோகித்தல் ஒரு இலாபமுறைக்குரிய வணிகமாக மாறியுள்ளது. இணையத்தின் தோற்றத்துடன் தகவற் சந்தை விரிவடைந்துள்ளது.

பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் மனப்பாங்கை மட்டுமன்றி ஒரு சந்தைக் கலாசாரத்தை தோற்றுவிக்கவும் விளம்ர நிகழ்ச்சிகள் உதவுகின்றன. சந்தைப் பொருளாதாரம் சார்ந்த மனோபாவம் உருவாவதன் காரணமாக நீண்ட காலத்தில் உள்நாட்டு உற்பத்திகளின் பெறுமதி சவாலுக்குள்ளாகும் ஆபத்துமுண்டு.

இலாபமே முக்கிய இலக்கு என்பதாலும் அதிகரித்த போட்டியாலும் விழுமியங்கள் சமூகப் பெறுமானங்களைப் புறக்கணித்து பாலியலையும், வன்முறையையும் முதன்மைப்படுத்தி ஊடக விளம்பரங்கள் உருவாகின்றன. ஒழுக்க மாண்புகள் புறக்கணிக்கப்படல், பல்வேறு கொள்கைகள் கருத்துக்களை நோக்கி மக்கள் மனதை அடிமைப்படுத்தும் முறையும் சந்தைப் பொருளாதாரத்தில் விளம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஊடகங்களின் வழக்கம். உள்ளூர் பொருளாதாரம் நலிவடைந்து பல்வேறு சமூக கொந்தளிப்பு நிலமைகள் ஏற்பட இடமுண்டு.

சமூகப் பொறுப்பு கோட்பாட்டு ரீதியாக பின்னணியிலுள்ள மக்களையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் பொறுப்பு ஊடகவியலாளருக்குண்டு. விளம்பர மாயாஜாலம் போன்று சந்தைத் தேவைகளுக்குப் பொருத்தமான பொருட்களையும், சேவைகளையும் கவர்ந்து கொள்ளும் நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ) அபிவிருத்திக்கான சிந்தனை

அபிவிருத்தி என்பது பரந்ததொரு முழுமையான எண்ணக்கருவாகும் ஆன்மீக சமூக கலாசாரம் பெறுமானங்களுடன் கூடிய ஒரு சமநிலையான விருத்தியாகும். ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியின் மூலம் மட்டும் உரிய நோக்கங்களை அடைய முடியாது. அபிவிருத்திசார் தொடர்பாடல் சிந்தனை என்பது அபிவிருத்தியைப் பெறும் நோக்கில் தொடர்பாடலை உபயோகிப்பதாகும். இதன் மூலம் பொருத்தமான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அபிவிருத்தி சார் சிந்தனையில் அடைவு ஊக்குவிப்புக் கோட்பாட்டின் படி ஒவ்வொருவரிடமும் அதிசிறப்பை அடையும் ஆசை ஏற்படுவதாக கூறப்படுகின்றது. செயலடைவுகள் சாவால்களை ஏற்றுக் கொள்ளவும் நட்ட ஆபத்துக்களை எதிர்கொள்ளவும் ஆற்றலைப் பெறவும் சிரமங்களுக்கு மத்தியில் வெற்றி பெறவும் ஆயத்தமாக வேண்டியது முக்கியமாகும். அபிவிருத்தி சார் தொடர்பாடற் சிந்தனை என்பது மனசாட்சியுடன் கூடிய தொடர்பாடல் எனக் கூறலாம். ஒரு நாட்டின் மக்களிடையே அபிவிருத்திக் கருத்துக்களை பயன்படுத்துவதற்காக இதனூடாக பாரிய பங்களிப்பைச் செய்யலாம்.

அபிவிருத்தி தொடர்பான அதிர்ச்சியான சிந்தனையொன்றை ஏற்படுத்துதல் இதன்மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. சமூகத்தில் நிலவும் பேதங்களைக் களைந்து மக்களிடையே நெருக்கத்தை விருத்தி செய்யவும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்களை நெறிப்படுத்தவும் இதன் மூலம் அவகாசம் கிடைக்கும். இதன் மூலம் ஒரு சமூக மாற்றம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இங்கு சமூகத் தொகுதிக்குள் புதிய எண்ணக்கருக்கள் புகுத்தப்படுகின்றன. இதன்மூலம் சமூக ஒழுங்கமைப்புகளில் மேம்பாட்டை ஏற்படுத்தலாம்.

சுதந்திர ஊடகங்களிலும் செயற்பாடுகளிலும் மக்கள் தொடர்புபடுவதன் மூலம் பாதிக்கப்பட்டு பின்னடைந்துள்ள பிரிவினர்க்கு சுயபலத்தைப் பெற்றுக் கொடுத்தல் இவ்வபிவிருத்தி சார் சிந்தனை மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. தமது பலத்தின் நம்பிக்கை வைத்து எழுந்து நிற்க அதன் மூலம் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

வெகுஜன ஊடகத்தைப் பகுப்பாய்வு செய்யும் போது இவ்வபிவிருத்திசார் சிந்தனை பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உங்களால் உணர முடிகிறதா? ஒரு பாடல், செய்தி, நாடகம், அல்லது வேறு ஒரு நிகழ்ச்சி மூலம் இதை முன்வைக்க முடியும். அபிவிருத்தி சார் சிந்தனையைத் தொடர்ச்சியாக ஊடகங்கள் மூலம் மக்கள் மயப்படுத்துவதனால் மக்களிடையே அபிவிருத்தி தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.3 சமய ஒழுங்கு முறைப் பிரதிநிதித்துவக் கற்கை

சமயத்தைப் போன்றே விழுமியங்களும் சமூக நிலவுகைக்கான தேவைகளாகும். பல சமயங்களுண்டு. அவ்வேறுபாட்டின் அடிப்படையில் விழுமியத்தையும் வரைவிலக்கணப்படுத்தலாம். மனித சயுமூகத்தின் பல்வேறு சம்பவங்கள், நிகழ்வுகளே ஊடகங்களின் முன்வைக்கப்படுகின்றன. இதனூடாக சமய விழுமிய நம்பிக்கைகளை சிதறடிக்கவும் ஊடகங்களால் முடியும். ஆயினும் சமய அதிகார பீடங்கள் பலம் வாய்ந்ததாக இருப்பதனால் ஊடகங்கள் அவற்றில் கைவைக்கப் பின்வாங்குகின்றன. ஊடகம் எப்போதும் விழுமிய நம்பிக்கையிலேயே கை வைக்கிறது. எனவே ஊடகங்களினால் முன்வைக்கப்படும் சமய விழுமிய எண்ணக்கருக்கள் எவை எனப் பார்த்தல் அவசியமாகும்.

### அ) சமயங்கள்

சமயம் ஒரு தத்துவமாக அல்லது வாழ்க்கை முறையாக அல்லது ஒரு நம்பிக்கைத் தொழிலாக அறிமுகம் செய்யப்பட்டாலும் அது நிச்சயமாக நிலவும் சமூகத்தினூடாக தொடர்புபடுவதைக் வலியுறுத்த வேண்டும். சமயங்களின் தோற்றம் பற்றி சமூகவியலாளர்களிடையே பல்வெறு கருத்துக்களுண்டு. சமயங்களால் நிறைவேற்றப்படும் சமூக செயற்பாடுகள் எவை என்பதே எமக்கு முக்கியமாகும். சமயத்தினால் நிறைவேற்றப்படும் சமூகக் கருத்துக்கள் முக்கியமானவை என்பது வலியுறுத்திக் காட்ட வேண்டியதே சமயம் மக்களை அபிவிருத்தி செய்வது என்பது முக்கியமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயம் ஆகும்.

சமயம் என்பது 'தூய்மையானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகள் வழிபாடுகள் தொகுதியொன்றை சுற்றி பின்னப்பட்ட நிலைப்பாட்டுடன் கூடிய நம்பிக்கைகள் வழிபாட்டு முறைகள் மூலம் சமூகத்திலுள்ள அனைவரையும் ஒரே விழுமிய சமுதாயமாக ஒருங்கமைக்கும் ஒரு நிறுவனமாகும்'.

சமயம் சமூகத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. கலாசார நாகரீகங்கள் ஏற்படுவதில் சமயத்தின் பங்கு சக்தி வாய்ந்ததாகும். சமூகத்தின் அங்கத்தவர்களை ஒரே நோக்கத்துடன் தொடர்புபடுத்தி வைத்திப்பதில் சமயத்தின் பணி அளப்பரியது எனக் கூறலாம். சமயம் தூய்மையானதென்றும் சிரேஷ்டமான தெனவும் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு அது உயர்வானதாகவும் வலியுறுத்தப்பட்டுள் ளது. ஆரம்ப நிலையில் தானும் ஒரு சமயமோ வாழ்க்கை விதிமுறைகளோ அற்ற ஒரு மக்கள் குழுவைக் காண முடியாது.

அனைத்து சமயங்களிலும் ஜனரஞ்சகமான சில அம்சங்களைக் காணலாம். அவை சமயக் கொள்கை அளவுக்குப் பெறுமானம் மிக்கதாக இல்லாவிடினும் சமயத்தின் நிலவுகைக்கு அவை முக்கியமானவையாகும். புத்த சமயத்தில் தானம், கொள்கை வழிபாடு வழிபாடு ஆகிய இரண்டில் கொள்கை வழிபாடு பெறுமானம் மிக்கது என்பது உண்மை. ஆனால் புத்த சமயத்தைச் சுற்றி மக்களை இணைத்து வைத்திருப்பது அதன் பூஜைகளும், வழிபாடுகள் மரபுகளேயாகும். ஏனைய சமயங்களான இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவறறிலும் இவ்விடயம் பொதுவானதாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை சமயத்துடன் நெருங்கச் செய்யவும் சமயப் பெறுமானங்களை ஒருவரிடம் வளர்த்தியும் ஊடகங்கள் நிகழ்ச்சிகளை ஊடகங்கள் முன்வைக்க முடியும் சமய அறிவையும் விளக்கத்தையும் விருத்தி செய்யவும் வெகுஜன ஊடகங்கள் பங்காற்ற முடியும் சமய நம்பிக்கைகளை மதிப்பதும் அவற்றை உறுதிப்படுத்தவும் வெகுஜன ஊடகங்களின் பொறுப்பாகும். ஏனெனில் வெகுஜன ஊடகம் இருப்பது மக்களுக்காகவே. சமயம் தொடர்பான சில எல்லைகள் பற்றிய விளக்கத்தைத் தொடுப்பதற்கும் ஊடகத்துக்கு உரிமையுண்டு. அதுவும் சகோதரன் நன்மை இருக்க வேண்டும்.

பல்லின சமூகம் என்ற வகையில் இலங்கையில் பல்லின, பலமத அடிப்படையில் வெகு ஜன ஊடகங்களினால் வெளிப்படுத்தப்படுகின்றதாவென்பது ஆய்வுக்குரிய விடயமாகும். சமூகசமய புரிந்துஉணர்வுக்கு அது அவசியமாகும. அவ்வாறே அதன் மூலமாக சமூகத்திலுள்ள அனைவருக்கும் நியாயம் வழங்கிட முடியும்.

## ஆ) விழுமியம் மற்றும் பண்பாடு

பண்பாடு என்பது சரியான நடத்தையாகும், நன்மைதனம்மிக்க வாழ்க்கையாகும். நல்ல பண்புகளின் நடத்தைகளுமாகும். சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு பண்பாட்டு நிலைப்பாடு முக்கியமாகும். பண்பாட்டு நிலைப்பாடு சமூக அங்கீகாரங்களை பெறுமானங்களின் நன்மை தீமைகளுக் கிடையிலான வேறுபாட்டைத் தெளிவாக விளக்கும். இதன்படி பண்பாட்டுப் பெறுமானத் தொகுதி, சமூகத்துக்குத் தேவையான நடத்தைக் கோலம் நெறிப்படுத்தப்பட வேண்டிய விதம் பற்றி தனியாள் ஒருவருக்குக் காட்டுவதுடன் ஒரு சமூகம் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும். பண்பாட்டின் இயல்புகள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடலாம். அவற்றை அங்கீகரிக்கின்ற பாதுகாக்கின்ற ஒரு ஊடகமே எமக்குத் தேவையாக உள்ளது.

விழுமியம் என்பது விதிமுறைகளைக் கொண்டது. அதன் பெறுமானங்கள் உயர் இலட்சியங்களுடன் கூடியது. விழுமியம் மனிதனிடத்தில் பண்பாட்டை ஏற்படுத்தும் விழுமியம் என்பது ஒரு சமூகத்தில் அதன் அங்கத்தவர்களினால் பயன்படுத்தப்படும் வரையரையகளாகும். இதன் படி விழுமியத்தை ஏற்றுக்கொள்ளல் சமூக நிலவுகைக்கு அவசியம்.

விழுமியங்களும் பயன்பாடும் மனித நாகரீகத்தில் முக்கிய பணிகளை நிறைவேற்றுகின்றன. சமூகத்தின் அங்கத்தவர்கள் அச்சமும், சந்தேகமின்றி வாழ்வது அவர்கள் விழுமியத்தையும் பண்பாட்டையும் பின்பற்றுவதலாயேயாகும்.

விழுமியம் ஒவ்வொரு சமூகத்தினதும் அங்கீகாரத்தின் மூலமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சமூகப் பெறுமானங்கள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுவது இதனாலாகும். மனித நடத்தைகள், விதிமுறைகள் மரபு சார் சமூகத்தை நெறிப்படுத்தும் மனித நடத்தை என்பது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை விளக்குவதாகும். சமூக மரபு என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்க முடியாத சமூக அங்கீகாரங்களாகும்.

சமூகத்தின் விழுமிய அங்கீகாரங்களைப் பாதுகாப்பது மக்களின் கடமை. ஊடகத்தின் பணியாக அமைய வேண்டியதும் அப்பெறுமானங்களைப் பாதுகாப்பதே. அவை குறித்து மக்களை விழிப்பூட்டுவதும், சங்கீத துர்நடத்தைகளை, பிற்போக்குகளை சுட்டிக் காட்டுவதும் மட்டுமின்றி விழுமியங்களைப் பாதுகாப்பதும் வெகுஜக ஊடகங்களின் செயற்பாடாகும்.

ஊடகங்களில் முன்வைக்கப்படும் நிகழ்ச்சிகளும் அவற்றுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் சமூக விழுமியங்களைப் பாதிக்கும் சமூகத்தின் மைய விழுமியங்களளுக்கும் நன் நடத்தைத் தொகுதிகளுக்கும் தொகுதிக்கும் எதிராகச் செயற்படாதிருப்பது ஊடகங்களின் பொறுப்பாகும்.

## இ) சமூகப் படிமம்

தொடர்பாடலின் பெறுபேறாகவே தோற்றப்பாடுகள் உருவாகின்றன. இன்றைய சமூகத்தில் ஒரு தோற்றப்பாட்டைப் பெற்றுக் கொள்ள ஊடகத்தின் பங்களிப்பு அவசியமாக உள்ளது. பாரந்து விரிந்துள்ள மக்கள் சமூகத்திடையே செய்திகளைக் கொண்டு செய்ய ஊடகங்கள் தேவையாயிருப்பதே அதற்கான காரணமாகும்.

பொது சன அப்பிப்பிராயத்தை உருவாக்குவதும் தோற்றப்பாட்டை அல்லது ஒரு பிம்பத்தை உருவாக்கும் வெகுஜன ஊடகங்களின் பிம்பத்தைக் கட்டியெழுப்பும் பணி திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

தனியாட்களின் கருமங்களுடாகவே சமூகத் தோற்றப்படுகளும் உருவாகின்றன. அங்கீகரிக்கபடபட்ட வழிமுறைகளை மேற்கொள்ளல் மக்கள் கவனத்தை ஈர்த்தல் மூலமாகவே பிம்பம் அல்லது தோற்றப்பாடு கட்டியெழுப்பப்படுகின்றது.

பொதுசன அபிப்பிராயம் பற்றிய எண்ணக்கருவை விசாரணைக்குட்படுத்தும் போது பிம்பம் கட்யெழுப்பப்படுவது ஒவ்வொருவரின் பார்வை, எதிர்ப்பார்ப்பு என்பவற்றுக்கு இயைபாகவே என்பது விளஙகும். ஒரு தோற்றப்பாட்டைக் கட்டியெழுப்பும் வெகுஜன ஊடகம் அதனைப் பாதுகாக்கப் பிரசார நிகழ்ச்சிகளை நடத்தும். சமூகம், அரசியல், கலை, கலாசாரம் வெகுஜன ஊடகம் உட்பட பல துறைகளில் தனியாள் பிம்பங்கள் விருத்தியடைவது. அவர் மக்கள் குழுவில் காட்டும் ஏதாவதொரு திறமை அல்லது பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டாகும். இப்பெறுமானம் பொது மக்களுக்கு, நாட்டுக்கு, நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக நாம் கட்டியெழுப்பும் எறியத்தையும் பொறுத்து பிம்பம் பிரபல்யமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெறுமானங்களையும் ஆற்றல்ககளையும் சவால்களையும் முன்வைத்தும் அப்பிம்பத்தை அங்கீகரிக்கும் மட்டத்துக்குக் கொண்டுவரும் பணியை ஊடகம் செய்யும். இங்கு வெகுஜன ஊடகத்தின் அதிகாரமும் பலமும் பிரயோகிக்கப்படும். பிம்பத்தை உருவாக்குவது போன்றே அதனால் பேணுவதும் பெரும்பாலும் பிரச்சினையாகும். இடம், நிறுவனம், அமைப்பு, கொள்கை என்பவற்றுக்கும் பிம்பங்களுண்டு அவை பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன் நீண்ட கால அங்கீகாரத்துக்குட்படுவதன் மூலம் அப்பிம்பங்களுக்கான ஸ்திரதத்தன்மை ஏற்படும்.

புதிதாக ஜனரஞ்சகமாகி தம் சுயபிம்பங்களைக் கட்டியெழுப்ப முனைவோர் மற்றவர் பிம்பங்களை விமர்சிப்பதும் இதனாலேயே ஆகும். மனித பிம்பங்களைப பாதுகாத்துக் கொள்வதில் பல சவால்களுண்டு. அரசியல் குழுக்களுக்கிடையே மோதல் தவிர்பபுக்கான புதிய காரணி மோதலுக்கான காரணத்தை வரைவிலக்கணப்படுத்துவதாகும். வெற்றிக்கான ஒரு தீர்வை ஏற்படுத்திக் கொள்வதற்காக உதவும் காரணிகள் போன்ற தடைகள் ஏற்படுத்தும் காரணிகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

ஊடகங்களினால் உருவாக்கப்படும் இப்பிம்பங்களின் யதார்த்தமான தோற்றப்பாட்டை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பெரும்பாலான பிம்பங்கள் வர்த்தக நோக்கத்தைக் கொண்டவை. ஆனால் அவை வெளியே தெரிவதில்லை. பிம்பங்களைப் போலச் செய்தல் சமூகததில் பலரின் வழக்கமாகும். எனவே ஒரு பிம்பத்தை உருவாக்கும் பிம்பங்கள் காரணமாக சமூகத்தையும் பாதிக்கும் மறைக் காரணிகள் அதிகமாகும் என்பதாகும். அதனைச் சரிபாதியாகப் புரிந்து கொண்டு வெகுஜன ஊடகத்தைக் கையாள்வதற்காக அந்நிலையை சரியாக பகுப்பாய்வு செய்து கொள்ளவும் அவசியமாகும்.

## ஈ) மோதலும் சமாதானமும்

மோதல் என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் அல்லது குழு கூட்டாக அனுமதிக்க முடியாது என்று நம்பும் இலக்குகள் அல்லது அபிலாசைகள் அடைந்து கொள்வதற்கான மேற்கொள்ளும் ஒரு முயற்சியாகும். இதிலிருந்து விளங்குவது வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட தனிநபர்கள் அல்லது குழுக்கள் தம் குறிக்கோளுக்கான ஒரு போராட்டத்தில் ஈடுபடுவதனையேயாகும். இதன் விளைவாக பல முரண்பாடுகள் தோன்றும். முரண்பாடுகள் அடுத்த படிமுறை மோதலாக இருக்கலாம்.

மாகசிஸவாத விளக்கத்தின் படி மோதல் என்பது சமூகத்தின் எதிர்காலப் பயணத்துக்குத் தேவையான ஒரு காரணியாகும். அரசு தோன்றியமைக்கான காரணிகளை விளக்கும் மாகஸ இக்கருத்தை முன்வைக்கிறார். இக்கருத்து மோதல் பற்றிய ஒரு நியாயமான தோற்றத்தை முன்வைக்கிறது. மோதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பலமான சமூக நகர்வுகளை ஏற்படுத்தும். சமூக அறிவுகளைத தோற்றுவிக்கும் ஒன்று என்பது தெளிவாகின்றது. அதே போன்று சிறந்த, அறிவு சார் செயற்பாடுகள் அதிக அடங்கியுள்ளது. இதன் பின் விளைவாக அவநம்பிக்கை, குரோதம் என்பன தோன்றுவதைக் காணலாம். இதன் பெறுபேறாக மனிதவாழ்க்கையில், வள அழிவு ஏற்படுவதுடன் சமூகப் பிளவும் ஏற்படுகின்றது.

மோதல் தவிர்ப்புக்கான ஒரு அதிகார பூர்வமான நபர் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை நீண்ட காலமாக இருந்து வருகின்றது. பெற்றோர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், துணை வேந்தர்கள், முன்னியலையில் முரண்பாடுகள் விசாரணைகள் செய்ததன் மூலம் மோதல்கள் தவிர்க்கப்படும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். அவ்வாறஜன் பல்லினத் தோற்கடித்து பலசாலி வெற்றி பெறும் நிலை ஏற்படும். மோதல் தவிர்க்கப்பட மனித சிந்தனை ஒரு முக்கிய காரணியாகும். மனித மனங்களில் உருவாகும் மாற்றம் மோதலற்ற ஒரு பின்னணியை உருவாக்க ஏதுவாகும்.

இத்தகைய ஒரு சாதகமான சூழ்நிலைக்குத் தேவையான உள அடிப்படையைக் கட்டியெழுப்புவதன் ஊடாக சமாதானம் உவாக்கப்படும். சம அந்தஸ்த்தை அங்கீகரித்தல் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமையைப் பெறல் போன்ற மன இருமைபபாடே அதன் அடிப்படை என்பது ஏற்றுக்கொள்ளத் தக்க ஒரு கருத்தாகும்.

ஊடகவியலாளர்கள் தமது செய்திகளின் அறிக்கையின் போது தொடர்ந்து செய்ய வேண்டியது சமாதானத்துக் கெதிரான மோதலை அதிகரித்தும் விடயங்களில் கவனமாக இருப்பதாகும். தொழில்சார் ஊடகவியலாளர்கள் இவ்விடயங்களிலும் கவனம் செலுத்தாதிருப்பதுடன் செய்திகளை வெளியிடுவதிலுள்ள போட்டி காரணமாக நிகழ்வுகளை வெளியிட்டு மக்களின் கவனத்தை ஈர்க்க முயல்கின்றனர்.

மோதல்களினால் முறிவடைந்த தொடர்பாடல் இடை வெளிகளை இழிவளவாக்க முயற்சிக்க வேண்டியதுடன் பிழையான கருத்துக்களைச் சரி செய்ய வேண்டும். நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை பிம்பம் தொடர்பாக நிலவும் போட்டியை இதற்கு உதாரணமாக கூலாம்.

மோதல்களைத் தீர்ப்பதற்காக தேவையான புதிய காரணியாவது, எக்காரணத்தால் ஏற்பட்டது என்பதை எடுத்துக் காட்டுவதாகும். வெற்றிகரமான தீர்வுக்கு ஒனறை உருவாக்கிட உதவும் காரணிகளைப் போலவே தடைப்படுத்தும் காரணிகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்களை வரைவிளக்கணப்படுத்தும் போது வீட்டுச் சூழ்நிலைகளைப் பெரிதுபடுத்தக் கூடாது குடும்பப் பின்னணி மிகைப்படுத்திக் காட்டுகின்றன. இவை எந்நளவு அர்த்த முள்ளவை? யதார்த்தமானலை? என்பதை ஆராய வேண்டும்.

## உ) மானிட வழிமுறைகள்

நடந்து கொள்ள வேண்டிய முறைகள் எவை என்பது பற்றிய விளக்கப்படுவது மானிட விதிமுறைகளினாலாகும். இவற்றை எதிர்காலச் சந்ததிக்கு வழங்கும் பணியை ஊடகங்களே மேற்கொள்ள வேண்டும். நீண்ட காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள் பெறுமானங்கள் செயல்முறையில் சமய நடவடிக்கைகள், மக்கள் மரபுகள், மானிட விதிமுறைகள் மக்கள் மயப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறாகும்.

நெறிமுறைகள் இல்லாமல் போனமை காணப்படாமை சமூகத்தை கொண்டு நடத்துவதில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதுடன் அது சமூக முறிவுக்கும் காரணமாக அமையும். உலகலாவிய மானிட விதிமுறைகள் வெட்கம், மானம், பயம் கருதப்படக் காரணம் அவற்றினால் ஏற்படும் பாதுகாப்புக்கள் குறித்தகும். ஒரு நாட்டின் சட்டங்கள் தீட்டப்படும் போது சமூக விதிமுறைகள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. இவற்றை மீறுதல் தண்டனைக்குரியதாகும். சமூகத்தின் நேரிய நிலைப்பாட்டின் மானிட விதிமுறைகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

ஒவ்வொரு குடும்ப, சமூக அலகுக்குரிய வேறுபட்ட விதிமுறைகள் காணப்படும். மானிட விதிமுறைகளைப் பாதுகாக்க அச்சமுகத்தின் விசேட அவதானத்த்திற்குட்படுவோர். விதிமுறைகளைக் காப்பது மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிவகுக்கும் நீங்கள் பழகும் நண்பர் கூட்டத்தில்ட மானுட விதிமுறைகள் பேணப்பட வேண்டும் என்று புத்த பெருமான் கூறியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் தமது ஊடகங்கள் மூலம் சமூகத்தில் மானுட விதிமுறைகளைக் காக்டக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் பேண வேண்டிய ஒழுக்க கோவை ஏற்பட்டுள்ளதும் அவர்களின் சீரான நிலைப்பாட்டுக் காகும்.

செய்திகளை முன்வைக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் இவ்வொழுக்க கோவையிலுண்டு. இதனைப் பின்பற்றுதல் ஊடகவியலாளர் நேர்மையாகவும், நியாயமாகவும், சுயாதீனமாகவும், மற்றவர்களின் உரிமைளைப் பாதுகாக்கும் படியும் நடந்து கொள்ள வேண்டியிருப்பது ஒழுக்கக் கோவையினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலான வரைமுறைகளற்ற விதத்தில் நடந்து கொள்ளும் தொலைக்காட்சி, வானொலி, நிறுவனத்தின் அனுமதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரததை இரதது செய்யும் அதிகாரம் அத்துறைசார்ந்த அமைச்சுக்குண்டு. இவ்விடயங்களைக் கவனத்திற் கொண்டு விதிமுறைகளைப் பாதுகாக்கும் போது பல்வேறு மாதிரியைப் பயன்படுத்தப்படும் ஊடகத்தினால் முடியும். பாடல், நாடகம், செய்தி, கலந்துரையாடல், சிறப்பு நிகழ்ச்சிகள், அவற்றுள் சிலவாகும். சீரான விதிமுறைகள் சமூகத்தில் உறுதிப்படுத்துவதற்காக சமூகத்தில் தாக்கங்கள் உண்டாவதற்கு அவை முறையாக பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும்.

## 5.4 அழகியல் பிரதிநிதித்துவக் கற்கை

ஊடகமும் அழகியலும் எப்போதும் இணைந்தே காணப்படும். வானொலியும் தொலைக்காட்சியும் எப்போதும் போல் அழகியல் சார் நிகழ்ச்சிகளை முன்வைக்கின்றன. அழகியல் ஏன் எமக்குத் தேவைப்படுகின்றது? என்ற வினாவுக்கு முதலில் நாம் விடை காண ஊடக உரிமையாளர்களும் ஊடகவியலாளர்களும் எமக்கு முன்வைப்பது எமது வாழ்வைச் சீராக்க வல்ல அழசியல் நிகழ்ச்சிகளையா அல்லது எமது இரசனையை மழுங்கடிக்க செய்யும் நிகழ்ச்சிகளையா என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

### அ) பொழுது போக்குப்பணி

பொழுது போக்கு அம்சங்களை வழங்குவது தொடர்பாடல் ஒரு நோக்கமாகும். சமூக வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பல்வேறு மன அழுத்தங்கள் ஏற்படுவதுண்டு. இத்தகைய மன நிலை தொடர்ந்து இருப்பது அவரை அமைதியின்மைக்கு உட்படுத்துவதுடன் சமூக நிலமைக்கு அது தடையாக அமையும் . இவ்வழுத்தங்களைத் தணிப்பது தொடர்பாடலின் ஒரு நோக்கமாகும்.

இதன் படி ஊடகங்கள் மூலம் மனிதனை மகிழ்விக்கும் நோக்கிலான பொழுது போக்குக் காரணிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். ஒரு நாட்டில் அமைதியின்மை நிலை பரந்தளவில் அதிகரிக்கும் போது நடவடிக்கைகளில் காட்டப்படும் முன்னுரிமை விதததில் இருக்கும் என்று கூறலாம். பொழுது போக்குக் காரணிகளை விரிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தம் மன இயல்பு காரணமாக பல்வகையை கொண்டவராக இருப்பதுடன் ஒவ்வொருவர் பொழுது போக்கும் விதமும் வேறுபட்டதாக இருக்கும். ஆர்வம் , கேலி, பகிடி, தனிமை நிலை, மனித உணர்வுகளை வெளிப்படுத்தல், ஆன்மீக மேம்பாடு, வன்முறை, பாலியல் போன்ற பல்வேறு அணுகு முறைகள் இங்கு உள்ளன.

ஒருவருக்குப் பொழுது போக்கினை வழங்குவதன் மூலம் வேறு கலாசாரப் பெறுமானங்களை உள்வாங்குதல் கலாசார ஆக்கிரமிப்புகளை நிகழ்த்துதல் அலங்காரப் பாணிகளை பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கான முயற்சிகளுண்டு. ஒவ்வொரு ஊடக உரிமையாளரினதும் அரசியல், மற்றும நிறுவன நோக்கங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றிக் கொள்வதற்காக இத்தகைய உத்திகள் கையாளப்படுகின்றன. பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஆளுமை விருத்தியொன்றுக்கான பண்புகள் இருக்க வேண்டுமென்பது கூறப்படுகின்றது. இங்கு பொழுது போக்கு அம்சங்களை வழங்கும்போது குறிப்பிட்ட அளவு அனுபவத்தை மையமாகக் கொண்டு அவை அமைவதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அபிவிருத்தித் தொடர்பான நிகழ்வுகளிலும் பெரும்பாலும் எளிமையான விரும்பக்கூடிய தன்மையை ஏற்படுத்த முடியும். இவற்றில் பொழுது போக்குஅம்சங்களைச் சேர்ப்பதன் அவசியத்தைச் சமூக வியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். சிறுவர், இளைஞர், அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் போது ஆக்க ரீதியான, பொழுது போக்கு அம்சங்களை இணைப்பதன் முக்கியத் துவத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

### ஆ) இரசனை

இரசனை என்பது சுவையை இனங்காணும் அறிவு ஆற்றலாகும். அதாவது தனியார் இரசனைகள் மீதான அழகியல்களை அது உருவாக்கும். இரசிகர்களை உருவாக்கும். இரகசிகர்கள் இல்லாத போது அழகியல் ஊடகத்தால் நீடித்து இருக்க முடியாது. ஒருவரின் இரசனை ஆற்றல் உயர் மட்டத்தில் இருத்தல் அச்சமூக நிலைப்பாட்டின் மீது செல்வாக்கை ஏறபடுத்தும் உயர்தரமான இரசனையைப் போன்றே ஜனரஞ்சக இரசனை பற்றியும் கற்க வேண்டும்.



படம் 5.4.1:- சிறுவர்களின் கலை நிகழ்ச்சி

எந்த ஒரு அழகியல் படைப்பும் சமூகத்தைக் களமாக கொண்டதாகவே அமையும். சமூகப் பெறுமானத்தை உணர ஒருவரால் முடியுமானால் அத்தகைய அச்சமூகத்தினரின் இரசனை உணர்வு உயர்ந்ததாக காணப்படும். மனிதன் ஐம்புலன்களாலும் இரசனையைப் பெறுகிறான். அதன் இனிமையில் அவன் கவரப்படுகின்றான். இரசனை என்பது உணர்வைப் பொறுத்தது. ஆயினும் இரசனை என்பது உணர்வுகளையும் விஞ்சியது. இரசனை பற்றிய மேலைத்தேய கீழைத்தேய கலை விமரிசர்களிடையே கருத்துவேறுபாடுகள் உள்ளன. மார்கஸ்வாத விமரிசகர், நவீன, பின்நவீன விமர்சகர்கள் இதனைப் பல்வேறு விதமாக வரைவிலக்ககணப் படுத்துகின்றனர்.

உயர் இரசனையை மக்களிடத்தே ஏற்படுத்துவதில் வெகுஜன ஊடகத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ) கட்டுருவாக்கச் சிந்தனை

ஆக்கம் என்பது படைப்பாகும். அத்தகைய ஒரு படைப்புச் சிந்தனையுடன் இருப்பது கட்டுருவாக்க சிந்தனை எனப்படும். ஆக்கச் சிந்தனை என்றும் இது அழைக்கப்படும். இது ஒரு அரிதான திறனாகும். கவிதை ஆற்றல், படைப்பாற்றல் ஆக்க சக்தி என்று இது குறிப்பிடப்படுகின்றது.

''உலகில் மனிதன் ஒரு அரிதான உயர் நிலையாகும். மனிதனும் அறிவியல் பலம் பெறுவது மேலும் அரிதாகும். அறிவியல் ஞானத்திலும் நல்லுறவு அதனை விட அரிதாகும். கவிதை புனையும் ஆற்றல்கள் எக்காலத்திலும அரிதாகப் போற்றறப்பட்டுள்ளன.

கல்வியில் மாணவர்கள் ஆக்க சக்தியைத் கட்டியெழுப்ப பாரிய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிக்க கட்டுருவாக்கச் சிந்தனை பலமான ஒரு காரணியாகக் கருதப்படுகின்றது.

கட்டுருவாக்கவாதிகள் தம் அனுபவங்களை ஆக்கத்திறனுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். தனது அனுபவங்கள், பிறரது அனுபவங்கள் ஊடக ஆனபவங்கள் என்று மூன்று அனுபவ வகைகள் காணப்படுகின்றன. இவ்வனுபவங்கள் உண்மையை விளங்கிக் கொள்வது படைப்பாளரின் பணியாகும். அந்த உண்மையில் நின்று ஆக்கச் சிந்தனையில் ஈடுபட வேண்டும். சிந்தனை என்பது உள்ளத்தில் ஒன்றை கட்டுருவாக்கச் சிந்தனையில் உதித்த பின் ஊடகங்கள் மூலம் வெளியிடப்படுவதாகும்.

தான் ஆக்கத்தை முன்வைப்பது எந்த ஊடகத்தின் மூலம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அப்போது ஊடகத்துக் கேற்ற சிந்தனையை நெறிப்படுத்த முடியும். அது முன்வைக்கப்பட்ட பின்னர் பயனாளியின் அனுபவமாக மாறும் . ஒவ்வொரு ஊடகத்தின் ஆற்றலை அறிந்திருப்பது முக்கியம்.

கட்டுருவாக்கச் சிந்தனை என்பது வியத்தகு ஒரு விடயமாகும். எனினும் அது அர்த்தமுள்ளதாக இருப்பது முக்கியமாகும். ஆக்க இலக்கியத்தின் இறுதி இலக்கு இரசனையின் பிறப்பாகும். இரசனை என்பது பயனாளி அடையும் தற்காலிக மகிழ்ச்சி அன்று. உலகின் வாழ்க்கைப் பிரச்சினையை எதிர்க்கொள்ளும் பலத்தை மனிதன் அதன் மூலம் பெறுகின்றான். உன்னதமான குறிக்கோள் அடைவிற்குள் பிரவேசிக்கின்றான்.

வெகுஜன ஊடகம் படைப்பாற்றலுடன் ஒன்றித்துள்ளது. வெகுஜன ஊடகத்திடையே நிலவும் கடும் போட்டிகாரணமாக கட்டுருவாக்கம், அத்தியாவசியக் காரணியாக மாறியுள்ளது. ஆக்கச் சிந்தனை புதிய கருத்துக்களைப் பிரதிபலிப்பதால் அத்தகைய ஆக்க திறன்களைக் காண்பது மிகவும் அரிதாகவேயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ) அழகியலும் சமூகநோக்கும்

அழகியல் என்பது நளினமானது. மனதை மகிழ்விப்பது, அழகானது, மனங்கவர் தன்மை மிக்கது என்றும் அதனைக் கூறலாம். சமூகத்தைப் பற்றியதான அறிவு சமூக நோக்காகும். அது நுண்ணறிவின் ஓர் அணுகுமுறையாகும்.

சங்கீதம் நாடகம், பாடல், ஆடல், கவிதை, இலக்கியம், செதுக்கு, சிற்பம் ஆகிய பல்வேறு வடிவங்களில் அழகியல் முன்வைக்கப்படும். இவை கருத்து வெளிப்பாட்டுககான தொடர்பாடல் ஊடகங்களாகும். புலன்களைப் புலங்கிதமடைய வைக்கும் ஆன்மாவைத் தூண்டும் ஆற்றல் அழகியலுக்குண்டு. அழகியல் இரசனையைத் தோற்றுவிக்கும்.

பௌத்த சிந்தனையின்படி அழகியல் ஆன்மிகஅழகியல், வெளியகஅழகியல என்று இருவகைப்படும். தேன் இருப்பதன் காரணமாகவே வண்டுகள் மலரை நாடி வருகின்றன. தேன் மணத்தில் வண்டு கவரப்பட்டு அழகியல் என்ற சுவையை நாடியே வருகின்றன. இந்த உதாரணத்தின்படி ஒரு செய்தியில் அல்லது நிகழ்ச்சியிலுள்ள அழகியலதன்மை பயனாளியைக் கவர்கின்றது என்பது தெளிவு. சமூகம் பற்றிய அறிவை விரிவுபடுத்துவதற்காக அழகியலை ஒரு கருவியாக பயன்படுத்த முடியும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சமூகத்தைப் பற்றிய சரியான நோக்கமின்மை சமூக அபிவிருத்திக்கு தடையாக அமையும். ஊடுருவிப் பார்ப்பதற்கு யதார்த்தத்தை விளங்கிக் கொள்வதற்கு அழகியல் பெருமளவில் துணை புரிகின்றது. ஊடகவியலாளர் என்பவர் துல்லியமான உணர்வுகள் நிறையப் பெற்றவராக இருத்தல் வேண்டும். ஏனையவர்கள் காணாதவற்றை அவர் காண முடிவது அப்போதுதான்.

பரிநிர்வாண நிலையை அடைவதற்காக தியானம் செய்வதற்குத் தெரிவு செய்த புத்தகயாவில் அமைந்துள்ள அழகிய வனத்தொகுதியை புத்தபெருமான் மிகவும் வர்ணித்துப் பேசியுள்ளார். அழகியல் ஒருவரில் செலுத்தும் செல்வாக்கை இது விளக்குகின்றது.

அண்மைக்காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட அருங்கலைகளின முன்னேற்றத்திற்கு 1934 இல் ரவிந்தரநாத் தாகூர் இலங்கையில் மேற்கொண்ட விஜயம் காரணமாக அமைந்ததாக கூறப்படுகின்றது. அவரின் விஜயத்தினால் ஏறபடுத்தப்பட்ட கலை மற்றும் அழகியல் தூண்டலை 1934 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதியில் வெளியான டெய்லி நியூஸ் பத்திரிகை பாராட்டியிருந்தது.

கலை இரசனை நலிவடைவதால் ஏற்படும் இறுதிப் பெறுபேறு மக்களிடையேயுள்ள அழகியல் உணர்வு மங்கிப் போவதாகும். இலங்கையர்கள் இவற்றிலிருந்து எந்த அளவு தூரமாகியிருந்தனர் என்றால் அவர்களிடம் அததகைய உணர்வுகள் இருந்தது எனபதைக் கூட அவர்கள் அறியாதிருந்தனர். அவை முற்றிலும் மறந்துபோகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடையே நினைவிலுள்ள எந்தக் காலப்பகுதியிலும் ஏற்படாத கலை உணர்வுகள் வேகமாகத் தூண்டப்பட்டமைகு நாம் ரவிந்திரனாக தாகூருக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

எமது தனித்துவமான அழகியல் அணுகுமுறைகளுடாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய சமூக விளக்கம் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். சமூக விமர்சனத்தில் ஈடுபட முடியாத ஒரு பரம்பரையினர் உருவாகுவதனால் அது துரதிர்ஷ்டமான நிலையாகும். அழகியல் ரீதியான இரசனை ஆற்றலை விசேடமாக இளம் பிராயத்தினர்களிடையே ஏற்படுத்த வெகுஜனஊடகங்கள் முன்வர வேண்டும்.

வெகுஜனஊடகங்கள் தொடர்பாக நோக்கினால் இது ஒரு பலம் வாய்ந்த செல்வாக்காகும். எந்தவொரு தொடர்பாடல் வழியில் கிடைக்கப் பெற்றாலும் பயனாளியிடத்தில் அது பரிமாணமடையும் ஊடகமே ஒரு செய்தியாகும் என மார்ஷல் மகலூன் விளக்கியது இதனாலாகும். வெகுஜனஊடகங்களின் செல்வாக்கைப் பற்றி ஆராயும்போது செய்தி என்பது எமக்கு சுற்றியுள்ள உலகத்தை விளங்கிக் கொள்ள உதவும். ஒருவரைப் பாண்டித்தியசாலி ஆக்குவதற்கு உதவும். புலன்களை உயிர்ப்பிப்பதற்கும். மொழியில் சொற்களுண்டு ஆயினும் அவற்றைப் பயன்படுத்தும்போது செய்தியாக மாறுவதை விளங்கிக் கொள்ள வேண்டும். மேற்படி விளக்கங்கள் அழகியல் சார்ந்த செய்திகளின் செல்வாக்கை விளக்குகின்றது.

**ஒப்படை 5**

1) தொடர்பாடலுக்கும் குடும்பக் கட்டமைப்புக்குமிடையே உள்ள தொடர்பை விளக்குக.
2) சந்தையின் மீது தொடர்பாடல் ஏற்படுத்தும் செல்வாக்கை விபரிக்குக.
3) பயன்பாடுமிக்க சமூகமொன்றை உருவாக்க தொடர்பாடலை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.
4) 'தொடர்பாடலின் மூலம் இரசனையை விருத்தி செய்யலாம்' என்பது பற்றிய உங்கள் கருத்தைக் கூறுக.
5) உங்கள் கிராமத்தைப் பற்றி பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக ஒரு சிறப்புக் கட்டுரையைத் தயார் செய்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 புகைப்படக்கலை நுட்பத் தேர்ச்சிகள்




**நோக்கம்**

இன்றைய வளர்ந்தவர்கள் சிறுவர்களாயிருந்தபோது ஒரு கமராவைக் கையால் தொட்டிருக்கக்கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்திருக்கவில்லை. ஆனால் (கமரா) நிழற்படக் கருவி என்பது இன்று ஒரு சாதாரண உபகரணமாக மாறியுள்ளது. ஆயினும் அது ஒரு எளிமையான உபகரணமன்று. மிகவும் ஆக்கரீதியாகப் பயன்படுத்த வேண்டிய ஒரு கருவியாகும்.

இந்த அத்தியாயத்தில் புகைப்பட நுட்பம் தொடர்பாக கமராவை / புகைப்படக் கருவியை கையாளும் விதத்தைக் கற்க உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஓர் புகைப்படக் கருவியை எடுத்து அதனை இயக்கும் அனுபவத்தைச் சொந்தமாகப் பெற்றுக் கொள்வதே இங்கு முக்கியமாகும். அதன் மூலம் உங்கள் ஆக்கரீதியான தேர்ச்சிகளைத் விருத்தியாக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள உங்களால் முடியும். அது புகைப்படமொன்றை எடுப்பதை விட முக்கியமானதாகும். சில வேளை உங்களது எதிர்காலத் தொழில் புகைப்படக்கலை சார்ந்ததாகவும் இருக்கலாம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

மொழிசார்ந்த ஆவணங்களைவிட ஓர் உருவமானது'அறிவு சார்ந்த' உணர்வு பூர்வமான தொடர்பாடல் பண்புகளைக் காட்டும் சித்திரக் கலையின் பின்னர் மனிதன் அடைந்து கொண்ட எளிமையான பிரதியீடு புகைப்படமாகும். கடந்து செல்லும் காலப் பகுதியில் காண்பவற்றை ஓர் உருவாகமாற்றி அழிந்து விடாது பாதுகாக்க புகைப்படக் கலையால் முடிகின்றது. மானுடத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தும் உரு ஊடகங்களில் சிறப்பிடம் பெறுவது தத்ரூபமாக சரியான தோற்றத்தைக் காட்டும் தகவல் ஊடகமான புகைப்படம் மூலமேயாகும்.

கமரா எனப்படும் புகைப்படக் கருவியின் உதவியால் உருவாகும் ஒளிசார்ந்த உருவக்கலையின் முதலாவது படிமுறையே புகைப்படக் கலையாகும். அதன் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சில காலஞ்செல்ல சினிமாவும் மேலும் சில தசாப்தங்களின் பின் தொலைக்காட்சியும் தோற்றம் பெற்றன. வில்லைகளினால் உருவாக்கப்படும் விம்பம் இவ்வூடகத்தின் அடிப்படையாக இருப்பதனால் இவை விம்பக்கலை எனப் பொதுவாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

## புகைப்படகலை நுட்பத்தின் வரலாற்று அடிப்படைகள்

வெகுஜன ஊடகத்தின் வரலாற்றுடன் ஒப்பிடும் போது புகைப்படக்கலை வரலாறு குறுகியதாகும். ஒளியினால் ஆக்கிய உருவொன்றை முதற் தடவையாகக் குறிப்பிடுவதில் வெற்றி கண்டவர் ஜோசப் நிசபோர் நீம்ஸ் (1765-1833) என்ற பிரான்ஸ் நாட்டவராவர். 1826 இல் நீல்ஸ் கண்டறிந்த பட ஆக்கத் தொழில் நுட்பம் சூரிய ஒளியால் வரைதல் என்ற கருத்தைத் தரும் "ஹெவியோக்ரபி" என்பதன் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்டது.


படம் :- 6.0.1
ஜோசப் நிசெபோர்

நிப்ஸ்ஸின் புகைப்படம் பதிவதற்கு எட்டு மணிநேரமெடுத்தது. அதனால் மனித உருவத்தை அல்லது அசையும் பொருட்களை புகைப்படமாக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நிப்ஸ்ஸின் முறையின் படி உருவம் துத்தநாகம் தடவப்பட்ட தகட்டில் பதிவானதுடன் நேர்பட மொன்று அங்கு காட்சியளித்தது. அது நவீன காலத்தில் பலரும் பயன்படுத்துவது போன்றதாக மறை நிழற்படத்துடன் கூடிய படிகமாக இல்லாதிருந்தமையியால் அதிக அளவு பிரதிகளை முதல் ஒளிப் படத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு முடியவில்லை. ஆனால் ஒரு பென்சிலை அல்லது தூரிகையைப் பயன்படுத்தாது இரசாயன ரீதியான ஒரு உருவைப் பதிய வைக்கும் இப்புதிய தொழில்நுட்பம் பல ஆய்வாளர்களின், தொடர்பாடல்கலைஞர் களின், சித்திரக் கலைஞரின் ஆழமான அவதானிப்புக்குட்பட்டது.


படம் :- 6.0.2
உலகின் முதலாவது ஒளிப்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்:- 6.0.3
லுயஜஸ் மான்டே டிகியுரே



படம்:- 6.0.4
மனித உருவுடன் கூடிய உலகின் முதலாவது புகைப்படம்

புகைப்படக் கலையை நடைமுறைத் தளத்துக்குக் கொண்டு வந்த பணிக்கு உரமூட்டியவர் லுயிஸ் மன்டே கியுரே (1787-1851) என்ற பிரான்ஸ் நாட்டவர் ஆவார். ஹேலியோக்ரபி முறையின் படி 8 மணி நேரமாகப் புகைப்படமாக்கப்பட்ட புகைப்படத்தை ஒரு நிமிடத்துக்கு மட்டுப்படுத்துவதற்கு டகியுரே ஆற்றல் பெற்றார். இந்த நுட்பமுறை முறை டகியுரியோ மயமாக்கல் என அழைக்கப்பட்டது. இதனூடாக மனித உருக்கள், நிகழ்ச்சிகள் என்பவற்றை புகைப்படமாக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனுடன் நின்று விடாத டகியுரே புகைப்படக் கலையை ஒரு இரசனை யூடகமாக பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்திய கௌரவத்துக்கும் உரித்தாகிறார்.



படம்:- 6.0.5
விலியம் பொக்ஸ் டெல்போட்




படம்:- 6.0.6
டெல்போட்டின் முதலாவது மறை உரு

புகைப்படத் தொழில் நுட்பத்தின் மற்றுமொரு கண்டுபிடிப்பு மறைப் படிகம் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். பிரித்தானிய நாட்டவரான ஹென்றி பொக்ஸ் டல்போட் (1800-1877) என்பவர் 1835 இல் இல்பரிசோதனையை வெற்றிகரமாக நிறைவேற்றியதுடன் இன்றுவரை அம்முறையே பிரபல்யமாக உள்ளது. புகைப்படம் ஒன்றை (Negative) மறைப் படிகமொன்றில் பதிய வைப்பதன் மூலம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட அளவுள்ள விரும்பிய எண்ணிக்கையிலான பிரதிகளைப் பெற முடியுமாக இருப்பதனால் இக்கண்டுபிடிப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் அளவில் பெரிய புகைப்படக் கருவிகளும் மேலதிகக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டதால் அன்றாட நிகழ்வுகளைப் படம் பிடிப்பது இலகுவாக இருக்கவில்லை. அளவில் சிறியதும் இலகுவாகக் கையாளக் கூடியதுமான கமராவை உற்பத்தி செய்ததின் முன்னோடி அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்ஜ் ஈஸ்ட்மன் ( 1854-1932) என்பவராவர். அவர் 1889 இல் பல உருக்களைத் தனித்தனியாகப் பதிவு செய்யக் கூடிய படலத்தையும் கொடாக் என்ற பெயரிலான ஒரு பெட்டிக்கமராவையும் சந்தைக்கு அறிமுகப்படுததினார்.




George Eastman
(1854-1932. USA)

படம் :- 6.0.7
ஜோர்ஜ் ஈஸ்ட்மன்




படம் :- 6.0.8
கொடேக் பெட்டிக் கமரா பற்றிய விளம்பரம் 1888

பெட்டி புகைப்படக் கருவி மிகக் குறுகிய காலத்தில் உலகெங்கும் பிரபல்யம் பெற்றது. இலகுவாகக் கையாளக் கூடியதாக இருந்தமையினால் தொழிற்சாலைகளில் பண்ணைகளில், வேலைத்தலங்களில் உண்மையான வாழ்க்கை நிலைமைகளைப் படம் பிடிக்க முடிந்தது.

## புகைப்படக் கலையின் நடைமுறை அடிப்படைகள்

ஜோர்ஜ் நிசபோக் நீப்ஸ் புகைப்படக்கலை நுட்பத்தைக் கண்டுபிடித்தமை ஒரு தொழில் நுட்ப வெற்றி மட்டுமே. அது நடைமுறை வடிவமாக உறுதிப்படுத்தப் பட்டமை டகியுரே, வல்போட் ஆகியோரின் கண்டுபிடிப்புகளினாலாகும். ஈஸ்ட்மனுடைய பெட்டி கெமராவும் படலத்தகடும் புகைப்படக்கலைக்கு ஒரு மக்கள் விரும்பும் முகப்பை வழங்கியது.

இதனடிப்படையில் தனிப்பட்ட சமூக நிகழ்வுகள், சந்தர்ப்பங்களை புகைப்படமாக்கும் மரபு விருத்தியடையத் தொடங்கியது. இதற்கிடையில் புகைப்படக்கலைக்கு உரித்தான இயல்புகள், பிரதியெடுக்கும் ஆற்றல் காரணமாக அது ஒரு கல்வி ஊடகமாகவும் இரசனையூடகமாகவும் பல்வேறு துறைகள் சார்ந்த தகவல்களைத் தயாரிக்கும் முறையாகவும் நடைமுறைக்கு வந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியுடன் மட்டும் தொடர்புபட்டிருந்த அச்சு ஊடகம் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் உருத் தொடர்பாடலிலும் ஆர்வம் காட்டத் தொடங்கியது. வரையப்பட்ட சித்திரங்கள் மர அச்சு மூலம் தாள்களில் பிரசுரிக்கப்பட்டன. அதன் நோக்கங்கள் பல

1. எழுத்து வாசிக்கத் தெரியாதவர்களையும் பத்திரிகையின் பாற் கவர்தல்
2. மொழியினால் கூற முடியாததாயுள்ள தகவல்களை உருவங்கள் மூலம் முன்வைத்தல்
3. பத்திரிக்கைக்குக் கவர்ச்சியான தோற்றத்தை வழங்குதல்.

இதனால் அச்சு ஊடகங்களில் மர அச்சுச் சித்திரங்கள் பிரசுரிப்பது அதிகரித்தது. ஒரு ஓவியரினால் வரையப்படும் சித்திரத்தை பத்திரிகையில் சேர்ப்பதில் எதிர் நோக்கிய சில பிரச்சினைனளும் காணப்பட்டன.

1. ஆக்கத்துக்கு அதிக நேரம் எடுத்தல்
2. உருவினால் வெளியிடப்படும் கருத்து ஓவியனின் திறனில் தங்கியிருத்தல்
3. நம்பகத்தன்மையை உறுதிபடுத்த முடியாமை
4. அதிக பிரதிகளெடுக்க முடியாமை.
5. கையாள்வதில் பிரச்சினை

எனவே மேற்படி சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய ஊடக உருக்கலையொன்றின் தேவை காணப்பட்டது. புகைப்படக்கலை அதற்கான நெருங்கிய தீர்வு என்பதால் அதனை ஊடகத் தொடர்பாடலுடன் இணைக்க ஊடகவியலாளர்கள் அவசரப்பட்டார்கள். அதன்படி 1842 இலிருந்து புகைப்படத்தினூடாக தயார் செய்யப்பட்ட கட்புல அம்சங்கள் அச்சேறத் தொடங்கின. 1864 இல் முதல்புகைப்படம் வெளியானது. அதே அடிப்படையில் பத்திரிகையில் பீரசுரிக்கும் அச்சுப்படிகத் தொழில் நுட்பம் பாவனைக்கு வந்தது.

## 6.1 தொடர்பாடல் ஊடகத்துறையில் ஒளிப்படப் பயன்பாடு

நவீன வெகுஜன ஊடகங்களின் பிரதான கூறுகள் மொழியும் உருவுமாகும். அவ்வாறு பயன்படுத்தப்படும் உரு ஊடகங்களில் இயற்கையானதும், யதார்த்த நிலையை வெளிக் காட்டுவதுமான உருவம் சார்ந்த பிரதான முறையாக புகைப்படக்கலை முன்னணியில் உள்ளது.

### அ) நினைவுச் சின்னமான புகைப்படப் பாவனை

### 1. தனிப்பட்ட நினைவுச் சின்னமாக புகைப்பட உபயோகம்

தனிப்பட்ட வகையில் தத்தமக்கு முக்கியமான நினைவுப் பெறுமதியுள்ள புகைப்படங்களை ஆக்கிக் கொள்ளவும் அவற்றைக் கவனமாக வைத்திருக்கவும் சமூகம் பழகியுள்ளது. அத்தகைய புகைப்படங்கள் சட்டகமிட்டு வீட்டுச் சுவர்களில் தொங்க விடவும், தாங்கிகளிட்டு காட்சிப்படுத்தவும், ஆல்பங்களில் இட்டு புகைப்படத்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பாகக் களஞ்சியப்படுத்தவும் பலரும் விரும்புகின்றனர்.

இத்தகைய புகைப்படங்களை மீண்டும் மீண்டும் பார்த்து திருப்தியடைவதற்கும் விருந்தினர்களும் தம்மை பற்றிய ஒரு நல்லுணர்வைப் பெறவும் வீட்டுக்கு ஒரு நேர்த்தியை வழங்கவும் பயன்படுத்தலாம்.



படம் :- 6.1.1
சுற்றுலாவின் போது எடுக்கப்பட்ட படம்

## 2. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களாக புகைப்படங்களைப் பயன்படுத்துதல்

இன்றைய சமூகத்தில் அனைத்துப் பொதுக் கருமங்களிலும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், இடங்கள் தொடர்பிலும் புகைப்படம் எடுத்தல் என்பது சாதாரணமாக நடைபெறும் ஒன்றாகும்.

செய்தி சேகரிப்புக்காகவும், ஊடகப் பிரசுரங்களுக்காகவும், பொது மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காகவும் புகைப்படங்கள் பயன்படுத்தபபடுகின்றன. பெறுமதி வாய்ந்த புகைப்படங்களை எதிர்காலத்துக்காகச் சேர்த்து வைக்க வேண்டிய தேவை அனைவருக்கும் உண்டு. அதாவது இன்றைய முக்கியத்து வத்தை எதிர்காலத்துக்குக் கொண்டு செல்லும் ஒரு கருவியாக ஒளிப்படம் பாவனை சிறப்பிடம் பெறுகின்றது.



படம் :- 6.1.2
தேசிய தினத்தின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படம்

அத்துடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புகைப்படங்களை சர்வதேசத்துக்கு முன்வைத்தல், நாட்டினதும் அதன் மக்களினதும் கௌரவத்துக்கும் பாத்திரமாகும் ஒருவிடயமாகும்.

### ஆ) அச்சு ஊடகங்களில் புகைப்படங்கள்

புகைப்படத் தொழில் நுட்பம் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அதனைத்தம் அச்சு ஊடகங்களில் சேர்த்து கொள்ள பத்திரிகை வெளியீட்டாளர்களும். ஊடகவியலாளர்களும் ஆர்வம் காட்டினர். அன்றிருந்த தொழில் நுட்பத்திள் படி மர அச்சில் அச்சுப்படிகங்கள் செய்து பத்திரிகையில் அச்சிடும் முறையே காணப்பட்டது.

முதற் தடவையாக ஒரு பத்திரிகையில் புகைப்படமொன்று 1842 ஜுன் 4 ஆம் திகதியில் பிரித்தானியப் பத்திரிகையான இலஸ்ரேடட் லண்டன் நியூஸ் எனற பத்திரிகையில் முதற் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சு ஊடகத்தில் மொழி எவ்வாறு பயன்படுத்தபபடுகின்றதோ அதே போன்று அனைத்து வெளியிடுகளிலும் உருக்களையும் சேர்த்துக்கொள்வதற்கான வசதி நவீன தொழில் நுட்பத்தின் பயனாக ஏற்பட்டுள்ளது. முதலில் எழுத்துக்களுடனும் அடுத்து வரையப்பட்ட சித்திரங்களுடனும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அச்சு ஊடகம் புகைப்படங்ளையும் சேர்த்துக் கொண்டமையால் பல அனுகூலங்களைப் பெற்றுள்ளது.

1. விரைவாக உருவை ஆக்க முடிதல்
2. தத்ரூபமான கட்புல இயல்புகள் அடங்கிய நம்பகரமான ஒரு உரு ஊடகமாகப் பயன்படுத்த முடிதல்
3. தொழில்சார் திறன்களுடன் மட்டுப்பட்டிருந்த வரைவிலக்கணம் விரிவுபட்டமை
4. வேண்டிய அளவு பிரதிகளைப் பெற முடிதல்
5. இலகுவான அச்சுத் தொழில் நுட்பத்துடன் இயைபாக்கம் பெறமுடிதல்

அச்சு ஊடகச் செய்தி வெளியீட்டில் மொழி பிரதானமாகும். இதனால் பத்திரிகைகள், வார வெளியீடுகள் என்பன தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற மொழிவகைப்படுத்தலோடு அறிமுகமாகின்றன. ஆனால் இவற்றில் பிரசுரமாகும் உருவங்களுக்கு அத்தகைய எழுத்தறிவு மட்டுப்பாடுகள் இல்லை. எனவே எந்த மொழியில் வெளியிடப்படும் அச்சு ஊடகமா யினும் ஒரேயளவான தாக்கத்தைச் செலுத்தும் ஆற்றல் ஒரு ஊடகத்துக்குண்டு.

அச்சு ஊடகங்களில் புகைப்படங்கள் பிரசுரிக்கும் துறை புகைப்படப் பத்திரிகைக் கலை (Photo Journalism) என்ற பெயரில் இன்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகச் செய்தித் தயாரிப்பில் மொழியும் உருக்களும் சீராக இணைக்கப்படுவது இத்துறையில் கவனம் செலுத்தப்படுகின்றது.


THE ILLUSTRATED LONDON NEWS

படம்:- 6.1.3
ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட முதல் ஒளிப்படம்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புகைப் படப்பத்திரிகைக் கலை

செய்தித் தயாரிப்புக்காக புகைப்படங்களை கொள்ளல் இதன் கீழ் கவனத்திற் கொள்ளப்படும். உண்மை திரிபுபடாத வகையில் முன்வைக்கப்படல் செய்தித் தொடர்பாடலின் அடிப்படைத் தேவையாக இருப்பதுடன் புகைப்படப் பத்திரிகைக் கலையின் போது திரிபுபட்ட, அல்லது பொய்யான கருத்து வெளியீட்டுக்கு இடம் கிடையாது.



படம்:- 6.1.4 சுதந்திர இலங்கையின் முதற்பிரதமராகிய கௌரவ .எஸ். சேனநாயக்க அவர்கள் இராணுவப் பயிற்சிகளைக் கண்காணித்தபோது எடுக்கப்பட்ட படம்

மொழிசார் செய்திகளில் உள்ள காலாவதியாகும் அல்லது பழுதடையும் பண்பு புகைப்படங்களில் இல்லை. எனவே எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், இடத்திலும், எத்தகைய பயனாளியிடத்தும் புகைப்படங்களை முன்வைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செய்தியின் நிமித்தமாக எடுக்கப்படும் எந்த ஒரு தொனிப் பொருளும் மேலும் சிறப்பாக உருமூலம் காட்டக்கூடிய தகவல்கள் செய்தி புகைப்படத்திற்கான நிமித்தமாகும். உருவால் வெளியிட முடியாத பல தகவல்கள் மொழியால் வெளியிடப்படும். இவ்வகை மொழி, உரு இணைப்பின் விகிதம் எது என்பது தொனிப் பொருளின் இயல்பு, வாசகர் சுவை, பிரசுரிப்பதற்காக ஒதுக்கப்படும் இடம் போன்ற விடயங்களினால் தீர்மானிக்கப்படும்.

தேசிய செய்திப் பத்திரிகைகளில் முன்பக்கத்திலும், உட்பக்கங்களிலும் அதிகமாக செய்தி புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. முன்பக்கத்தில் பிரசுரிக்கப்படுவதன் மூலம் ஒரு செய்தி முக்கியத்துவம் பெறுவது போன்றே புகைப்படம் மூலமும் செய்திகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

## புகைப்படச் சிறப்புக் கலை

சிந்தனைப் பெறுமதியை வெளிக் கொண்டு வரும் பிரசுரிப்புக்கள் இதன் கீழ் கற்றலுக்குட்படுத்தப்படுகின்றன. பெரும்பாலும் கட்டுரைகளாக முன்வைக்கப் படும் சிறப்பாக்கங்களுக்குத் துணையாக புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. சிலபோது புகைப்படங்களேயே முதன்மையாகக் கொண்ட சிறப்பு ஆக்கங்கள் இடம் பெறுவதுண்டு.



படம்:- 6.1.5
ஒரு பிள்ளை செல்ல நாயுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம்

புகைப்படக்கலையினால் கமராவின் முன் நிற்கும் பௌதிகப் பண்புகளுக்கு அப்பாலும் செல்லும் ஆக்கத்திறன் வாய்ந்த உருத்தயாரிப்புக்களை காட்ட முடியும். அதன் போது கோடுகள், வடிவமைப்புக்கள், நிரல்கள், ஒளி என்றவாறுள்ள உரு ஊடகப் புரிதலை முற்றாக மாற்றியமைத்தல் குற்றமாக கருதப்படுவதில்லை.

அளவை மாற்றுதல் நிறங்களை மாற்றுவதல் ஆகியவற்றின் ஊடாக புகைப்படத்தில் புதுமைகள் செய்யலாம். நாம் வாழும் சூழலில் வினாடிக்கு வினாடி நடப்பவற்றை புகைப்படங்களாகப் பதிவு செய்து வைப்பதன் மூலம் அச்சந்தர்ப்பம் நீண்ட காலத்துக்கு பாதுகாக்கப்படுகிறது. அத்துடன் உண்மை யாக குறிப்பிட்ட அனுபவத்தில் பங்கு பற்றாதவர்களும் சரியான விளக்கத்தைப் பெற புகைப்படம் உதவுகின்றது. உதாரணமாக வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணியின் சுட்டித்தனங்களைக் காலத்தால் அழிந்து போக விடாது பாதுகாப்பதற்கு புகைப்படங்களினால் மட்டுமே முடியும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைப்பட விளம்பரக் கலை



படம்:- 6.1.6 ஒரு விளம்பரம்

வர்த்தக விளம்பரங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பத்திரிகையைப் பயன்படுத்தும் போது ஒளிப்படங்கள் பெருமளவு செல்வாக்குச் செலுத்தும். பொருட்கள், சேவைகள் மட்டுமன்றி கருத்துகளை பிரசாரம் செய்யும் போதும் விளம்பரம் பரந்த அளவில் பயன்படுத்தப் படுகின்றது. புகைப்படம் இவ்விடயத்தில் அத்தியாவசியமானதும் தீர்க்கமானதுமான ஒரு தொடர்பாடற் கருவியாக உள்ளது.

வர்த்தக விளம்பரங்களில் பல நோக்கங்களுக்காக கவர்ச்சியான புகைப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. புதிய நுகர்வோர்களை கவர்ந்திழுப்பதற்கு
2. நிலவும் நுகர்வோர் மனப்பாங்குகளை புதுப்பிப்பதற்கு
3. தொடர்பாடற் கருமம் சார்ந்த கட்புலத் தனித்துவத்தைத் தெளிவாகக் கண்டறிவதற்கு
4. தொடர்பாடல் அபிப்பிராயங்களுடன் சம்பந்தப்பட்ட பௌதிக இயல்புக்கான அறிமுகப்படுத்தலும் வலியுறுத்தலும்
5. விநியோகத்திற்காக சமூக அங்கீகாரம் பெற்ற பிரமுகர்களை தொடர்பு படுத்துதல்
6. வாசகர் அனைவரும் நுகர்வோர் அல்லாவிடினும் எதிர்ப்பார்க்கப்படும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவர்களின் பங்களிப்பை பெறுதல்.
7. தொடர்பாடற் பொருட்கள், சேவைகள், கருத்துக்கள் பற்றியும் அதனுடன் தொடர்பான வணிக நியமங்கள் பற்றியும் சமூகம் பற்றியுமான நன்மையான மக்கள் அபிப்பிராயத்தை ஏற்படுத்தல்.

விளம்பரக்கலை என்பது போட்டியை வெற்றி கொள்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு தொடர்பாடற் போக்கு என்பதால், பண்புத் தரத்திலும், கண்கவர் தன்மையிலுமான செய்தி மரபொன்று இதில் காணப்படுகிறது. அதற்காகப் பயன்படுத்தும் புகைப்படங்களும் கவர்ச்சிகரமானவைகளாவேயுள்ளன.

பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு, மேலதிகமாக புத்தகங்கள், கட்டுரைத் தொகுப்புகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகிய அச்சு ஊடகங்களிலும் ஒளிப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வனைத்து புகைப்படபாவனைகளும் புகைப்படக்கலையின் நியதிகளுடன் ஒத்திசைவனவாகவேயுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ) சினிமா ஊடகத்தில் புகைப்படப் பயன்பாடு

சினிமா என்பது புகைப்பட நுட்பத்தின் ஒரு தொடர்பாடல் நீட்சியேயாகும். சினிமா ஊடகத்தில் இயங்கும் உருவுடன் தொடர்பான கோட்பாட்டு நுட்பம் புகைப்பட நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதே ஆகும்.

சினிமாவை ஒரு மக்கள் இரசனை ஊடகமாக விருத்தி செய்யும் போது ஒளிப்படக்கலையும் மறக்கப்படவில்லை. சினிமாவில் புகைப்படத்தின் ஈடுபாடு பிரதானமாக ஆறு சந்தர்ப்பங்களில் அத்தியாவசியமாகும்.

1. படப்பிடிப்பின் போது பாத்திரங்களினதும் காட்சிகளினதும் தோற்றங்கள் ஆடையணிகளின் பின் தொடர்ச்சியைப் பேணுவதற்கு
2. சினிமாத் தொழிலில் ஈடுபடும் கலைஞர்களின் தரவுகள், தகவல்கள் தயாரித்தல், ஜனரஞ்சகத் தன்மையைப் பேணுவதற்கான தனிப்பட்ட நினைவேடுகளுக்காக
3. சினிமா தொடர்பான விளம்பரங்கள், பிரசுரங்கள், பதாகைகள், படஅட்டைகள் போன்ற பிரசாரப் பணிகளுக்காக
4. சினிமா விமர்சனம், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள் உட்பட்ட சினிமா இலக்கிய வெளியீடுகளுக்காக
5. சினிமா கலைஞர்களின் கற்கைகளுக்காக
6. சினிமா விமரிசகர்களின் விமர்சன, இரசனைத் தேவைகளுக்காக, ஒரு சினிமா அனுபவத்தைப் பெறுவதற்காக, இவை படமாளிகைகளின் காடசிப்படுத்தலுடன் இசைவாக்கம் பெறவேண்டும். அது விசேடமாக ஒதுக்கிய ஓர் இடத்தையும் நேரத்தையும் நோக்காகக் கொண்டு நடைபெறுவதாகும்.



படம்:- 6.1.7 ஒரு சினிமாக் காட்சியின் ஒளிப்படம்

அந்த நேரத்தின் பின்னும் சினிமா பற்றிய படம் சார்ந்த பதிவுகளை இரசிகர்களிடத்தில் உருவாக்கு வதற்கு புகைப்படம் தேவைப்படும். அத்துடன் உள்நாட்டு சினிமா தொடர்பாக சர்வதேச கவனத்தைப் பெறும் நோக்கிலும் புகைப்படங் கள் தேவைப்படுகின்றன.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ) தொலைக்காட்சி ஊடகத்தில் புகைப்படப் பாவனை

தொலைக்காட்சி இன்று சினிமாவையும் மிஞ்சியதாக மக்களிடத்தில் பிரபல்யம் பெற்றுள்ளது. அத்துடன் அது வர்த்தக விளம்பரத்தின் மீது கூடிய அளவு மையப்படுத்திய ஒரு தொடர்பாடல் முறையாகும். தொலைக்காட்சி விளம்பரங்கள் அச்சு ஊடக விளம்பரம்) திறந்த வெளிவிளம்பர நடவடிக்கைகள் என்பவற்றுடன் மாதிரிஅமைப்பிலும், இடைத்தொடர்பிலும் ஒத்ததாயுள்ளன. இவ்வொத்த தன்மையைப் பேணுவது புகைப்படங்களேயாகும்.

தொலைக்காட்சி அலைவரிசைகளின் மூலம் இரசிகர்களுக்கு விளம்பரம் செய்யும் போது புகைப்படங்கள் அவசியமாகின்றன. இதற்கு மேலதிகமாக சினிமா தொடர்பாக மேலே 6.1 இல் கண்ட புகைப்படத்தின் ஈடுபாடு தொலைக்காட்சி தொடர்பிலும் பொருந்தும்.

**செயற்பாடு 6.1**

(1) உங்கள் வீட்டில் நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டுள்ள புகைப்படத்தின் பட்டியலொன்றைத் தயாரித்து ஒவ்வொரு புகைப்படத்தினதும் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.



படம் :- 6.1.8
பாதர் பஞ்சாலி (Pather Panchali -1955)

(2) இங்குள்ள சினிமாக் காட்சி புகைப்படத்தின் மூலம் நீங்கள் எதனைப் புரிந்து கொள்கிறீர்கள் என்பதை எழுதுக.

(3) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஜனரஞ்சகப்படுத்த வேண்டி அச்சு ஊடங்களில் வெளியிடப்படும் புகைப்படங்கள் உண்மையில் அந்நோக்கத்தை நிறைவேற்றச் சக்தி பெறும் என்பது பற்றி நண்பர்களுடன் உரையாடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.2 புகைப்படக்கலையின் எளிமையான தொழினுட்பம்

புகைப்படக்கருவியின் (கமரா) பிரதான பணி ஒரு பிரதிவிம்பத்தை பதிவு செய்வதாகும். அதன்படி கமராவின் பிரதான பொறுப்புக்கள் இரண்டாகும்.

1. தன்னிடம் வரும் ஒளியை பிரதிவிம்பமாக மாற்றுதல்
2. அப்பிரதிவிம்பத்தை நிலையாகக் குறித்தல்.

இதன் முதலாவது பணியை நிறைவேற்றுவது வில்லையின் பொறுப்பாகும்.

### அ) புகைப்படக் கருவியின் செயற்பாடுகள்




படம்:- 6.2.1




படம்:- 6.2.2

இந்த இரண்டு கமரா வகைகளிலும் வில்லைக்கு ஊடகப் படங்களைப் பெறும் இரண்டு முறைகள் உள்ளன. இந்த இரண்டு முறைகளிலும் நிகழுவது புகைப்பட படலத்தின் மீது படத்தைப் பெறுவதாகும். கமராக்களில் இவ்வாறான பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் புகைப்படலத்தின் மீது படத்தைப் பெறும் செயன்முறை சமமானதாகும்.

### கமரா மாதிரிகள் சில

புகைப்படப்பிடிப்புக்களின் போது தன்மைக்கேற்ப பல்வேறு தொழில்நுடப வசதிகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கமரா மாதிரிகள் உள்ளன. புகைப்படப் பிடிப்புகளுக்கமைய பயிலும் பயிலுநருக்கு மிகப் பொருத்தமான கெமரா, ஒரு வில்லை கொண்ட எதிர் விம்பக் கமராவாகும். புகைப்படத்தின் வெளியீட்டுப் பெறுமானத்தை புகைப்படப் பிடிப்பாளரின் விருப்பத்திற்கு அமையக் கையாளக்கூடியதாக இருப்பதே அதற்கான காரணமாகும்.




படம்:- 6.2.3
கையாலியக்கும் தனிவில்லை எதிர் விம்ப கெமரா




படம்:- 6.2.4
தானியங்கி தனிவில்லை எதிர் விம்ப கெமரா


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1. அளவீடு | - | பார்வைப் புலத்தை இனங்காணல் |
| 2. குவியப்படுத்தல் | - | படத்தைக் கூர்மையாக்குதல் |
| 3. திறத்தல் | - | படலத்துக்கு ஒளியை வழங்குதல் |

**புகைப்படப்பிடிப்பாளரின் பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| 1. அளவீடு | : | பொருளை இலக்காகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட ஓர் அளவில் கமராவை நிறுத்துதல். |
| 2. குவியப்படுத்தல் | : | பொருளை மிகக் கூர்மையாகப் பற்றக் கூடிய வகையில் வில்லையின் அமைவை செம்மை யாக்குதல் கூர்மைமிக்க விம்பமொன்றைப் பெறுதல் |
| 3. திறத்தல் | : | புகைப்படப் படலத்தின் மீது ஒளியை விழச் செய்யும் வில்லையின் துவாரத்தினதும் கமராத் துளையினதும் அமைவைச் சரியான வகையில் செம்மையாக்குதல் தேவையான தரவுகளை உள்ளடக்கிய விம்பத்தைப பதிவு செய்து கொள்ளல். |

**தனி வில்லை எதிர்விம்ப கமராவின் பகுதிகளும் தொழிற்பாடும்.**

1. கமரா உடல்
2. கமரா வில்லை
3. வில்லைத் துவாரம்
4. சாய்வான ஆடி
5. பார்வைக் கண்ணாடி
6. அரியம்
7. உடன் ஒளி இணைப்பிடம்
8. காட்சி காண் இடம்
9. கமரா துணை
10. புகைப்படப்படல நாடா



படம்:- 6.2.5

வில்லையை அடைகின்ற ஒளி, விம்பமாக மாற்றப்பட்டு குவியத் தளத்தில் அமைந்துள்ள படலத்தை நோக்கிச் செல்லும். இடைவழியே எதிர்ப்படும் சாய்வான தளவாடியில் படும் அவ்விம்பம் நிலைக்குத்தாக மேல் நோக்கிச் சென்று பார்வைக் கண்ணாடி மீது குவியும். அதனை இயல்புநிலையை அடையச் செய்து காட்சிகாண் இடத்தின் ஊடாக வெளிப்படச் செய்வது அரியத்தின் தொழிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படம் பிடிக்கும்போது கமரா உடலில் உள்ள ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் துவாரம் திறக்கப்படும். மேல் அந்தத்தில் பிணைக்கப் பட்டுள்ள சாய்வான தளவாடியானது கிடை அமைவாக மேற்செல்லும். அப்போது வில்லையினால் கமராவின் உடல் செலுத்தப்படும் விம்பம் படலத்தின் மீது பதியும். திறத்தல் நேரம் முடிவடைந்தவுடன் துவாரம் மூடப்பட்டுவிடுவதோடு தளவாடி இயல்பான சாய்வு நிலையை அடையும்.

படலத்தில் பதிவாகும் விம்பத்தின் அடர்வான தன்மை அதற்குக் கிடைக்கும ஒளியின் அளவிலேயே தங்கியிருக்கும். இந்த ஒளியின் அளவை இரண்டு முறைகளில் கட்டுப்படுத்தலாம்.

1. பயன்பாட்டிலுள்ள விலலைத்துவாரத்தின் பருமன்
   துவார இல : F2 F2.8 F4 F5.6 F8 F11 F16 F22

2. பயன்படுத்தும் துவார நேரம்
   செக்கன் : 1/2 1/4 1/8 1/15 1/30 1/60 1/125 1/250

**அளவிடல்** என்பது அச்சந்தர்ப்பத்தில் புகைப்படப்பிடிப்பாளர் பொருளின் தன்மையைக் கருத்திற் கொண்டு எடுக்கும் ஒரு தீர்மானமாகும். குவியப்படுத்தலும் புகைப்படப்பிடிப்பாளரின் தேவைக்கு அமைய செய்யப்படுவதொன்றாகும். வெளிப்பாடு கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய வில்லைத் துளை, துவார நேரம் ஆகியவற்றை ஒளி அசைவுகளின் துணையுடன் அல்லது அனுவத்தைக் கொண்டு தீர்மானிக்கலாம். அல்லது தாம்பிடிக்கும் புகைப்படத்தின் சகல உள்வெளி ஒளிக் காரணிகளை புகைப்படப் பிடிப்பாளர் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

கமராவினால் புகைப்படம் பிடிக்கும்போது மேற்படி தொழில்நுட்ப விடயங்களோடு மேலும் பல விடங்களைப் புகைப்படப் பிடிப்பாளர் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அவ்வற்றை அவர் செயல்ரீதியாக கற்றுக் கொள்ள வேண்டும்.

1. கமராவினுள் புகைப்படத்தைப் புகுத்தும் விதம்

2. புகைப்படம் பிடித்த பின்னர் படலத்தைப் பாதுகாப்பாகக் கமராவிலிருந்து வெளியே கொடுக்கும் விதம்

3. தேவையான சந்தர்ப்பங்களில் பளிச்சீட்டு (Flash) ஒளியைப் பயன்படுத்தல்

4. கமராவுடன் தொடர்புடைய ஏனைய சாதனங்களைக் கையாளும் விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்:- 6.2.6 பளிச்சீட்டு ஒளி பயன்படுத்துதல்

## ஆ) எதிர்ப்படலமும் (Negative Film) இலக்க (Digital) தரவுப்பதிவும்

கமரா வில்லையினால் ஆக்கப்படும் பிரதி விம்பத்தை உள்வாங்குதல் ஒளி உணர் தகட்டின் தொழிலாகும். இதற்காக தற்போது இரண்டு தொழில்நுட்பங்கள் பயன்பாட்டில் உள்ளன.

### 1. எதிர்ப்படலம் (Negative Film)



எதிர்ப்படலத்தைக் கமராவில் புகுத்தி புகைப்படம் பிடித்த பின்னர், அதனைக் கமராவிலிருந்து வெளியே எடுத்து விரித்தோமானால் அதன் மீது ஒளிப் படுகின்றமையால் அதில் பதிந்த படங்கள் யாவும் அழிந்துவிடும். எதிர்ப்படலத்தை இருட்டறையில் மாத்திரமே திறத்தல் வேண்டும்.




படம்:- 6.2.7

எதிர்ப்படலத்தின் தொழில் அதன்மீது படும் ஒளிக்கு ஒப்பாக ஒரு நிழல் உருவை உற்பத்தி செய்வதாகும். அதற்கான மூலப்பொருளாக, ஒளிஉணர்ச்சியுள்ள பதார்த்தங்கள் பயன்படுத்தப்படும். எனினும் புகைப்படத் தட்டுக்களில் வெள்ளி, உலோக உப்பு சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஓர் இரசாயனப் கலவையே ஒளி உணர்ச்சிப் பதார்த்தமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அக்கலைவைக்கு ஒளியை உறிஞ்சும் தன்மை உண்டு. அவ்வாறு ஒளியை உறிஞ்சிய வெள்ளி உப்பு பதார்த்தத்தின் மூலம் உருவாகும் கருநிற வெள்ளியினால் விம்பம் உருவாக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும் விம்பத்தின் தன்மைக்கு அமைய நவீன புகைப்படத் துறைச் சந்தையில் மூன்றுவகையான புகைப்படல வகைகளை நாம் பெறக்கூடியதாக உள்ளது.

1. கறுப்பு வெள்ளை எதிர் புகைப்படலம் (Black and White Nagative Film)
2. வர்ணஎதிர் புகைப்படலம் (Colour Negative Film)
3. வர்ண ஊடுகாட்டி அல்லது வழுக்கிப்படலம் (Colour Slide Film)

**கறுப்பு வெள்ளைப் படலமொன்றின் குறுக்குவெட்டு**

| |
|---|
| மேற்புற பாதுகாப்பு பூச்சி |
| செலட்டின் படை |
| ஒளி உணர் பூச்சு வெள்ளி உப்புப் படை |
| ஒளித்தடுப்புப் படை |
| செலுலொயிட்டு துவாரம் |

வர்ண புகைப்படப் படலம் வர்ண வழுக்கிப் படலம் ஆகியவற்றின் குறுக்குவெட்டு இதனிலும் சற்று வேறுபட்டது. மேலும் அவற்றில் பிடிக்கப்படும் விம்பங்களையும் கட்புலனாகும் தன்மையும் மற்றும் இரசாயன முறையும் வெவ்வேறுபட்டவையாகும்.

சந்தையில் கிடைக்கும் எந்தவொரு படல வகையும் புகைப்படம் பிடிப்பதற்கும் பொருத்தமானது எனக் கருதிவிட முடியாது. தமது புகைப்படப்பிடிப்புத் தேவை தமது தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றுக்கும் பொருத்தமான வகையிலேயே புகைப்படப்படலங்களைத் தெரிவு செய்துகொள்ள வேண்டும். அதற்காக விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் வருமாறு

1. தம்மிடமுள்ள கமராவில் புகுத்தத் தக்கதாக இருத்தல்.
2. கறுப்பு வெள்ளைப் புகைப்படம் வர்ணப் புகைப்படம், வழுக்கிப் படலம் ஆகியவற்றுள் தேவையானது எது என்பது
3. பிடிக்க வேண்டிய புகைப்படங்களின் எண்ணிக்கை
4. புகைப்படப் படலம், ஒளிஉணர்வைக் காட்டும் விதம்
5. புகைப்படம் பிடித்த, படலத்தை இரசாயன ஒளியில் விருத்தி செய்யும் திறன்
6. காலாவதியாகும் திகதி
7. வர்த்தகப் பெயர்
8. விலை



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. டிஜிட்டல் எனப்படும் இலக்கத் தரவுப்படுத்தல்



படம்:- 6.2.8 இலக்க கமரா மாதிரிகள் சில

இது வில்லையினால் உருவாக்கப்படும் விம்பத்தை நிலைபேறடையச் செய்யும் ஒரு நவீன தொழில்நுட்பமாகும். இங்கு தகவல்கள் யாவும் இலக்கத் தரவுகளாகப் பதிவாகும். இரசாயன ரீதியில் விம்பத்தையும் இலக்க புகைப்படப்பிடிப்பையும் கவனிக்க முன்னர் இலக்க நுட்பத்தின் அடிப்படையைச் சற்று விளங்கிக் கொள்வோம்.

எந்தவொரு மின்சாதனத்திலும் தொழிற்பாடு அதன்மின்சுற்றுக்களில் பாயும் மின்னேற்றத்தின் வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாறும் மின்னோட்ட அளவு மாறும் வோல்ற்றளவு ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு தொழிற்பாடுகள் பிறப்பிக்கப்படும். இவ்வாறான மின்சுற்றுக்களைக் கொண்ட மின் சாதனங்கள் ஒப்புளிச் சுற்று (Analogue Circuits) கொண்ட மின்சாதனங்கள் எனப்படும்.

ஒப்புளி மின்சுற்றுக்களுக்குப் பதிலாக நவீன மின்தொழினுட்பத்தில் இலக்கச் சுற்றுக்கள் (Digital Circuits) பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் தொழிற்பாடு சுற்றின் பாயும் ஓட்டத்தின் பெறுமானத்தில் தங்கியிருப்பதில்லை. மாறாக சுற்றில் ஓட்டம் பாய்கின்றதா இல்லையா என்பதிலேயே தங்கியிருக்கும். டிஜிட்டல் இலக்க மின்சுற்றுக்களில் சகல விளைவுகளும் அளவு ரீதியான பெறுமானத்திலன்றி மின்னோட்டம் உள்ளதா இல்லையா என்பதிலேயே தீர்மானிக்கப்படும். எனவே, இலக்கச் சுற்றுக்களைக் கொண்ட மின் சாதனங்கள் ஒப்புளிச சுற்றுக்களைக் கொண்ட மின்சாதங்களை விட நம்பகமானவையும் வினைத்திறன் மிக்கவையுமாகும்.

ஆரம்பகால கணினிகள் ஒப்புளி மின்சுற்றுக்களைக் கொண்டிருந்தன. எனினும் சகல நவீன கணினிகளும் இலக்க மின்சுற்றுக்களையே கொண்டுள்ளமையால் அவை இலக்க கணினிகள் (Digital Computers) எனப்படுகின்றன. தகவல்களைப் பற்றுதல் ஒழுங்குபடுத்தல், பகுப்பாய்வு செய்தல், அதற்கமைய கணித்தல்கள் தரவுக்களஞ்சியப்படுத்தல் உட்பட பல்வேறு பணிகளுக்காக இலக்கத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. ஒப்புளி மின்சுற்றுக்களை விட இவை துரிதமாக செயற்படக்கூடியவை, செம்மையாக்கல் செயற்படத்தக்கவை, வினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்மிக்கவை. அளவில் சிறியவை. குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடியவை. இலகுவாகக் கையாளக்கூடியவை, உலகளாவிய தரவு வலையமைப்புடன் இணைந்து செயற்படுத்தக்கூடிய ஆற்றல்கொண்டவை என்ற இவ்வாறான பண்புகளைக் கொண்டுள்ளமையால் தற்காலத்தில் இலக்கத் தொழில்நுட்பம் பெரிதும் பிரபல்யமடைந்துள்ளது.

இலக்கத் தொழில் நுட்பத்தில் கணினியினால் புரிந்து எண்ணக்கூடிய வகையில் தரவுகளை வழங்குதல் வேண்டும். அல்லது கணனியினது மொழியில் அதனை வழங்குதல் வேண்டும். இலேசர் கணினியின் மொழி மிக மிக இலகுவானது. எனினும் சிக்கலான மொழிக் கோலங்களில் பரிச்சயமின்மையால். எமக்கு அவற்றை விளங்கிக் காண்பது சற்று சிரமமான அமையக்கூடும். அது கடினமானது என்பதில்லையாயினும் அதில் எமக்குப் பரிச்சயமின்மையே அதற்கான காரணமாகும்.

நாம் குறியீடுகளைப் பயன்படுத்தியே உலகைப் புரிந்துகொண்டோம். தகவல்களைப் பெறுகின்றோம். ஒன்றினைப் பற்றிய தகவல்களைத் தொடர் பாடுகின்றோம். பரிமாறிக்கொள்கின்றதோடு எமது மொழியின் எழுத்துக்களைப் போன்றே கணித இலக்கங்களும் இவ்வாறான குறியீடுகளில் அடங்கும். தமிழ் அரிச்சுவடியில் 247 எழுத்துக்களும் ஆங்கில அரிச்சுவடியில் 26 எழுத்துக்களும் சிங்கள அரிச்சுவடியில் 60 எழுத்துக்களும் உள்ளன. எமது இலக்கத்தின் தொகுதியில் 0 தொடக்கம் 9 வரையிலான 10 இலக்கங்கள் உள்ளன. தகவல் சேகரித்தல், பகுப்பாய்தல், தொடர்பாடல் ஆகிய பணிகளுக்காக பெருந்தொகையான குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றமை இதிலிருந்து தெரிகின்றது.

கணினி மொழியானது நாம் பயன்படுத்தும் மொழிகள் மற்றும் கணிதம் போன்று கடினமானதல்ல. கணினி மொழியில் 0,1 ஆகிய இரண்டு குறியீடுகள் மாத்திரமே உள்ளன. அகிலத்தின் எந்தவொரு தகவல்களையும இது துவித குறியீட்டினால் (Binary Code) காட்டலாம். அது 0, 1 ஆகிய இரண்டினதும் பல்வேறு சேர்மானங்களைப் பல்வேறு தகவல்களை காட்டலாம். இந்த கணித்தலானது இரும கணித்தலை ஒத்திருத்தலைக் காணலாம்.

கணினி உலகில் இரும குறியீடு பயன்படுத்தப்படுவதற்கான காரணம் அதில் காணப்படும் ஓர் அனுகூலமாகையால் அது 0 ஐயும் 1 ஐயும் மின் மற்றும் பொறிமுறையில் காட்டுவது மிக இலகுவாக இருந்தது. யாதேனும் சிக்கலான சுற்று வலையமைப்பொன்றை ஒரு சுற்றாகக் கருதும் போது அதன் மின் நிலைமையை இரண்டு விதங்களில் மாத்திரமே காட்டலாம். இந்த இரண்டு நிலைமைகளையும் 0,1 என இலகுவாகக் காட்டலாம். அளவு ரீதியான நிலைமை எண்ணப்படுவதில்லையாகையால் மிகக் குறிப்பான பெறுபேறுகளைப் பெறுவதற்கு இத் தொழிநுட்பம் மிகப் பொருத்தமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ) புகைப்படங்களும் வழுக்கிகளும்

கிடைக்கும் புகைப்படங்களின் தன்மையின்படி சந்தையில் உள்ள பலவகையான புகைப்பட வகைகளில் ஒன்றினைப்பற்றி 6 : 2. உபதலைப்பின் (ஆ) 1 ஆம் பகுதியில் குறிப்பிட்டுள்ளோம். அவற்றுள் ஓரிரண்டு வகைகளான கறுப்பு, வெள்ளை மறைப்படலம். பரிணாமப்படலம் ஆகியன இயல்பான நிறமுடைய புகைப்படங்களாக ஒளி உணர்ச்சியுடைய தாளில் அச்சிடப்படும். இவை புகைப்பட அச்சிடும் தாள் எனப்படும்.

பொதுவாக வீடுகளில் நாளாந்த நடவடிக்கைகளின்போதும் திருமண வைபவங்கள் சந்தர்ப்பங்களிலும் புகைப்படம் பிடிப்பதற்காக கறுப்பு வெள்ளை அல்லது வர்ண புகைப்படங்கள் பயன்படுத்தப்படும். அப்படலங்களில் இரசாயன செயற்பாட்டினால் பதிவாகும் படம், கட்புலனாகும் நிலைக்கு மாற்றப்பட்டு புகைப்படம் பிடிக்கும் கடதாசியில் பதிவு கொள்ளப்படும். இவ்வாறாகப் பெறப்படும் புகைப்படங்களையே நாம் பார்க்கின்றோம். சட்டகங்களிலிட்டு தொங்க விட்டும் புகைப்படக்கோவைகளிலிட்டும் அழகாகக் காட்சிப்படுத்துகின்றோம்.

புகைப்படங்களில் பிறிதொரு விதமாக தயாரிக்கப்பட்ட நிலையே வழுக்கி எனப்படுகின்றது. வழுக்கி தயாரிக்கப்படுவதற்காக நேர் புகைப்படப் படலமே பயன்படுத்தப்படும். அதில் அறிமுக மறைப் புகைப்படப் படலததைப் பயன்படுத்த முடியாது. ஓர் புகைப்படப் படத்திலும் படத்தைப் பதிவு செய்து இயல்பான படததைப் பெறக்கூடியதாக இருப்பதே இதன் சிறப்பியல்பாகும். இப்படலத்தை 35 mm (மில்லி மீற்றர்) பகுதிகளாக நறுக்கி, ஒவ்வொன்றும் ஒலிப்பாடு சட்டகத்தில் (Frame) பதிக்கப்படும். இவ்வாறு புகைப்படம் பதிக்கப்பட்ட சட்டங்களே வழுக்கிகள் (Slides) எனப்படும்.

வழுக்கிகளைப் பார்வையிடுவதற்காக தயாரிக்கப்பட்ட ஒரு எறியகருவி (Projector) தேவை. எறிவைக் கருவியில் வழுக்கிகளைச் சரியாகப் புகுத்தி வழுக்கியின் நேர்ப் படலத்தின் ஊடாக உயர்வலு மின்னொளி பாயும் போது எதிரே உள்ள திரையில் பெரிய அளவினால் வர்ணப்படம் பதியும். அதாவது புகைப்படத்தினால் பெறமுடியாத ஒரு பயனாகும். குறிப்பாக கல்வி நடவடிக்கைகளுக்காக இவ்வாறான வழுக்கிகளை தயாரித்து அவற்றின் பெரிய அளவிலான விம்பங்களை திரையில் காட்சிப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்:- 6.2.9 ஒற்றை வழுக்கி எறிவைக் கருவி
(Single Slide Projector)

கல்வி ஊடகமாகவும் பொழுது போக்கு ஊடகமாகவும் வழுக்கித் எறிவைத் தொழிநுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் ஒளியைப் பதிவு செய்து வழுக்கிகளை காட்சிப்படுத்தும் அதேவேளையில் சமாந்தரமாக ஒளி, ஒலி இணைந்த ஊடக அனுபவத்தையும் உருவாக்கலாம்.

இவ்வாறாக திரை மீது காட்சிப்படுத்தும் விம்பத்தின் பண்புத்தரம் சினிமா படச் சட்டகத்தைவிட மிக உயர்வானதாகக் காணப்படும். எனவே அச்சு ஊடகத் தொடர்பாடல் ஊடகங்களில் தரமிக்க புகைப்படங்களைப் பெறுவதற்காக நேர்ப்படப் புகைபடத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

### ஈ) இலக்க புகைப்பட தொழிநுட்பம்

இலக்கக் கெமராவில் வில்லையினால் உருவாக்கப்படும் விம்பம், ஒளியை உணரும் மின்கலமொன்றில் இனங்காணப்படும். இக்காட்சியின் விம்பத்துக்கு ஒப்பான மின் சமிக்ஞைத் தொடர் இலத்திரனியல் சுற்றொன்றினால் இலக்க மின் சமிக்ஞைத் தொடரொன்றாக மாற்றப்படும். இந்த சமிக்ஞைத் தொடரை யாதுமொரு வகையில் ஒழுங்குபடுத்தி கள நிலை ஊடகமொன்றிக் களஞ்சியப்படுத்தலாம். மேலும் குறித்த கணினி மென்பொருளைப் பயன்படுத்தி பல்வேறு செம்மையாக்கங்களை செய்து கொள்ளலாம். இவ்வாறு அச்சுப் பொறியைப் பயன்படுத்தி புகைப்படப் பிரதிகளைப் பெறலாம்.

கணினி மென்பொருளைப் பயன்படுத்தி பதிப்புச் செய்யக் கூடியதாக இருத்தல், அச்சு ஊடக, மின்னஞ்சல் வழி உலகளாவிய தொடர்பாடல் பணிகளுக்காக இலகுவாகப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல், போன்றவை இலக்க புகைப்படத் தொழில்நுட்பத்தின் சிறப்பான அனுகூலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைப்படம் பதிவாகும் ஊடகம்

பொதுவாக கெமராவில் இரசாயனப் பொருள் பூசப்பட்ட நாடாவொன்றிலேயே படலபடம் பதியும். எனினும் இலக்கக் கெமராவில் அதற்காக மின் அட்டை அல்லது காந்த அட்டை பயன்படுத்தப்படும். ஒளிப்படப் படங்கள் ஒரு தடவை மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான அட்டைகளின் மீண்டும் மீண்டும் புகைப்படங்களைப் பதிவு செய்ய முடியும். பிடித்த புகைப்படம் பொருத்தமற்றது எனக் கருதும் பட்சத்தில் மீண்டும் அப்புகைப்படங்களைப் பிடிப்பதற்காக முதலில் பிடித்த புகைப்படம் தேவையில்லையாயின் அதனை அழித்துவிடலாம். புகைப்படம் தரவுகளை மூன்று ஊடகங்களுக்கு அல்லது கணினிக்கு அனுப்பி அதனை மீண்டும் ஓர் புதிய ஊடகமாகவும் பயன்படுத்தலாம்.

நவீன கெமராக்களில் பயன்படுத்தப்படும் இணைந்த பளிச்சீட்டு அட்டை மின் நினைவக அட்டைகள் (Memory Cards) சில வகைகளின் உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




1. Compact Flash Card 2. Smart Media Card 3.Secure Digital Card 4. XD Card

படம் : 6.2.10 படக் களஞ்சிய ஊடகங்கள்

## படச்சட்டக எண்ணிக்கை

பொதுவான கமரா வகைகளில் 12, 24, 36 என்றவாறு படச்சட்டப் படலங்களை கொண்ட புகைப்படல நாடாக்களை இடலாம். எனினும் இலக்கக் கமராவில் அவ்வாறான படங்கள் இடப்படுவதில்லை. இலக்கக் கமராவில் உயர் கூர்மையுடைய படச்சட்டகங்களை குறைந்த எண்ணிக்கையிலும், குறைந்த கூர்மையுடைய படச்சட்டகங்களையின் கூடிய எண்ணிக்கையிலும் பதிவு செய்யலாம். இவ்வாறாகப் படங்களை பதிவு செய்யக் கூடிய தகவல் கோப்பு மாதிரி (File formats) ஒன்றோ மாதிரிகள் சிலவோ கமரா உற்பத்தியில் அறிமுகஞ் செய்யப்படும்.

உதாரணம் :

ஜேபெக் (JPEC - Joint Programming Experts Group)
ரிஃப் (Tiff - Tage Information file format)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவு செய்த விம்பங்களின் பாதுகாப்பு

பொதுவான புகைப்படப் படலமானது அப்புகைப்படம் பிடிக்கப்பட்ட பின்வரும் அதிக ஒளி உணர்வுடையதாகையால் வெப்பத்திலும் ஒளியிலும் பாதுகாப்பது அவசியமாகும். அவ்வாறே இலக்கக் கெமராவில் மின் படப்பதிவு ஊடகத்தை இலத்திரனியல் காந்தப்புலங்கள் வெப்பம் ஆகியவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

## இலக்க புகைப்படம் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு

புகைப்பட படல நாடாக்களைப் பயன்படுத்தி புகைப்படம் பிடித்தலுக்குப் பதிலாக இலக்கத் தொழில்நுட்பப்பதிவு பயன்படுத்துவதால் கிடைத்துள்ள சில அனுகூலங்கள் வருமாறு.

1. உயர்ஒளிஉணர்வு வீச்சுக்களில் புகைப்படம் பிடிக்கக் கூடியதாக இருத்தல்
2. புகைப்படத்தைப் பதிப்பு (Edit) செய்திட அதிக வசதிகிடைத்தல்.
3. கணினியுடன் தொடர்புடைய தகவல் வலையமைப்புடன் இலகுவாக இணையக்கூடியதாக இருத்தல்
4. தொலைத்தொடர்புச் செயன்முறையினூடாக ஒரு வெற்றிகரமான தொடர் பாடல் ஊடகமாகக் காணப்படுதல்.
5. கெமரா மற்றும் ஏனைய சாதனங்களுக்காக சார்பளவில் அதிக மூலத்தைச் செலவிட வேண்டியுள்ள போதிலும் குறைந்த உற்பத்திச் செலவுடன் புகைப்படம் பிடிக்கக்கூடியதாக இருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு 6.2**

1. தனி வில்லை எதிர் விம்ப கமராவொன்றினை நன்கு அவதானித்து அதன் சிறப்பியல்புகளை இனங்காண்க.
2. ஆசிரியரின் வழிகாட்டலின்படி, வழுக்கிகள் பற்றி கவனியுங்கள். வசதி கிடைக்கும் போது வழுக்கிக் காட்சியொன்றினைக் காட்டுங்கள்
3. இலக்கப் புகைப்படத் தொழில்நுட்பம் காரணமாக எதிர்காலத்தில் எமது நாட்டில் புகைப்படத் துறையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் பற்றி குழு நிலையில் கலந்துரையாடுங்கள்.



## 6.3 நிலைத்த (Still) புகைப்படப்பிடிப்பில் ஆக்கப்பூர்வமான உத்திகள்

நீங்கள் ஒரு அழகிய காட்சியைக் காண்கிறீர்கள் உங்கள் கைகளில் ஒரு கமரா உள்ளது. அதனை சரியாக இயக்குகின்ற ஆற்றல் திறன் உங்களிடம் உள்ளது. எனினும் நீங்கள் காணும் அந்த அழகிய காட்சியைப் புகைப்படமாகப்பிடிப்பதில் ஓர் இடர்ப்பாடு காணப்படுகின்றது. அதற்கான காரணம் புகைப்படப்பிடிப்பு தொடர்பான ஓரளவு அறிவு உங்களுக்கும் உள்ளது. எனவே நீங்கள் காணும் அக்காட்சியின் அழகினது தொடர்பாடல் பெறுமானம் பற்றிய கருத்துகளில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

- நீங்கள் மிகவும் விரும்புகின்ற புகைப்படம் எது?
- அது ஒரு ஆக்கப்பூர்வமான படைப்பு என நீங்கள் கருகின்றீர்களா?
- அச்சு ஊடகங்களில் நீங்கள் காணும் புகைப்படங்கள் ஆக்கப்பூர்வமானவையா?
- ஆக்கப்பூர்வமான புகைப்படம் என்பதால் கருதப்படுவது யாது?
- ஆக்கப்பூர்வமான தன்மையை வெளிப்படுத்தாத புகைப்படங்கள் எல்லாவற்றையும் கழித்துவிட வேண்டுமா?
- புகைப்படப்பிடிப்புத்துறை ஆக்கப்பூர்வமான ஒரு துறையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்: 6.3.1 ஒளிப்படம் பிடித்தலின் பல்வேறு மெய் நிலைகள்

அன்றாட வாழ்விலும் தொழிலின் போதும் சமூகப் பணிகளின் போதும் நாம் பெருமளவில் புகைப்படங்கள் பிடிப்பதுண்டு. சில ஆக்கங்களில் அதிக எண்ணிக்கை தொகைப் படங்கள் காணப்படும். அவற்றுள் சில புகைப்படங்கள் எமது மனதில் நேரடியான கருத்துக்களைத் தோற்றுவிக்கும் வெவ்வேறு ஆட்களை மனதில் தோற்றுவிக்கும்.

அவ்வாறான கருத்துக்களுக்கு இடையே ஒற்றுமைகள் காணப்படுகின்றன எனினும் வேறு சில புகைப்படங்கள் எமது விருப்பு வெறுப்புபடி எமது மனதில் சிறப்பான வெளிப்பட்ட உணர்வுகளை எண்ணங்களை ஏற்படுத்துகின்றன. அனைவருக்கும் பொதுவான ஒரு கருத்தை அவ்வாறான புகைப்படங்கள் தரமாட்டா இவ்வாறான புகைப்படங்கள் சில வேளைகளில் எமது மனதில் நீண்ட காலம் கிடைத்திருக்கும். மேலும் பல்வேறு கோணங்களிலும் பரிமாணங்களிலும் எமது மனவொழுங்குகளை துளைக்கும். அவ்வாறு அவை எமது கற்பனையுடன் இணைந்து செயலாற்றுவது எமக்கும் அந்த ஆக்கத்துக்கும்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே விசேடமான ஒரு பெறுமானத்தை உருவாக்கும். இவ்வாறான புகைப்படங்கள் ஆக்கப்பூர்வமான தன்மையைக் கொண்டவை என்பது பெரும்பாலானவர்களின் கருத்தாகும்.

கலை ஊடக வகைப்படுத்தலின் எளிமையான மாதிரிக்கு அமைய புகைப்படப்பிடிப்புக் கலை என்பது, ஓர் அறிக்கைப்படுத்தல் வகைக் கலையாகும் என்பதே விமர்சர்களின் கருத்தாகும் பொதுவான புகைப்படப்பிடிப்புத் தொழில்நுட்பத்தின் போது வில்லையொன்றுக்கு எதிரே உள்ள பௌதிக நிலைமைகளின் யாதேனும் நேரடியான ஒப்புமை புகைப்படம் மூலம் முன்வைக்கப்படுவதே அதற்கான காரணமாகும். எனினும் விசேட கெமரா கோணங்களை தெரிவு செய்தல், ஒளி, நிறம், வடிவம் போன்றவற்றை காட்டுதல், இயல்பானக் காட்சியை பெறுவதற்காக, வில்லைகளை மாற்றும் வடிவங்களை (Filter) பயன்படுத்தப்படும். விம்பங்களை பதிப்புச் செய்தல் (Edit) ஆகிய பணிகளின் ஊடாக இயல்பான நேரடியான மீளாக்கப் பண்புகளை மேம்பட்ட பண்புகளை பெறலாம் என்பதை நீங்கள் விளங்கியிருப்பீர்கள்.

எனவே வெறும் கண்ணால் காண்பதிலும் மேலதிகமான காட்சியை ஆக்கப்பூர்வமாக முன்வைக்கின்ற ஆற்றல் புகைப்படக் கலையொன்றுக்கு உண்டு.

### அ) புகைப்படப்பிடிப்பாளரின் ஆக்கப்பூர்வ தன்மை

எந்தவொரு கலைப்படைப்பையும் போன்றே புகைப்படமும் மாதிரிக்குரிய பெறுமானம் இயக்கத்தன்மை பெறுமானம் ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும். புகைப்பிடிப்பாளர் தனது கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற வில்லைக்கு எதிரே உள்ள பௌதிக பொருளை (Object) படச்சட்டத்தினுள் யாதேனும் கோணத்தில் இடம்படுத்துவர். ஒளி, நிறம், தளவடிவம் ஆகியவற்றையும் முப்பரிமாண வகையில் தாபித்துக் கொள்வர். இறுதியில் இவையெல்லாம் கூட்டாக ஒரு இலக்கை மையமாகக் கொண்டு நயக்கத்தக்க பொருள்களின் முழுமையை எடுத்துக் காட்டும்.



படம்:- 6.3.2 ஒரு பிள்ளை கடதாசியொன்றை கசக்கும் போது படிமுறையாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பூர்வமான புகைப்பிடிப்பில் ஒளி - இருள், கறுப்பு - வெள்ளை, நிறம் ஆகியவற்றுக்கு குறிப்பான அர்த்தங்கள் உள்ளன. சில உதாரணங்கள் வருமாறு.



படம்:- 6.3.3 ஆக்க ரீதியான புகைப்படங்கள்

உதாரணம்

1. ஒளி - இருள் தொடர்பான அர்த்தங்கள் அறிக்கைகள்

உதாரணம்

2. வெள்ளை - கறுப்பு தொடர்பான

| ஒளி | இருள் | வெள்ளை | கறுப்பு |
|---|---|---|---|
| தெளிவு | சிக்கல் | இளஞ்சாயம் | இருண்டவேளை |
| நலன் | நலனின்மை | மென்மை | கரட்டு தன்மை |
| எதிர்பார்ப்பு | விரக்தி | கவலை | ஒளிவு |
| தைரியம் | அச்சம் | அமைதி | எதிர்ப்பு |
| வெற்றி | தோல்வி | இளேசான தன்மை | கனமானதன்மை |
| அறிவு | அறியாமை | கருணை | வலமை |
| திறந்ததன்மை | மூடிதத்தன்மை | இன்மை | மறைவு |
| ஆசிர்வதிப்பு | மறைவு | தூய்மை | தூய்மையின்மை |

3. வெம்மையான நிறங்கள், குளிர்ச்சியான நிறங்கள் பற்றிய அர்த்தங்கள்

| வெம்மையான நிறங்கள் | குளிர்ச்சியான நிறங்கள் |
|---|---|
| சூடு | குளிர் |
| துரிதம் | மந்தம் |
| தடை | அனுமதி |
| ஆபத்து | பாதுகாப்பு |
| இரைச்சல் | அமைதி |
| பொறுமையின்மை | பொறுமை |
| எதிர்ப்பு | இனக்கம் |
| தெள்ளத் தெளிவின்மை | சாதுவான நிலை |
| இயக்கத் தன்மை | நிலையற்றத்தன்மை |
| பதட்டம் | அடக்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நியமங்கள் புகைப்படத் துறைக்கு மாத்திரம் உருவானவையல்ல. சித்திரம், சினிமா, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களுக்கும் பொருத்தமானவையாகும். ஆக்கபூர்வமான புகைப்படப்பிடிப்பாளர் தமது புகைப்படங்களை பார்ப்போருடன் உரையாடுவதற்காக மேற்படி நியமங்களை அடிப்படையாகக் கொள்வர். அத்தோடு புகைப்பட கலையின் வெவ்வேறு மரபுகளுக்கு அமைவாக புகைப்படப்படிப்பாளர் தமது ஆக்கபூர்வமான புகைப்பட வெளிப்பாட்டை திட்டமிட்டுக் கொள்வார்.



படம்:- 6.3.4 எட்வேர்ட் வெஸ்டன் என்ற உலகப்புகழ் பெற்ற புகைப்படக் கலைஞனின் படம்



படம்:- 6.3.5 அன்சல் அடம்ஸ் என்ற உலகப் புகழ்பெற்ற புகைப் படக் கலைஞனின் படம்

## ஆ) தொழில்நுட்பமும் ஆக்கபூர்வமும்

புகைப்படம் ஒன்றில் காணப்பட வேண்டிய குறைந்தபட்ச தொழில்நுட்ப நியமங்களை நிறைவு செய்வதற்கும் பொருத்தமான தொழில்நுட்பத்தை புகைப்பட பிடிப்பாளர் பயன்படுத்தியிருக்க வேண்டும். தொழில்நுடபத்தின் ஊடாக வெளிக்கொணரும் ஆக்கபூர்வத் தன்மையின் பெறுமானம் அளப்பெரியது. இதுவரை காலமும் வில்லைக்கு எதிரே இருந்த பௌதிக பொருளின் (Object) நேரடியாக புகைப்படத்தின் ஆக்கபூர்வமான கணினி உத்திகளின் துணை கிடைக்கப் பெற்றுள்ளமை காரணமாக மென்மேலும் விரிவடைந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புகைப்படபிடிப்பு என்பது ஒரு தொழில் நுட்பக்கலை என்பதில் கருத்துவேறுபாடு இருக்க முடியாது. தமது முன்நிலையில் இருக்கும் யாதேனும் காட்சி தளத்தைப் பார்ப்பதில் ஏற்படும் அதே உணர்வு அதன் புகைப்படத்தைப் பார்ப்பதிலும் ஏற்பட வேண்டும். எனினும் சில வேளைகளில் அந்த அர்த்தத்தை முற்றிலும் மாற்றிவிடும் தன்மையும் உண்டு. அதற்காகப் கையாளக் கூடிய சில உத்திகள் உள்ளன.



படம்:- 6.3.6
பல அளவுகளிலான வில்லைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வில்லலைகளின் சிறப்பியல்புகள்
2. ஒளியூட்டல் சிறப்பியல்புகள்
3. வடிக்கட்டிகளின் சிறப்பியல்புகள்
4. (Exposume) சிறப்பியல்புகள்
5. படலத்தின் சிறப்பியல்புகள் / மின் தரவு விருத்தி முறைகளின் சிறப்பியல்புகள்
6. விருத்தி செய்யும் முறைகளின் சிறப்பியல்புகள்
7. அச்சிடும் கலைகளின் சிறப்பியல்புகள்
8. அச்சிடும் உத்திகள் / விம்பங்களைப்பதிப்புச் செய்தல்
9. நிறச்சாயல் ஊட்டும் முறைகள்
10. மின்கலப்பு முறைகள்

## இ) திட்டமிட்ட புகைப்படங்கள்

ஆக்கத் திட்டமிடல் அனைத்துக் கலையூடங்களிலும் காணப்படும். ஓர் ஆக்கத்தினூடாக முன்வைக்க விரும்பும் கருத்துக்கேற்ப நுட்பச் சிந்தனையையும் தொழில் நுட்பத்தையும் ஏலவே திட்டமிட்டுக் கொள்வதே திட்டமிட்ட ஒளிப்படங்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றது.

ஒரு புகைப்படம் தொடர்பில் படமாக்கும் பௌதிக நோக்கங்கள் தொழில்நுட்பவியல், சட்டகத்தின் எல்லை சட்டகத்தினுள்ளே ஒளி, நிறங்கள், வடிவங்களின் கோலங்கள் என்ற காரணிகள் 'அவற்றால் வெளியிப்படும் அர்த்தத்துக்கேற்ற விதமாகத் திட்டமிடப்படும். இவ்விடயங்களில் சீரான சேர்க்கை கலவை' (Composition) எனப்படும்.

திட்டமிடப்பட்ட புகைப்பட ஆக்கம் புகைப்படக் கலையுடன் மட்டுப்படுத்தப்பட்டதால் அவை அனைத்து ஆக்கரீதியான கருத்துக்கமைய ஒளிப்பட நடைமுறைகளுக்கும் பொருந்துவதாயிலுள்ளது.

**உதாரணம் :**

வர்த்தக, விளம்பர புகைப்படம்
சுகாதாரக் காப்பு தொடர்பான புகைப்படம்
அகழ்வாராய்ச்சி தொடர்பான புகைப்படம்
உல்லாசப் பிரயாண மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட புகைப்படங்கள்



படம்:- 6.3.7 சீகிரியா



படம்:- 6.3.8 ஹிக்கடுவ கடற்கரை


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஒளிப்படத்தைத் திட்டமிடுவது அதுபற்றிய அறிவு, அனுபவம் என்பவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மட்டும் நடைபெறும் ஒன்றல்ல. பல்வேறு துறைகள் பற்றிய கற்கைகள் சமகால விதிமுறைகள் பற்றிய பரிசிலனை வேறு ஆக்க ஊடகங்களை எடுத்து காட்டாக கொள்ளல். பயனாளிகளது சிறப்பியல்புகள் ஆகிய விடயங்களும் அங்கு கவனத்திற் கொள்ளப்படும்.

## ஈ) துரித ஒளிப்படம்



படம்:- 6.3.9 கொழும்பு ஒருகொடவத்தையில் அமைந்துள்ள மாடு அறுக்கும் இடத்தில் அபயமளிக்கப்பட்ட பசு அகங்கம ஆகந்த தேரருக்கு நன்றி செலுத்துகின்றது.

விசேட முன்னேற்பாடு ஏதுமின்றி எடுக்கப்படும் ஒளிப்படங்கள் (Candid Phoograph) துரித ஒளிப்படங்கள் வகையைச் சேரும். செய்திகள், மற்றும் விளையாடடுத் துறைகளிலும் திறந்த வெளிப்படப்பிடிப்புகள் போதும் பரவலாக இத்தகைய ஒளிப்படங்கள் எடுப்பதற்கான சந்தர்ப்பங்களுண்டு. இங்கு ஒளிப்படக் கலைஞன் தொழில்நுட்ப முன்னாயத்தம், தருணத்திற்கேற்ற உத்தி, வினைத்திறனான செயற்பாடு ஆகிய பண்புகள் இருக்கும். அளவைப் பொறுத்து சிறப்பான பெறுபேற்றை எதிர்பார்க்க முடியும். வேண்டிய அளவு நேரம் அவதானித்துப் புரிந்து கொள்வதற்கான அவகாசம் கிடைக்காத நிலையில் கணப்பொழுதில் நடந்து முடியும் ஒன்றைப் படம் பிடித்தல் என்பது மிக முக்கியமானதாகும். நேரம் கடந்து விட்டால் மறைந்து போகும் நிகழ்வுகள், நிலமைகளுக்கான கட்புல சான்றுகளாக இறுதியில் எஞ்சி நிற்பது ஒளிபடம் ஒன்று மட்டும்தான்.

## உ) ஒளிபடப் பிடிப்புத் தேர்ச்சி

ஒளிப்படக் கலை தொடர்பான செயன்முறை அறிவைப் பெற்றுக் கொள்ளும்போது கற்றுக் கொள்ள வேண்டிய கோட்பாடுகள் பின்வருமாறு:-

### 1. பொருத்தமான தொழில் நுட்பத்தை தெரிவு செய்தல்

படம் பிடிக்கும் நோக்கத்தையும் தயார் செய்யப்படும் ஒளிப்படங்களினால் வெளியீட வேண்டிய கருத்துப் பெறுமானத்தையும் கவனத்திற் கொண்டு அதற்குப் பொருத்தமான தொழிலுட்பத்தை தெரிவு செய்து கொள்ள வேண்டும். அதன் போது கருத்திற் கொள்ள வேண்டிய தொழிலுட்ப முறைகள் சிலவுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உரிய கெமராத் தொழில்நுடபமும் அதற்கான உபகரணங்களும்
2. போதிய அளவு ஒளிப்பிரவாகமும் கருவிகளும்
3. பொருத்தமான வில்லைகள், வடிவகைகள்
4. படச்சுருள் வகைகள் அல்லது எண்சார்ந்த வகைகள்
5. பதனிடும் தரங்கள் (Processing)
6. ஒளிப்பட பிரசுர செயலாக்க ஒழுங்குகள், நிறைவு வடிங்கள்

## 2. படப்பிடிப்பு செயலொழுங்கு

படம் பிடிக்கும் சட்டகத்தையும் உரிய தொழில் நுட்பத்தையும் நிர்மானித்த பின்னர் ஒளிப்படக் கருவியை (கமரவை) இயக்கும் பொறுப்பு ஒளிபடக் கலைஞரைச் சார்ந்தது. அதனபோது படிமுறையாகப் பின்பற்ற வேண்டிய மூன்று விடயங்களுண்டு.

### 1. அளத்தல்

தேவையான உருவச் சட்டகத்தை ஒளிப்படக் கருவியில் தெரியும் படியான கெமராவை வைத்தல் இதன் கருத்தாகும். பொருளின் மீதான கலைஞரின் இலக்கு அதாவது கோணத்தை இதில் காணுதலே அளத்தல் பாணியின் நோக்கமாகும்.

இதன்படி மிக முக்கியம் என்று நாம் கருதும் பொருளைக் துல்லியமாகப் படமாக்காமலே எமது எதிர்பார்ப்பாகும். அதற்காக கமரா வில்லையைத் தேவையான மட்டத்தில் வைத்து பின்னணியை நோக்கித் துல்லியமாக இருக்குமாறு வைத்துப் படம் பிடிக்க வேண்டும்.

### 2. குவித்தல்

ஒருவில்லை மீள்படக் கமராவெனின் வில்லையைச் சுழற்றி வில்லைக்கும் தகட்டுக்குமிடையிலான தூரத்தை சிறிதளவு மாற்றியமைப்பதன் மூலம் படம்பிடிக்கவுள்ள பொருளின் மீது குவிக்க முடியும். அவ்வாறு குவித்த பின்னர் அதற்கு முன்னும் பின்னும் ஓரளவு இடைவெளியில் இருக்குமாறு அமைத்தவற்றையும் துல்லியமாகப் பார்க்க உதவும். இத்தூர வீச்சு 'கள ஆழம்' எனப்படும்.

### 3. வெளிப்படல்

உருவத்தைப் பதிவு செய்வதற்காக கமராவின் உள்ளேயுள்ள படலத் தகட்டின் மீது ஒளியை வழஙகுதல் கண்டறிதல் எனப்படும். ஒரு உருவைச் சீராக பதிய வைக்க வேண்டுமானால தகட்டுக்குப் போதிய எஅவு ஒளியை வழங்க வேண்டும். அதற்காக ஒரு வில்லையை மீள்படக் கமராவின் பிரதான ஒளிக்கட்டுப்பாட்டு முறைகள் இரண்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வில்லைத் திறவல்

வில்லையூடாக ஒளி செல்லும் திறவலின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கமராவுக்குள் வரும் ஒளி கட்டுப்படுத்தும்.



படம்:- 6.3.10 வில்லை துளை

## கமராத் துவாரம்

கண்டறிதற் சந்தர்ப்பத்தில் திறக்கப்படும் துவாரத்தை எவ்வளவு நேரம் திறந்து வைப்பது என்பதைப் பொருத்து கெமராவுக்குள் வரும் ஒளி கட்டுப்படுத்தப்படும்.




படம்:- 6.3.11 கமராத்துவாரம்

காட்சித் தளத்திலுள்ள இயற்கையான செயற்கையான ஒளி நிலையைக் கவனத்திற் கொண்டு பொருத்தமான ஒரு வில்லைத் திறவலை இடுவதும் போதியளவு நேரம் துவாரத்தைத் திறநது வைத்திருப்பதும் இயக்குபவரின் பொறுப்பாகும். சில நவீன கமராக்களின் கமரா மூலமாகவே காட்சித் தளத்தின் ஒளி நிலைமையை மதிப்பீட்டு தானாகவே வில்லைத் திறவலையும துவார பெறுமானத்தையும் இடும் வசதியுண்டு.

## உருவை வடிவமைத்தல்

கண்டறிந்த தகட்டுப் பட்டிகையை இரசானகூடமுறைகளுக்கமைய கட்புல நிலைக்கு ஆக்கிக் கொள்ளும் விதமும் தொழில்சார் ரீதியாக இத்துறையை ஆராயும் போது தெரிந்திருக்க வேண்டும். டிஜிட்டல்(எண்சார்ந்த) கெமராவைப் பயன்பாட்டில் இரசாயன கூடமுறைக்குப் பதிலாக கணினித் தொழில்நுட்பத்துடன இணைந்த ஒளிப்பட அச்சில் முறை பயன்படுத்தப்படும். பார்ப்பதற்கு அல்லது பிரசுரிப்பதற்காக உருவை தேவையான அளவுகளில் பெரிதாக்கத் தயார்படுத்தும் விபரமான செயலொழுங்கு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**செயற்பாடு 3**

1) ஆக்கத்திறன் வாய்ந்தது என நீங்கள் உணரும் ஒளிபடத்தைத் தெரிவு செய்து அதன் வெளிப்பாட்டு அர்த்தத்தை எழுதுக.

2) ஆசிரியர் வழங்கும் ஒரு வில்லையை மீள்படக் கமராவைப் பயன்படுத்தி
   1) ஒரு குறிப்பிட்ட நோக்கததை சட்டகப் படுத்துக.
   2) அந்த நோக்கத்தை குவிவு செய்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.4 ஒளிபடப்பிடிப்புத் தொழில்


படம்:- 6.4.1 ஒரு புகைப்படக் கலைஞர்

நவீன சமூகத்தில் ஒளிபடக்கலை பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. பொழுதுபோக்கு, செய்தித்தயாரிப்பு, கல்விப்பாணி, அரசியல், பொருளாதார கலாசார, சமூகத் தேவைகள் அவற்றுச் சிலவாகும். இப்பணிகளில் நேரடியாக ஈடுபடும் ஒளிபடக் கலைஞர்கள் ஒன்றில் பொழுது போக்கிக்காக சுயதிருப்திக்காக பொருளாதார நலனுக்காக இவற்றில் ஈடுபடுவர். இவற்றுள் ஒரு வாழ்க்கைத் தொழிலாக அறியப்படக் கயில் ஈடுபடுவது தொழில்சார் ஒளிபடக்கலை எனப்படும். இது இன்று அரச, தனியார் துறைகளில் பிரபல்யம் பெற்ற ஒரு தொழில் துறையாககளில் பிரபல்யம் பெற்ற ஒரு தொழில் துறையாக வளர்ந்துள்ளது.

### அ) ஒளிபடமாக்கலின் தொழில்சார் இயல்பு

பொழுதுபோக்காக ஒளிபடம் பிடிப்பது தவிர்ந்த ஏனைய அனைத்து ஒளிப்பட ஆக்கப் பிரிவுகளும் போல் தொழில்சார் ஒளிபடக் கலைஞர்கள் ஈடுபட்டுள்ளதைக் காண முடியும்.

ஒளிபடத் தொழில் வான்மையின் பிரதான பணியாக அமைவது படம்பிடிப்பதாகும். படமெடுப்பதற்கான உதவியாளர, ஒளி அமைப்புக் கலைஞர், ஒப்பனையாளர் ஒளிபடம் அச்சிடுவோர், ஒளிப்பட வடிவமைப்பாளர், ஒளிப்பட நெறிப்படுத்துவோர், ஒளிப்பட பதிப்பாசிரியர் ஆகிய நுட்பக் கலைஞர் மையமாகக் கொண்ட பல்வேறு தொழில்வாய்ப்புகளும் இதிலுண்டு.

மேலும் ஒளிப்படக் கலைத்தொழில் நுட்பத்தை மையமாகக் கொண்ட தொழில்நுட்ப சேவை, இரசாயன கூட சேவை என்பதையும் இத்துறையிலுள்ள தொழில்களாகும். இதனை விட பல்வேறு ஒளிப்பட வணிகங்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள், தயாரிபபாளர்கள், விற்பனையாளர்கள் போக்குவரததுச் சேவை வழங்குவோர் முகாமையாளர்கள் தரக்கட்டுப்பாட்டாளர்கள் போன்றோரும் இத்துறை சார்ந்தோர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆக்கம் என்ற வகையில் ஒளிபடக்கலையை அடிப்படையாகக் கொண்ட வணிக நிறுவனங்கள் பல வகைப்படும். உலகின் எல்லா நாடுகளிலும் போல் இவ்வகை வணிக நிறுவனங்களிலும் நிலவும் தொழில்வாய்ப்புகள் ஏராளமுண்டு.

1. கலைச் சேவைகள் (ஒளிப்படக் கூடம்)
2. இரசான கூடசேவைகள்
3. உபகரண உற்பத்தி
4. ஒளிப்பட நெறிப்படுத்தல்
5. வடிவமைப்பு, சட்டகமிடல், காட்சிப்படுத்தல்
6. ஆற்றுகை நுட்பச் சேவைகள்

இத்தகைய வணிகங்கள் மக்களிடையே ஜனரஞ்சமடையும் அழைக்கு அவர்களின் வணிக நடவடிக்கைகள் உறுதிப்படுத்தும் ஒளிப்பட கலைஞன் பொதுமக்களிடையே நடமாடுபவராக மக்கள் சேவையொன்றில் ஈடுபடுபவராகவும் தன் பணி குறித்த பூரண விளக்கத்துடன் கருமமாற்றுவார். அத்தகைய ஒளிப்படங்களை அச்சிட்டு அல்லது இறுவட்டுக்களில் இடப்பட்டு சேவை பெறுவோரின் அடையும்வரை பங்களிப்புச் செய்யும் அனைத்து தொழில் வான்மையினரும் நேர்மையான அர்ப்பணிப்புடன், உள்ளுணர்வு பூர்வமாக ஆக்கத்திறனுடன் செயலாற்ற வேண்டும்.

## ஆ) ஒளிப்படக் கலைத்தொழில் வாண்மையில் போதனாமுறை

ஒரு தொழில் என்ற வகையில் ஒளிபடக் கலையுடன் தொடர்பான அரச உத்தியோகத்தர்கள் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் போன்றே சமமான சலுகைக்களுக்கு உரித்துடையவர்கள். ஒளிப்படம் தொடர்பான தனியார்துறை ஊழியர்கள் நவீன வர்த்தக தேவைகளுடன் இணைந்து பெருமளவு வருமானத்தை ஈட்டுகின்றனர். ஆனால் அத்தகைய தொழில்வான்மை நிலையை அடைவது இலகுவானதல்ல. அதற்காக பெரும் அர்ப்பணிப்புடன் நீண்டகாலம் ஈடுபட வேண்டிய தொழில்சார் விதிமுறைகள் ஏராளமுண்டு. அவற்றைப் பின்வருமாறு பின்வருமாறு காட்டலாம்

1) ஒளிபடத் தொழில் நுடபம் பற்றிய போதிய அறிவு
2) 4 நவீன தொழில் நுட்பத்துடன் கைகோர்த்தல்
3) ஆக்கத்திறன் போக்குவரத்து பற்றிய விளக்கம்
4) பொருத்தான தொடர்பாடற் தொழில்நுட்பத்தைக் கையாளல்
5) காலத்திற்கேற்றபடி நேரத்திற்கேற்றப்படி கருமமாற்றல்
6) ஒரு குறிப்பிட்ட பொருளாதார வேலைத்திட்டத்தைப் பின்பற்றல்
7) ஆக்கத்திறன் தொடர்பான மூலாதாரங்களை நெருங்குதல்
8) சட்டரீதியான பண்பாட்டு ரீதியான எல்லைகள் பற்றிய புரிந்துணர்வு
9) வேலை பெறுவோரின் எதிர்பார்ப்புக்களாகவும் துலங்கல்களையு் பற்றிய நெகிழ்ச்சித் தன்மை
10) வணிக மேம்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இ) ஒளிப்பட ஆக்கத்தின் தொழில் சார் பரிட்சயம்

ஒளிப்படக்கலை மக்களிடையே வாழும் ஒரு உயிர்ப்பான ஊடகம் என்பதால் தொழினுட்ப அறிவைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மட்டும் தொழில் சார் மட்டத்தை அடைய முடியாது. முறையான தொழில்சார் போதனைக் கேற்ப குறிப்பிட்ட காலம் சேவை வழங்குவதால் பெற்றுக் கொள்ளும் அனுபவம் தொழில் சார் உறுதிப்பாட்டை வழங்கும். அதற்காகவே தான் விசேடமாக நோக்கும் தொழினுட்பத் துறை (அதாவது ஒளிப்படம் எடுத்தல், அச்சிடல் செயலொழுங்கு, வடிவமைப்பு) குறித்த சிறப்புத் திறனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தான் ஆர்வம் காட்டும் ஒளிப்படப் பிரிவுக்கு உரியதாக ஏனைய படைப்பாளிகளின் பணிகளைப் பற்றிக் கற்பதும் சமகால ஆக்கப் போக்குக்களைப் புரிந்துக் கொள்வதற்கும் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபடுவதற்கு முக்கியமாகும்.

படிப்படியாகப் பெற்றுக் கொள்ளும் தொழில் சார்மையுடன் அனுபவத்தையும் சேர்த்து களத்தில் தனக்கென ஓர் இடத்தைக் கட்டியெழுப்ப புகைப்படக் கலைஞன் ஆர்வம் கொள்ள வேண்டும். தனக்குரிய நன்மதிப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில் பேணுதலும், பாதுகாத்தலும் மூலம் தொழில் சார் மரபுகளின் படி கருமமாற்றுவது அவசியமாகும்.

தொழில் சார் பரிச்சயமுடைய ஒளிப்படக் கலைஞன் உயர் பண்பாடுகளைக் கொண்டவர். துறைசார்ந்த ஞானம், நுகர்வாதம், தனியாள் தொடர்பு, சட்ட மற்றும் கலாசாரப் பெறுமானங்களைப் பாதுகாத்தல். நிதி முகமைத்துவம், நேர முகாமைத்துவம் தொடர்பிலும் கொள்கைப் பிடிப்புள்ளவராகக் கடமையாற்றுவார்.

### ஈ) ஒளிப்படக்கலைக் கற்கை

தொழில்சார் ஒளிப்படக் கலைஞர் ஆவதன் முதற்படி துறைவசாரந்த அறிவைப் பெற்றுக் கொள்வதாகும். அதற்காக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நியதிகளின் படி போதிய அளவு கற்கையில் ஈடுபட வேண்டும். இக்கல்வி பாடசாலைக் காலம் முதல் முதிர்வு வரை தொடர்வதற்குப் பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒளிப்படக்கலையை ஆக்கரீதியாக பயன்படுத்துவதை நோக்கமாககட் கொண்டு இயங்கும் பிரதான உலக அமைப்பு சர்வதேச ஒளிப்படக்கலை சம்மேளனமாகும். ரெல்ஜியத்தில் தலமையகத்தைக் கொண்ட இவ்வமைப்பு யுனஸ்கோ நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒளிப்படக் கலைக் கல்வி நிறுவனமாகும். உலகம் பூராகவுமுள்ள 80 ஒளிப்பட ஒழுங்கமைப்புக்கள் இதில் பூரண அங்கத்துவம் பெற்றுள்ளன. இலங்கையும் இதனுடன் தொடர்புபட்டுள்ளது. அதன் இலங்கைப் பிரதிநிதியாக கடமையாற்றுவது இலங்கை தேசிய ஒளிப்படக்கலை அங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்படக்கலையை ஆரம்பத்திலிருந்தே கற்பதற்காகவுள்ள பல்வேறு அரச நிறுவனங்களும் பாடநெறிகளும் வருமாறு.

1. **பாடசாலை கல்விச் சந்தர்ப்பங்கள்**

- இலங்கை மாணவர் ஒளிப்படச் சங்கங்களின் சம்மேளனம்

  பாடசாலை ஒளிப்படக் கழகங்களும் இணைந்து 1976 இல் அமைக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்காக ஒருவருட சான்றிதழ் பாடநெறியை இது நடத்துகிறது.

2. **உயர்கல்வி சந்தர்ப்பங்கள்**

- களனிப் பல்கலைக்கழகம்

  களனிப் பல்கலைக்கழத்தின் நாடகமும் அரங்கியலும் மற்றும் பிரதிபிம்பக் கலையின் மூலம் பிரதிப்பிம்பக் கலைப் பட்டத்தின் கீழை் பல்கலைக்கழக பட்டப் பாடநெறிகள் இரண்டு நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பல்கழைக்கழக மாணவர் அல்லாதவர்களுக்கு ஒரு வருட டிப்ளோமா பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- கொழும்புப் பல்கலைக்கழகம்

  கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பரிகாலி வளாகத்தின் ஆற்றுகைக் கலைக் கல்விப் பிரிவில் ஒளிப்படக் கலை அலகொன்று பட்டக்கல்விக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

- **அழகியற் கலை பல்கழைக்கழகம்**

  பட்டக் கல்விக்கான ஒளிப்படக்கலை பாடஅலகைக் கற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3. **உயர்கல்வி வாய்ப்பு**

   உலகின் பல்வேறு நாடுகளில் ஒளிப்படக்கலை பற்றிய உயர் பாட நெறிகளை நடைமுறைப்படுத்துகின்றன. உங்கள் நலனுக்காக அதில் ஒரு பாடநெறி பற்றிய விபரம் கீழே தரப்படுகின்றது.

நெதர்லாந்தின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் முழு நேர ஆங்கில மொழி மூல ஒளிப்படக்கலை தொடர்பான பட்டப்படிப்பின் கல்விப் பாடநெறி நடைபெறுகிறது. இப்பாடநெறிக்காலம் ஒருவருடமாகும். இப்பாடநெறி ஒளிப்பட அருங்காட்சியகத்துடன் இணைந்து நடாத்தப்படுகின்றது. ஊடகத் தொடர்பாடல், கலை, வரலாறு, கலாசாரக் கல்வி ஆகிய பாடங்களை இப்பாடநெறியில் கற்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செயற்பாடு 6.4**

தொழில் சார் ரீதியாக ஒளிப்படக்கலையில் கால்வைப்பதற்குத் தேவையானவை என நீங்கள் கருதும் உபகரணப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.

வெற்றிகரமான ஒரு ஒளிப்படக்கலைஞராக வருவதற்கு சரியான துறைசார் கல்வியைப் பெற வேண்டும். இக்கூற்றிற்கு சாதக படிவங்களை ஆராய்க.



**ஒப்படை 6**

ஞாயிறு பத்திரிகையொன்றில் பிரசுரமாகியுள்ள ஒளிப்படங்கள், செய்திகள், சிறப்பம்சங்கள், விளம்பரங்கள் என்பவற்றை வெவ்வேறாகத் தொகுத்து ஓர் ஒட்டி தயார் செய்க.

பல்வேறு வகையான படப்பிடிப்புத் தகடுகள், படச்சுற்றுகளை சேகரிகுக. ஒவ்வொரு சுற்றிலும் உள்ள விடயங்களுடன் அவற்றின் இயல்புகளைப் புரிந்துக் கொள்க.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுடைய பாடசாலையில் ஊடகக் கழகம் ஒன்றை ஆரம்பிக்குக

### 1. பின்னணி

தொடர்பாடலும் ஊடகச் செயற்பாடுகளும் முன்னெப்போதுமில்லாத வகையில் இன்றைய சமூகத்தில் பலமாகச் செல்வாக்குச் செலுத்தியுள்ளதுடன் இசெல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தொடர்பாடல் ஊடாக நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட பலமான நிறுவனங்களாக இருப்பதுடன் அவற்றின் செல்வாக்கிலிருந்து யாரால் மீள முடியும் என்று கூற முடியாதுள்ளது. எனவே இத்தொடர்பாடல் ஊடகங்களைப் பகுப்பாய்வு செய்யவும் தெரிவுகளைச் செய்து உளவாங்கத் தேவையான போதனைகளைப் பிள்ளைகளுக்கு வழங்குவதும் கல்வித் தொகுதியின் பொறுப்பாகும். மறுபுறமாக தொடர்பாடற் தேர்ச்சியின்றி தமது தனிப்பட்ட வாழக்கையைக் கட்டியெழுப்பக் கூட வியாபித்துள்ளது. எனவே, வாழ்க்கைத் தேர்ச்சி என்ற வயில தொடர்பாடற் தேர்ச்சி அத்தியாவசியத் தேவையாயுள்ளது. அத்துடன் ஆக்கத்திறன் வாயந்த பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர்பாடல் ஊடகச் சூழல் மூலம் பல நன்மைகளை அடைய முடியும். பாடசாலை ஊடகக் கழகம் அமைப்பதன் பின்னணி இதுவாகும்.

### 2. உங்கள் பாடசாலையில் ஒரு ஊடகக் கழகத்தை அமைப்பது எவ்வாறு?

1) இதுபற்றி ஆசிரியருடன், அதிபருடன் கலந்துரையாடி அனுமதி பெறுங்கள்
2) நீங்களும் அதிபர், ஆசிரியர்களுடன் மீண்டும் ஒரு கலந்துரையாடலை நடத்துங்கள்
3) தொடர்பாடற் திறனுள்ள மாணவர்ளைப் பாடசாலையில் இருந்து தெரிவு செய்து கொள்ளுங்கள்
4) அந்த மாணவர்களும், நீங்களும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களும் சேர்ந்து இரண்டு கலந்துரையாடல் வட்டங்களை நடத்தவும்.
5) உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
6) எதிர்வரும் வருடத்திற்கான செயற்பாட்டுத் திட்டமொன்றை அமைக்கும்படி உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கவும்.
7) தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தை ஆசிரிய / அதிபருக்கு முன்வைத்து திருத்தல்களுடன் அங்கிகரித்துக் கொள்ளவும். அதனைப் பாடசாலையில் பகிரங்கப்படுத்தவும்.
8) பொதுக் கூட்டமொன்றை நடாத்தி வருடாந்தத் திட்டத்தை முன்வைத்து அனுமதி பெறுங்கள்.

### 3. ஊடகக் கழகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகக் கழகத்தின் வருடாந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது செயற்றிட்ட மட்டத்திலாகும். அதற்கான ஏழு செயற்றிடடங்கள் இதுவரை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு

### 1. ஆய்வு தேடல் செயற்றிட்டம்

இதனால் கருத்தப்படுவது தொடர்பாடல் மற்றும் ஊடகம் தொடர்பாக அடிப்படை ஆய்வுகளையும் தேடல்களையும் மேற்கொள்வதாகும். செலவு குறைந்த, குறைந்த கால விரயமுள்ள, குறைந்த அளவு உழைப்பை விரயமாக்கும் வகையிலான ஆய்வுகள், தேடல்கள் திட்டமிடப்பட வேண்டும். உதாரணமாக பாடசாலையில் கொளவனவு செய்யும் பத்திரிகையை மாணவர்கள் வாசிக்கும் விதம் தொடர்பாக அலலது பாடசாலை மாணவர்ள் கேட்டும் வானொலி சேவைகள், அவற்றின் நிகழ்ச்சி தொடர்பாக கண்டறிவதற்காக இத்தகைய ஆய்வுகள், தேடல்களை நடத்தலாம். சிலவேளை இவை மிகவும் சிறிய ஆய்வுகளாக இருக்கலாம். சில அங்கத்தவர்கள் மடடும் ஒன்று சேர்ந்து இதனைச் செய்யலாம். இறுதியில் ஓர் அறிக்கையைத் தயாரித்து அதனை கழகக் கூட்டத்தில் அல்லது காலைக்கூட்டத்தில் வெளியிட முடியும். அத்துடன் அறிக்கையின் ஒரு பிரதியை நூலகத்தில் அதிபர் காரியாலயத்தில் வைக்க முடியும்.

### 2. திறன் விருத்திச் செயற்றிட்டம்

மாணவர்களின் தொடர்பாடல் மற்றும் ஊடகத் திறனகளை விருத்தி செய்யும நோக்கில நடத்தப்படும இத்தகைய நிகழ்ச்சிகளில் ஒரு குறிப்பிட்ட வரையறை இல்லை. அது பாடசாலையின் தேவைக்காக இருக்கலாம். ஒளிபடக்கலைநுட்பங்கள், காட்டூன் வரைதல், செய்திச் சேகரிப்பு, அறிவிப்பு நடவடிக்கைகள், சிறுகதை எழுதுதல், வானொலிப் பிரிவுகள் எழுதுதல் போன்ற எந்த ஒரு துறை சார்ந்ததாகவும் இப்பயிற்சி நெறிகள் அமையலாம். இவை ஒரு மணிநேர, ஒருநாள் அல்லது சில நாட்கள் நடைபெறும் அமர்வுகளாக இருக்கலாம். இச்செயற்றிட்டத்திற்குப் பொறுப்பான மாணவர்களே இதனை ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக வெளியிலிருந்து வளவாளர்களின் சேவை பெறப்பட வேண்டியிருப்பதால் அதற்கான ஒரு முறையை வகுத்துக கொள்ள வேண்டும். மூன்றுமாதப் பயிற்சி நெறியை வாரத்திற்குச் சில மணிநேரங்கள் மட்டும் நடத்தி இறுதியில் சான்றிதழ் வழங்க முடியும்.

### 3. ஆக்கத்திறன் செயற்றிட்டம்

இதன் கருதது தொடர்பாடல் ஊடகம் பற்றிய மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்திகளை வெளிக்கொண்டுவர ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுதுவதாகும். இங்கு பயிற்சி நடவடிக்கைகள ஏதும் மேற்கொள்வதில்லை. மாணவர்களின் ஆக்கத்திறன்கள் முன்வைக்கப்படுவதே இங்கு செய்யப்படும். ஒருவர் அல்லது பலர் இதனைச் செய்யலாம். உதாரணமாக தனித்து ஒரு கவிதைப் புத்தகம் எழுதி வெளியிடல். சிலர் சேர்ந்து ஒரு இசை நிகழ்சசியை நடத்துதல். ஒரு பாடல் ஒலிப்பேழையைத் தயாரித்து வெளியிடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பிள்ளைக்கு ஒரு பெறுமதி கிடைக்கும் விதமாக இவை ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

### 4. இரசனைச் செயற்றிட்டம்

தொடர்பாடல் ஊடகங்களைச் சேர்ந்த பல்வேறு ஆக்கங்களை இரசிக்கும் சந்தர்ப்பத்தை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துதல் இதன் கருத்தாகும். நல்லதையும் தீயதையும் பிரித்தறிந்து கொள்ளத்தக்கதாக இது ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். உதாரணமாக நூலகத்திலுள்ள புத்தகங்களை இரசித்தல், நல்ல பாடல்களை இரசித்தல், தொலைக்காட்சிநாடகத்தை இரசித்தல், வானொலி நாடகத்தை இரசித்தல் போன்றவற்றைக் கூறலாம். இத்தகைய நிகழ்ச்சிகளின்போது அவற்றின் சிறந்த மோசமான தன்மைகளை இனங் கண்டு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. மக்கள் தொடர்பாடல் செயற்றிட்டம்

மக்களின் நடத்தையை விருத்தி செய்யக்கூடிய விதமாக தொடர்பாடல் உத்திகளைப் பரீட்சித்துப் பார்த்தல் இதன் மூலம் செய்யப்படும். உதாரணமாக அங்குமிங்கும் துப்பும் பழக்கத்தைப் பாடசாலையிலிருந்து இல்லாதொழிக்க இச் செயற்றிட்டத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

## 6. அனர்த்த விபத்து தொடர்பாடற் செயற்றிட்டம்

இது கால முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அனர்த்தமும் ஆபத்தும் எப்போதும் எதிர்கொள்ளப்பட் வேண்டி வரலாம். எந்த இடத்திலும் விபத்துக்கள் நிகழலாம். பாடசாலையில், வீட்டில் பாதையிலாக இருக்கலாம். இவற்றிலிருந்து தவிர்த்துக் கொள்ள அனர்த்தங்கள், விபத்துக்களை இழிவளவாக்கக் அல்லது இல்லாது செய்ய தேவையான அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டியது அவசியம். இவை இச்செயற்றிட்டத்தின் கீழ் நடைபெறும். இது ஒரு வாழ்க்கைத் தேர்ச்சியாகும்.

## 7. சமாதான தொடர்பாடற் திட்டம்

இதன் கீழ் தொடர்பாடற் செயல்களின் கழகங்களுக்குள் நபர்களுக்குள் சமாதா னத்தை ஸ்தாபிப்பதற்கு ஏதுவான காரியங்களை இதனால் பூர்த்தியாக்கலாம். இதற்குத் தேவையான உளப்பாங்குகளும் கருத்துக்களும் போஷிக்கப்படுவதும் பல்வேறு நடவடிக்கைகளையும் இதனால் மேற்கொள்ளலாம். இதற்காக விரிவுரைகள், கதைகள், சித்திரங்கள், பாடல்கள் போன்றவற்றை செய்துகொள்ளலாம்.

- இச்செயற்றிட்டத்திற்கேற்றபடி வருடாந்த திட்டமொன்றைத் தயாரித்தல்
- திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒவ்வொரு செயற்பாட்டையும் ஒவ்வொருவருக்குப் பகிர்ந்தளிக்கவும்
- ஒவ்வொரு செயற்பாட்டையும் நடைமுறைப்படுத்துதற்கான வெவ்வேறு திட்டங்களைத் திரட்டவும்.
- குறிப்பிட்ட விதத்திலேயே செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவும்
- வருடாந்தம் பாடசாலை ஊடக விழாவொன்றை நடத்துதல் ஊடகக் கழகத்தின் முக்கிய செயற்பாடாகும்.

## பாடசாலை ஊடாகக் கழகத்தைப் பதிவு செய்தல்

இலங்கைப் பத்திரிகை சபையினால் பாடசாலை ஊடகக் கடிதங்கள் பதிவு செய்யப் படுகின்றன. பின்வரும் ஆவணங்களை தபால் மூலம் அனுப்புவதன் மூலம் ஊடகக் கழகமொன்றை பதிவு செய்யலாம். பதிவுச் சான்றிதழ் ஒன்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

## அனுப்பவேண்டிய படிவங்கள்

1. ஊடகக் கழகத்தின் யாப்பு
2. உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை (அதிபரின் உறுதிப்படுத்தலுடன்)
3. உத்தியோகத்தர்களின் பெயர் முகவரி
4. எதிர்கால செயற்பாட்டுத் திட்டம்
5. பதிவு செய்வதற்கான அதிபரின் கோரிக்கை

**அனுப்பவேண்டிய முகவரி**
பத்திரிகை ஆணையாளர்,
இலங்கை பத்திரிகை சபை,
இல. 52A கல்பொத்த வீதி,
நாவல, இராஜகிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பாடல் மற்றும் ஊடகவியற் கற்கை - தரம் 10 பாடநெறி

| தேர்ச்சிகளும், தேர்ச்சி மட்டங்களும் | பாட உள்ளடக்கம் |
|---|---|
| 1.0 பல்வேறு தொடர்பாடல் வகைகளை ஒப்பீட்டு ரீதியாக இனங்கண்டு அவற்றைச் சந்தர்ப்பத்துக்கேற்ப தம் வாழ்வில் பயன்படுத்துவார். | **1.0 தொடர்பாடல் வகைப்படுத்தல்** (15 பாடவேளைகள்) |
| 1.1 தொடர்பாடற் செயலொழுங்கின் இயல்பை எளிமையான வரைவிலக்கணங்களூடாக புலனாய்வு செய்வார். | **1.1 தெடர்பாடல் அறிமுகம்**<br>1. தொடர்பாடல் பற்றி "லெஸ்க்வெல்" கூறிய வரை விலக்கணம்<br>2. ஷெனன் வீவர் ஆகியோரின் தொடர்பாடல் மாதிரி<br>3. தொடர்பாடலின் அடிப்படை நோக்கங்கள் |
| 1.2 தனது சிந்தனையைக் கையாள்தல், தொடர்பாடற் செயலொழுங்குடன் தொடர்புபடும் விதத்தைப் பற்றிய அனுபவத்தைப் பெறுவார். | **1.2 அகமுகித் தனியாள் தொடர்பாடல்**<br>1. ஒருவரின் மனோபாவங்களும், மீள் செய்கைகளும்.<br>2. தூண்டல் துலங்கல் இயல்பு<br>3. சிந்தனையைக் கையாளல்<br>4. தொடர்பாடற் செயலொழுங்கின் ஆரம்பம். |
| 1.3 வாய்மொழி, வாய்மொழியல்லாத முறைகளைப் பயன்படுத்தி சோடித் தொடர்பாடற் தேர்ச்சியை அறிந்து கொள்வர். | **1.3 ஆளிடைத் (சோடி) தொடர்பாடல்**<br>1. இருவருக்கிடையில் நிகழும் தொடர்பாடலாகும்.<br>2. சமூக நிலவுகையின் அத்தியாவசிய அங்கம்.<br>3. ஆளிடைத் தொடர்பாடலின் சிறப்பியல்புகள்.<br>4. ஆளிடைத் தொடர்புகளுக்கான தொழினுட்பக் கருவிகள். |
| 1.4 வாய்மொழியாகவும் தொழினுட்பக் கருவிகளுடனும், அவையின்றியும் ஒரு குழுவுடன் தொடர்பாடலில் ஈடுபடும் அனுபவத்தைப் பெறுவார். | **1.4 கூட்டுத் தொடர்பாடல்**<br>1. கூட்டுத் தொடர்பாடலின் இயல்பு<br>2. கூட்டத்துக்கும், பேச்சாளருக்குமான தொடர்பு<br>3. தொழினுட்பக் கருவிகள் பாவனை<br>4. கூட்டுத்தொடர்பாடலின் சிறப்பியல்புகள். |
| 1.5 தொழினுட்ப முன்னேற்றத்தின் விளைவாக வெகுஜனத் தொடர்பாடல் செயற்படும் விதமும் அது சமூக மயமாகியுள்ள விதமும் பற்றி ஆராய்வார். | **1.5 வெகுஜன தொடர்பாடல்**<br>1. வெகுஜன ஊடகத்தின் தோற்றம்<br>2. வெகுஜன தொடர்பாடலுக்கும் வெகுஜன ஊடகத்திற்குமிடையிலான தொடர்பு<br>3. சமூகத்தின் தேவைகளும் தாக்கங்களும்<br>4. நிகழ்கால தொடர்பாடல் நுட்ப வளர்ச்சி |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.0 தொடர்பாடலின் பல்வேறு தோற்றப்பாடுகளை உரிய விதத்தில் பயன்படுத்தி விளைதிறன் மிக்க தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றலை வெளிக்காட்டுவார்.

**2.0 தொடர்பாடற் தொழிற்பாடுகள்**
(15 பாடவேளைகள்)

2.1 வாய்மொழி, வாய்மொழியல்லாத தொடர்பாடல்களை தம் வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய விதத்தைப் பரீட்சித்துப் பார்ப்பார்.

**2.1 தொடர்பாடல் அறிமுகம்**

1. வாய்மொழி, வாய்மொழியல்லாத தொடர்பாடல்களின் இயல்பு
2. வாய்மொழி தொடர்பாடலின் மொழித்திறன் (உச்சரிப்பு, கருத்து வெளிப்பாடு, பொருத்தப்பாடு)
3. வாய்மொழியற்ற தொடர்பாடலின் உடல், சுற்றாடல், சமூகக் காரணிகள்.
4. வாய்மொழி, வாய்மொழியல்லாத தொடர்பாடலில் பயன்படும் திறன்கள்.

2.2 எழுத்தும் அதற்கான சரியான இலக்கண மற்றும் தொழிற் பயன்பாடு பற்றிய பரிட்சியத்தை விருத்தி செய்து கொண்டு வினைத்திறனுள்ள எழுத்து மூலத் தொடர்பாடலில் ஈடுபடுவர்.

**2.2 எழுத்து மூலத் தொடர்பாடல்**

1. மொழியும் எழுத்தும்
2. வினைத்திறன் வாய்ந்த எழுத்தின் இயல்புகள்.
3. எழுத்து பரிட்சயம்
4. எழுத்தூடகப் பயன்பாட்டுத் திறன்.

2.3 கட்புல, செவிப்புல தொடர்பாடல் ஊடகங்களின் பாவனையையும் அதன் வகைகளையும் இனங்கண்டு அவற்றை வினைத்திறனுடன் பயன்படுத்தும் அனுபவத்தைப் பெறுவார்.

**2.3 கட்புல செவிப்புல தொடர்பாடல்**

1. கட்புல செவிப்புல ஊடகத்தின் இயல்பு
2. கட்புல, செவிப்புல ஊடக வகைகள்
3. கட்புல செவிப்புல ஊடகப் பயன்பாடு
4. கட்புல செவிப்புல ஊடகப் பயன்பாட்டுத் திறன்கள்.

2.4 ஒரு ஒழுங்கமைப்பின் நிலைப்பாட்டுக்கு முறைசாரா தொடர்பாடலை வினைத் திறனாகப் பயன்படுத்துவது எவ்வாறு என்பதை ஆராய்வார்.

**2.4 முறைசார், முறைசாராத் தொடர்பாடல்**

1. ஒரு ஒழுங்கமைப்பில் முறைசார், முறைசாராத் தொடர்பாடலின் முக்கியத்துவம், இயல்பு, தொடர்பு செயற்பாடு.
2. முறைசார், முறைசாராத் தொடர்பாடல் மாதிரிகள்
3. முறைசார், முறைசாரா தொடர்பாடல் பயன்பாட்டுத் திறன்கள்.

2.5 தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தும் போது எதிர்கொள்ள வேண்டியுள்ள பல்வேறு தடைகளை அனுபவத்தில் கண்டு அவற்றை நிவர்த்தியாக்குவதற்குப் பொருத்தமான ஒரு வழிமுறையைப் பரீட்சித்துப் பார்ப்பார்.

**2.5 தொடர்பாடற் பாவனையின் தடைகளும், தீர்வுகளும்.**

1. ஒவ்வொரு ஊடகத்துக்குரிய பல்வேறு தடைகள்
2. பொருத்தமான தீர்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.0 கணினி சார் வெளியீட்டில், காரியாலயத்தில் தகவல்கள் பரிமாறும் போது வகுப்பறையில் பயன்படுத்தும் ஊடக உபகரணங்களை முறையாகக் கையாளுவர்.

3.1 கணனியூடாக ஓர் அறிக்கையை நிறைவு செய்யும் ஆற்றலை வெளிக்காட்டுவார்.

3.2 பல்வேறு ஊடக உபகரணங்கள் பாவனை மூலம் காரியாலயத்தில் தொடர்பாடலை நடைமுறைப்படுத்தும் விதத்தைப் பரீட்சித்துப் பார்ப்பார்.

3.3 தகவல் பரிமாற்ற செயலொழுங்குக்காக பயன்படுத்தப்படும் பல்வேறு ஊடக உபகரணங்களையும் சரியாகவும், முறையாகவும் கையாள்வர்.

3.4 கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்குத் தேவையான (எறிவையல்லாத) ஊடக உபரணங்களைப் பயன்படுத்தும் ஆற்றலை வெளிப்படுத்துவர்.

**3.0 செயல்சார் ஊடகத் தேர்ச்சி**
(15 பாடவேளைகள்)

**3.1 கணினி சார் வெளியீட்டு உபகரணங் கள்**

1. கணினி சார் வெளியீட்டு செயலொழுங்கும் அதன் அவசியமும்
2. கணினி சார் வெளியீட்டு உபகரணங்களை இனங்காணல். (கணனி, கணனி அச்சியந்திரம், கட்டும் கருவி, அடராக்கல் இயந்திரம், எண்சார் இணைப்புக் கருவி, வெட்டும் கருவி, திட்டமிடும் கருவி உட்பட)
3. கணினி சார் வெளியீட்டு உபகரணப் பாவனை

**3.2 காரியாலய ஊடக உபரகணங்கள்**

1. அலுவலக ஊடக செயலொழுங்கும், அதன் அவசியமும்.
2. காரியாலய ஊடகங்களை இனங்காணல். (கணனி, காசுப்பதிவு இயந்திரம், தபால் முத்திரை இயந்திரம், திகதி முத்திரைகள், பதவி முத்திரைகள், காசு எண்ணும் கருவி, காசு பரீட்சிக்கும் இயந்திரம், இரட்டிப்பு இயந்திரம், ஒளிப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம், இலத்திரனியல் அட்டைகள்.)
3. காரியாலய ஊடக உபகரணப் பாவனை.

**3.3 தகவல் பரிமாற்ற உபகரணங்கள்**

1. தகவற் பரிமாற்று ஊடகச் செயலொழுங்கும் அவற்றின் அவசியமும்
2. தகவல் பரிமாற்று ஊடக உபகரணங்களை இனங்காணல் (தொலைபேசிகள் , பேஜர், தொலை நகல், மின்னஞ்சல், இலத்திரனியல் பரீட்சிப்பு உபகரணம், உள்ளகத் தொலைக்காட்சி வலையமைப்பு, இணையத் தளம் ஆகியன.)

**3.4 வகுப்பறை ஊடக உபகரணங்கள்**

1. வகுப்பறை ஊடக செயலொழுங்கும் அதன் அவசியமும்.
2. வகுப்பறை ஊடக உபகணங்கள் (கரும்பலகை வெண்பலகை, ப்ளனல் பலகை, பக்கப் புரட்டி (பிலிப்) பயன்படுத்துவார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 3.5 கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்குத் தேவையான எறிவை ஊடக உபரணங்களைப் பயன்படுத்தும் ஆற்றலை வெளிக் காட்டுவார். | **3.5 வகுப்பறை ஊடக உபகரணங்கள்**<br>1. வகுப்பறை ஊடக உபகரணங்கள்<br>2. வகுப்பறை ஊடக உபகரணங்களைப் (மேந் தலை எறிவை, வழுக்கி எறிவை, கணணியும் பல்லூடக எறிவையும்) பயன்படுத்துவர். |
| 4.0 இலங்கையின் ஊடக நிறுவனங்களின் உரிமை இயல்புகளைக் கண்டறிந்து அவை ஊடகக் கலாசாரத்தில் வெளிப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக வெளியிடுவார். | **4.0 வெகுஜன ஊடகக் கற்கை**<br>(15 பாடவேளைகள்) |
| 4.1 இலங்கையின் ஊடக நிறுவனங்களின் தோற்றமும், உரித்தும் பற்றிய உண்மை நிலையைக் கண்டறிவார். | **4.1 இலங்கையின் வெகுஜன ஊடக நிறுவனங்களின் உரிமைகளும், இயல்பும் பரவுதலும்.**<br>1. அரச தனியார் ஊடக உரிமை பரவுதல்<br>2. வெகுஜன ஊடக உரிமையின் அரசாங்க, தனியார் மற்றும் பொதுப்பங்களிப்பு |
| 4.2 வெகுஜன ஊடக நிறுவனங்களின் உள்ளகச் செயற்பாட்டின் அடிப்படை இயல்புகளை ஒப்பிட்டு ரீதியில் புலனாய்வு செய்வார். | **4.2 வெகுஜன ஊடக நிறுவனங்களின் உள்ளகச் செயற்பாட்டின் அடிப்படை இயல்புகள்.**<br>1. பத்திரிக்கை நிறுவனம்<br>2. வானொலி நிறுவனம்<br>3. தொலைக்காட்சி நிறுவனம்<br>4. பொதுஉள்ளகக் கட்டமைப்பும் செயற்பாட்டின் அடிப்படை இயல்புகளும். |
| 4.3 வெகுஜன ஊடக நிறுவன உரிமை பயனாளியைப் பாதிக்கும் விதம் பற்றி விளக்குவார். | **4.3 வெகுஜன ஊடக நிறுவன பயனாளியைப் பாதிக்கும் விதம்**<br>1. ஊடக நிறுவன உரிமையும் கொள்கையும்<br>2. ஊடக நிறுவன உரிமையும் ஊடகவியலாளர்களும்<br>3. ஊடக நிறுவனஉரிமை, ஊடகவியலாளர், பயனாளிக்காக<br>4. பொது உள்ளகக் கட்டமைப்பும் செயற்பாட்டின் அடிப்படை இயல்புகளும். |
| 4.4 வெகுஜன ஊடக நிறுவனங்களின் கொள்கைகளையும் நோக்கங்கங்களையும் ஒப்பிட்டளவில் கண்டறிவர். | **4.4 வெகுஜன நிறுவனங்களின் நோக்கமும் கொள்கைகளும்**<br>1. வெகுஜன ஊடகங்களின் வர்த்தக நோக்கங்கள்<br>3. வெகுஜன ஊடக நிறுவனங்களின் கொள்கைகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 4.5 ஊடக நிறுவனங்கள் மீதான அரசாங்கத்தின் செல்வாக்கைப் பகுப்பாய்வு செய்வார். | **4.5வெகுஜன ஊடக நிறுவனங்கள் மீதான அரசாங்கச் செல்வாக்கு**<br>1. வெகுஜன ஊடகநிறுவனங்களுக்கும் அரச நோக்கங்களுக்குமிடையிலான தொடர்பு<br>2. வெகுஜன ஊடக நிறுவனங்களின் செயற்பாடு குறித்து அரசாங்கத்தின் பொறுப்புகளும், கடமைகளும்.<br>3. ஊடக செயற்பாடுகள் மீதான அரசாங்கத்தின் நேரடி, மறைமுகத் தொடர்பு. |
| 5.0 வெகுஜன ஊடகங்களின் பல்வேறு விதமான பிரதிநிதித்துவங்களின் யதார்த்தத்தையும் சமூகச் செல்வாக்கையும் வரைவிலக்கணப் படுத்தி காட்சிப்படுத்துவார். | **5.0 ஊடகப் பிரதிநிதித்துவக் கற்கை**<br>( 15 பாடவேளைகள்) |
| 5.1 வெகுஜன ஊடகங்களின் பல்வேறு வெளியீடுகளில் சமூக இயல்பு பிரதிநிதித்துவப் படுத்தப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக வரைவிலக்கணப்படுத்துவார். | **5.1. சமூக பிரதிநிதித்துவக் கற்கை**<br>1. குடும்ப கட்டமைப்பு<br>2. ஆண், பெண் சமூகநிலை,<br>3. இனத்துவம்<br>4. குடியுரிமை<br>5. மனித உரிமைகளும் பொறுப்புகளும் |
| 5.2 வெகுஜன ஊடகத்தின் பல்வேறு விதமான வெளியீடுகளில் பொருளாதார இயல்பு பிரதிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக விளக்குவார். | **5.2 பொருளாதார பிரதிநிதித்துவக் கற்கை**<br>1. வேலை உலகம்<br>2 .பல்வேறு தொழில்கள்<br>3. சந்தை<br>4. அபிவிருத்தி சார் சிந்தனை |
| 5.3 வெகுஜன ஊடகங்களின் பலவிதமான வெளியீடுகளில் சமய, விழுமிய இயல்புகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக விளக்குவார். | **5.3 சமய விழுமிய பிரதிநிதித்துவக் கற்கை**<br>1. சமயம்<br>2. விழுமியப் பண்பாடு<br>3. சமூக பிம்பம்<br>4. மோதலும், சமாதானமும்<br>5. மானுட விதிமுறைகள் |
| 5.4 வெகுஜன ஊடகத்தில் பல்வேறு விதமான வெளியீடுகளில் அழகியல் இயல்புகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதம் பற்றி யதார்த்த பூர்வமாக விளங்குவார். | **5.4 அழகியல் சார் பிரதிநிதித்துவக் கற்கை**<br>1. பொழுதுபோக்குப் பணிகள்<br>2. இரசனை<br>3. ஆக்கச் சிந்தனை<br>4. அழகியலும் சமூக விளக்கமும். |
| 6.0 ஒளிப்படக்கருவியை சரியாகப் பயன்படுத்தி சரியாகவும், வெற்றிகரமாகவும் ஒளிப்படம் ஆக்கும் தேர்ச்சியைக் காட்சிப்படுத்துவார். | **6.0 புகைப்படக் கலைத் தேர்ச்சி**<br>(15 பாடவேளைகள்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 6.1. பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொடர்பாடல் ஊடகத்துறையில் சமூகத்திலும் ஒளிப்படக்கலை பயன்படுத்தும் விதத்தை இனங்கண்பார். | **6.1. ஒளிப்படமும் அதன் இயல்பும்.**<br>1. நினைவுச் சின்னமாகப் பயன்படுத்துவர்.<br>2. அச்சு ஊடகத்தில் பயன்படுத்தல்.<br>3. சினிமா, தொலைக்காட்சி ஊடகங்களில் பயன்படுத்தல்.<br>4. ஒளிப்படங்களின் இயல்புகளும், சிறப்பியல்புகளும். |
| 6.2 ஒளிப்படக்கலையின் எளிமையான தொழில் நுட்பம் பற்றிய அனுபவத்தைப் பெறுவார். | **6.2 ஒளிப்படக் கருவியின் எளிமையான தொழினுட்பம்.**<br>1. புகைப்படக் கருவியின் செயன்முறை( கமரா லென்ஸ், திறத்தல் துவாரம் படச்சுருள், மின் ஒளி)<br>2. படத்தகட்டின் எண்சார் தொழினுட்பம்<br>3. ஒளிப்படமும் ஊடுகாட்டலும்<br>4. எண்சார் ஒளிப்படக்கலை தொழினுட்பம். |
| 6.3 தொழினுட்பத்தை சரியாகப் பயன்படுத்தி ஆக்கரீதியாகவும், வெற்றிகரமாகவும் ஒளிப்படமெடுக்கும் ஆற்றலைப் பரீட்சித்துப் பார்ப்பார். | **6.3 தொழினுட்பமும், ஆக்கத்திறனும்.**<br>1. கமராவில் தொழினுட்ப அம்சங்களை கையாளல்<br>2. ஒளிக்கட்டுப்பாடு<br>3. சட்டகம், கமராக் கோணம், களஆழம் நோக்கம்.<br>4. தொழினுட்பமும் ஆக்கத்திறனும். |
| 6.4 ஒளிப்படக்கலையின் ஆக்கரீதியான முறைகள், விதிமுறைகள் பரீட்சித்துப் பார்த்து ஆக்கத்திறனை வெளிக்காட்டுவார். | **6.4 ஆக்கத்திறன் முறைகள்**<br>1. செய்தி ஒளிப்படம்<br>2. ஆக்கத்திறன் வாய்ந்த ஒளிப்படம்<br>3. ஒளிப்படக் கண்காட்சி |
| 6.5 ஒளிப்படக் கலைத் தொழிலின் இயல்பு பற்றி கண்டறிவார். | **6.5 ஒளிப்படக் கலைத் தொழில்**<br>1. பயிற்சி வாய்ப்புக்கள்<br>2. சுயாதீன ஒளிப்படக் கலை<br>3. ஒளிப்படக் கலைத் தொழில்கள்<br>4. ஒளிப்படக் கூடங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඤ | ඦ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க வகையில் வைத்துப் படியுங்கள்

பாடசாலைப் பெயர் ______________________

| | புத்தகத்தை பெற்றுக்கொண்ட மாணவர் பெயர் | வகுப்பு | வகுப்பாசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2009 | | | |
| 2010 | | | |
| 2011 | | | |
| 2012 | | | |
| 2013 | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-955-25-0018-3